TAMIL TRANSLATION OF ‘VRUTHAVICHARAM’ AND COMPARATIVE STUDY WITH ‘YAPPILAKKANAM’

Thesis Submitted to the University of Kerala for the award of the

Degree of Doctor of Philosophy in Tamil

SIVAVENKATESH. L

DEPARTMENT OF TAMIL
UNIVERSITY OF KERALA, KARIAVATTOM CAMPUS
THIRUVANANTHAPURAM, KERALA - 695581
October - 2016

‘விருத்த விச்சாரம்’ தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் யாப்பிலக்கணத்துடன் ஒப்பீடு

முனைவர் பட்டத்திற்காக கேரளப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

சிவாவெங்கடேஷ். ல

தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்
கேரளம் - 695581

அக்டோபர் - 2016

TAMIL TRANSLATION OF 'VRUTHAVICHARAM' AND COMPARATIVE STUDY WITH 'YAPPILAKKANAM'

Thesis Submitted to the University of Kerala for the award of the Degree of Doctor of Philosophy in Tamil

SIVAVENKATESH. L

DEPARTMENT OF TAMIL
UNIVERSITY OF KERALA, KARIAVATTOM CAMPUS
THIRUVANANTHAPURAM, KERALA - 695581
October - 2016

‘விருத்த விச்சாரம்’ தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் யாப்பிலக்கணத்துடன் ஒப்பீடு

முனைவர் பட்டத்திற்காக கேரளப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

சிவாவெங்கடேஷ். ல

தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்
கேரளம் - 695581
அக்டோபர் - 2016

DECLARATION

I hereby declare that the Ph.D. thesis entitled, **Tamil Translation of 'Vruthavicharam' and Comparative Study with 'Yappilakkanam'** has not previously formed the basis for the award of any Degree, Diploma or title.

SIVAVENKATESH. L

Place: Kariavattom

Date:

Dr. P. JEYAKRISHNAN
Assistant Professor
Department of Tamil
University of Kerala
Kariavattom Campus
Thiruvananthapuram – 695581

CERTIFICATE

This is to Certify that the work embodied in the thesis entitled, **Tamil Translation of 'Vruthavicharam' and Comparative Study with 'Yappilakkanam'** has been carried out by **SIVAVENKATESH . L** under my supervision and guidance.

Place: Kariavattom **Dr. P. JEYAKRISHNAN**
Date:

நன்றியுரை

"'விருத்த விச்சாரம்' - தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் யாப்பிலக்கணத்துடன் ஒப்பீடு" என்ற தலைப்பின்கீழ் முனைவர் பட்டத்திற்கான இவ்வாய்வை மேற்கொள்ள எனக்கு அனுமதி வழங்கியும், பல்வேறு நிலைகளில் ஆய்விற்கு அடிப்படையாக அமையும் ஆய்வுநெறிக் கருத்துக்களை நல் அணுகுமுறையில், அறிவுரையாகக் கூறியும், இவ்வாய்வு செம்மையாக முடிவுபெற உதவி புரிந்த எனது ஆய்வு நெறியாளரான மதிப்புமிகு பேராசிரியர் முனைவர் ப. ஜெயகிருஷ்ணன் ஐயா அவர்களை என் உளமார்ந்த நன்றிக்கு முதன்மையாக்குகிறேன்.

மேலும், தமிழ்த்துறையில் நடைபெறும் கலந்தாய்வுகளில், ஆய்வு தொடர்பான கருத்துக்களை வழங்கிய துறைத்தலைவர் முனைவர் த. விஜயலெட்சுமி அவர்களுக்கும் மற்றும் ஆய்விற்குத் துணைபுரியும் விதத்தில் பல ஆலோசனைகளை வழங்கி, ஊக்கப்படுத்திய தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர். ஹெப்சி ரோஸ்மேரி அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்கு-கிறேன். மலையாள விருத்தங்கள் தொடர்பான சந்தேகங்களைப் பாடம் கேட்ட பொழுது, அதைத் தெளிவாக எடுத்துக் கூறிய பெருமைக்குரியவரும், மலையாளத்துறைப் பேராசிரியருமான முனைவர். சசிகுமார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வறிஞர்களிடையே நடைபெறும் கருத்தரங்குகளிலும், தனிப்பட்ட முறையிலும் சந்தித்தபோதெல்லாம் ஆய்வுத் தொடர்பான பல அரிய கருத்துக்களை எனக்கு ஈந்த முன்னாள் பேராசிரியர்களான பேரா. இல. குளோறியா சுந்தரமதி

அவர்களுக்கும் மற்றும் பேரா. கி. நாச்சிமுத்து ஐயா அவர்க-ளுக்கும் இத்தருணத்தில் நன்றி நவில கடமைப்பட்டுள்ளேன். மேலும், ஆய்வு தொடர்பான பல கருத்துக்களைத் தெளிவு-படுத்திய பேராசிரியர் முனைவர் ச. பொ. சீனிவாசன் அவர்களுக்கும் (தமிழ்த்துறை, அரசு கல்லூரி, மூணார்) மற்றும் முனை. ம. பிரபாகரன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஆய்விற்குத் தேவையான பல உதவிகளைச் செய்து கொடுத்த உதவிப் பேராசிரியர்களான முனை. விஜயராஜேஷ்வரி, முனை. ஆசைத்தம்பி, முனை. இராஜசேகர், முனை. நாகராஜ் ஆகியோருக்கும் மற்றும் இவ்வாய்வை விரைவில் செய்து முடிக்க ஊக்கப்படுத்திய முனை. காமராஜ் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

ஆய்வுக்காலத்தில், சூழ்நிலை கருதி, தேவையான உதவிகளை முழுமனதுடன் பகிர்ந்தளித்த தமிழ்த்துறை ஆய்வாளர்களான செல்வக்குமார், இராஜதுரை, மாரிக்கண்ணன், ஈஸ்வரன், பால்ராஜ், சிலம்பரசன், ரமேஷ், ஜெயசங்கர், இளையராஜா, ஈஸ்வரன். ப., யோவான், மாரிச்செல்வம் ஆகியோருக்கும் மலையாளத்துறை ஆய்வாளர்களான முனை. சிவபிரசாத், அனுபமா, முனை. சரிதா, நிதின், காசிம் மற்றும் சமஸ்கிருதத் துறை ஆய்வாளரான முனை. ரஞ்ஜித் ராஜன் ஆகியோருக்கும் என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வேட்டில் காணப்படும் மலையாள எழுத்துக்களை சிறந்த முறையில் தட்டச்சு செய்து தந்த திருமதி. வசந்தா அவர்களுக்கும் என் நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

சிவாவெங்கடேஷ் ல.ய

சுருக்கக் குறியீடு விளக்கம்

உ. ம்	-	உதாரணம்
எ. டு.	-	எடுத்துக்காட்டு
கா. தோத்திரம்	-	காளிதோத்திரம்
பக்.	-	பக்கம்
பக். எண்	-	பக்க எண்
மு. ப.	-	முதல் பதிப்பு
யாப். காரிகை	-	யாப்பருங்கலக்காரிகை
வி. மஞ்.	-	விருத்த மஞ்சரி
வி. மஞ். நூ.	-	விருத்த மஞ்சரி நூற்பா
வி. வி.	-	விருத்த விச்சாரம்

பொருளடக்கம்

ஆய்வு முன்னுரை

ஆய்வு முன்னுரை

திராவிட மொழிகள் அனைத்தும் மொழி உறவில் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக விளங்குகின்றன. எனினும், தமிழ் மற்றும் மலையாளம் இவ்விரு மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இம்மொழி உறவின் காரணமாக, 'தமிழ் மொழியிலிருந்து உருவானதே மலையாள மொழி' என்று தமிழ் அறிஞர்-களாலும், (மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக்கட்டுரைகள், செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 16, 1937 - 38) 'தமிழும், மலையாளமும் சகோதர மொழிகள்' என்று மலையாள அறிஞர்களாலும் கருத்துரைக்கப்படுகின்றன. (N. V. Krishna Warrior, A History of Malayalam Metre Page No. 16) இந்நிலையில் இவ்விரு மொழிகளுக்கிடையே மொழிபெயர்ப்பு மற்றும் ஒப்பீடு அடிப்படையில் பொதுவான ஆய்வுகள் பல நிகழ்ந்திருப்பினும் இலக்கணத்தில், குறிப்பாக யாப்பிலக்கணத்துறையில் தமிழ் - மலையாள ஒப்பீட்டு ஆய்வுகள் மிகக்குறைவாகவே வெளிவந்திருக்கின்றன. எனவே, யாப்பிலக்கணம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் முயற்சியில் 'விருத்த விச்சாரம்' எனும் மலையாள நூலிலுள்ள கருத்துக்களைத் தமிழில் மொழியாக்கம் செய்து, ஒப்பீடு அடிப்படையில் இவ்விரு மொழிகளில் யாப்பிலக்கணங்களுக்கிடையேக் காணப்படும் யாப்புக் கட்டமைப்பிற்கான அடிப்படைக் கூறுகளை இனங்கண்டறிதல் எனும் பொருண்மையை நோக்கமாகக் கொண்டு அக்கூறுகளின் பயன்பாட்டுமுறை, ஒற்றுமை வேற்றுமைகள் போன்றவற்றை விளக்கிக் கூறும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வுத் தலைப்பு

“விருத்த விச்சாரம் - தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் யாப்பிலக்கணத்துடன் ஒப்பீடு” என்பதே இவ்வாய்வின் தலைப்பாக அமைகிறது. இத்தலைப்பில் “யாப்பிலக்கணம்” என்பது பொதுநிலையில் அமைந்திருக்கிறது. ஆகவே, இவ்வாய்வானது அனைத்து தமிழ் யாப்பு நூல்களோடும் அல்லாமல் யாப்பருங்கலக்காரிகையுடன் மட்டுமே ஒப்பீடு செய்யப்படுகிறது.

ஆய்வு எல்லை

மலையாளத்தில் ‘விருத்த மஞ்சரி’ எனும் யாப்பு இலக்கண நூலில் அமைந்துள்ள ‘பாஷா விருத்தம்’ என்ற இயலை விமர்சிக்கும் நோக்குடன் உருவான ‘விருத்த விச்சாரம்’ மற்றும் தமிழில் ‘யாப்பருங்கலக்காரிகை’ ஆகியன இவ்வாய்விற்கு எல்லைகளாக அமைகின்றன.

ஆய்வு நோக்கம்

‘விருத்த விச்சாரம்’ என்ற மலையாள நூலிலுள்ள கருத்துக்களைத் தமிழில் மொழியாக்கம் செய்வதோடு அக்கருத்துக்களின் அடிப்படையில் தமிழில் யாப்பருங்கலக்-காரிகையுடன் ஒப்பாய்வு செய்து, இரு மொழிகளுக்குமிடையே காணப்படும் யாப்புக்கட்டமைப்பிற்கான அடிப்படைக்கூறுகள், அவற்றின் பயன்பாட்டு முறைகள், ஒற்றுமை வேற்றுமைகள் போன்றவற்றை இனங்கண்டறிவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாக அமைகின்றன.

ஆய்விற்குரிய கருதுகோள்

'மலையாள மொழியின் யாப்புக்கட்டமைப்பு முறைகள் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்' என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகிறது.

ஆய்விற்கான சான்றாதாரங்கள்

ஆய்விற்கானச் சான்றுகள், முதன்மைச்சான்றுகள் மற்றும் துணைமைச்சான்றுகள் என வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன.

முதன்மைச்சான்றுகள்

மலையாளத்தில் 'விருத்த விச்சாரம்', தமிழில் 'யாப்பருங்கலக்காரிகை', ஆகியவை இவ்வாய்விற்கு முதன்மைச் சான்றாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

துணைமைச்சான்றுகள்

மலையாளத்தில் விருத்த சில்பம், மலையாள பாஷா வியாகரணம், விருத்தவும் அலங்காரவும், பாஷா சாஸ்திரம், மலையாள யாப்பிலக்கணம் தொடர்பான கட்டுரைகள், ஆய்வேடுகள் மற்றும் A History of Malayalam Metre, Debates on the Grammatical theories in Dravidian, The Commonness in the Metre of the Dravidian Languages போன்ற ஆங்கில நூல்கள்.

தமிழில் யாப்பருங்கலம், யாப்பிலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும், வீரசோழியம் மற்றும் யாப்பிலக்கணம் தொடர்பான நூல்கள், கட்டுரைகள் போன்றன இவ்வாய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

மொழி பெயர்த்த கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் *பகுப்பாய்வு* அணுகுமுறையும், ஒப்பீடு செய்வதினால் *ஒப்பீட்டாய்வு* அணுகுமுறையும், மற்றும் கருத்துக்களை விளக்கிக் கூறுவதினால் *விளக்கமுறை* அணுகுமுறையும் இவ்வாய்விற்கு அணுகுமுறைகளாக அமைகின்றன.

ஆய்வுப் பயன்

மொழிபெயர்ப்பின் மூலம் பிற மொழிகளின் இயல்பான தன்மையை அறிதல், ஒப்பீட்டாய்வின் மூலம் இருமொழி-களிலுமுள்ள யாப்பிலக்கணக் கூறுகளை இனங்கண்டறிதல் மற்றும் தமிழ் - மலையாளம் யாப்பிலக்கணம் தொடர்பான மேலாய்வுக் களன்களை உருவாக்குதல் போன்றன இவ்வாய்-வின் பயன்களாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

மொழிபெயர்ப்பு அடிப்படை மற்றும் ஒப்பீடு அடிப்படையில் பல முன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு அடிப்படை

1. லீலாதிலகம், கேரளப்பாணீனியம் - பேரா. மா. இளையபெருமாள்

2. மலையாளமொழி இலக்கணம் (சொற்றொடர் காண்டம்) - பேரா. கி. நாச்சிமுத்து மற்றும் பேரா.மா. இளைய-பெருமாள்.

ஒப்பீடு அடிப்படை

1. கேரள கௌமுதி – டி.எம். கோவுண்ணி நெடுங்காடி (பூர்ணா 1878)

2. திராவிட விருத்தங்ஙளும் அவயுடெ தசாபரிணாமங்களும் - அப்பன் தம்புரான் (மாத்ரு பூமி -1930)

3. The Commonness in the Metre of the Dravidian Languages - S. Subramaniyan (DLA, 1977) போன்ற நூல்கள் தமிழ் மலையாள யாப்பிலக்கண ஒப்பீட்டாய்விற்கு முன்னோடி-களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்-கின்றது.

முதற் பகுதி

ஆய்வேட்டின் முதற் பகுதியில் முன்னுரை, நூற்குறிப்பு, ‘விருத்த விச்சாரம்’ - தமிழ் மொழிபெயர்ப்பு ஆகியவை அடங்கும்.

முன்னுரையில், ஆய்வுத்தலைப்பு, ஆய்வு எல்லை, ஆய்வு நோக்கம், ஆய்வு கருதுகோள், ஆய்விற்கானச் சான்றா-தாரங்கள், ஆய்வு அணுகுமுறை, மற்றும் ஆய்வேட்டின் அமைப்பு போன்றவை விளக்கப்பட்டிருக்கின்றன.

நூல் அறிமுகத்தில் இரு மொழிகளிலும் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட நூல்களான ‘விருத்த விச்சாரம்’ மற்றும் ‘யாப்பருங்கலக்காரிகை’ பற்றிய கருத்துக்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

'விருத்த விச்சாரம்' தமிழ் மொழிபெயர்ப்பில், மொழி பெயர்த்த கருத்துக்கள் அங்ஙனமே இணைக்கப் பட்டிருக்-கின்றன. இம்மொழிபெயர்ப்பில் சூத்திரங்கள் ஒலிபெயர்த்தும் (Transliteration), அச்சூத்திரத்திற்கான பொருள் மொழிபெயர்த்-தும் (Translation) தரப்பட்டுள்ளன. மேலும், யாப்பிலக்கணப் பயன்பாட்டில் 'சீர்' பிரித்தலின்போது, இரு மொழிகளிலும் எழுத்துக்கள் வேறுபடுகின்றன. மலையாள யாப்பிலக்கண விதிமுறையின்படி மலையாளச் சொற்களால் மட்டுமே சீர் பிரிப்பது பொருத்தமாக அமையும். எனவே, உதாரணம் காட்டப்படும் சில இடங்களில் மலையாளச் சொற்களும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

இரண்டாம் பகுதி

ஆய்வேட்டின் இரண்டாம் பகுதியில் முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களில் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

"மலையாள யாப்பியல் ஆய்வுகள்" என்ற முதல் இயலில் மலையாள மொழி யாப்பிலக்கணம் தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்வுகள் தொடர்பான கருத்துக்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

"தமிழ் யாப்பியல் ஆய்வுகள்" என்ற இரண்டாம் இயலில் தமிழ் யாப்பிலக்கணம் தொடர்பாக வெளிவந்துள்ள சில குறிப்பிடத் தகுந்த ஆய்வுகள் பற்றியதான கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றன.

"விருத்த விச்சாரம்-தமிழ் மொழி பெயர்ப்புச் சிக்கல்கள், தீர்வுகள்" என்பது மூன்றாவது இயலாகும். இவ்வியலில் மொழிபெயர்ப்பு விளக்கம், மொழிபெயர்ப்பின் நோக்கம்,

மொழிபெயர்ப்புக் கொள்கை, மொழிபெயர்ப்பு பயன், மொழி-பெயர்ப்பு வகை, மற்றும் விருத்த விச்சாரத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தபொழுது ஏற்பட்ட மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், அவற்றிற்கானத் தீர்வுகள் போன்ற கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

''விருத்த விச்சாரம் - யாப்பருங்கலக்காரிகை ஒப்பீடு'' நான்காவது இயலாகும். இவ்வியலில் ஒப்பீட்டாய்வு – விளக்கம், யாப்பு வரையறை, யாப்புக் கட்டமைப்பு உறுப்புக்கள், எழுத்துக்களின் பயன்பாடு, எழுத்துக்களின் மாத்திரை அளவு, சீரமைப்பு முறை, கிளிப்பாட்டில் யாப்புக்கட்-டமைப்பு, துள்ளல்பாட்டில் யாப்புக்கட்டமைப்பு போன்ற தலைப்புக்களில் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

முடிவுரை

இப்பகுதியில் ஆய்வில் கண்டறிந்த கருத்துக்களின் முடிவுகள் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாம் பகுதி

ஆய்வேட்டின் மூன்றாம் பகுதியான பின்னிணைப்பில் மலையாள யாப்புக் கலைச்சொற்கள், துணைநூல் பட்டியல், 'விருத்த விச்சாரம்' - மலையாள மூலம், போன்றன இடம்-பெற்றிருக்கின்றன.

மலையாள யாப்புக் கலைச்சொற்கள்

இப்பகுதியில் விருத்த விச்சாரத்தில் இடம் பெற்றுள்ள யாப்பு இலக்கணக் கலைச்சொற்களை அகரவரிசைப்படுத்தித்

தொகுத்தும், தமிழில், அம்மலையாளக் கலைச்சொற்களுக்கானப் பொருள் விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன.

துணை நூற்பட்டியல்

இவ்வாய்விற்குப் பயன்பட்ட மலையாளம் மற்றும் தமிழ் யாப்பிலக்கண நூல்கள், யாப்பிலக்கணம் தொடர்பான கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை அகரவரிசைப்படி தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

நூல் அறிமுகம்

நூல் அறிமுகம்

இப்பகுதியில் ஆய்விற்கு முதன்மைச் சான்றுகளாக அமைந்த விருத்த விச்சாரம் மற்றும் யாப்பருங்கலக்காரிகை போன்ற இரு நூல்கள் பற்றியதான கருத்துக்கள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

விருத்த விச்சாரம் - ஓர் அறிமுகம்

நூல் பெயர்	-	விருத்த விச்சாரம்
ஆசிரியர்	-	பேராசிரியர் கே. கே. வாத்தியார்
நூல்வகை	-	இலக்கணம் (யாப்பு - Metre)
மொழி	-	மலையாளம்
வெளியீடு	-	சாகித்ய பிரவர்த்தக கூட்டுறவு நிறுவனம், கோட்டையம்.
காலம்	-	ஜூலை 1967

நூலாசிரியர் குறிப்பு

நூலாசிரியர் கோட்டையம் மாவட்டம் கந்தநாடு கணயனூரில் 31.8.1911-ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது முழுப் பெயரான திரு. கே. குட்டன் வாத்தியார் என்பதை கே. கே. வாத்தியார் என சுருக்கமாக மாற்றிக் கொண்டார். ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த இவர் கதை பிரசங்கம் செய்வதிலும் சிறந்து விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ‘வித்வான்’ பரீட்சையிலும் வெற்றி பெற்றவர். இவர் எழுதிய வேறுபிற நூல்கள் ‘கதாபிரசங்கம் எந்து எந்தினு?’ மற்றும், ‘ஸ்ரீ நாராயணா சரமகான மளிகா’ என்பனவாகும்.

விருத்த விச்சாரம் - விளக்கம்

'விருத்த விச்சாரம்' என்பது மலையாள யாப்பிலக்கண நூலாகும். விருத்தம் - என்பதற்கு தமிழில் 'யாப்பு' என்றும் விச்சாரம் - என்பதற்கு 'சிந்தை' என்றும் பொருள் கொள்ளலாம். எனவே, 'விருத்த விச்சாரம்' என்பது 'யாப்புச்சிந்தை' என மொழியாக்கம் செய்யத் தகுந்ததாகும்.

இந்நூல் திரு. A. R. இராஜராஜ வர்மா எழதிய 'விருத்த மஞ்சரி' என்னும் யாப்பிலக்கண நூலில் அமைந்துள்ள பத்து இயல்களில் எட்டாவதாக அமைந்துள்ள 'பாஷா விருத்தப் பிரகரணம்' என்ற இயலிற்கு உரை எழுதும் முயற்சியில் உருவானதாகும் எனவேதான், கே. கே. வாத்தியார் தனது நூலின் முதற் பகுதியில், "விருத்த மஞ்சரியிலெ பாஷா விருத்தத்தினு ஒரு பாஷியம்" (A commentary on Bhasha Vritham) என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, இதன் பொருள், விருத்த மஞ்சரியிலுள்ள மலையாளமொழி யாப்பிற்கு ஒரு உரை அல்லது விளக்கம் என்பதாகும்.

'விருத்த மஞ்சரி', 1904-ம் ஆண்டு முதன் முதலில் வெளியிடப்பட்டு, சுமார் 63 ஆண்டுகால இடை வெளிக்குப் பிறகுதான் 1967-ல் 'விருத்த விச்சாரம்' வெளியிடப்பட்டி-ருக்கிறது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய திரு. குட்டிகிருஷ்ணமாரார் இந்நூலின் சிறப்பு பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். அவை பின்வருமாறு,

குட்டிகிருஷ்ணமாரார் கருத்து :

1. "மொழியாப்பைப் பொருத்தவரையில் இனியும் படித்தறிய வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன.

2. துள்ளல் பாட்டைப் பொருத்தளவில் அதில் முழுமையாக ஆய்வு நடத்தாமல் மொழியாப்பு (பாஷா விருத்தம்) இலக்கணத்தை எழுதுவது தவறானது எனப் புரிந்து கொண்டேன்.'' என்று திரு குட்டிகிருஷ்ண மாரார் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

இயல் அமைப்பு

இந்நூல் முன்னுரை, அணிந்துரை, நீங்கலாக மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. அவை,

1. கிளிப்பாட்டு விருத்தங்கள்
2. துள்ளல் பாட்டு விருத்தங்கள்
3. கிருஷ்ணகாதை, இருபத்துநாலு விருத்தம், வஞ்சிப்பாட்டு.

என இது போன்று மூன்று இயல்களில் மலையாள விருத்தம் தொடர்பான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

யாப்பருங்கலக் காரிகை

கி. பி. 10-ம் நூற்றாண்டில் தனித்த யாப்பிலக்கண நூல்களாக யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் அமிதசாகரரால் இயற்றப்பட்டது. இந்நூல்களுக்கு விருத்தி உரையும், காரிகை உரையும் காணப்படுகின்றன. முதலில் தோன்றிய யாப்பருங்கலத்திற்கு அங்கமாக அமைந்ததால் இது யாப்பருங்கலக்காரிகை என்று அழைக்கப்படுகிறது. மேலும் யாப்பருங்கல விருத்தி உரையில் காணப்படும் 'யாப்பருங்கலப் புறநடை' என்ற வரியும் இதற்குச் சான்றாக அமைகிறது. 'காரிகை' என்பது இலக்கணச் செய்திகளைக் கூறும் கட்டளைக்கலித்துறைகளைக் குறிப்பதாகும். தனித்த யாப்பு நூலில் முந்து நூலான யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரை எழுதிய குணசாகரர்தான் யாப்பருங்கலக்காரிகை உரையும்

எழுதியிருக்கிறார். இக்காரிகை நூல் குணசாகரர் உரையுடன் 1851-ல் களத்தூர் வேதகிரி முதலியாரால் முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

காரிகை நூலில் உறுப்பியல், செய்யுளியல் ஒழிபியல் என்னும் மூன்று இயல்கள் காணப்படுகின்றன. முதல் இயலான உறுப்பியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனும் ஆறு வகைச் செய்யுள் உறுப்புகள் குறித்ததானக் கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. மேலும், உறுப்பியலில் தற்சிறப்புப் பாயிரமும், அவையடக்கமும் அடங்கும்.

இரண்டாவது, இயலானச் செய்யுளியலில், ஐந்து வகைப் பாக்கள் குறித்தும் அவற்றின் வகை மற்றும் பாவினங்கள் குறித்தும் விளக்கப்பட்டிருக்கின்றன

இறுதி இயலான ஒழிபியலில், உறுப்பியலிலும் செய்யுளி-யலிலும் கூறப்படாத கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

‘விருத்த விச்சாரம்’
தமிழ் மொழிபெயர்ப்பு

உள்ளடக்கம்

அணிந்துரை

நண்பரே !

விருத்த விச்சாரத்தினுடைய கையெழுத்துப்பிரதி கிடைத்தவுடன் பிற அனைத்து வேலைகளையும் தவிர்த்து விட்டு அந்நூலை முழுவதுமாக வாசித்து முடித்தேன். அந்தளவில் அதனை படிப்பதற்கு பெரும் ஆவலுடன் காத்திருந்தேன்.

'விருத்த சில்பத்தில்' வேறு எந்த குறைபாடுகள் உண்டென்றாலும் விருத்த உருவாக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களை அது கண்டடைந்து விட்டது என்றும் அந்தத் தத்துவங்களை வைத்துக்கொண்டு எந்த மொழியிலும் எந்த விருத்தத்தையும் (யாப்பு) விவரிக்கலாம் என்றும் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இருப்பது மட்டுமல்ல அதை முன்னுரையில் வெளிப்படையாகக் குறிப்பிடவும் செய்திருக்கிறேன். ஆனால், மொழியாப்பைப் பொருத்தவரையில் இனியும் பலவற்றைப் படித்தறிய வேண்டும் என்று தாங்கள் இதில் தெளிவு படுத்தியுள்ளீர்கள். அனைவரும் இதை புரிந்துகொள்ளும் வகையில் தாங்கள் துள்ளல் இலக்கித்தியத்தில் கவனத்துடன் நடத்திய அந்த தேடல் உண்டல்லவா அதற்குத் தலை வணங்கியே ஆகவேண்டும். நான் இப்படிக் கூறுவதற்குக் காரணம் அதிகமான உதாரணங்கள் இதில் நிறைந்திருக்கின்றன. நம்முடைய மொழியாப்பின் விதிமுறை-களுக்கு ஏற்றவாறு போதுமான உதாரணங்கள் நம்முடைய துள்ளல் இலக்கியத்திலிருந்துதான் கிடைக்கும் என்று தாங்கள் வெளிப்படுத்தியதைக் கண்டு நான் ஆச்சரியப் படுகிறேன்.

அதுமட்டுமல்ல துள்ளல் இலக்கியத்தில் ஒரு முழுமையான ஆய்வு மேற்கொள்ளாமல் மலையாள மொழியாப்பு

வரலாறு எழுத முற்படுவது தவறு என்ற எண்ணத்தையும் உருவாக்குகிறது. இதுவே, தாங்களுடைய ‘விருத்த விச்சா-ரத்தில்’ நான் காண்கிற தனித்துவமாகும். ‘‘அப்யபிரசித்தம் யசஸே ஹரி பூம் ஸாமனன்ய ஸாதாரன மேவகர்மம்’’ என்ற கவிஞர் வாக்கியத்தை (குமாரசம்பவம்.3.19) உள்ளத்தில் வைத்துக் கொண்டுதான் நான் இதை எழுதுகிறேன்.

உதாரணப் படல்களில் போதுமான அளவு ஆய்வு மேற்கொள்ளாமலே இலக்கணம் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்ற தவறுதான் ‘விருத்த மஞ்சரி’யில் பல இடத்திலும் நிகழ்ந்திருக்கிறது என்று இந்நூலின் மூலம் நான் முதலாவதாகப் புரிந்து கொள்கிறேன். அதே தவறு இதனைப் பின்பற்றிய ‘விருத்த சில்பத்திற்கும்’ ஏற்பட்டிருக்கலாம். ஆனால், விருத்த சில்பத்தினுடைய மூன்றாம் பதிப்பு அச்சடித்து முடிந்த பிறகுதான் நான் இதை காண்கிறேன். இந்த உதாரணப் பாடல்களில் காணப்படும் நிறைகுறை-கள்தான் தாங்களை ஒரு இலக்கணம் உருவாக்கத் தூண்டியிருக்கின்றன.

அது அப்படியிருக்க, விருத்த மஞ்சரியில் ‘பாஷா விருத்தம்’ (மலையாள மொழியாப்பு) என்ற இயலுக்கான உரை என்ற நிலைக்கு இந்த புத்தகத்திலுள்ள கருத்துக்கள் எனக்குத் தேவையாகத் தோன்றியது. சிறிதளவில் காணப்படும் இலக்கணப் பிழையைக்கூட தாங்கள் கைவிடவில்லை. நூலாசிரியர்களோடு மட்டுமல்ல அந்நூலுடனும் மரியாதை கொண்டவர்கள் இதுபோன்றுதான் செய்ய வேண்டும். மொழியாப்பைப் பொருத்தளவில் ‘‘மாத்திரை ஐந்து, எழுத்து மூன்றில்’’ என்று தொடங்கிய விருத்த மஞ்சரி காரிகைகளைப் படித்துப்பார்த்தால் முழுமை அடையவில்லை என்றும்

அவற்றிற்கெல்லாம் அப்பால் எவ்வளவோ அதிகம் படிப்பதற்கும் ஆலோசிப்பதற்கும் இருக்கிறதென்றும் உணர முடியும். அந்த விஷயத்தில் கவனமுள்ளவரை உருவாக்கு-வதற்குத் தாங்களுடைய இந்த புத்தகத்திற்கு இயலும்.

ஒரு கேள்வியே கேட்பதற்கு இருக்கிறது - இதில் ஆர்வமுள்ளவர் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஒரு மறு கேள்விதான் இதற்குப் பதில் எத்தனைபேர் வேண்டும்? இந்த புத்தகங்கள் இன்று மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் பயன்படத் தக்கதாகும்.

நான் வெளிப்படையாகவே கூறுகிறேன். விருத்தசில் பத்தினுடைய ஆசிரியர் என்று பெருமை கொண்டது போன்று-தான் விருத்த விச்சாரத்திற்கு அணிந்துரை எழுதியதிலும் நான் பெருமை கொள்கிறேன்.

கோழிக்கோடு - 3 **குட்டிக்கிருஷ்ணமாரார்**

14-09-1964

நன்றியுரை

விருத்த மஞ்சரியிலுள்ள மொழியாப்பு நூற்பாக்களை அதனுடைய நிலைபாட்டில் நின்று கொண்டு நுட்பமாகப் பரிசீலனை செய்து அதில் தொடக்கம் முதல் முடிவுவரை காணப்படுகின்ற தவறுகளைத் தெளிவாக வெளிப்படுத்து-வதற்காகத்தான் இந்த 'விருத்த விச்சாரம்' எனும் நூலை உருவாக்கியிருக்கிறேன். இந்நூல் மலையாள மொழியாப்புத் துறையில் நேர்ந்த ஒரு 'வெளிச்சம்' என்று மட்டுமல்லாமல் யாப்புக் கருத்துக்களை முதன்முதலில் வெளியிட்ட கேரள கௌமுதியோடு 'விருத்த மஞ்சரி' கொண்டிருக்கும் கடமையை வெளிபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. அது மட்டுமல்ல, தாளத்தை அடிப்படையாகக் கொண்டு 'விருத்த சில்பம்' விருத்த மஞ்சரியைக் குறித்து அறிவித்துள்ள கருத்துக்க-ளையும் ஆங்காங்கே விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில் விருத்த மஞ்சரியை விட கருத்துக்கள் குறைந்ததாக இருப்பினும் இக்குறைவுகளில் சில விருத்த விச்சாரத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. 'விருத்த சில்பம்' நூல் குறித்து அறிமுகம் இல்லாதவர்க-ளுக்கு ஒருவேளை அந்த பகுதிகள் அதிகமாகப் பயன்படாமல் போகலம். இருப்பினும், எல்லா இடங்களிலும் விளக்கமும் எளிமையுமாக்-குவதற்கு முடிந்தளவு இந்நூலில் முயற்சி செய்யப்பட்டி-ருக்கிறது.

இப்படியொரு நூல் கைரளியுடைய கையில் தாழ்மை-யாக சமர்ப்பிக்கும் போது அவசியம் நான் மரியாதை செலுத்தக்கூடிய சில பெயர்களும் உண்டு. இலக்கிய உலகத்திற்கு அன்னியமான வாழ்க்கையைச் சிறிதளவு கூட அனுபவிக்காமலேயே அக்காலத்தில் மரணம் எய்திய

கத்துகல்லங்கள் கெ. அனந்தன் என்பவர்தான் பதினைந்து வயதுள்ளவனான என்னை வலுக்கட்டாயமாகப் பிடித்து ‘ஸ்ரத்தபோதம்’ என்ற சமஸ்கிருத விருத்த சாஸ்திரத்தை மலையாளத்தில் எழுதிக்கொடுத்து படிக்கவைத்தவர். அந்த முதன்மையான குருவிற்கு அஞ்சலியாகவும் கூட இந்த விருத்த விச்சாரத்தை நான் சமர்ப்பிக்கிறேன்.

விருத்த மஞ்சரியிலுள்ள ‘பாஷா விருத்தம்’ என்ற இயலில் (விருத்த மஞ்சரியிலுள்ள எட்டாவது இயல்) எவ்வளவோ விவாதங்களுக்குட்படும் தவறுகள் காணப்படு-கின்றன. அதை நுட்பமாக ஆராய வேண்டும் என்று முதன் முதலில் என்னை உற்சாகப்படுத்தியவர் ஸ்ரீ வெண்குளம் பரமேஷ்வரனாவார். (தெக்கன் திருவிதாங்கூரில் காஞ்சிரம்குளம், அன்றிருந்த மலையாள ஹைஸ்கூலில், நாங்கள் சக நண்பர்களாக இருந்தவர்கள்). 1942-43 காலங்களில் அந்த நுட்பமான ஆய்வின் பலனாக எழுதிய சில பிரதிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்று, என்னை உற்சாகப் படுத்திய ‘மாத்ரு பூமி’ வார இதழையும், அந்த ஆவணத்தை வாசித்து, ‘‘நல்லது பயனுள்ளதாக இருக்கிறது. இதே போன்று தொடர்ந்து முயற்சியில் ஈடுபடவேண்டும்’’ என்று வாழ்த்தி அறிவுருத்திய மகாகவி உள்ளூர், பேராசிரியர் பி. சங்கரன் நம்பியார் போன்ற மஹான்மார்களை ஒரு பொழுதும் என்னால் மறக்க இயலாது. டாக்டர்.எஸ்.கெ நாயர், வித்துவான் நம்பியார் வீட்டில் நாராயணமேனோன், எஸ். குப்தநாயர் எம்.எ, காம்பிசேரியில் கருணாகரன், இப்படி பலரிடத்திலிருந்தும் பலமுறை பெற்றிருக்கின்ற ஊக்க நிலையிலான உதவி-களையும் மனம் நிறைந்த நன்றியுடன் நான் இங்கு நினைவு கூறுகிறேன்.

ஸ்ரீ.ஒ.எம். அனுஜன் எம்.எ, முனைவர் பட்ட ஆய்விற்காக மலையாள மொழியிலுள்ள யாப்பிலக்கணத்துறையை தேர்ந்தெடுத்த பொழுது, அதே பொருண்மையில் அமைந்திருந்த என்னுடைய ஆய்வும், அவருடைய யாப்பியல் ஆய்விற்குத் தேவைப்பட்டதுதான் இந்த நூல் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தது. அப்படி நான்கைந்து வருடத்திற்கு முன்பு எழுதிய ‘‘பாஷா விருத்த விச்சாரம்’’ பின்பு பல பாகங்கள் வெட்டியும், திருத்தியும், சுருக்கியும், விவரித்தும், பல முறை பரிசோதித்தும், திருத்தி எழுத வேண்டியதாயிருந்தது. அந்த விதத்தில் இந்த ‘‘விருத்த விச்சாரம்’’ உருவாகியிருப்பினும் ஆண்டுகள் பல கழிந்தன. ‘ஸாஹித்ய பிரவர்த்தக சஹகரண சங்கத்தினுடைய நன் மனதினால்தான் இப்பொழுதாகிலும் இதை வெளியிட முடிகிறது.

இந்நூலைப் பொருத்தளவில் நான் மிகவும் அதிகமாகக் கடமைப்பட்டுள்ள ஒரு பெயரை இறுதியில் குறிப்பிட எண்ணியிருந்தேன். ‘‘விருத்த சில்பம்’’ ஆசிரியரான ஸ்ரீ குட்டிகிருஷ்ணமாரார் தான் அந்த மாமனிதர். இப்படி சிறப்பித்துக் கூறுவது முகஸ்துதிக்காக அல்ல, உள்ளத்தின் ஆழத்திலுள்ள அன்பின் நிமித்தமாக மட்டும் தான். விருத்த சில்பத்திலிருந்து மிகவும் அதிகமான வெளிச்சம் (கருத்துககள்) எனக்கு கிடைத்திருக்கிறது என்றாலும், அதில் கூறப்பட்டிருக்கும் மிக முக்கியமான அடிப்படைத் தத்துவங்களோடு எனக்குக் கடுமையான எதிர்ப்பும் உண்டு. கடுமையாக அதை நான் வெளிப்படுத்தியும் இருக்கிறேன். இருப்பினும் தனிப்பட்ட முறையில் அவர் என் மீது கொண்டுள்ள அன்பை சற்றும் குறைக்கவில்லை. மிகவும் வளர்க்கவே செய்திருக்கிறது. என்னுடைய விருப்பக் கருத்துக்களை என்னுடைய சூழ்நிலையிலிருந்து எண்ணிப் பார்த்து அந்த வழிகளில்

என்னுடைய முன்னேற்றத்திற்காகத் தொடக்கம் முதல் உதவி புரிந்திருக்கிறார். இந்த மனநிலையை நம்முடைய இலக்கிய அறிஞர்களுக்கிடையே வேறு எவரிடமும் காணமுடியாது. இந்நிலையில் என்னைப் போன்ற ஒருவனை சிறிதளவும் மன்னிக்க இயலாத சூழ்நிலையிலுங்கூட ஒரு அணிந்துரை-யாளராக இந்நூலை அவர் அனுகிரகிக்கவும் செய்திருக்கிறார். அதுவும் தன்னுடைய கருத்துக்களை எதிர்ப்பதற்குச் சற்றும் தயக்கமில்லாத ஒரு நூலை! மிகவும் தாழ்மையுடனும் கவனத்துடனும் கையெழுத்துப்பிரதி, பிரதிபதம் என்ற நிலையில் கவனமாகப் பரிசோதித்த அவரை எவ்வளவு வாழ்த்தினாலும் போதுமானதாகாது.

கொல்லம் **கே.கே.வாத்தியார்.**

8-5-1967

ஆய்வுரை

மொழியாப்புக்களினுடைய நியாயமான கொள்கைகளைத் திறனாய்வு செய்யவும் சில விருத்தங்களுக்காகிலும் பெயர் இலக்கணங்கள் கொடுக்கவும் முதலாவதாக முயற்சித்தவர் ‘தோடுகாட்டில் மேலேதில்’ கோவுண்ணி நெடுங்காடியாவார். ‘கேரள கௌமுதி’ என்ற இலக்கண நூலில் அவர் சமஸ்கிருத விருத்தங்களுடன் மலையாள மொழி விருத்தங்க-ளையும் விவரித்திருக்கிறார். இந்நூல் எழுதி முடிக்கப்பட்டது கொ. வ (கொல்லம் வருடம்) 1050-லும், வெளியிடப்பட்டது 1053-ம் ஆகும். 1080- ல் தான் ‘விருத்த மஞ்சரி’ உருவானது. காலத்தைக் கணக்கிட்டுப்பார்த்தால் கால் நூற்றாண்டிற்கு மேல் கடந்து விட்டது. இதற்குச் சரிசமமான தகுந்த வளர்ச்சி, காரியம் கொண்டு பார்த்தால் மஞ்சரிக்கு இல்லை.

மஞ்சரியினுடைய முகவுரையில் இப்படி காணப்படுகிறது. “இந்த புத்தகத்தில் சிறப்பாக ஒன்று செய்திருப்பது மலையாள மொழி விருத்தங்களுக்கு ‘ஸம்ஜ்ஞ லக்ஷணம்’ (பெயரிலக்-கணம்) கூறியதுதான். சமஸ்கிருதத்தைப் போல மொழியில் ஒரு கன்னியமான விருத்த சாஸ்திரத்தை இதுவரை யாரும் உருவாக்கியிருப்பதாகத் தெரியவில்லை. கேரளகௌமுதி ஆசிரியர் இரண்டு மூன்று கிளிப்பாட்டு விருத்தங்களுக்கு மட்டும் பெயர்களும் தவறான சூத்திரங்களும் கூறியிருக்கிறார். இலக்கணவியலார் பெயர்கள் கொடுத்திருக்கின்ற இடத்தில் அவைகளையே ஏற்றுக்கொண்டும் இல்லாத இடத்தில் புதிய பெயர்களை உருவாக்கியும் தான் இதில் மொழியாப்பு இலக்கணம் எழுதப்பட்டிருக்கிறது.”

இதை வாசித்தால் கேரள கௌமுதியுடைய பங்களிப்பு மிகுவும் குறைவானது என்றல்லவா எண்ணத் தோன்றும். அதுவா உண்மை? கௌமுதியுடைய இருண்ட வெளிச்சத்தின் வழியாக அல்லவா மஞ்சரியும் பயணித்திருக்கிறது. விருத்த மஞ்சரியில் பாஷா விருத்த இயலினுடைய ஏற்கத்தக்கதான மேலாய்வுகள் மிகுதியும் மட்டுமல்ல, அடிப்படையானக் கருத்துக்கள் உட்பட கௌமுதியுடைய வகையல்லவா? சிந்திக்க வேண்டும்.

1 'சம்ஜ்ஞா' (பெயர்) இலக்கணங்கள் - இரண்டிலும்

முதலாவதாக கௌமுதியிலும் மஞ்சரியிலும் உள்ள 'சம்ஜ்ஞா'(பெயர்) இலக்கணங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

கிளிப்பாட்டு விருத்தங்கள்

மஞ்சரியில் காணப்படும் காகளி, கேக, அன்னநட, களகாஞ்சி போன்ற இந்த நான்கு விருத்தங்களும் கௌமு-தியில் உள்ளவைகள். இலக்கணத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஒன்றும் வருத்தவில்லை. கௌமுதியிலுள்ள இலக்கணங்களில் தவறுகள் நேர்ந்திருப்பின் அக்குறைபாடு அதேபோன்று மஞ்சரியிலுள்ள இலக்கணங்களிலும் காணப்-படும். மணிக்காஞ்சி, மிஸ்ரகாகளி, ஊனகாகளி இப்படி மூன்று கிளிப்பாட்டு விருத்தங்களையும் கூட மஞ்சரியில் காணலாம். சந்தர்ப்பச் சூழ்நிலையால் கூறப்பட்ட ஒரு 'திருதகாகளி'யும் இதில் அடங்கும். ஆனால், ஆழ்ந்து நோக்கினால் அதில் காணப்படும் தவறுகளைப் புரிந்து கொள்ள முடியும். மஞ்சரியினுடைய இந்த நான்கு சொந்த விருத்தங்களில் திருதகாகளிக்கு ஏற்பட்டிருக்கின்ற தவறைப் பார்க்கும் பொழுது "வல்லா மக்களிலில்லா மக்களூ" என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகிறது. ஊனகாகளிக்கும் பெரிய ஊனங்கள்

(தவறுகள்) ஏற்பட்டிருக்கின்றன. மணிக்காஞ்சியினுடைய நிலையும் மேற்குறிப்பிட்டபடியே ஆகும். இனி எஞ்சியிருப்பது மிஸ்ரகாகளியாகும் இதுவும் முழுமையாக-வில்லை எனக் கூறலாம். (குற்றம் குறைகளெல்லாம் சரியான சந்தற்பங்களில் தெளிவுபடுத்தவேண்டும்).

துள்ளல் பாட்டு விருத்தங்கள்

'ஓட்டன்','சிதிலானுஷ்டுபார்தம்', 'கேகாபாதி' போன்றவை கௌமுதியிலுள்ள முக்கியமான துள்ளல் விருத்தங்களாகும். இதற்கானச் சூத்திரங்களில் மிகவும் குறைபாடுகள் காணப்-படுகின்றன. இருப்பினும் இதில் 'சிதிலா-னுஷ்டுபார்தம்', மற்றும் 'கேகாபாதி' இரண்டும் கௌமுதியில் கூறியபடியே மஞ்சரியிலும் கூறப்பட்டிருக்கிறது. கௌமுதியில் சரியான இலக்கணம் மட்டும் கூறி, பெயர் இல்லாத ஒரு துள்ளல் விருத்தம் உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. கௌமுதியில் பெயர் கொடுக்கப்படாத இத்துள்ளல் விருத்தத்திற்கு விருத்த-மஞ்சரியில் ''பரியஸ்தகாஞ்சி'' என்று பெயர் கொடுக்கப்பட்டது மட்டுமின்றி இதற்குத் தவறான இலக்கணமும் கூறப்பட்டிருக்-கிறது.

மஞ்சரியில் மேற்கூறப்பட்ட விருத்தங்களும், 'வக்த்ர', 'மல்லிகா' போன்ற சமஸ்கிருத விருத்தங்கள் மற்றும் வேறு பிற இலக்கணங்களும் காணப்படுகின்றன. அவை, 'மதமந்தர', 'சிதாக்ர', 'ஹம்சப்ல்ம்தம்', 'ஊனதரம்கிணி', மற்றும் 'அஜகர-கமனம்' போன்றவைகளாகும். இவை சரியானவைதான் என்றாலும் சற்று நுட்பமாக ஆராயும்போது விருத்தங்களில் எழுத்துக்களின் எண்ணிக்கை குறைந்ததாகக் காணப்படுகின்ற 'சிதாக்ர' என்ற விருத்தம் உண்மையிலேயே 'தரம்கிணி'

விருத்தமாகும். இந்நிலையில் 'ஊனதரம்கிணி'யும் மற்றும் 'ஹம்சப்லம்தமும்' மஞ்சரியிலுள்ள புது விருத்தங்களாகும். இதில் 'ஹம்சப்லம்தம்' விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள விதிமுறை சரியானதாகவும் இல்லை.

இருபத்துநாலு விருத்தம்

விருத்த மஞ்சரியிலுள்ள இருபத்துநான்கு விருத்தங்களும் கேரள கௌமுதியில் சிறிதளவேனும் குறிப்பிடப்படாத விருத்தங்களாகும். இது ஆச்சரியமானது என்றுதான் கூறவேண்டும். எனினும், மஞ்சரியின் சொந்த இலக்கணங்களில் பெரும்பாண்மையும் தவறுகளே நேர்ந்திருக்கின்றன.

'சர்ப்பிணி', 'கலேந்துவதன', 'ஸமாஸமம்', 'கல்யாணி', 'சம்புடிதம்', 'அதிசம்மத', 'பல்லவினி', 'அதிஸ்திமித', 'ஸ்திமித', மற்றும் 'உபசர்ப்பிணி', இப்படி பத்து விருத்தங்களை "இருபத்துநாலு விருத்தங்கள்" என்ற இயலில் காணலாம். உண்மையிலேயே ஐந்து மட்டுமே காணப்படுகிறது. எப்படியெனில், இதில் 'அதிசம்மத' என்பது கிளிப்பாட்டில் குறிப்பிட்ட 'மணிகாஞ்சி'யாகும். 'ஸ்திமித', 'அதிஸ்திமித', 'கலேந்துவதன' இவை மூன்றையும் நுட்பமாக ஆராயும்போது ஒரே விருத்த வகையைச் சார்ந்தவைகளாக அமைகின்றன. இது 'காகளி' வகையைச் சேர வேண்டியதுமாகும். இலக்கண விதிப்படி 'கல்யாணி'க்குக் கூறப்பட்டுள்ள இலக்கணம் கிளிப்பாட்டில் கூறிய 'திருதகாகளி'க்குப் பொருந்தும். ஆனால், உண்மையிலேயே இது 'ஊனகாகளி'யாகும். எனவே இத்தவறான இலக்கணங்கள் தவிர்க்க வேண்டியவைகளாகின்றன.

காதையும், வஞ்சிப்பாட்டும்

விருத்த மஞ்சரியில் காணப்படும் ‘கிருஷ்ணகாதை’ விருத்தமான ‘மஞ்சரி’யைக் கௌமுதியும் குறிப்பிட்டிருக்கிறது. அதே சமயத்தில் ‘வஞ்சிப்பாட்டு’ விருத்தமான ‘நதோன்னத’-யை கௌமுதி குறிப்பிடவில்லை. இது விருத்த மஞ்சரியில் மட்டுமே காணப்படுகிறது. ‘நதோன்னதை’க்கு விருத்த மஞ்சரி கூறும் இலக்கணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாகும்.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்பொழுது கௌமுதியைவிட சில குறிப்பிட்ட அளவிலான யாப்புக் கருத்துக்களே மஞ்சரியில் கூறப்பட்டிருக்கின்றன. அதிலும் பெரும்பாண்மை-யாகத் தவறுகளே காணப்படுகின்றன. சுருக்கமாகக் கூறினால் மஞ்சரியில் தவறுகள் இல்லாத பாகங்களே இல்லை எனலாம். இதுமட்டுமல்ல தவறுகள் எந்தவொரு இலக்கண நூலிலும் ஏற்படக் கூடாததுமாகும்.

2. யாப்பு அமைப்புக் கொள்கை

கேரள கௌமுதியில் :

மலையாளமொழி விருத்தங்கள் என்பது என்ன? எவைகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு மலையாள விருத்தங்களுக்கு இலக்கணம் எழுத வேண்டும்? என்ற இந்த விசயத்தில் இரண்டு நூல்களினுடைய நிலைபாடுகளைத்தான் முக்கியமாகப் பரிசோதிக்க வேண்டியிருக்கிறது. முதலாவ-தாகக் கேரள கௌமுதியைப் பார்க்கலாம்.

தமிழ் முறைகள்

கேரள கௌமுதி, தமிழ் யாப்பு முறைகள் பற்றிய கருத்துக்களைத்தான் முதலில் கூறுகிறது. ‘ஆசிரியத்துறை’,

‘முடுக்கு’, இப்படி சில தமிழ் விருத்தங்களின் சூத்திரங்க-ளைச் சில இடங்களில் குறிப்பிட்டதும் அசை, சீர், என்ற தமிழ் யாப்பு உறுப்புக்களைப் பயன்படுத்துகின்ற முறைகளைக் கூறியிருப்பதும் தேவையானதுதான். எனினும், குறிப்பிட்டி-ருக்கும் இக்கருத்துக்களால் நமக்கு எந்தவொரு பயனுமில்லை. கூறியக் கருத்துக்கள் போதுமானதாகவும் இல்லை. அதில் எதுவும் சரியானதாகவும் இல்லை. உதாரணமாக, ‘கலிப்பா’, ‘அசை’ என்பவைகளை எடுத்துக்கொண்டால்,

1. தமிழில் கவிதை இலக்கணத்தின்படி நான்கு துறையாகி-றது. உதாரணம்: வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா என்று இந்தளவில் மட்டும் கூறிவிட்டு, ‘‘கலிப்-பாத்துறையில் நாலடிக்கு ஒருவிதத்தில் ஒத்துப்போகின்ற இருபத்துநாலு விருத்தத்தில் சில விருத்தங்கள் காணப்படுகின்றன’’ என்று கூறினால் தமிழ் யாப்பி-லக்கணம் அறியாதவர்களுக்கு எப்படி புரிந்துகொள்ள முடியும்.

2. அசை - மாத்திரை, அசை இரண்டு வகை, நேரசை-‘லகு’, நிரையசை - ‘குரு’ என்று அசை பற்றி இவ்வளவு மட்டுமே கூறப்பட்டிருக்கிறது.

இரண்டு வகை அசைகள் உண்டு என்று சொன்னது-தான் இதில் உண்மையாகும். ‘அசை’ என்பது மாத்திரை அல்ல, நேரசை மற்றும் நிறையசைகள் என்பன ‘லகு’(குறில்), ‘குரு’க்களும்(நெடில்) அல்ல. அசை குறித்து எப்படியோ வந்த இந்த தவறான புரிதலை வைத்துக்கொண்டுதான் ‘ஐந்தசைச்சீர்’ என்ற அடிப்படையில் சில விருத்தங்களுக்கு ‘கணநியமம்’ (சீர்இலக்கணம்) கூறப்பட்டிருக்கிறது. தமிழில்

‘ஐந்தசைச்சீர்’ என்று சொல்லப்படும் சீரே இல்லை. ‘நாலசைச்சீர்’ தான் கூறப்பட்டிருக்கிறது. இது ‘தேமான் தண்ணிழல்’, ‘புளிமாநறும்பூ’ என இது போன்று எட்டு, ஒன்பது மாத்திரையளவில் வரும். ‘மூவசைச்சீர்’ மூன்று மாத்திரை-யுள்ள கணம்(சீர்). இப்படியொரு சொந்தமான முறையில் மேற்கூறிய கலிப்பாவிற்கும் அசைக்கும் கௌமுதியில் விதிமுறை கூறப்பட்டிருக்கிறது.

மலையாளத்தில் தமிழ் யாப்பு முறை

இப்படி அங்குமிங்குமாக விளக்கமில்லாத நிலையில் சில தமிழ் விருத்தங்களைக் கௌமுதி கூறியிருக்கிறது. அந்தத் தமிழ் யாப்பு முறைகளுடன் மலையாள மொழி விருத்தத்தினுடைய விதிமுறைகளை ஒப்பிட்டுக் கௌமுதியில் இவ்வாறு கூறப்படுகிறது.

‘‘மேற்குறிப்பிட்ட நான்கு துறைகளில் வெண்பாவிற்கும் குறளடி அமைப்பிற்கும் மற்றும் ஆசிரியத்துறைக்கும் ஒருவி-தத்தில் ஒத்துப்போகின்ற துஞ்சனுடைய பாட்டுக்களெல்லாம் மேற்படி பதிநான்கு விருத்தத்துடனும் ஒத்துப்போகிறது. குறைந்தளவு துஞ்சனும் அந்த முறையைப் புரிந்துகொண்டு-தான் கிளிப்பாட்டுகள் அமைந்திருக்கிறார்’’

‘திருக்காளத்திப்பாடல்’, ‘பொன்னமாதரு’, ‘பைங்கிளிக்-கண்ணி’, ‘பராபரக்கண்ணி’ என்ற இந்த தமிழ் கவிதை பாகங்களைக் கூறிவிட்டு மீண்டும் இப்படியாகக் கூறுகிறார். ‘‘மேற் குறிப்பிட்டவைகளில் யாப்புப் பண்புகளிலும், ‘சீலு’ என்ற சொல்லின் பயன்பாட்டிலும் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மலையாளத்தின் முதல் கவிஞரான துஞ்சத்துக்குருநாதன் ‘பைங்கிளிக்கண்ணி’, ‘பராபரக்கண்ணி’

போன்ற தமிழ் கவிதைகளைப் பார்த்துதான் தன்னுடைய கிளிப்பாட்டுக்களை இயற்றினார் என்றால் அந்த செய்யுளி-னுடைய 'பாட்டுமுறை' அந்த மஹாத்மாவினுடைய மனதிலி-ருந்து புறப்பட்டது போல அல்லாமல் தமிழ் முறையிலும் ஒத்துப்போகவில்லை.''

'விருத்தமுறை' தமிழோடு மிகவும் நெருக்கமானது என்றும் 'பாட்டுமுறை' மிகவும் வேறுபாடுடையது என்றும் கௌமுதி குறிப்பிட்டிருப்பதாக எண்ணத் தோன்றாலாம். ஆனால் 'பாஷா விருத்தங்கள்' என்ற தலைப்பின்கீழ் அமைந்-துள்ள பத்தியில் இப்படியும் குறிப்பிடுகிறார். ''......மற்றும் பல விதமான பாட்டுகள் துஞ்சனைப் பின்பற்றியவை என்றும் அவற்றில் பெரும்பாண்மை எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை என்றும் நான்கு அடிகளாக அல்லாமல் ஒவ்வொரு பாடலும் தமிழைப் பின்பற்றி ஈரடியாகவும் காணப்படுகிறது.''

தமிழில் அசைகளுக்கு எழுத்து எண்ணிக்கை இல்லை என்று, 'கண்டேன்' 'கண்டது', 'பறவது' என்று இப்படி உதாரணம் கூறியதையும் முன்பு ஒரு இடத்தில் 'பாஷா விருத்தங்கள்' (மலையாளமொழி யாப்புக்கள்) எழுத்து எண்ணிக்கையினால் ஆனவை என்று இங்கு கூறியதையும் ஒத்து நோக்கும் பொழுது குறிப்பிடப்படும்படியான ஒற்றுமைகள் இல்லை என்றுதான் கூற வேண்டும். (விருத்த மஞ்சரியும், கேரள கௌமுதியை பின்பற்றித்தான் ஆக வேண்டும். ''பிராயேண பாஷா விருத்தங்கள் தமிழின் வழிக்குத்தான்'' (மலையாளமொழி யாப்புக்கள் பெரும்பாண்மையும் தமிழ்மொழி வழி வந்தவைகள்) என்ற கருத்தைச் சொல்லிச் சொல்லி இறுதியில் 'பாஷா விருத்தங்கள்' என்பது தமிழ்முறையைப்

பின்பற்றி இரண்டு பாட்டுகளாகப் பாடப்படும் வரிகள்தான்'' என்ற கருத்தளவில் நிற்கிறது.)

உண்மையில் பாஷா விருத்த முறையானது தமிழ் விருத்த முறையோடு குறிப்பிடப்படும் படியான ஒற்றுமை கொண்டதல்ல என்றுதான் இதனைப் படித்து சிந்தித்தவர்க-ளெல்லாம் கூறுகின்றனர். டாக்டர். எஸ். கெ. நாயருடைய கருத்தை நான் கூறுகிறேன் ''தமிழில் சந்தசாஸ்திர தத்துவங்-களைப் பரிசோதித்தால் அப்பன் தம்புரான் கூறியதுபோல 'நேரசை' மற்றும் 'நிரையசை'யுடைய 'கெடலடி' நமக்குப் பயன்படுத்த முடியாது என்பது புரியும். மலையாளத்திலுள்ள சில பாட்டுகள் தமிழ் பாட்டுகளோடு மட்டும் ஒத்துப்போகின்றன என்ற கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் தமிழ் பாட்டுகளோடு மட்டுமல்ல தெலுங்குடனோ, கர்நாடகத்துடனோ, தமிழுடனோ உலகில் அனைத்து மொழி-களிலுமுள்ள பாடல்களிலும் இந்த ஒற்றுமை காணப்படு-கின்றது. மலையாளத்திற்கு 'சந்தஸ்' தொடர்பான காரியத்தில் ஒற்றுமை ஏதும் காணப்படுவதில்லை.''

மலையாள யாப்பு முறைகள்

பாஷா விருத்த தத்துவங்களைக் குறித்து கௌமுதியில் கூறியிருப்பது இவ்வளவுதான்.

> ''பாஷா கான விசேஷங்ங
> ளீஷலில்லக்ஷர கிரமம்
> கோஷிக்கும் மாத்ரகள்கில்லே
> விசேஷம் தாளரீதிபோல்''

இந்த காரிகை கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டிருக்கிறது. ‘‘இந்த மலையாளத்தில் துஞ்சத்துக்குருக்கள், ராமாயணம் மற்றும் பாரதம். . . . போன்றவற்றை ‘கேரள பாஷா கான விசேஷம்’ (கேரளமொழிப் பாட்டு முறைகள்) என்ற பெயரில் அமைத்து வெளியிட்டதும் சமஸ்கிருதத்திலிருந்து எடுக்கப்பட்டதுமான ‘கிளிப்பாட்டு விருத்தங்கள்’ எல்லாம் எழுத்து எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவைகள். மேலும், அவைகளை ஒவ்வொரு விதமாகத் தாள வட்டத்தில் அடக்கும் முறையி-லான ராகங்களைச் சேர்த்து உச்சரிக்கின்ற மாத்திரையளவும் இதில் காணப்படுகிறது. பிறகு ‘ஸ்காந்தம் - தசமம்…….. சந்தான கோபாலம்’ போன்ற கவிதைகளும் மற்றும் இதுபோன்று பலவிதமான பாட்டுகள் துஞ்சனைப் பின்பற்றியும் அவற்றில் பெரும்பாண்மை எழுத்து எண்ணிக்-கையை அடிப்படையாகக் கொண்டவைகளுமாகக் காணப்படு-கின்றன.’’

விருத்த மஞ்சரியில் விருத்த அமைப்பு முறை

‘அடிக்கணக்கு’ (‘அடி’ குறித்த கருத்து)

‘‘மலையாள பாஷா விருத்தங்கள் தமிழ் வழி வந்தவைகள். ஆகையால், கானரீதிக்கு(பாட்டு முறை) ஒத்துப் போகின்ற ஈரடிகளாக உள்ளன.’’ என்று மஞ்சரி குறிப்பிட்டி-ருப்பினும் ‘இருபத்துநாலு விருத்தம்’ முதலானவை நான்கடிப் பாடல்களாக உள்ளன என்று தெளிவு படுத்தியிருக்கிறது. இதன் மூலம் சில விருத்தங்கள் ஈரடியாகவும், வேறு சில விருத்தங்கள் நாலடியாகவும் அமைய வேண்டும் என்று புரிந்து கொள்வது தவறு. எந்த விருத்தமானாலும் ஈரடியாகவோ, நாலடியாகவோ அமையலாம் என்பது தான் மஞ்சரியின் கருத்தாக அமைகிறது. ஈரடியாக அமைந்துள்ள துள்ளல்

பாட்டில் ‘தரங்கிணி’யும் கிளிப்பாட்டில் ‘காகளி’யும் இருப்பத்துநாலு விருத்தத்தில் நான்கடிகளாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

மலையாளத்தில் ஈரடிகளும், நான்கடிகளும் மட்டுமல்ல, மூன்றடி, ஐந்தடி வரை பாடல்கள் அமைந்திருக்கின்றன.

‘‘இந்தியயிலெச்சிசு பாடி
அம்மிஞ்ஞுப்பால் நுணயும் சுண்டா-
லிந்தியயிலெச்சிசு பாடி’’ - *(ஆக்கித்தம்)*

‘‘ஸ்ரீ மதநந்த புரத்திலெழும் சுவாமி
ஸ்ரீ பத்மநாபன்றெ பாதபத்மம்
நாமிந்நு சிந்திச்சு பார்வதிராணியெ
நந்திச்சு வாழ்த்திக்களிச்சிடேணம்- ஸப
வந்திச்சு கும்மியடிச்சிடேணம்’’ - *(கும்மிப்பாட்டு)*

இது போன்று மூன்று மற்றும் ஆறடிப் பாடல்கள் இருப்பதாக மஞ்சரி நூலில் எந்த பகுதியிலும் குறிப்பிடவில்லை.

4. ஒழுங்கு முறையும் விதி முறையும்

கேரள கௌமுதி தமிழ், மலையாளம், வடமொழி போன்ற சில குறிப்பிடத் தகுந்த யாப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட முக்கியமான விருத்தங்கள் பற்றிய கருத்துக்களை மட்டும் கூறிச் செல்கிறது. இதிலுள்ள விருத்த அமைப்பு முறையைத்தான் விருத்த மஞ்சரியும் பின்பற்றியிருக்கிறது.

ஊன விருத்தங்கள்

ஊன விருத்தங்களில் பாதத்தின் (அடி) இறுதியில் வரும் எழுத்துக்களின் குறைவு பற்றி மட்டும் ‘கௌமுதி’

குறிப்பிடுகிறது. மஞ்சரியும் இந்த முறையைத்தான் பின்பற்றியிருக்கிறது. ஆனால், ஒரு பாதத்தின் இறுதியில் மட்டும் ‘ஊனதகள்’ (எழுத்துக்களின் குறைவு) வருவதில்லை. அவ்வடியிலுள்ள அனைத்து கணங்களிலும் (சீர்கள்) வருவதுண்டு. அது மட்டும் அல்ல, ஒரு பாடலின் பல சீர்களிலும் வரலாம். இது போன்று பல வகைகளில் ‘ஊன விருத்தங்கள்’ காணப்படுகின்றன. ‘ஒந்நாம் குந்நின்மேல்’ என்ற பிரபலமான நாடன் பாட்டிலுள்ள விரிகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

1. “ஒந்நாம் — / குந்நின்மே / லோரடிக் / குந்நின்மேல்
ஓராயி / ரம்கிளி / கூடண / ச்சு — — ”

இதில் முதலாம் பாதத்தின் முதல் சீரின் இறுதியில் ஒரு எழுத்தும், இரண்டாம் பாதத்தின் இறுதிச் சீரின் இறுதியில் இரண்டு எழுத்துக்களும் குறைவாகக் காணப்படுகின்றன.

இதுபோன்று விருத்த அமைப்பு பற்றிய அடிப்படைத் தத்துவங்களைக் கூறுவதை நிறுத்திக் கொண்டு இனி இலக்கணங்களையும் அவற்றிற்கான உதாரணங்களையும் குறித்து ஆராயலாம் என நினைக்கிறேன்.

கணமும் மாத்திரையும்

“மாத்ரய்க்கு நியமம் காணும்
கானம் தாளத்தினொக்குகில்
அல்லெங்கில் வர்ண்ண சம்க்யய்க்கு
நியமம் மிக்கதிக்கிலும்”

என்று கணத்திற்கும்(சீர்) மாத்திரைக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தாளத்திற்கு ஒத்துப் போகின்ற பாடல்கள் மாத்திரையளவு நியமத்தையும், ஒத்துப் போகாதவைகள்

எழுத்து எண்ணிக்கை நியமத்தையும் அடிப்படையாகக்-கொண்டிருக்கும் என்றல்லவா இந்த சூத்திரத்தின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், சூத்திர விளக்கத்தில் இப்படியாகக் கூறப்பட்டிருக்கிறது. ‘‘கிளிப்பாட்டு தாளமிட்டுப் பாடப்படாததினால் அதில் எழுத்து எண்ணிக்கை விதிமுறை பின்பற்றப்பட்டிருக்கிறது. துள்ளல்பாட்டு முதலானவைகளில் மாத்திரை விதிமுறை பின்பற்றப்பட்டிருக்கிறது”.

மேற்குறிப்பிட்ட சூத்திரத்திற்கு ஒத்துப்போகாத நிலை-யில் அதன் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை பின்வருமாறு,

1. தாளமிட்டுப்பாடப்படாத கிளிப்பாட்டுகளில் ‘களகாஞ்சி’க்-கும் ‘மிஸ்ரகாகளி’க்கும் எழுத்து எண்ணிக்கை அடிப்ப-டையில் அல்ல, மாத்திரை அளவு அடிப்படையிலுள்ள விதிமுறையே கூறப்பட்டிருக்கிறது.

2. தாளமிட்டு பாடுகின்ற துள்ளல்பாட்டுகளில் ‘கிருசமத்ய’ (அர்த்தகேக), ‘வக்த்ரம்’ இவைகளுக்கு மாத்திரை நியமமே கூறப்படவில்லை.

3. இருபத்துநாலு விருத்தங்களில் பல விருத்தங்களுக்கும் எழுத்து எண்ணிக்கை அடிப்படையிலான விதிமுறை மட்டுமல்ல, சமஸ்கிருதத்திலுள்ள ‘வர்ண்ண கணம்’ (வர்ண்ணம்-எழுத்து, கணம்-சீர், எழுத்துக்களின் எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த சீர்) நியமமும் கூறப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் தாளத்திற்குப் பொருத்தமானவைகள் என்பது மட்டும் அல்ல, தாளமிட்-டுப்பாடுபவைகளும் உண்டு.

ஒன்றாம் பகுதி

கிளிப்பாட்டு விருத்தங்கள்

1. காகளி

“மாத்ரயஞ்சக்ஷரம் மூந்நில் வருந்நோரு கணங்ஙளெ எட்டு சேர்த்துள்ளீரடிக்கு செல்லாம் காகளியெந்நுபேர்”

என்பது இதன் இலக்கணமாகும். “சாரீகபைதலே சாருசீலே வரிகாரோமலே கதாசேஷவும் சொல்லு நீ ” என்ற இரண்டு வரிப் பாடல்தான் இதற்கு உதாரணம். அத்யாத்ம-ராமாயணம் - அயோத்யாகாண்டம், பாரதம் - சபாபர்வம், சாணக்யா சூத்திரம்- இரண்டால் பாதம் முதலானவைகள் இந்த விருத்தத்தில்தான் அமைந்துள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

இலக்கண விதியில் ஒரு பிழை

முதலாவதாக சிறிய ஒரு காரியம். ஒரு பாடலின் ஈரடிக்கும் சேர்த்துதான் இதற்கு இலக்கணம் கூறப்பட்டி-ருக்கிறது. அப்படி இது தேவையானதாகத் தெரியவில்லை. காரணம் பாடலின் அடிகள் சமநிலையில் காணப்படும் பொழுது ஒரு பாதத்தினுடைய இலக்கணம் கூறினால் போதுமானது. ஏனெனில் ‘தரம்கிணி’, ‘கேக’, ‘அன்னநட’, ‘ஸர்ப்பிணி’ இவை அனைத்திற்கும் இந்த நடைமுறைதான் கூறப்பட்டிருக்-கிறது. ஆகவே, இந்த காகளியில் மட்டும் இப்படியொரு தவறான விதிமுறை தேவைதானா? என எண்ணத் தோன்றுகிறது. அல்லாமல் காகளி மட்டும் ஈரடியாகவே வரும் என்ற கருத்தைச் சிறப்பிப்பதற்காகவோ? என்னவோ? தெரியவில்லை. அப்படி இருந்தாலும் அதற்கு வாய்ப்பே இல்லை. காரணம், இருபத்துநாலு விருத்தத்தில் ‘காகளி’

நாலடி சீர்களாக அமைந்திருப்-பதை விருத்த மஞ்சரியும் அந்த பகுதியில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

கேரள கௌமுதியில், ‘‘கணமெட் டய்யசச் சீரோ பின்னயுந்நடி ரண்டிலே, காணெழுத்தறுநாங்கெந்நாலிணங்ஙும் சீலு காகளி’’ என்பது தான் இலக்கணம். இந்தத் தவறை கவனத்தில் கொள்ளாமல் மஞ்சரியும் இதனைப் பின்பற்றியிருக்கிறது.

கௌமுதியில் அது அப்படியிருக்க, மூன்று எழுத்தில் ஐந்து மாத்திரை அளவுள்ள நான்கு ‘கணங்கள்’(சீர்கள்) சேர்ந்தது ஒரு பாதம்(அடி), என்பது தான் மஞ்சரி கூறும் இலக்கணம். அப்படியெனில், இந்த இலக்கணம் சரியானதா என்பதைத் தெளிவு படுத்திக்கொள்வது நல்லது.

‘காரிகை’க்குக் குற்றமில்லை

ஆம், அந்த நிலையிலென்றால் ‘காரிகை’ (சூத்திரம்) இலக்கணம் சரிதான். எப்படியெனில் 1. உதாரணமாகக் கூறப்பட்டுள்ள பாடலை ‘சாரீக – பைதலே – சாருசீ – லேவரி’ என்று இப்படிச் ‘சீர்’ பிரித்துச் சொல்லும் பொழுது இதில் ஒரு ‘மூவெழுத்து’ நிலை சரியானதுதான். எனினும் பழமையோ புதுமையோவான எந்தவொரு ‘காகளி’ப் பாடலிலும் இது போன்று காணலாம். ‘அக்ஷரம் மூன்றில்’ (எழுத்துக்கள் மூன்றில்) என்ற ‘கண வர்ண்ண சம்க்யாவிதி’-யும் (சீரில் எழுத்துக்களின் எண்ணிக்கை பற்றிய விதிமுறை) சரியானது. 2. ஓர் அடியில் ஒரு கணத்திற்கு மூன்று எழுத்துக்கள் வீதம் நான்கு கணத்திற்கும் பன்னிரண்டு எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆகவே, ‘நாலுகணம்

பாதத்தில்' (ஓர் அடியில் நான்கு சீர்கள்) என்ற விதிமுறையும் சரியானது. 3. ஒவ்வொரு கணத்திற்கும் எழுத்துக்களின் 'மாத்திரையளவு ஐந்து' எனக் கூறியதை ஆராயும் பொழுது, உதாரணம் காட்டிய படலின் ஒன்றாம் பாதத்தின் நான்காம் சீரில் நான்கு மாத்திரையளவே காணப்படுகிறது என்பது புலனாகிறது. மேலும், குறைந்த எழுத்துக்களைக் கொண்ட கணங்களையும் ஏராளமாகப் பார்க்கலாம்.

உ.ம்.

1. 'நீலோல்ப ലதல லோலவி லோசனன்'

2. 'எந்துஜ னமேஜ யநாம்ந ரபதி'

3. 'வேதத்ர யமொடு தேவத்ர யமதும்'

இதில் அடிவரையிட்ட கணங்களில் மூன்று மாத்திரையளவு தான் காணப்படுகிறது. இப்படி, எழுத்துக்களின் மாத்திரையளவு மூன்றும் நான்கும் ஐந்துமாக அமையும் பொழுது 'ஐந்து மாத்திரை' என்ற விதிமுறை எப்படி சாத்தியமாகும்.

எழுத்து வடிவத்திலுள்ள மாத்திரையளவு அல்ல, சொல்லில் வருகின்ற மாத்திரையளவு தான் பொருத்தமாக உள்ளது. மூன்றும், நான்கும் மாத்திரை அளவுள்ள சீர்கள் சொல்லில் 'பாடி நீட்டல்' வழி ஐந்து மாத்திரையிலாகும். இந்த நிலையில் இலக்கணத்தில் மாத்திரையளவிற்குக் கூறப்பட்ட விதிமுறை சாதாரணமாகத் தெரியலாம். ஆனால், இதற்குப் பெரிதான ஒரு எதிர்வாதமும் வரலாம். பாடி நீட்டல் போலவே 'தீர்க்கத்தை' (நெடிலை) குறுக்கவும் செய்வதுண்டு. ஒரு கணத்திற்கு நான்கு மாத்திரை என்பதுதான் காகளியினு-

டைய விருத்த அமைப்பு என்றும் அதில் மூன்றாகக் குறைந்ததை பாடி நீட்டியதால் ஐந்து மாத்திரையளவாக அதிகரித்தது என்றும் இதனை உறுதிபடுத்தலாம் என நினைக்கிறேன். மேலே குறிப்பிட்ட 'மூன்றாகக் குறைந்ததை பாடி நீட்டியதால் ஐந்து மாத்திரையளவாக அதிகரித்தது' என்ற விதிமுறைதான் இதற்குப் பொருத்தமாக உள்ளது. காரணம்,

(1) 'காகளி' பாடல்களைச் சாதாரணமாக நாம் ஐந்து மாத்திரைச் சீர் வடிவில் தான் சொல்கிறோம். (பெரும்பாண்மை 'காணரீதி'யில், அதாவது, பாட்டு வடிவில் அமைந்தவை என்பதல்லவா இதன் இலக்கணம்) (2) பிற சீர்களில் எழுத்து வடிவில்தான் ஐந்தைந்து மாத்திரை காணப்படுகிறது. (3) காகளியுடைய இரட்டைகளாகிய 'களகாஞ்சி' முதலான-வைகளில் 'லகுபிராய' (சீரில் பெரும்பாண்மை குறிலெழுத்து வருவது) 'லகுமய' (சீர் முழுவதும் குறிலெழுத்து மட்டும் வருவது) சீர்களுக்கு எழுத்து வடிவத்தை அடிப்படையாகக் கொண்ட ஐந்தைந்து மாத்திரையளவு காணப்படுகிறது. இப்படி பார்க்கும் பொழுது ''மாத்திரை ஐந்தக்ஷரம் மூந்நில்'' என்ற கண மாத்திரை விதியும் சரிதான்.

உரை விளக்கத்தில் பிழை

காகளிக்குக் கூறப்பட்ட இலக்கணத்தில் தவறு இல்லை. எனினும், அதன் உரை விளக்கத்தை விவரித்திருப்பதில் தவறுகள் காணப்படுகின்றன. இதனை மூன்று பகுதிகளாப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் குறித்துச் சொல்ல வேண்டியவைகளை ஆங்காங்கே குறிப்பிடலாம்.

1. ‘பஞ்சமாத்திரை கணங்கள்’ (ஒரு சீரில் ஐந்து மாத்திரையளவு கொண்டிருப்பது) மூன்று வகையில், அதிகம் ரகணத்தையும் பிறகு தகணத்தையும் அதிலும் குறைந்து யகணத்தையும் தான் பயன் படுத்தப்படுகிறது.

   சரிதான், ஆனால் இதில் ஒன்றை நாம் மனதில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் மாத்திரை ஐந்துள்ளது என்றாலும், ‘யகணம்’ (ஒரு சீரில் இடம்பெறும் மூன்று எழுத்துக்களில் முதலெழுத்து மட்டும் குறிலாக வருவது) மிகவும் குறைவாகத்தான் காணப்படுகிறது. (முழுமையும் இல்லை என்று சொல்ல முடியாது ஓரளவிற்கு) பாதாதியில் ‘யகணம்’ வரவும் செய்யாது.

2. ‘லகு’க்களை நீட்டி ‘குரு’வாக்கலாம் என்பதினால் ‘நகணம்’, ‘பகணம்’, ‘ஸகணம்’, ‘ஜகணம்’ நான்கு கணங்களையும் உபயோகிக்கலாம். இதுவும் சரிதான். ‘பகணம்’ அதிக அளவில் காணப்படும். ‘ர – தகணங்க-ளும்’ இதுபோன்று கூடுதலாகவே இருக்கின்றன. பிற ‘கணங்கள்’ பொருந்துவது மிகவும் குறைவு.

3. ‘குரு’வினை குறுக்குதல் ஆபூர்வமாகையால் மாத்திரை-யளவு அதிகமாக உள்ள (ஆறு மாத்திரை) ‘மகணம்’ மட்டும் இந்த விருத்தத்தில் உபயோகிக்கக் கூடாதென்பதாகிறது.

இது மிகவும் தவறானது, ‘மகணம்’ காகளியில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

உ.ம்.

‘மன்னவ ன்மாராய ஞங்கள்கு சிந்திச்சால்’

பின்னேஸ்ரீ ராமனும் லக்ஷ்மணன் தன்னொடு’

‘ராமனும் கௌசல்யா தேவியெ க்காளேறெ’

ஞாநொரவஸரத்திங்கல பேக்ஷிச்சால்’

(அத்யாத்மராமாயணம்)

‘பந்துக்க ளெக்கண்டா லென்னதி லும்வரம்’

‘காயாவின் புவின்நி றமுள்ள மாதவன்’

(பாரதம்)

இதுபோல் ‘மகணம்’ வருகின்ற எத்தனையோ பாடல் வரிகளை உதாரணமாகக் கூற முடியும்.

இலக்கணத்தினுடைய அலட்சியம்

மகணத்தினுடைய காரியம் இருக்கட்டும்: பிற ஏழு கணமும் காகளியில் வரலாம் என மஞ்சரி குறிப்பிட்டிருப்பதைக் காணமுடியும். எனினும், ஒவ்வொரு கணமும் ஓர் அடியில் எந்த இடத்தில் வரும் அல்லது வராது என்பதற்கான யாதொரு விதிமுறையும் கூறவில்லை. இந்நிலையில்,

‘சரண பங்கஜம் கும்பிட்டு லக்ஷ்மணன்’

‘செறிய பர்ப்படம் வலிய பர்ப்படம்’

‘உரலு வலிச்சு கிணற்றில் மறிச்சு’

மேற்கண்ட வரிகளைப் பார்க்கும் பொழுது இவைகளெல்லாம் ‘காகளி’ வகைகள் தான் எனக் கருதக்கூடும். (பாதத்தில் எழுத்துக்கள் பன்னிரண்டு, மூன்றெழுத்து நிலை, பல சீர்களில் எழுத்து எண்ணிக்கையில் தான் ஐந்தைந்து மாத்திரையளவு,

மாத்திரையளவு குறைந்த கணங்களில் பாடி நீட்டி மாத்திரை-யளவைச் சமநிலை படுத்தலாம்.) ஆனால், உண்மையில் இவை 'காகளி' அல்ல. இருப்பினும் இலக்கண விதிமுறை-களை வைத்துப் பார்க்கும்பொழுது 'காகளி' போல் தோன்றுகிறது.

விடுபட்ட கருத்து

காகளியில் ஒரு கணத்திற்கு ஐந்து மாத்திரைதான் என்ற விதிமுறை இருந்துங்கூட ஐந்து மாத்திரையுள்ள 'யகணம்' காகளியிலும் குறைவாகத்தான் இருக்கிறது. அதிலுள்ளவை தான் சொல்லில் 'ர-தகணங்களாக' மாறவும் செய்திருக்கின்றன. மாத்திரை நான்கு மட்டுமே இருக்கிறது என்றாலும், 'பகணம்' மிகுதியான மாத்திரையளவில் காணப்-படுகிறது. 'சரண பங்கஜம்' இதுபோன்ற பாடல்களின் ஓர் அடியிலுள்ள நான்கு கணங்களில், மூன்று கணங்கள் ஐந்து மாத்திரை அளவைக் கொண்டிருந்தாலும் இந்த விருத்தம் காகளி ஆகுவதில்லை. அதற்குக் காரணம் காகளியுடைய இரண்டு அடிகளிலும் முதல் சீரின் முதல் எழுத்து 'குரு'-வாக (நெடில்) இருக்க வேண்டும். அதாவது 'ர-த-ப-ம' கணங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். சுருக்கமாகக் கூறினால், அடிகளினுடைய முதல் எழுத்து குருவாக இருக்க வேண்டும். சொல்லுவதில் அல்ல எழுத்து வடிவிலும் இவ்விதமாக இருக்க வேண்டும். இந்த இலக்கணம் ஒத்துப் போகாததினால் தான் மேலே கூறிய 'சரண பங்கஜம்……..' போன்ற வரிகள் காகளியாகவில்லை. இது குறித்த முக்கியமான இலக்கணக் கருத்துக்கள் மஞ்சரியில் விடுபட்டுப் போயிருக்கின்றன.

‘பாதாதி குரு’ (ஓர் அடியில் முதல் சீரின் முதல் எழுத்து நெடிலாக வருவது) விதிமுறையானது முழுமையும் முக்கியமானவை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இருப்பினும் மஞ்சரியில் இது குறித்தக் கருத்துக்கள் விடுபட்டுப் போனதினால் தான் ‘காகளி’ அல்லாததைப் பலரும் ‘காகளி’ என்று கூறுவதற்கு இது காரணமாகிவிட்டது. ஆம், இது ஒரு சிலருக்கு மட்டுமல்ல அறிஞர்களுக்கும் கூட தவறு ஏற்பட வழி வகுத்திருக்கிறது.

“திரிச்சங்ங செந்நிட்டுடன் மானபம்கம்
ஸ்மரிச்சாசுரு கௌகத்தொடொந்நிச்சு பார்த்தன்
எரிச்சாசுரு தீயில் பதிச்சீடுவானாய்
குதிச்சொந்நு சாடி ஹரே கிருஷ்ண சௌரே !”

இதில் வரும் விருத்தம் (யாப்பு) காகளிதான் என்று ஸ்ரீ ஆர். நாராயணப்பணிக்கர் கருத்து தெரிவித்திருக்கிறார். (கேரள பாஷா சாகித்திய சரித்திரம் 4-ஆம் பாகம், பக். 468) ‘பாதாதி குரு’ என்ற முக்கியமான விதிமுறை மஞ்சரியில் கூறப்படாமல் போனதின் காரணமாகவே ஐந்து மாத்திரைச் சீர் விருத்தத்தை ஸ்ரீ ஆர். நாராயணப்பணிக்கர் ‘காகளி’ என்று கூறுகிறார். (‘கெழக்கே மலகொத்தி......’ இது போன்ற நாட்டுப்புறப்பாடல் வரிகளிலுள்ள விருத்தம் ‘காகளி’ என்று ஒரு இலக்கியவாதி கருத்து தெரிவித்திருப்பதை முகவுரையில் ‘ஊனவிருத்தங்கள்’ என்ற பகுதியில் குறிப்பிட்டிருப்பதையும் நினைவில் கொள்க).

சரியான இலக்கணம்

இவ்வளவும் ஆராய்ந்ததிலிருந்து காகளியில் முழுமை-யும் தவறான இலக்கணமே கூறப்பட்டிருக்கிறது என்பது தெரிய

வருகிறது. எனினும், இதனைச் சரியான முறையில் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

'ஒரு பாதத்தில் (அடியில்), ஐந்து மாத்திரை அளவுள்ள மூன்று எழுத்துக்கள் நான்கு சீர்களாக வருகின்ற விருத்தம் காகளி. முதல் சீர் எழுத்து வடிவில் நெடிலாக இருக்க வேண்டும். காரிகை (சூத்திரம்) வேண்டுமெனில் இப்படியாக-லாம்,

''ஐமாத்ர மூவக்ஷரத்தி லொக்குமாருள்ளதாம் கணம்
பாதத்தில் நா, லாதிய கணம் குருவாதியிது காகளி''

'விருத்த சில்பம்' என்ற நூலில் இப்படியாகக் காணப்-படுகிறது. ''த-ர- கணங்ஙளே தரம்போலெ இடகலர்த்தியதானு 'காகளி''' இதில் 'இட கலர்த்தியது (எழுத்துக்களை இடமாற்றி அமைப்பது) எதைக் குறித்தது எனில், ஒவ்வொரு அடியிலும் வேண்டாம், ஒவ்வொரு பாடலிலாவது 'இடகலரல்' (எழுத்துக்களை மாற்றி அமைத்தல்) வேண்டும் என்ற அர்த்தத்தைக் குறித்தது என இவ்வாக்கியத்தின் மூலம் நாம் புரிந்துகொள்ள முடிகிறது. எனினும், கீழே காணப்படுகின்ற வரிகளைப் பார்க்கவும்.

''சம்மோஹமுண்டாக்கி ராமன்றெ பந்திக்கு
மம்மாய கொண்டாகுரு வேராக்கி வேகேந''

(க. சௌகந்திகம் துள்ளல்)

''பாக்யமத்ரே சுமித்ரய்க்கதும் கண்டு நிர்
பாக்யயாயோரு நீ தாசியாய் நித்யவும்''

(ரா. அயோத்யா காண்டம்)

முதலாவது பாடலில் ‘தகணம்’ மட்டும், இரண்டாம் பாடலில் ‘ரகணம்’ மட்டும் வந்துள்ளது. ‘தரம் போலெ இடகலர்த்திய’’ (எழுத்துக்களை இடமாற்றி அமைப்பது) என்ற சூத்திரத்திற்கு ஏற்ப இப்பாடல் அமைந்திருக்கிறது.

2. களகாஞ்சி

‘‘காகளிக்காதிய பாதாதௌ
ரண்டோ மூந்நோ கணங்ஙளெ
ஐயஞ்சு லகுவாக்கீடி
லுளவாம் களகாஞ்சிகேள்’’

காகளியின் ஒன்றாம் பாதத்தில் (அடியில்) முதல் இரண்டோ, மூன்றோ கணங்கள் (சீர்கள்) ‘லகு’ மயமானால் (அனைத்து எழுத்துக்களும் குறிலாக இருந்தால்) ‘களகாஞ்சி’ என்பது இதன் இலக்கணம். பாரதம் பீஷ்மபர்வத்திலிருந்து கொடுக்கப்பட்ட உதாரணப் பாடல் கீழ்க்கண்டவாறு அமை-கிறது.

‘‘சுரவரஜ சுதனுமத நிந்நூ விஷண்ணனாய்

‘‘சூக்ஷிச்சு மாயமறிஞ்ஞிட்டி ராமனும்’’

என்றும் ராமாயணம்- சுந்தர காண்டத்திலிருந்து,

‘‘ஸகல சுருக குல’’

என்றும் இப்படி ஒவ்வொரு பாடல்வரிகளின் மூலம் உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

‘கேரள கௌமுதி’ எனும் நூலில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு,

“காகளீ மூந்நடிக் கெல்லாம் -

முடிகீரொன்பதக்ஷரம்

ஆகவே மாத்ர யொப்பிச்சும் -

பாடுமே களகாஞ்சியும்”

(முன்பு கூறிய ‘காகளி’ பாடலினுடைய பழமையான அர்த்தம் தமிழில் ‘முடுக்கு’ என்று சொல்வதுடன் ஒருவிதத்தில் ஒத்துப் போகிறது. இருபது மாத்திரை அளவில் பதினெட்டு எழுத்துக்களைக் கொண்ட ஒரு பாடல் காணப்படுகிறது. அதற்குக் ‘களகாஞ்சி’ என்று பெயர்) களகாஞ்சியும் காகளியும் வேறுபட்டது என்ற கௌமுதியின் கருத்து வரவேற்கக்கூடியது. ஆனால், அவ்வெழுத்துக்களின் எண்ணிக்கையளவு பதினெட்டென்று கூறியது பொருத்தமான-தாகத் தெரியவில்லை. (இருப்பினும் சிலவற்றில் அப்படியும் காணப்படலாம்) இலக்கணத்தில் இந்தக் குறைபாட்டை நிறைவேற்றும் விதத்தில் தான் ‘மஞ்சரி’ எழுத்து எண்ணிக்கையின் அளவை விட்டுவிட்டு “இரண்டோ மூன்றோ” சீர்கள் ‘லகு’மயமாகும் (அதாவது குறிலாகும்) என்று இலக்கணம் கூறியிருக்கிறது. இதனால் எந்த பயனுமில்லை. இந்த புதிய இலக்கணத்திலும் பெரிய தவறு காணப்படுகிறது.

இலக்கணத்தினுடைய குறைபாடு

விருத்த மஞ்சரி களகாஞ்சிக்கு உதாரணம் கூறிய அதே காண்ட – பர்வங்களிலிருந்து கீழேக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பாடல்வரிகளைப் பார்க்கவும்,

1. “விம்புதபதி யொடுநி சிச ராலயம் வெந்தொரு
விர்த்தாந்த மெல்லா மறியிச்சு கொள்ளுவான்
அஹமஹமி காதியா பாவக ஜீவாலக
ளம் பரத்தோளமுயர்ந்நு செந்நு முதா”

இரண்டாம் ஈரடிப் பாடலின் முதலாம் அடியில் முதல் சீர் மட்டுமே லகுமயமாக (குறிலாக) உள்ளது. மஞ்சரி குறிப்பிட்டது போல இரண்டோ, மூன்றோ இல்லை. (அப்படி எனில் மஞ்சரி கூறிய இலக்கணத்தின்படி இந்த வரிகள் எப்படி களகாஞ்சியாகும்)

2. விநயபய குதுகப க்திப்ரமோ தான்விதம்
வீரன் நமஸ்கரிச்சீடினா நந்திகே”

இந்தப் பாடல் வரிகளிலும் முதல் அடியில் ஒரு ‘லகுமய-கணம்’ முடிந்தவுடன் ஒரு ‘லகுப்ராயகணம்’(சீரில் நெடிலெ-ழுத்துக்கள் இருப்பினும் பெரும்பாண்மையாகக் குறிலெழுத்-துக்கள் வருவது) வந்திருக்கின்றன. (இலக்கண விதிப்படி‘லகு’ பிராயகணம் இடம்பெறுதல் தவறானது. ‘லகு’ மயகணம் ஒன்று மட்டும் போதாது என்று நினைத்திருக்கிறாரோ என்னவோ)

3. “ஞொடியிடயி லடர்பொருது சடரரிக தவ
தநயர் நூறும்மரிக்கும் பவாநிரிக்கும் த்ருடம்”

இந்த வரிகளில் முதல் அடியில் இரண்டோ, மூன்றோ சீர்கள் மட்டுமல்ல, நான்கு சீர்களும் லகுமயமாக (குறில் எழுத்துக்-களாக) வந்துள்ளன.

4. <u>“ஸரிதவநி</u> வநிசிகரி ஜலதிபரி மாணவும்
<u>திரிபுவநவி</u> பாகவும் திகாரி சேஷஙளம்
ப்ரியஸசிவ நவநிபநொ டாசுரு சொல்லீடி நான்
பின்னெயும் வர்த்தமானம் பரஞ்ஞீடினான்”

இங்கு ஒன்றாம் பாடலின் முதல் அடியில் மட்டுமல்ல, இரண்டடியிலும் ‘லகுமயகணம்’ (அனைத்தும் குறிலெழுத்து-களாக வரும் சீர்) வந்திருக்கிறது. போதும்- இது போன்று இலக்கணப் பிழையுள்ள எத்தனையோ பாடல்கள் உதாரணம் காட்டுவதற்கு இருக்கின்றன.

3. ‘மணி காஞ்சி’

‘‘காகளிக்குள்ள பாதங்ஙள்
ரண்டிலும் பின்னெயாதிமம்
கணம் மாத்ரம் லகுமய
மாயாலோ மணிகாஞ்சியாம்’’

காகளியினுடைய இரண்டு அடிகளிலுமுள்ள முதல் சீர் மட்டும் லகுமயமானால் (அதாவது குறிலாக இருந்தால்) அது ‘மணிகாஞ்சி’ எனப்படும். இதன் இலக்கணமாக பாரதத்திலி-ருந்து,

‘‘பரமபுருசன் மஹாமாயதன் வைபவம்
பறகயுமநாரதம் கேள்க்கயும் செய்கிலோ’’

என்ற வரிகள் உதாரணமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இச்சூத்திரமும் அதற்கான உதாரணமும் மிகவும் பொருத்த-மாக இருக்கின்றன. ஆனால், இதில் குழப்பமும் காணப்படு-கிறது.

‘‘ஒன்றான நின்னெயிஹ ரண்டென்று’’

இருபத்தினாலு விருத்தத்தில் ‘அதிசம்மத’ என்றொரு விருத்தம் இருப்பதாக ‘விருத்த மஞ்சரி’ கூருகிறது. அதற்கு,

''ப்ரவநமபிபூரயாமாஸபேரீரவை
ரவனத சுராம் கனானந்த கனங்ஙளும்''

என்ற வரிகள் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த வரிகளும் 'மணிகாஞ்சி' உதாரணமாகக் கூறியிருக்கின்ற வரிகளும் ஒரே விருத்தமாகும். (இதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் அவற்றைக் குறிப்பிடவுமில்லை). மணிகாஞ்சிக்கு 'மாத்திரை கண அளவு' (மாத்திரை அடிப்படையாகக் கொண்ட சீர்) கூறிவிட்டு, அதிசம்மதாவிற்கு 'வர்ண கண அளவு' (எழுத்துக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட சீர்கள்) கூறப்பட்டுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகக் காணப்படுகிறது.

உதாரணத்திற்காத்தான் இந்த இலக்கணம். ஒரே விருத்தத்தை இரண்டு இடங்களில் இரண்டு பெயரிட்டு பொருத்தப்படாத இரண்டு விதங்களில் இலக்கணம் கூறப்பட்-டுள்ளன. (களகாஞ்சி இலக்கணத்தை அலங்கரிக்கும் பொழுது மணிகாஞ்சி என்ற விருத்த கற்பனையே தேவையில்லை எனலாம்). 'அதிசம்மத'யைக் குறித்துள்ள இந்த கருத்துக்கள் இனியும் கூறவேண்டியதிருக்கிறது என்பாதல் இங்கு இதைப்பற்றி அதிகமாக விளக்கவில்லை.

4. 'மிஸ்ரகாகளி'

''இச்சபோலெ சிலேடத்து
லகுப்ராய கணங்ஙளெ
சேர்த்தும் காகளிசெய்திடா
மதின் பேர் மிஸ்ரகாகளி''

என்பது இதன் இலக்கணமாகும். பாரதத்திலிருந்து கூறப்பட்டுள்ள ‘ஜனிம்ருதி நிவாரணம்’ ‘சிவ சிவ மனோஹரே’ போன்ற இரண்டு வரிகள் இதற்கு உதாரணங்களாகும்.

‘காரிகை’யினுடைய தவறு

இந்த சூத்திரத்தின் மூலம் நாம் என்னவென்று பொருள் கொள்வது. (நெடிலெழுத்துக்களாகிய சீர்களுக்கிடையில் சில இடங்களிலெல்லாம் குறிலெழுத்துக்களாகிய கணங்களையும் பயன் படுத்தியிருக்ககூடிய ‘காகளீபேதம்’ என்றல்லவா பொருள் கொள்ள முடியும். ஆனால் இதற்கு கொடுக்கப்பட்ட உதாரணங்களோ இப்படியில்லை.

1. ‘‘ஜனிம்ருதி நிவாரணம் ஜகதுதய காரணம்
   சரணநத சாரணம் ஜகதுதய காரணம்’’

இதில், குறிலெழுத்துக்களாலாகிய சீர்களே இல்லை. ‘குரு ப்ராயம்’ (குறில் நெடில் கலந்து வரும் சீர்களில் நெடிலெழுத்துக்கள் பெரும்பாண்மையாக வருவது) மற்றும் ‘லகுமயகணங்கள்’ (சீரில் குறிலெழுத்துக்கள் மட்டும் வருவது) வந்துள்ளன.

2. சிவசிவம னோஹரே சீலவதி ஸாதரம்
   ஜா்மஸா பல்யதம் சொல்லு கைவல்யதம்’’

இதில் ‘சீலவதி’ என்றொரு ‘லகுப்ராயகணம்’ காணப்படுகிறது. ஆனால், லகுமயகணமும் வந்திருக்கிறது. காரிகை இலக்கண விதியின்படி இப்படி வருதல் கூடாது.

பிறிதொரு ‘மிஸ்ரகாகளி’

மணிகாஞ்சியில் ஏற்பட்டிருக்கின்ற இலக்கணப் பிழையா-னது, இங்கு மிஸ்ரகாகளியிலும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது மிஸ்ரகாகளிக்குக் கூறப்பட்ட இலக்கண விதிக்கு முழுமையும் பொருந்துகின்ற உதாரணத்தையே, மஞ்சரியில் வேறொரு இடத்தில், வேறொரு பெயரில் இலக்கண விதிக்குப் பொருந்-தாத வேறொரு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இருபத்தி-னாலு விருத்தத்திலுள்ள ‘ஷஸ்திமித’-யைப் பார்க்க-வும்.

> ‘‘ஸ்ரீராம சந்ரஜய ஸிறாக டாக்ஷமது
> பாராம மேபெரிய காருண்ய மெந்நிலருள்’’

இவையெல்லாம் ஐமாத்திரைச் சீர்கள். ‘குருப்ராய’ ‘லகுப்ராய’ சீர்கள் இடையிடையே வந்திருக்கின்றன. இந்த விருத்தம் எதன் அடிப்படையில் மிஸ்ரகாகளியாகாது என்பது கேள்விக்-குறியாக உள்ளது. ‘மிஸ்ரகாகளி’ உதாரணமாகக் காண்பித்-திருக்கின்ற ‘ஜனிம்ருதி நிவாரணம்’ முதலான வரிகளிலும் இது போன்ற ‘நியதஸ்தானம்’ (விதிமுறை) மாற்றம் காணப்படுகிறது.

ஒற்றையான சீர்கள் ‘குருப்ராயம்’ இரட்டையான சீர்கள் ‘லகுப்ராயம்’ -இதுவே ‘நியதஸ்தானம்’ (விதிமுறை).

அனைத்தும் ஒன்றுதான்

இருபத்திநாலு விருத்தத்திலுள்ள ‘ஸ்திமித’ என்பது ‘மிஸ்ரகாகளி’ எனும் விருத்தம்தான் என்று இங்கு அறிய முடிந்தது. இதுவும் ‘அதிஸ்திமித’வும் ஒன்றுதானென்று இனிமேல் தெளிவாகும். கிளிப்பாட்டிலுள்ள ‘மணிகாஞ்சி’தான்

இருபத்திநாலு விருத்தத்தில் கூறப்பட்டுள்ள ‘அதிஸம்மத’ என்று இதற்கு முன்பு கூறப்பட்டிருக்கிறது. இது ‘மிஸ்ரகாகளி’ இலக்கணத்தில் உட்படும் என இனிமேல் நமக்குத் தெரிய-வரும். ‘களகாஞ்சி’ இலக்கணத்தைச் சரியான முறையில் பரிசோதிக்கும் பொழுது மிஸ்ரகாகளியும், மணிகாஞ்சியும் தேவையற்றது எனத் தோன்றும் என்று இதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இவையும், இங்கு பெயர் கூறாத வேறு சிலவும் கூடி ஒரே விருத்தத்தினுடைய அம்சங்களேயாகும். அந்த விசாலமான விருத்தத்திற்கு புதியதொரு பெயரும் தேவைப்படும். தொடர்ச்சியான ஆய்வுச் சிந்தனையின் மூலம் தெளிவாகி வருகின்ற இந்த நிலையை, இங்குச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

5. ‘ஊனகாகளி’

(எழுத்து எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற ‘காகளி’ வகைகளை பழைய முறைப்படி கூறினால், காகளி இரட்டை-களை ‘களகாஞ்சி’ ‘மணிகாஞ்சி’ ‘மிஸ்ரகாகளி’ போன்ற பெயர்கள் சூட்டி இலக்கணம் உருவாக்கின பின்பு சில கணங்களில் எழுத்துக்கள் குறைவாக வருகின்ற ,காகளி வகைகளை விவரிக்கிறது. இந்த ஒழுங்கு முறை மிகவும் நல்லது இந்த ஊன வகைகளில் ‘ஊன காகளி’, ‘த்ருத-காகளி’ என்ற இரண்டு விருத்தங்கள் மட்டுமே கூறப்பட்டிருக்-கின்றன. (ஊனகாகளிக்கு இரண்டு வடிவமும் காண்பிக்கப்படி-ருக்கிறது. நம்முடைய ஊனகாகளி விசித்திரங்கள் குறவான-தல்ல என்பது உறுதி. முன்னுரையில் ஊன விருத்தங்களைக் குறித்து கூறியதை நினைவில் கொள்ள வேண்டும். அதே சமயம் அவை சரியாக விவரிக்கப்பட்டுள்ளனவா என்பதை முதலில் பார்க்கலாம்).

"ரண்டாம் பாதாவஸானத்தில்
வருந்நோரு கணத்தினு
வர்ணமொந்நு குறஞ்ஞீடி-
லூனகாகளியாமது"

என்பது இதன் இலக்கணமாகும். காகளி பாதத்தின் இறுதி கணத்திலுள்ள மூன்றெழுத்துக்களில் எந்த எழுத்து குறைந்-தால் ஊனகாகளி என்று இலக்கண விதிப்படி தெளிவில்லை. எந்த எழுத்து குறைந்தாலும் அது ஊனகாகளி என்ற கருத்தாக இருக்கலாம். உதாரண வரிகள் சீர் மாற்றி கூறியிருப்பதிலிருந்து இறுதி எழுத்தினுடைய குறைவையே அவர் கூற நினைத்திருக்கலாம் என நாம் ஊகிக்க முடியும். பாரத்தலிருந்து,

"தத்தே வரிகரிகத்த ஙிரிமம
சித்தம் முஹுரபி தெளிஞ்ஞிதய்யா"

என்ற வரிகள் உதாரணமாகும்.

உதாரணம் தவறு

இங்கு குறிப்பிட்டிருக்கின்ற ஊனகாகளி வரிகள் எப்படி இலக்கண விதிப்படி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை பரிசோத்திதுப் பார்க்கலாம்.

1. "சாரீகபைதலே சாருசீலே வரி
   காரோமலே கதாசேஷவும் சொல்லு"

2 "இந்நு ஞான் நாளெ நீ இந்நுஞான் நாளெ நீ
   இந்நும் ப்ரதித்வநிக்குந்நி தெந்நோர்ம"

காகளியுடைய இரண்டாம் பாதத்தில் இறுதி எழுத்து குறைந்த இந்த வரிகள் இலக்கண விதிப்படி நிச்சயமாக

ஊனகாகளியாக அல்லவா இருக்கவேண்டும். மஞ்சரி உதாரணமாகக் கூறியுள்ளதான ‘தத்தே வரிகரி’ என்ற வரிகள் இந்த வரிகளைப்போல் உள்ளதாக இருக்கலாம். இந்த வடிவத்திற்கு பெரிய வேறுபாடு தோன்றுகிறது, அதுவும் இலக்கணத்திற்குப் பொருத்தமுடையதா? என்பதை உறுதிப்படுத்துவதற்கு அந்த வரிகளினுடைய இரண்டாம் பாதத்தின் இறுதியில் ஒரு எழுத்து சேர்க்கும்போது காகளி வடிவம் பெறுகிறதா என்று பார்த்தால் போதுமனது அல்லவா.

“தத்தே வரிகரி கத்தங்ஙிரி மம
சித்தம் முஹரபி தெளிஞ்ஞிதய்யா”

தத்தேவ - ரீகரீ - கத்தங்ஙி - ரீமம, சித்தம்மு - ஹரபீ – தேளிஞி - தய்யா. இப்படி ஏழில் ஆறு கணத்திற்கு ‘குரு கரணம்’(சீரில் பெரும்பாண்மை நெடிலெழுத்துக்கள் அமைவது) செய்தால் மட்டுமே காகளீத்துவம் வரும்.

ஒரு எதிர்வாதம்:- ஏன் அப்படி குருகரணமாகக் கூடாது. மொழிவிருத்தம் பரந்துபட்டது. ‘குருகரணம்’ எந்த விருத்ததிலும் காணப்படும். முக்கியமாக காகளியில் காணப்படும். இந்த உதாரணமும் போதாதெனில்,

“தத்தே வரிகரி கத்தங்ஙிரி மம
சித்தம் தெளிஞ்ஞு பறக நீ சேஷவும்”

இப்படியொரு காகளி வரி ஸ்காந்தபுராணத்தில் காணப்படுகிறது. இதன் அடிப்படையில் மஞ்சரியிலுள்ள ‘தத்தே வரிகரீ’ என்பது ஊனகாகளிதான் என்று கூறலாம். இதனைப் பல அறிஞர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அது

ஊனகாகளி இல்லை என்று உறுதி படுத்துவதற்கு மேலே குறிப்பிட்ட உதாரணம் போதுமானதல்ல.

இந்த வாதத்தில் தவறு இல்லை. ஆனால், சிந்திக்க வேண்டும். ஸ்காந்தபுராணத்திலிருந்து உதாரணம் காட்டிய வரியினுடைய இரண்டாம் பாதத்திற்குக் காகளீத்துவம் யதார்த்தமானது. 'தத்தே வரிகரி' என்ற வரிகளில் ஓரிடத்தி-லும்கூட காகளீத்துவம் காணப்படவில்லை. அது ஒருபுற-மிருப்பினும், அந்த காரணத்தினால் மட்டும் உதாரணம் தவறாகிவிட்டது என்று கூறவில்லை.

உதாரணம் தரம்கிணி வகை

1. விவாதத்திற்குள்ளான வரிகளுடைய எழுத்துக்களின் ஒழுங்கமைப்பை நுட்பமாகப் பரிசோதிக்கவும்.

> ''தத்தே வரிகரி கத்த ஙிரி மம
> சித்தம் முஹுரபி தெளிஞ்ஞி தய்யா''

முதலில் 'தத்தே' என்று இரண்டு 'குரு'(நெடில்) - நான்கு மாத்திரை, பின்பு 'வரிகரி' என்று நான்கு 'லகு'(குறில்) - அதற்கும் நான்கு மாத்திரை. இப்படி இரண்டு நெடிலும், நான்கு குறிலுமாக இடைவிட்டு துடர்கின்றது. அனைத்தும் நான்கு மாத்திரை கணங்கள்(சீர்கள்). தேவையில்லாமல் 'குருகர-ணங்கள்' செய்து மனப்பூர்வம் காகளியாக்கப் புறப்ப-டாமல் அந்த வரிகளின் வடிவோடு கூறினால் 'சதுர்மாத்திரை' (நான்கு மாத்திரை) கணத்துவம் பெறுகிறது. சொல்வடிவும், எழுத்து எண்ணிக்கையும் ஒன்று போல் நான்குமாத்திரைச் சீர் வடிவிலிருக்க, மனபூர்வம் வேறொரு விதத்தில் காகளித்துவம் ஏற்படுத்துவது ஒரு தவறான முன்விதியை பலவாறு

நியாயப்படுத்துவதற்கான வேண்டாத வேலை என்றே கூறவேண்டும்.

2. பாரதம்-ஸபாபர்வதத்திலிருந்து மஞ்சரி இந்த வரிகளை உதாரணம் காட்டியிருக்கிறது. அங்கு இது போன்று நான்கு வரிகள் காணப்படுகின்றன. ‘சௌப்திகம்’, மற்றும் ‘ஸ்ரீ’ என்ற பர்வங்களுடைய முதலிலும் மற்றும் எட்டு, நான்கிலும் ஈரடி வீதம் இதேபடி பார்க்க முடியும். பாகவதம் ‘ஷஷ்டஸ்கந்-தத்திலும்’ பல வரிகளைப் பார்க்கலாம். இவை அனைத்தும் ஒன்றோ சிலதோ அல்ல, ஒன்றுகூட ஒழியாத அனைத்து வரிகளும் - ஒரேவிதமான எழுத்து எண்ணிக்கை அமைப்பில் நான்கு மாத்திரைச் சீர் வடிவமாகக் காணப்படுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். இனியும் பல வரிகளை உதாரணமாகக் காட்டலாம்.

“தத்தே வரிகரி கத்த ஙிரி மம
சித்தம் முஹுரபி தெளிஞ்ஞி தய்யா”
“நித்யம் நிருபம பக்தியா கணிவினொ -
டித்தம் சரிதங்ங ளுரசெய்க நீ.”

(பாரதம் - ஸபாவர்வம்)

“நாராயண ஜய நாராயண ஜய
நாராயண ஜய வரதஹரே
நாநாரஸமய வாணீகுணகண
வானாதிக ஜனஹ்ரதயே

------- -------- -------- --------

ஆலம் பனமநு கூலம் த்ரிபவந

மூலம் பரிணத விபுத குலம்.''

(பாரதம் - ஸௌப்திகம்)

''நல்த்தேன் மொழிதவ தத்தே தினமநு -

சித்தே ரஸமருளுக ஸரஸே''

(பாரதம் - ஸ்ரீ)

''நாராயண ஜய நாராயண ஜய

நாராயண ஜய வரதஹரே

நாராயண பரிபாவயமாம் பகு

கோரமஹாபாதக நிவஹால்''

(பாகவதம் - ஷஷ்டம்)

1. இந்த வரி எத்தனை 'குருகரணம்' செய்தாலும் மஞ்சரியிலுள்ள இலக்கண விதிப்படியான ஊனகாகளி ஆகாது. காரணம் எழுத்து எண்ணிக்கை இரண்டு பாதத்திலும் பதினொன்றாக உள்ளது.

2. அனைத்து வரிகளுக்கும் பொருந்துகிற இலக்கணத்தை வைத்துதான் 'ஊனதரம்கிணி' என்று கூறப்பட்டிருக்கிறது. கூட்டத்தில் சில வரிகள் தரம்கிணியாகக் காண்பதற்கு உதாரணம் மேலே கூறப்பட்டுள்ளது.

''தத்தேவரிகரி கத்த ஙிரிமம

சித்தம் முஹரபி தெளிஞிதயா''

என்று இரண்டு எழுத்திற்கு ‘லகுகரணம்’ செய்தால் அது ஊனதரம்கிணியாகும். அங்ஙனம் செய்யாத சூழ்நிலையில் அது தரம்கிணியே ஆகும்.

விருத்த மஞ்சரியிலுள்ள ஊனகாகளியில் காணப்படு-கின்ற தவறுகளைப் புரிந்தவர்களில் சிலர் அதை தெளிவு-படித்த முயற்சிக்கும் பொழுது ‘ஊனகாகளி’ என்ற விருத்தம் ‘ஊனதரம்கிணி’ அதாவது ‘லகுதரம்கிணி’ தான் என்று பிற அறிஞர்கள் எழுதியிருப்பதைப் பார்த்திருக்கின்றேன். இது வேறொரு பெரிய தவறாகும். ஊனகாகளி ஊனகாகளிதான். ஊனதரம்கிணி ஊனதரம்கிணிதான். இரண்டும் வெவ்வேறான விருத்தங்களாகும். ஊனகாகளிக்கு உதாரணம் காட்டியிருப்பது ஊனதரம்கிணியிலுள்ள வரிகள் என்பதுதான் மஞ்சரிக்கு ஏற்பட்டிருக்கின்ற தவறு. அதைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். ஊனகாகளியான அந்த இலக்கணத்திற்குப் பொருந்தும் வகையில் வேறுசில வரிகளும் காணப்படுகின்றன. இந்த வரிகளெல்லாம் ஒரே வடிவமாகவல்லவா இருக்கின்றன. ‘ஸர்வகுரு’, ‘ஸர்வலகு’ என்று இப்படி இடைவிட்டு தொடர்ந்து வருகின்ற நான்கு மாத்திரை கணங்களின் இறுதி கணத்திலுள்ள ஒரு எழுத்து குறைவதனால் இதில் சிறிதளவே வித்தியாசம் காணப்படுகிறது. இறுதி சீருக்குமுன் காணப்படு-கின்ற சீர் அதற்கு முன்புள்ள சீரைப் போன்று லகுமயமா-கத்தான் காணப்படுகிறது. இறுதி கணத்தில் இரண்டு மாத்திரை அளவுள்ள எழுத்து குறைந்த இந்த நான்கு மாத்திரைச் சீர் விருத்தம் ஊனகாகளி அல்ல, அது ஊனதரம்கிணியாகும். பாகவதம் ஷஷ்டஸ்கந்தத்தில் இவ்வகையிலுள்ள சில வரிகள் தனித் தரம்கிணியாகவும் காணப்படுகிறது.

‘‘நாராயண சரிதாநந்தாம்ருத
மோரோந்நிவ ச்ருணு நிநதக்ரஹே
நாராயண சரணாம் போருகயுக -
மாராதன செய்தீடுக கரமே
நாராயணநி லயங்கள் வலம்செ -
ய்காருடாதரமிஹ மம பதமே’’

இதில் காணப்படுகின்ற வரிகளில் இரண்டும், மூன்றும் பூர்ணதரம்கிணியாகும். ஒன்றாவது வரி ஊனதரம்கிணியே அல்லாமல் வேறெந்த விருத்தமும் ஆகாது. ‘தத்தே வரிகரி’ என்பதும் அதே விருத்தமாகும். அதில் இரண்டாம் பாதத்தில் ‘தெளிஞ்ஞி’ என்ற மூன்றாம் சீரில் ஏதோ ஒரு நெரிசல் இருப்பதாகத் தோன்றுகிறது. ‘கரிம்பு தின்மான் கரிவரநிபோல்’, ‘கறப்பு தின்னுந்நவன் வரும்போல்’ இப்படி பல துள்ளல் வரிகளிலும் காணப்படுகின்ற ‘ஜகண’ பயன்பாடுதான் இதற்குக்காரணம். அது தரம்கிணித்துவத்திலுள்ள விருத்தம் அல்ல.

ஒரு முறை கூட கூறி நிறுத்துகிறேன். விருத்தமஞ்சரி ஊனகாகளிக்கு உதாரணமாகக் கூறியிருக்கின்ற வரிகளிலுள்ள விருத்தம் ஊனகாகளி இல்லை. அது நிச்சயமாக ஊனதரம்கிணிதான்.

விருத்த சில்பத்தில்:- இந்த ஊனகாகளியின் உதா-ரணத்தை விமர்சித்து இப்படியாகக் கூறப்பட்டிருக்கிறது. ‘‘பாரதத்தில் பர்வங்கள் அனைத்தும் ஒரே வகையைச் சார்ந்த விருத்தங்கள்தான் என்ற சிந்தனையின் காரணமாக மட்டு-மல்லவா விருத்த மஞ்சரிக்கு ஒரு ‘ஊனகாகளி’யைப் பற்றிக் கூற வேண்டியிருந்தது. ‘ஸபவிராடம்’ ‘ஸௌப்திகம்’, ‘ஸ்ரீ’

என்ற நான்கு பர்வங்களிலுள்ள முதல் வரிகள் மட்டுமே அதன் உதாரணத்திற்குப் பொருத்தமானவைகள். அவற்றுள் 'ஸௌப்தி'கத்தில் தொடர்ந்து வருகின்ற வரிகள் 'கேக' என்ற விருத்தமாகும். உண்மையிலேயே அந்த பர்வத்தின் ஆரம்ப விருத்தங்களெல்லாம் நான்கு மாத்திரை கணங்கள் என்று கூறுவதற்குப் பொருத்தமானவைகள்'' (பக்கம்-161-162) அதற்கு முன்பு (பக்கம்-98) 'ஸ்ரீ' பர்வத்தில் 'நல்த்தேன் மொழிதவ' என்பது துடங்கி மூன்று வரிகள் ஊனதரம்கிணி என்ற தலைப்பில் குறிப்பிடவும் செய்திருக்கிறது.

தோற்றத்தில் ஊனகாகளி-இலக்கணத்திற்கு வேறு உதாரணம்

உருவாக்கப்படும் சூத்திரங்கள் உதாரணங்களுக்குப் பொருந்தவில்லை எனில் தவறானது என்று அதை நீக்கி விடுதல் வேண்டும். ஆனால், அது வேண்டாம். ஏனெனில் காகளியோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ள ஒரு இலக்கண மல்லவா ஊனகாகளியுடைய இலக்கணம், காகளியில் எழுத்து குறைவாக வருகின்ற விருத்தம் ஊனகாகளியேயாகும். இந்நிலையில் இலக்கணம் ஏற்றுக் கொள்ளத்தக்கது. உதாரணமாக காட்டிய வரிகள் ஊனகாகளியில்லாததாகப் போய்விட்டது எனினும், அது வேறொரு விருத்தம் என்று நாம் கண்டறிந்தோம். உதாரணத்திற்கு அப்படி ஒரு இடம் கிடைத்திருக்கிறது. இனி வேறு இலக்கணம் காணவேண்டும் என்பது மட்டுமே உள்ளது. அவற்றைக் காண்பதற்குச் சில வரிகளைக் குறிப்பிடலாம்.

''சேட்டனொரச்சியெ கூட்டிச்சுகொண்டணு
கெட்டிந்நகத்தெ புரயிலிருத்தி
சேட்டன்கயர்த்தங்கடுக்களயில் புக்கு
சட்டிகலங்களும் தல்லித்தகர்த்து''

‘‘யுத்தத்திலெத்திப்பிணஙந்தவன் தன்றெ
அர்த்தப்ரதாபம் நினக்கும் லபிக்கும்
ஆதித்யஜநாய நின்னுடைய தம்பிக்கு
ஸுக்ரீவனென்னுள்ள பேரும் லபிக்கும்’’

இது போன்ற வரிகளிலுள்ள விருத்தங்கள் தான் ஊனகாகளி. திரித்துக் கூறுவோமேயானால் ஊனகாகளிக்கு உதாரணமாகக் காண்பித்திருப்பது இது போன்ற வரிகளாகும். (இந்த வரிகளிலுள்ள இரண்டாம் அடியின் இறுதியில் ஒவ்வொரு எழுத்தைச் சேர்க்கும் பொழுது அது காகளி வரிகளாகும். அந்த காகளி வரிகளிலிருந்து இரண்டாம் அடியின் இறுதியிலுள்ள எழுத்தை நீக்கினால் ஊனகாகளியாகும். இது போன்ற சில வரிகள் முதலிலேயே குறிப்பிடப்பட்டிருப்பதையும் பார்க்கவும்.

பிறிதொரு ஊனகாகளி

விருத்த மஞ்சரியிலுள்ள வாக்கியங்கள் மற்றும் உதாரண வரிகள் முதற்கொண்டு அதே போன்று கூறுவோமேயானால் ‘‘இரண்டாம் பாதத்தில் நான்கு எழுத்து குறைந்து ஒரு வகையான ஊனகாகளி மாரன் பாட்டிலும் காணப்படுகிறது.

‘‘குங்கும /சாறணி/ஞ்ஞாலும்க/சங்ஙளில்

கும்பீந்த்ர/காமினி/யாளெ’’

இதில், இரண்டாம் அடியில் இரண்டு சீர் மற்றும் இரண்டு எழுத்துக்கள் மட்டுமே காணப்படுகிறது.”

இரண்டாம் அடியின் இறுதியில் நான்கு எழுத்துக்களும், எங்கு எந்த விதத்தில் குறைந்திருக்கிறது என்ற தெளிவு இல்லை. ஆனால், அதன் இலக்கணத்தையும் அதற்குச் சீர்

பிரித்துக் கூறப்பட்டுள்ள உதாரணத்தையும் பார்த்தால் அடியின் இறுதியில் தான் எழுத்துக்களின் குறைவு என உணரலாம். இப்படிப்பட்ட குறைவுகள் மட்டுமே மஞ்சரியில் காணப்படு-கின்றன என இதற்கு முன்பு சுட்டிகாட்டப் பட்டிருக்கிறது. காகளியினுடைய இரண்டாம் பாதத்தில் ஒரு எழுத்து குறைந்தால் அது ஊனகாகளி என்று முதலில் கூறிவிட்டு அதே சமயத்தில் நான்கு மாத்திரை குறைந்தால் அது ஒரு வகையான ஊனகாகளி என்றும் இங்குக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, ஊனகாகளிக்குக் கூறப்பட்ட இலக்கண விதியில் பிழை நேரிடுகிறது. ஊன கணத்து-வமுள்ள காகளி, ஊனகாகளி என்று பொதுவாக இலக்கணம் கூறியிருந்தால் போதுமானது.

6. ‘திரம்தகாகளி’

> ‘‘ரண்டு பாததித்திலும் பின்னெயந்தியமாய கணத்திணு
> வர்ணணமொந்நு குறஞ்ஞீடில் த்ருதகாகளி கீர்த்தனே’’

என்பது இதன் இலக்கணமாகும். ‘காளமேககளாய’, என்று தொடங்கும் ஒரு நான்கடிப் பாடலும், ‘பண்டுபண்டுள்ள’ என்று தொடங்கும் ஒரு ஈரடிப்பாடலும் உதாரணமாகக் கூறப்பட்டிருக்-கின்றன.

காகளியுடைய இரண்டாம் அடியில் ஒரு எழுத்து குறைந்தால் அது ஊன காகளி, இந்நிலையில் இரண்டு அடிகளின் இறுதியிலும் ஒரு எழுத்து குறைந்தால் இதுவும் ஊன காகளி ஆகிறது. ஆகையால், இதனை ‘த்ருதகாகளி என்று கூறுவது ஒரு விதத்திலும் பொருத்தப்படாது. எனவே, இந்த ‘த்ருதகாகளி’யையும் ‘ஊனகாகளி’ என்று கூறுவதுதான்

பொருத்தமாக அமையும். ஆக இதற்கு ‘த்ருதகாகளி என்று பெயர் கொடுத்திருப்பது தவறானதும் தேவையற்றதுமாகும்.

‘த்ருதகாகளி’ என்ற ஊனகாகளி

மஞ்சரி ‘த்ருதகாகளி’ இலக்கணத்திற்குப் பொருந்தாத உதாரணப்பாடலைக் கூறியிருக்கிறது. ஆனால், அந்த இலக்கணத்திற்குப் பொருந்தும் விதத்தில் அதாவது, இரண்டு பாதத்திலுமுள்ள இறுதிச் சீரில் ஒரு எழுத்து குறைகின்ற காகளீப் பாடல்கள் மலையாளத்தில் ஏராளமாகக் காணப்படு-கின்றன.

1. “இந்நென்றெ மாரன் வருமெந்நுசொல்லி

   காமுறித்தேங்ஙா கடம் வாங்ஙி வச்சு”

2. “முப்பத்தி மூந்நுமரம் நட்டகாலம்

   மூந்நு மரமதிலேறெ முளச்சு”

3. “சங்ஙாதி வந்நென்றெ நீராழிதந்நில்

   மூங்ஙவைஸரம் வந்நதும் கொள்ளாம்.”

4. “காலாரி ஸம்பவநாய முனீந்ரன்

   காளிந்தியில் செந்நிறங்ஙிப்பதுக்கெ”

5. “கல்யாணாருபீ வனத்தினு போவான்

   வில்லும் சரம் கைப்பிச்சோரு நேரம்”

6. வாடித்தளருந்த பூக்களறுக்கா

   நோடி நடக்கும் குளிரிளம் காற்றே”

7. “பாண்டவன் ஞானெந்து வர்ண்ணிச்ச நின்றெ

பொண்ணத்துவமெல்லாம் நசிச்சீடுமிப்போல்

எண்ணமில்லாதுள்ள ஸைநியங்ஙளேயும்

கண்ணிலாமாறு நீ கண்டுகொண்டாலும்

இது போன்றவைகளே, விருத்த மஞ்சரி ‘த்ருதகாகளி’ என்று தவறான பெயர் கொடுத்திருக்கும் ஊனகாகளியினுடைய சரியான உதாரணப்பாடல்களாகும்.

‘ஊனகாகளி’ குடும்பம்

ஊனகாகளியினுடைய சரியான இலக்கணம் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து இதற்கு முன்பு இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. காகளி விருத்தத்திலுள்ளச் சீர்களின் எழுத்துக்களில் ஒன்றோ அல்லது அதற்கு அதிகமாகவோ குறைவாக வருவது ஊனகாகளி. இந்த ஊனகாகளியில் ஏராளமான வகைகள் காணப்படுவதினால்தான் இதற்கு ஊன காகளி குடும்பம் என்ற தலைப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மஞ்சரி, இதில் மூன்று வகைகளை மட்டும் கிளிப்பாட்டில் குறிப்பிட்டிருக்கிறது. (அதில் ஒன்று காகளி வகையைச் சார்ந்ததாகவே இல்லை, எஞ்சிய இரண்டும் கிளிப்பாட்டில் உள்ளவையும் அல்ல). அது ஓர் அடியின் இறுதியில் எழுத்துக்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவில் வருகின்ற வகையாகும். உதாரணத்திற்காக வேறு சில ஊனகாகளி வகைகளைக் காணலாம்.

1. “சேட்டநொரச் சியைகூட்டி ச்சுகொண்டந்நு

கெட்டிந்ந கத்தெப்புரயிலிருத்தி.”

இரண்டாம் அடியின் இறுதியில் வருகின்ற சீர்களில் எழுத்துக்கள் குறைந்திருக்கின்றன.

2. “<u>கலியே</u> விதுலியே விசலியே யஹலியே

கலியாணி நீயென்றெ வாக்குகே ட்டீடணம்.”

இதில் முதலாம் அடியில் முதல் கணத்தில் மட்டும் எழுத்துக்களின் குறைவு காணப்படுகின்றன.

3. “பாடுவோ பைங்கிளீ ஆடுவோ பைங்கிளீ

மானம் - நோக்கிப்ப றக்குந்ந பைங்கிளி”

இரண்டாம் அடியின் முதல் சீரில் எழுத்து குறைந்திருக்கின்றது.

4. “கொச்சீ - கப்புரம் கொல்லத்தி நப்புறம்

கொச்சிகொ டுங்கலூர் கொச்சாலி நப்புறம்”

முதலாமடியின் முதல் சீரில் எழுத்து குறைந்திருக்கின்றது.

5. “எந்தும் மரத்தில் பறக்கும் - பைங்கிளி

ஞாறம ரத்தில் பறக்கும் - பைங்கிளி”

இதில், இரண்டு அடியிலும் மூன்றாம் கணத்தில் எழுத்துக்கள் குறைந்திருக்கின்றன. இது போன்று ஏராளமான பாடல்களை உதாரணமாகக் கூற முடியும்.

8. ‘அன்ன நடை’

“லகு பூர்வம் குருபரம் ஈ மாட்டில் த்ருவக்ஷரம் கணம்-

ஆரெண்ணம் மத்யயதியாலர்த்திதம், முறி ரண்டிலும்

ஆரம்பே நியமம் நித்யமிதன்ன நடயெந்ந சீல் ''

முன் எழுத்து குறிலும் பின் எழுத்து நெடிலுமாக, இரண்டு எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு சீர். இப்படி ஆறு சீர்கள் சேர்ந்தது ஒரு அடி. இந்த அடியின் நடுவே இரண்டாக (யதி) அமைய வேண்டும், அடி இரண்டாகப் பிரிக்கப்படும் இரண்டு இடத்திலுமுள்ள முதல் சீரில் முன் எழுத்து குறிலும், பின் எழுத்து நெடிலுமாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமான-தாகும். இவை தவிர, மீதமுள்ள நான்கு சீர்களிலும் அவ்வாறு முன் எழுத்து குறிலும் பின் எழுத்து நெடிலுமாக இல்லாவிடினும் தவறில்லை. இப்படி வரும் இரண்டடிப்பாடல் 'அன்னநடை' என்பது இதன் இலக்கணமாகும். 'கரா கரா கரா' 'விவத மித்தரம்' இப்படி இரண்டு வரிகள் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

கேரள கௌமுதியில்:- கௌமுதியில் இதற்காண இலக்-கணம் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கின்றது.

''மூவசக்கீரெழுத்தாகும்

சொவ்வொடீராறு சீலிலெ

கைவரும் கர்ணபர்வத்தில்

காணுநந்ந நடெந்ந சீல்''

மும்மூன்றசைக்கு முதலில் 'குறில்' இரண்டாவது 'நெடில்' என்ற முறைப்படி இரண்டு எழுத்துக்களாலாகிய ஆறு சீர்கள் சேர்ந்தது ஒரு அடி, என்ற நிலையில் இரண்டடிகளிலும் சேர்த்து இருபத்து நான்கு எழுத்துக்களில் கர்ணபர்வத்தி-லுள்ள வரிகளுக்கு 'அன்னநடை' என்று பெயர்.

மஞ்சரியிலும் பெரும்பாலும் ஒரே விதத்தில் தான் அன்னநடைக்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், சிறிதளவில் மாற்றம் செய்யப்படுகிறது. அவை கீழ்க்கண்ட-வாறு அமையும்.

1. கௌமுதி அனைத்துச் சீர்களும் ‘ல’-‘க’ என்ற (‘ல’ என்பது ‘லகு’(குறில்), ‘க’ என்பது ‘குரு’(நெடில்) வடிவில் தான் இருக்க வேண்டும் என்று மட்டும் கூறியிருக்கிறது. ஆனால், மஞ்சரி ஒரு அடியின் முதல் சீரிலும் அவ்வடியை இரண்டாகப் பிரிக்கும் பொழுது வரும் முதல் சீரிலும் (ஓர் அடியின் முதல் மற்றும் நான்காவது சீர்கள்) ‘குறில்- நெடில்’ என்ற முறை கட்டாயமானது என்று மாற்றம் செய்திருக்-கின்றது.

2. சுருக்கமாகக் கூறினால் ஒரு அடியின் நடுவில் ‘யதி’ (நிறுத்தம்) என்ற புதிய விதியை அறிமுகப்படித்தியிருக்கிறது. இப்படி திருத்தலும், சேர்த்தலுமாகிய இவை இரண்டும் தேவையற்ற ஒன்றாகும்.

முதல் விதிமுறை நிரந்தரமானது

அடியை இரண்டாகப் பகுக்கும் பொழுது சீர்களில் முதலாவதாக வரும் இரண்டு எழுத்துக்களும் முன் குறிலும், பின் நெடிலுமாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையை நிச்சயமாகக் கைக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்-துதல் சரியானதல்ல. காரணம், இதே விருத்தத்தில் கவிதை எழுதிய எழுத்தச்சன் முதல் பிற்கால கவிஞர்கள் வரை இப்படியொரு கட்டாயத்தை கடைபிடிக்கவில்லை. இப்படி வழுக்கட்டாயமான விதிமுறையைக் கூறிய மஞ்சரி, தான் உதாரணமாகக் காண்பித்திருக்கின்ற வரிகளில் கூட அந்த விதிமுறையைப் பின்பற்ற வில்லை.

1. ‘‘ஹரா ஹரா ஹரா சிவா சிவா சிவா

பூர ஹரா முர ஹர நதபதா’’

இதில் இரண்டாம் அடியின் முதல் மற்றும் நான்காம் சீர்களில் ‘குறில் - நெடில்’ என்ற இலக்கண விதிக்கு மாறாக இரண்டு எழுத்துக்களும் குறிலாகவே அமைந்துள்ளன.

‘‘விவி தமி த்தரம் பறஞ்ஞிகேழுந்நொ

ரர சநெ த்தொழு துர செய்தான் ஸீதன்’’

இங்கு இரண்டு அடிகளையும் (‘யதி’ அமைப்பு ஆரம்பமாக வரும்) பிரிக்கும் பொழுது முதலாவதாக வரும் நான்கு சீர்களில் மூன்று சீர்கள் மட்டும் இலக்கண விதிக்கு மாறாக உள்ளது. எனவே, இப்படி பிழையாக இருக்கும் இலக்கண விதியை கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுவது தேவயற்றது.

முதல் சீரும், நான்காம் சீரும் ஒரே சொல் வடிவத்திலுள்ளது என்ற அடிப்படையில் தான் இந்த இலக்கண விதி கூறப்பட்டிருக்கிறது, என இப்படியொரு விவாதம் வரலாம். ஆனால், இது சாத்தியமில்லை. காரணம் முதலாவதாகக் கூறியுள்ள உதாரணத்தில் அனைத்துச் சீர்களும் ‘குறில் - நெடில்’ என்ற வடிவத்தில் ஒன்றுபோல் உள்ளது. ‘(இலக்கண-விதியை) கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்’ என்று கூறுவது இலக்கியத்தில் எழுத்துக்களின் பயன்பாட்டைக் குறித்ததாக இருக்க வேண்டும். எந்த முறையிலானலும் அது தவறானதுதான்.

இரண்டாம் பகுதி

துள்ளல் பாட்டு விருத்தங்கள்

(ஓட்டன், சீதங்கன் மற்றும் பறையன் இவை மூன்றும் துள்ளல் பாட்டின் வகைகளாகும். விருத்த மஞ்சரி, முதலாவதாக ஓட்டன் துள்ளலிலுள்ள அனைத்து விருத்தங்களையும் விவரித்த பின்பு சீதங்கன் மற்றும் பறையன் துள்ளல் விருத்தங்களில் முக்கியமானவைகளை மட்டும் விவரிக்கிறது. இந்த முறைப்படி விவரித்திருப்பது நல்லதுதான். எனினும், ஓட்டன் துள்ளலில் இல்லாத எந்தவொரு விருத்தமும் சீதங்கன் மற்றும் பறையன் துள்ளல்களில் இல்லை என்பதுதான் உண்மை. ஓட்டன் துள்ளலில் பயன்படுத்தியுள்ள பல விருத்தங்களையும் மஞ்சரி பின்பற்றியிருக்கிறது என்பதையும், அங்ஙனம் பின்பற்றியிருக்கின்ற ஒழுங்கு முறையானது போதுமானதாக இல்லை என்பதையும் இதன் குறைபாடாகக் கூறலாம். இங்கு விருத்த மஞ்சரியிலுள்ள வரிசைமுறையின்படி பின்தொடரப்படுகிறது. (விருத்த மஞ்சரியில் ஓட்டன் துடங்கி ஒவ்வொரு வகைகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகள் இங்கு நீக்கப்பட்டிருக்கின்றது). ஓட்டன் துள்ளலில் சில சமஸ்கிருத விருத்தங்கள் பயன்படுத்தியுள்ளதாக மஞ்சரி குறிப்பிட்டுள்ளது. அந்த கருத்துக்களை வக்தரம், ஸுவாகதையும், சுமங்கலயும் என்ற தலைப்பில் இரண்டு வகையாக இங்கு விமர்சனம் செய்யப்படுகிறது).

1. தரம்கிணி

‘‘த்விமாத்ரம் கணமெட்டெண்ணம் யதிமத்யம் தரம்கிணி’’

என்பது இதன் இலக்கணமாகும். இக்காரிகையினுடைய பொருளை உரைநடையில் கூறின பிறகு, ‘‘சமஸ்கிருதத்தில் இந்த விருத்தம் மாத்திரை, ஸ, ம, க வர்க்கத்தைச்

சேர்ந்ததாகும். எனினும், இப்படியொரு இலக்கணத்தையும் பெயரையும் சமஸ்கிருத விருத்த சாஸ்திர நூல்களில் பார்த்ததில்லை.” என்று மஞ்சரியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘கோஷயாத்ர’ என்ற ஓட்டன் துள்ளலிலிருந்து ‘அணிமதி-கலயும்’ மற்றும் ‘தோஷக்ராஹிகள்’ என்று துடங்கும் இரண்டு வரிகள் இதற்கு உதாரணமாகக் காட்டப் பட்டிருக்கின்றன.

கேரள கௌமுதியில் கீழ்க்கண்டவாறு தரம்கிணிக்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

‘‘மாத்ர ஷோடசமொப்பிச்சு

தீர்த்தோரடிகள் ரண்டிலெ

சித்ரமாமக்ஷரத்தோடும்

பார்த்துகொள்கோட்டநோட்டனெ.”

‘‘ஓட்டன் துள்ளலில் ஓர் அடியில் இத்தனை எழுத்துக்கள் இருக்க வேண்டும் என்றில்லாமல், ஓர் அடியானது பதினாறு மாத்திரை அளவுள்ளதாக இருக்க வேண்டும். இப்படி இரண்டடிகளையும் சேர்த்து ஒரே வரியாகக் கணக்காக்கப் படுகிறது. இதுவே ஓட்டனின் இயல்பாகும்.’’ என்று ஓட்டன் துள்ளலுக்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

மஞ்சரி, ஓட்டன் என்ற மலையாளப் பெயரைத் தரம்கிணி என்று சமஸ்கிருத மொழியாக்கி விட்டது. இது நல்லதுதான். சமஸ்கிருதமொழியிலாக்கிவிட்டது என்பதற்காக அல்ல, காகளீ, களகாஞ்சி போன்ற பெயர்களோடு பொருத்தப்படுவதற்குத் தரம்கிணிதான் உகந்தது. இனி ஊன விருத்தத்தினுடைய காரியமும் கிடக்கிறது. ஊனயோட்டன் மற்றும் குறியோட்டன் என்ற பெயர் ஊனதரம்கிணி போன்று சரியாக அமைக்கப்பட்ட-வையா? என்பதை ஆராய வேண்டும். அடியில் பதினாறு

மாத்திரை என்ற கொளமுதியினுடைய மொத்தக் கணக்கு முற்றிலும் தவறானதாகும். இப்படியெனில், 'மானுஷ ரெல்லா ருமொந்நு போலெ', 'கேட்டிட் டேற்றம் பயமுண் டெனிக்கு' இதுபோன்ற அடிகளும் ஓட்டன் விருத்தமாகிப் போகுமல்லவா. அதுமட்டுமின்றி கணமாத்திரை முறையும் கூட காண்பித்தாலல்லவா சரியான விருத்த இலக்கணமுமாகும். விருத்த மஞ்சரி அந்த விதத்தில் இலக்கணம் செய்ய முயற்சித்தது எனினும் மஞ்சரியினுடைய இவ்விலக்கணத்திலும் சற்று தெளிவு தேவைப்படுகிறது.

'கணம்' சதுர்மாத்திரை ('சீர்' நான்கு மாத்திரை)

'த்விமாத்ரம் கணம்' (இரண்டு மாத்திரைச் சீர்) என்பது தேவையற்றது என்று முன்னுரையில் கூறப்பட்டிருக்கிறது. மட்டுமின்றி அவற்றிற்கான காரணங்களும் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சொல்வடிவிலுள்ள தாளத்துடிப்பு மற்றும் எழுத்து மொழிவடிவிலுள்ள எழுத்துக்களின் ஒழுங்குமுறை இவற்றை வைத்துக் கொண்டுதான் கணமாத்திரையை நிச்சயிக்க வேண்டும். அப்படியெனில்,

தோ	ஷ	க்ரா	ஹிக	ளி	ல்லா
ദോ	ഷ	ഗ്രാ	ഹിക	ളി	ല്ലാ

இது போன்று 'தோ', 'ஷ' என்ற முறைப்படி இவைகளை ஒவ்வொரு சீர்களாகக் கருதுவது பொருத்தமாகாது. ദോഷ / ഗ്രാഹിക / ളില്ലാ / തുള്ളൊരു. (தோஷ / க்ராஹிக / ளில்லா / துள்ளொரு) இப்படி நான்கு மாத்திரைச் சீரமைப்பில் கூறுவதுதான் சரியானது.

நடுவில் ‘யதி’(நிறுத்தம்) அமைப்பு தேவையற்றது

‘தரம்கிணி’ பாடல்களை சாதாரணமாக அடியின் நடுவில் ‘யதி’ (Pause) அமைத்து, அதாவது நிறுத்திச் சொல்வதில்லை. ஆனால், அதனைப் பாடும்பொழுது அடியின் நடுவில் ‘யதி’(நிறுத்தம்) அமைப்பு பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் ‘யதி’ அமைப்பு இல்லாமல் தான் பாடப்படுகிறது. சில உதாரணப்பாடல்களைப் பார்க்கலாம்.

1. “உட/லதி/ரமி/யமொ/ரு/த்தனு/கால்/கத
   முட/வு/ண்டவ/னுந/ட/க்கு/ந்நே/ரம்.”

2. “ச/க்ரா/ஸூ/ஙள/டு/த்திட/சே/ர்ந்நால்
   இ/க்கா/ணா/யப்ர/ப/ஞ்சம்/நா/ஸ்தி.”

3. “பா/ண்டன்/நா/யுடெ/ப/ல்லினு/சௌ/ரியம்
   ப/ண்டே/ப்போ/லெப/லி/க்கு/ந்நில்ல.”

4. “நா/யர்/விச/ந்நுவ/ல/ஞ்ஞுவ/ரு/ம்போள்
   கா/ய/க்க/ஞ்ஞி/க்கரி/யி/ட்டி/ல்ல.”

இது போன்று ‘யதி’(நிறுத்தம்) அமைப்பு இல்லாத பாடல்கள் துள்ளல் வகையில் ஏராளமாகக் காணப்படுகின்றன. பாடலின் நடுவில் ‘யதி’ அமைப்பு முறை என்பது சரியானது அல்ல என்று இதற்கு முன்பு ‘அன்னநடை’யில் விவரிக்கப்-பட்டிருக்கிறது. இந்த ‘யதி’ அமைப்பு இல்லாததினால் பாடலில் எந்த தவறும் நேரிடாது. எனவே, ‘யதிமத்யம்’ (நடுவில் நிறுத்தம்) என்பது தேவையில்லாத ஒன்றாகும்.

2. ஊனதரம்கிணி

“ரண்டாம் பாதே கணம் ரண்டு

குறஞ்ஞூன தரம்கிணி.”

பாடலின் இரண்டாம் அடியில் இரண்டு சீர்கள் குறைந்து வருவது ‘ஊனதரம்கிணி’ ஆகும்.

“இரண்டாம் பாதத்தில் இரண்டு சீர் குறைந்தது” என்று இந்தளவில் மட்டும் கூறியிருக்கிறதே தவிர, அச்சீர்களில் குறைந்திருக்கும் எழுத்துக்கள் ‘குறில்’ அல்லது ‘நெடில்’ என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. இதே தவறுதான் ‘ஊனகாகளி’யிலும் காணப்படுகிறது.

ஏராளமான வகைகளைக் கொண்ட துள்ளல் பாடல்களை ஆராயும்போது, ஒருவிதத்தில் ஊனதரங்கிணிக்குக் கூறிய இலக்கணத்திற்குப் பொருந்தும் முறையில் ஒரு பாடல் அமைந்திருப்பது தெரிய வந்தது.

எ.டு.

“சுர/வது/மா/ருடெ/நடு/விலி/தா/னீம்

நர/வது/சே/ருக/யி/ல்லே - - ”

உ_/ச்ச/றய/கா/ஞ்சந/வள/யுடெ/நடு/வில்

பி/ச்சள/வள/யது/போ/லெ - - ” -*(நளசரிதம்)*

தற்காலக் கவிதைகளில் ‘தரம்கிணி’ அமைப்பிலுள்ள பாடல்கள் ஏராளமாகக் காணப்படினும், ஊனதரம்கிணியைப் பொருத்தளவில் குறைவாகவே காணப்படுகின்றன. அவற்றை கீழ்க்கண்ட சில வரிகள் மூலம் காணலாம்.

''அரு/தெந்/நோ/தா/நா/மெந்/நோ/தா

நா/ரே/நி/ங்஥ள/த்ருஷி/யர் - -

அரு/தெ/ந்நோ/தா/நா/மெ/ந்நோ/தா

நொ/ரா/ளெநி/க்கு/ண்டு/ள்ளில் - -

எ/ந்நா/த்மா/வின்/சொ/ர்ண/க்கூ/ட்டிலெ

வ/ண்ண/ப்பைங்/கிளி/ய/த்ரெ - -.''

(புதுசேரி - புதியகொல்லனும் புதியொராலயும்)

''எனிக்கு தாஹிக்குந்நு பிதாவே

எனிக்கு தாஹிக்குந்நு - - ''

(ஸ்ரீரேக)

இலக்கணத்தின் பொருள்:-

'இரண்டுசீர்' - நான்கு மாத்திரையளவு கொண்ட எழுத்துக்கள் குறைவது மட்டும் ஊனதரம்கிணி என்று கூறினாலும் அதில் எழுத்துக்களின் மாத்திரை அளவு குறைந்தோ அல்லது கூடியோ வருகின்ற நிலையில் பல வகைகளைக் காண முடியும். எனவே, பல வடிவங்களில் குறைவுபட்டு வரும் பிற பாடல்களும் ஊனதரம்கிணியாகக் கருதப்படுகிறது. இது போன்ற பிற பாடல் வரிகள் துள்ளல் வகையில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை,

1. பிர/மோ/தமு/டயொ/ருப/ரம/சிவன் -

பிர/தோ/ஷந/டவ/ரந/கில/நவன் - ''

இதில் இரண்டு அடிகளிலுமுள்ள இறுதிச் சீரில் இரண்டு மாத்திரையளவில் எழுத்துக்கள் குறைந்துள்ளன.

2. “குரு/வர/நாஞ்/சித/புர/வர/னும்/மம

குரு/வர/னும்/சுர/முனி/வர/ரும் - ”

இங்கு இரண்டாம் அடியின் இறுதியில் மட்டும் இரண்டு மாத்திரை அளவில் எழுத்து குறைந்திருக்கிறது.

3. “இள/கிந/நர/வர/பட/யும் /- -/- -/சில

வெளு/வெளே/வில/ஸிந/ குட/யும் /- -/- -/பல. ”

இதில், இரண்டு அடிகளிலும் பன்னிரண்டு மாத்திரையளவைப் பெறும் எழுத்துக்களுக்குப் பின் நான்கு மாத்திரை அளவிற்கான எழுத்துக்கள் குறைந்திருக்கின்றன.

4. மூ - ல்ல/ஸாயக /து - லிய /நாகிய

ந - நல்ல/சுந்தர /ந - ல்ல/யோ நீ ” -(கிராதம்)

இரண்டு அடியிலும் நான்கு மாத்திரை அளவுள்ள எழுத்துக்களைக்கொண்ட நான்கு சீர்களில், ஒன்றாவது மற்றும் மூன்றாவது சீரில் ஒரு மாத்திரை அளவுள்ள எழுத்து குறைந்திருக்கிறது.

ஊனதரம்கிணி குடும்பம்:-

துள்ளல் பாட்டில் ஊனதரம்கிணிக்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கண விதியின்படி அல்லாமல் வேறு சில ஊனதரம்கிணி வகைகளையும் உதாரணமாகக் கூறலாம்.

1. “மஞ்/ஞுத்/தெச்/சிப்/பூங்/குல/போ/லெ -

மஞ்/ஜிம/விட/ரும்/புலர்/கா/லெ - ” -(சங்ஙம்புழ)

2. “தத்/தே/வரி/கரி/கத்/தங்/ஙிரி/மம

சித்/தம்/முஹு/ரபி/தெளிஞ்/ஞிதய்/யா/ - ”

“நல்த்/தேன்/மொழி/தவ/தத்/தே/திந/மனு

சித்/தே/சுக/மரு/ளுக/ஸர/ஸே - ’’

‘‘ஆ/லம்/பந/மனு/கூ/லம்/திரிப/வந

மூ/லம்/பரி/ணத/விம்/தகு/லம்/ - ’’ -(பாரதம்)

இவற்றில் இரண்டு அடிகளின் இருதியில் மட்டும் இரண்டிரண்டு மாத்திரையளவுள்ள எழுத்துக்கள் குறைந்துள்ளன.

3. ‘‘காக்/கே/காக்/கே/கூ/டெவி/டெ -

கூட்/டிந/கத்/தொரு/குஞ்ஞுண்/டோ – ’’

மேற் கூறியபடி இரண்டு அடிகளின் இறுதியில் எழுத்துக்கள் குறைந்திருக்கின்றன.

4. ‘‘மந/குண/முட/யவ/நரு/ளால்/வா/னவர்

மஹிமயொடெத்தியணஞ்ஞுடனெ –

மறு/தல/நெறி/கெடு/மதி/நொரு/தேரதில்

மங்கலமாயவர் பூகிச்சே -

கைக்கொண்டவரொரு ஞொடியளவால்

செந்/நறி/யிச்/சவர்/சிந்/நம/லய்க்கு.’’

- *(மார்கம் களிப்பாட்டு)*

இதில் ஒன்று, மூன்று, மற்றும் ஆறாம் அடிகள் இலக்கண விதிப்படி சரியாக அமைந்துள்ளன. ஆனால், பிற அடிகளின் இறுதியில் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது.

5. ‘‘மா/வுக/ளடி/முடி/பூ/த்தி/ட்டும்/பூ -

மணம் பறந்நு களிச்சிட்டும்

விட/ரா/னு/ண்டொரு/சுமம்/ஸகீ/நின்

விஷாதகலுஷமுகம்

கறுத்தவாவினெ யாத்ரயயய்க்குக
வரட்டெ பொன்னோணம்
வெளுத்த தும்பப் பூவின்
விசுத்தி வழியும் சிரியால்
விடர்ந்ந நீலத்தாமரயிதளின்
விகாஸமியலும் மிழியால்
வரிஞ்ஞுநிர்த்துக நீ மம ஹிருதயம்
பறந்நு போகாதெ.” -*(புதுச்சேரி)*

இதில் ஒன்று, மூன்று மற்றும் ஐந்தாம் அடிகளைத் தவிர, பிற அனைத்து அடிகளின் இறுதியிலும் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது. இதுபோன்று பல வகைகளில் ‘ஊனதரங்கி-ணிகள்’ காணப்படுகின்றன. அவற்றின் வடிவவகைகளை இனங்கண்டறிய வேண்டும்.

3. அர்த்த கேக

‘‘கேகாபாதத்தெயர்த்திச்சாலர்த்த கேகயதாயிடும்’’

‘கேகா’ என்பதற்கு இரண்டு ‘யதி’ அமைப்பு காணப்படுகிறது. அதில் முதலாம் ‘யதி’ அமைப்பில் நிற்கும் பதத்திற்கு (பதம் - சொல்) ‘அர்த்தகேகா’ என்று பெயர். அதில் ஒவ்வொரு சீரிலும் குறைந்தளவு ஒரு நெடிலெழுத்-தாகிலும் காணப்பட வேண்டும் என்பது இதன் இலக்கணமாகும்.

இதற்குத் துள்ளல் பாடல்களிலிருந்து ‘ஏணநயனே தேவி’, ‘களிச்சு படஜ்ஜநம்’, ‘திரயில் சாடி’, ‘பத்தவசநமது’ போன்ற நான்கு வரிகள் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

‘அர்த்தகேக - கிருசமத்யா’

‘கிருசமத்யா’ என்ற ஒரு வகை விருத்தமானது ‘சீதங்கன்’ எனும் துள்ளல் பாடலில் காணப்படுவதாக மஞ்சரியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மஞ்சரி குறிப்பிட்ட ‘கிருசமத்யா’ என்பதும் ‘அர்த்தகேகா’வும் ஒரே விருத்த வகையைச் சார்ந்தவைகளாகும்.

1. உதாரணப் பாடல்களின் மூலம் ‘அர்த்தகேக’ மற்றும் ‘கிருசமத்யா’ இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

“இத்தம் கோஷிச்சு சித்ர -

யோதி பறயுந்நொர -

பந்த வசனமது

கேட்டு ஹேஹயநிருபன்.˙” -(அர்த்த கேக)

“மாத்தூரம்பிகே நின்மெய்

பார்த்து ஞான் வணங்ஙாந்நேன்

ஆர்த்தி களொழிச் செந்நெ

காத்தி டேணமே தேவி.” *-(கிருசமத்யா)*

மேற்காணும் இரண்டு பாடல்களிலும் எழுத்து எண்ணிக்கை-யிலோ, சொல் வடிவத்திலோ யாதொரு வேறுபாட்டையும் காணமுடியாது.

4. **‘வக்திரம்’**

“சமஸ்கிருதத்திலுள்ள ‘வக்திரம்’, ‘ஸுவாகதம்’ மற்றும் ‘ஸுமங்கலா’ போன்ற விருத்தங்கள் துள்ளல் பாட்டில் பயன்-படுத்துவதுண்டு.” என்று மஞ்சரி இப்படி பல விருத்தங்க-ளையும் ஒன்று சேர்த்து மலையாள விருத்தத்தில் பயன்

படுத்தியிருப்பதினால் தான் அதற்கான சரியான இலக்கணத்-தைக் கூற இயலவில்லை. மேலும், ‘கிருஷணார்ஜ்ஜுன விஜயம்’ என்ற விருத்தத்திலிருந்து ‘ஓட்டன்’ துள்ளலிற்கும், ‘கிருஷ்ணலீல’ என்ற விருத்தத்திலிருந்து ‘சீதங்கன்’ துள்ளலிற்கும், ‘ஸபாபிரவேசம்’ என்ற விருத்தத்திலிருந்து ‘பறையன்’ துள்ளலிற்கும் உதாரணம் கூறப்பட்டிருக்கிறது. இந்த உதாரண முறையானது மிகவும் தவறானதாகும்.

கேரள கௌமுதியில்:-

‘‘சிதிலானுஷ்டுபார்த்தம்தான்

சீலாம் பறயனும் பரம்.’’

என்று இப்படிக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, மேற் குறிப்பிட்டிருக்கின்ற சமஸ்கிருத விருத்தங்களை மஞ்சரி கௌமுதியிலிருந்து எடுத்திருக்கலாம். ஆனால், கௌமுதி குறிப்பிட்ட ‘சிதிலம்’ என்ற விருத்தத்தை மஞ்சரி தம் நூலில் குறிப்பிடவில்லை.

பறயனும் - வக்திரமும்

சமஸ்கிருதத்தில் ‘வக்திர’ விருத்தத்திற்கான இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமையும்.

‘‘ஆத்தியாக்ஷரம் கழிஞ்ஞிட்டு

நஸகாரங்ஙள் கூடாதெ

நாலின்சேஷம் யகாரத்தெ-

செய்தால் வக்திரமனுஷ்டிப்பில். ’’

உதாரணம்

"சுராசுரர்கள் வந்திக்கும்

சரசுவதீபதத்வந்துவம்

சரசீருஹஸங்காசம்

ஸரஸம் ஞான் வணங்ஙுந்நேன்."

இதில் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கும் சமஸ்கிருத ஸ்லோகங்களும் மற்றும் நம்முடைய 'பறயன் பாட்டு' விருத்தத்திற்குமிடையே எந்த வித பொருத்தப்பாடும் இல்லை. சீர் அமைப்பு, சொல் வடிவம் இவையெல்லாம் வேறுபடுகின்றன.

'வக்திர' விருத்தங்களின் வகை

'வக்திர' விருத்தம் 'காகளி' மற்றும் தரங்கிணியை விட ஏராளமான விருத்த வகைகளைக் கொண்டவை. காகளியில் 'ஊனகாகளி' விருத்தங்களும், களகாஞ்சியில் 'அதிகாகளி' விருத்தங்களும் இருப்பது போன்று வக்திரத்தில் 'ஊன-வக்திரம்' மற்றும் 'அதிவக்திரம்' என்ற விருத்த வகைகளும் காணப்படுகின்றன. அடியின் வெவ்வேறு இடங்களில் அவைகளைக் கீழக்கண்ட உதாரணங்கள் மூலம் அறியலாம்.

1. **ஊன வக்திரங்கள்**

1. "ஆன/விற்று/பண/முண்டா

குந்ந/வரெ/த்தெளி/யிப்பான்

சேன/விற்று/பொறு/க்குந்ந

ச/ங்ஙா/திம/தி/யா/மோ." - *(ஸபாபிரவேசம்)*

இதில் நான்காம் அடியின் முதல் சீரில் ஒரே ஒரு எழுத்து மட்டும் வந்திருப்பதால் அதில் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது.

2. “மடிக்காதெ ஸாலியபிரபன்
மா/ளிக/மீதி/லேறி
மடவார் மணிகளோடெ
மா/நிச்சு/விநோ/திச்சு.” *-(பிர. மா. ஓட்டன்.)*

இதில் இரண்டாம் மற்றும் நான்காம் அடியில் எழுத்துக்கள் குறைந்துள்ளன.

3. “கே/வல/பிரிய/ந்மாராம்
பாண்டவன் மாருடெ விருத்தம்
கே/வல/மொரு/பாகம்
கதிக்குந்நு புதன்மாரே.” *-(ஸபாபிரவேசம்)*

இதில் முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது.

4. நான்கு அடிகளிலும் எழுத்துக்கள் குறைந்து வருவதை மாரன் பாட்டிலுள்ள சில வரிகளின் மூலம் எடுத்துக்காட்டலாம்.

“- மல்லிகா மதுவுண்டு
- கலியாணி ராகம் பாடி
- மெல்லவே வருந்நொரு
- நல்ல பைங்கிளித்தத்தே.”

இது போன்று நான்கு அடிகளிலும் எழுத்துக்கள் குறைந்து வருவதுதான் ‘கேக’ என்ற ஒரு வகைத் துள்ளல் விருத்தம்.

(‘அர்த்த கேக’ - விற்கு இலக்கணம் கூறுகையில் இது விவரிக்கப்பட்டிருக்கிறது.)

5. “கன/ஸம்க/மிட/யுந்ந

தனு/காந்தி/தொழு/ந்நேன்

அணி/திங்கள் /கல/சூடும்

புரி/சிட/தொழு/ந்நேன் - - ” -*(சங்கக்களி)*

இதில் இரண்டாம் மற்றும் நான்காம் அடிகளின் இறுதிச் சீரில் எழுத்துக்கள் குறைந்துள்ளன.

6. “மா - /டொந்நே/குட/யாக்கி

பிடி/ச்சால்போ/லிவ/நே - -

மா - /தாவே/பிரி/ஞ்ஞுபோய்

வள/ந்நான்போ/லிவநெ - - ” -*(சங்கக்களி)*

இதில் முதல் மற்றும் மூன்றாம் அடியின் முதல் சீரிலும், இரண்டாம் மற்றும் நான்காம் அடியின் இறுதிச் சீரிலும் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது.

7. 1. “பலரோடும் நிநயாதெ

ஒருகாரியம் துடங்ஙொல்லா

பணம் மோஹிச்சொருத்தனெ

சதி/ச்சீடொ/லா – / – /. ”

2. “அம்ம கணிமணிதன்றெ

நிர்மல துக்கங்ஙளிப்போள்

நன்மயோடெ மனசுற்று

கேட்டுகொண்டாலும் - - .”

இதில் இரண்டு பாடல்களிலும் நான்காம் அடியின் இறுதிச் சீர்களில் எழுத்துக்கள் குறைந்துள்ளன.

8. “ஆ - /லாயால்/தற/வேணம்

அடு/த்தொர/ம்பலம்/வேணம்

ஆ - /லினு/சேர்ந்ந/தாய

குள/வும்வே/ணம் - / - .”

இப்பாடலில் முதல் மற்றும் மூன்றாம் அடியின் முதல் சீர்களிலும் நான்காம் அடியின் இறுதிச் சீரிலும் எழுத்துக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

11. **‘அதிவக்திரங்கள்’**: (‘வக்திரம்’ விருத்தத்தில் எழுத்துக்கள் அதிகரித்து வருவது ‘அதிவக்திரம்’)

சீர்கள் சிலவற்றில் பிற எழுத்துக்களைவிட குறிலெழுத்துக்கள் பெரும்பாண்மையாகவோ அல்லது அச்சீர் முழுவதிலும் குறிலெழுத்துக்கள் மட்டுமோ பயன்படுத்தி உருவாக்கப்படும் ‘அதிவக்திரம்’ எனும் விருத்தத்தில், எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும், குறையவும் செய்கின்ற சில வடிவங்களை உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்.

1. “கபட / மில்ல / கலஹ / மில்ல

கலுஷ / **குமதி** / களெங்ஙு / மில்ல

விகட / ரில்ல / விசட / ரில்ல

விக்ருதி / **நிக்ருதிவி** / யஙளில்ல.”

- *(ஹரிச்சந்திர சரிதம்)*

இப்பாடலிலுள்ள சில சீர்களில் எழுத்துக்களின் எண்ணிக்கை குறைந்தும் அதிகரித்தும் வந்திருக்கின்றன.

2. “நடந்நு காடுகள் தோடுகள்

கடந்நு துவாரக புக்கத

வசிச்சு வாசுதேவன் பகு

ரசிச்சு மக்களோடிக்கத” *-(நரக மோக்ஷம்)*

இதில் நான்கு அடிகளிலும் உள்ள இறுதிச் சீர்களில் மட்டும் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

3. “பிடி **சும்சிலர்** கடி **சும்சிலர்**

பொடி **சும்சிலர்** ரடி **சும்தடி**

பொடி **சும்பிறவி** பிடி **சும்பொடி**

துட **சும்சிலர்** மரி **சும்சிலர்**.”

இதில் அனைத்து அடிகளிலும் இரண்டாம் மற்றும் நான்காம் சீர்களில் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

5. சுவாகதயும் சுமங்கலயும்

“சமஸ்கிருதத்திலுள்ள ‘சுவாகதா’ விருத்தமும் ‘சுமங்கலா’ விருத்தமும் துள்ளலில் பயன்படுத்துவண்டு” எனக்கூறுகின்ற மஞ்சரி, ‘சுவாகதா’ எனும் விருத்தத்திற்கு,

‘நில்லு நில்லெட - - - .’

அர்ஜுனசியமயி - - - .’

போன்ற இரண்டு வரிகளையும், ‘சுமங்ல’ எனும் விருத்தத்-திற்கு,

‘மதம் நமுக்கபி - - - .’

என்ற ஒரு வரியையும் உதாரணமாகக் கூறியிருக்கிறது.

‘சுவாகதா’ விருத்தத்தை எழுத்துக்களின் மாத்திரையளவு அடிப்படையிலும் வேறுபடுத்தப்படுகிறது என்று கூறி, அதற்கு,

‘சித்ர சேனனும் விருந்தவு மெல்லாம்’

என்று தொடங்கும் வரியை உதாரணமாகவும் காட்டியிருக்கிறது.

ஆகவே, துள்ளலில் ‘சுவாகதா’ மற்றும் ‘சுமங்கலா’ ஆகிய இரண்டு விருத்தங்கள் மட்டுமல்ல, நுட்பமாக ஆராய்ந்து நோக்கினால் ‘தரம்கிணி’ மற்றும் வேறு சில துள்ளல் விருத்தங்களானது ஏதாவதொரு சமஸ்கிருத விருத்தத்தையும், அவற்றின் மாத்திரையளவு வடிவத்தையும் பெற்றிருக்கும் என்பதை உறுதிபடுத்த முடியும். இவ்வாறு, மஞ்சரியில் காணப்படும் விருத்த அமைப்பு முறையும், அவை பின்பற்றப்பட்ட வழிமுறையும் தவறானவைகளாகும்.

6. ‘சிதாக்ர’

“ஜகணாதியம் சதுர்மமாத்ர-

கணம் நாலு சிதாக்ரயாம்.”

‘சதுர் மாத்திரை கணம்’ (நான்கு மாத்திரை அளவுள்ள எழுத்துக்களைக் கொண்ட சீர்) அதாவது, நான்கு மாத்திரை அளவுள்ள எழுத்துக்களால் அமைவது ஒரு சீர், இப்படி ஒரு அடியில் நான்கு சீர்களாகவும் அவற்றில் முதல் சீர் ‘ஜகணம்’ (குறில்-நெடில்-குறில்) வடிவத்தைப் பெற்றும் வருவது ‘சீதாக்ர’ எனும் இலக்கணமாகும்.

‘விதக்த நாகிய நளன்றெ தூதன்’

‘கரிம்புதின்மான் கரிவரநிப்போள்’

இது போன்ற வரிகள் இதற்கு உதாரணமாகக் கூறப்பட்டிருக்-கின்றன. இப்படி, ஒரு புதுமையான விருத்த இலக்கணம் தேவையில்லை என்றும், தரங்கிணி வகையில் அதுவும் ஒன்றுதான் என்றும் இதற்கு முன்பு ‘சுவாகதா’ விருத்தம் குறித்துக் கூறும்பொழுது குறிப்பிட்டிருந்தேன் எனினும், சில உதாரணங்கள் மூலம் மீண்டும் இதனைத் தெளிவு படுத்திக் கொள்ளலாம்.

1. ‘‘இங்ஙநெயுள்ளொரு ஸ்ரீஹனுமாநெ

திங்ஙிநமோதால் கண்டொருநேரம்

<u>பதம்கபும் கவநாகிய கருடன்</u>

கபிகுலபும்கவநோடருள்செய்து.’’

-(ராமான்சரிதம்)

2. ‘‘மலர்மயமழகிநபரிமளமிளகினொ-

ரிளமிருதுபவநனுமபி ச நிகுடம்

<u>தடஞ்ஞுகுடெப்பெருவழியூடெ</u>

<u>க்ஷணம் ஜகாம சுமாடவிமத்யே</u>

பகுலபலாலசகுசுமதலாஞ்சித

விபுலதலேவிமலேதிமநோஜந்தம்.’’

தரம்கிணி வரிகளின் இடையில் அடிவரை இடப்பட்ட வரிகளை ‘சிதாக்ர’ விருத்தம் என்று சொல்வது ஏற்புடையதல்ல. காரணம், இதன் முதல் சீரில் ‘ஜகண’ அமைப்பு காணப்படவில்லை. எனவே, மஞ்சரி குறிப்பிட்டி-ருக்கும் ‘சிதாக்ர’ என்பது ‘தரம்கிணி’ விருத்தத்தைச் சார்ந்ததாகும்.

7. ‘ஹம்ஸப்லம்தம்’

‘‘திரிமாத்ரம் த்வியக்ஷரகண-
மாறெண்ணம் குருவொற்றயும்
ஆத்யம் கணம் லகுமுக-
மிது ஹம்ஸப்லம்தாபிதம்.’’

மூன்று மாத்திரை அளவில் ஒரு குறிலும் ஒரு நெடிலும் சேர்ந்தது ஒரு சீர். இப்படி ஒரு அடியில் ஆறு சீர்களும், அடி இறுதியில் ஒரு நெடில் எழுத்தும் வருவது ‘ஹம்சப்லம்தம்’ எனும் விருத்தமாகும். மேலும், அடியில் முதல் சீரின் முதலெழுத்து குறிலாகவும் இருக்க வேண்டும் என்பது இதன் இலக்கணமாகும்.

‘ஜலதியும் கலங்ஙி மறிஞிடுந்நு’
‘மருத்தின்றெ மகனெக்காள் - - ’
கரமதில கப்பெட்ட - - - -’
படஜனபடலவு - - - ’

இது போன்று நான்கு வரிகள் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இலக்கணப் பிழை:-

மஞ்சரி கூறியிருக்கும் உதாரணங்களைப் பார்க்கும் பொழுது ‘ஹம்சப்லம்தம்’ என்ற இவ்விருத்தத்திற்குக் கூறிய இலக்கணத்தில் குறிப்பிடத் தகுந்த தவறுகள் காணப்படுகின்றன என்பதை அறியலாம்.

1. எழுத்து எண்ணிக்கை

இலக்கண விதியின்படி ஆராயும் பொழுது, ஒரு அடியில் பதிமூன்று எழுத்துக்கள் காணப்பட வேண்டும். ஆனால், ‘ஜலதி/ யும்க/லஙிம/றிஞி/டுநு’ என்ற உதாரணப்பாடலில் பன்னிரண்டு எழுத்துக்கள் மட்டுமே காணப்படுகின்றன. (அச்சுப்பிழை நேர்ந்திருக்கலாம்). மேலும், மஞ்சரியில் ‘மருத்தின்றை மகனைக்காள் - -’ என்று தொடங்கும் பாடலின் இரண்டாம் அடியானது,

‘கரத்தில் வில்லெடுத்தோரில் மும்பநெந்நும்’ என்று அமைந்திருக்கிறது. இதில் எழுத்துக்களின் எண்ணிக்கைக் குறைவாகவே காணப்படுகின்றது.

இனி சில பாடல்வரிகளில் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும் சான்றுகள் அடிப்படையில் பார்க்கலாம்.

உ.ம்.

> മലകളുലഞ്ഞിളകിച്ചമഞ്ഞിടുന്നു – കടൽ
> மலகளுலஞ்ஞிளகிச்சமஞ்ஞிடுந்நு - கடல்
> കലങ്ങിടുന്നൂ പാരുകുലുങ്ങിടുന്നൂ.
> கலஙிடுந்நூ பாருகுலுஙிடுந்நு.

இதில் முதலாம் அடியிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை பதினைந்தாகவும், இரண்டாம் அடியிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைப் பன்னிரண்டாகவும் காணப்படுகின்றன. ஆகவே, ‘திவியகஷ்ர கண மாறெண்ணம் குருவொற்றயும்’(ஓர் அடியில் ஒரு சீரில் மூன்று எழுத்துக்கள் வீதம் ஆறு சீரும், அதன்பின் ஒரு நெடில் எழுத்தும்) என்று கூறப்பட்டிருக்கும் இலக்கணம் தவறானது என்பது இங்கு உறுதியாகிறது.

2. மாத்திரை கணக்கு

மஞ்சரியில், ‘ஹம்சப்லம்தம்’ விருத்தத்தில் ஒரு சீரிலுள்ள எழுத்துக்களுக்கு மூன்று மாத்திரையளவுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், பெரும்பாண்மையான சீர்களில் இரண்டு மாத்திரையளவும், சில சீர்களில் நான்கு மாத்திரை-யளவும் காணப்படுகின்றன.

2 2 4 2
‘கர/மதி/லக/பெட்ட/கன/கக்கு/ட்ட.’

2 4
‘மரு/தின்றெ/மக/நெக்காள்/வலி/பனெ/நும்.’

மேற்காணும் இரண்டு வரிகளிலும் நான்கு சீர்களில் இரண்டு மாத்திரையளவும், இரண்டு சீர்களில் மட்டும் நான்கு மாத்திரையளவும் காணப்படுகின்றன. இப்படி ஓர் அடியின் சீர்களில் இரண்டு, மூன்று, நான்கு என மாத்திரையளவு காணப்படும் பொழுது ‘திரிமாத்ர கணம்’ (மூன்று மாத்திரை அளவுள்ள சீர்) என்று இலக்கணம் கூறியிருப்பது தவறான-தாகும். இதனைச் சொல்வடிவத்தின் அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும், இந்த ‘ஹம்சப்லம்தம்’ என்ற விருத்தத்திலுள்ள வரிகளை மூன்று மாத்திரையளவில் இதுவரை யாரும் சொல்லிக் கேட்டதாகத் தெரியவில்லை.

3. முதல் சீரில் ‘லகு’ (குறில்)

இதில், ஒரு சீரில் எழுத்துக்கள் பெறும் இட அமைவு குறித்துக் கூறியதிலும் இலக்கணப் பிழை காணப்படுகிறது.

i. ‘காளிகுளி ரக்தம் கண்டு மதிச்சிடுந்நு.’

-(பாணயுத்தம்)

ii. ‘சாதியகியொரு சக்தியயச்சுடுந்நு.’

(கிருஷ்ணார்ஜுன விஜயம்)

இலக்கணத்தின் படி ஒரு அடியின் முதல் சீரின் முதலெழுத்து குறிலாக இருக்க வேண்டும். ஆனால், மேற்காணும் இரண்டு வரிகளிலும் முதல் சீரின் முதலெழுத்தானது நெடிலெழுத்தாகக் காணப்படுகிறது. எனவே, இதிலும் இலக்கணப் பிழை காணப்படுகிறது என்பது தெளிவாகிறது.

8. ‘அஜகரகமனம்’

“லகுப்ராயம் சதுர்மாத்ர-
கணமாறொரு தீர்கவும்
சேர்ந்நு வந்நாலஜகர-
கமனாபிதவிருத்தமாம்.”

ஒரு சீரில் நான்கு மாத்திரையளவு வீதம் ஓர் அடியில் ஆறு சீர்களும், அச்சீர்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாண்மை குறிலெழுத்துக்களும், ஆறு சீர்களுக்குப் பின் ஒரு நெடில் எழுத்தும் அமைந்து வருவது ‘அஜகரகமனம்’ விருத்தம் என்பது இதன் இலக்கணமாகும்.

எ. கா.

‘தெளிவொடு பல வாளுகள் கர்க்கடதோக்குகள் வில்லுகள் சூலம்’ *(நளசரிதம்)*

‘வர்த்திததரதவளஹிமாசலசந்நிபதும்கசரீரன்’

(கலியாணசௌகந்திகம்)

இப்படி, இரண்டு வரிகள் இதற்கு உதாரணமாகக் கூறப்பட்டி-ருக்கின்றன.

இலக்கணத்தில் தவறு

'நான்கு மாத்திரை 'கணம்'(சீர்) ஆறு, மற்றும் ஆறு சீர்களுக்குப்பின் அடி இறுதியில் ஒரு நெடில் எழுத்து, என்று 'அஜகரகமன' விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கண விதியை ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளலாம். எனினும், 'லகுப்ராய கணம்' (ஒரு சீரில் பெரும்பாண்மையாக குறிலெ-ழுத்துக்கள் மட்டும் வருவது) என்ற இலக்கண விதி தவறானதாகக் காணப்படுகிறது. மேற்கண்ட வரிகளையே நாம் உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம்.

'**தெளிவொடு**/ பலவா/ ளுகள்க/ குட'

இதில், முதலாவதாகக் காணப்படும் சீரில் 'லகு மயகணம்' தான் (ஒரு சீரில் அனைத்து எழுத்துக்களும் குறில் எழுத்துக்களாக வருவது) காணப்படுகிறது. மேலும், 'குரு மயகணம்' (ஒரு சீரில் அனைத்து எழுத்துக்களும் நெடில் எழுத்துக்களாக வருவது) வந்திருப்பதையும் காணலாம். உதாரணத்திற்காக சில வரிகளைப் பார்க்கலாம்.

உ.ம்.

'அம்புதி/சயநோ/தமபுரு/ஷன்அகி

லஜநே/<u>சன்க்ரு</u>/ஷ்ணன்'

'<u>தெல்லும்</u>/பயமி/ல்லாதந/வதிவ

ணுபர/<u>நீடே</u>/ணம்.'

மேற்காணும் பாடல்வரிகளில் அடிவரை இடப்பட்டிருக்கும் சீர்கள் அனைத்தும் 'குரு மயகணம்.' அதாவது, நெடில் எழுத்துக்களாக மட்டும் அமைந்திருக்கின்றன. எனவே,

‘அஜகரகமனம்’ என்ற விருத்தத்திற்குக் கூறப்பட்டிருக்கின்ற இலக்கணத்தில் இதுபோன்ற தவறுகள் காணப்படுகின்றன.

9. ‘மதமந்தர’

“ஆறுமெட்டும் பதிந்நாலு-

மாத்ரயில் மதமந்தர.”

ஆறு மாத்திரை ஒரு ‘யதி’(நிறுத்தம்), அதன் பிறகு எட்டு மாத்திரை ஒரு ‘யதி’, இப்படி பதினான்கு மாத்திரை அளவுள்ள எழுத்துக்கள் இரண்டு பிரிவாக வருவது ‘மதமந்தரா’ விருத்தமாகும். இதில் பயன்படும் எழுத்துக்கள் பெரும்பாண்மையும் குறிலெழுத்துக்களாகவும் இருக்க வேண்டும் என்பது இதன் இலக்கணமாகும்.

‘பல வடிவும் வந்நு சமஞ்ஞு

தலமுடியும் வந்நு திகஞ்ஞு.’

-(நளசரிதம்)

‘ரதிகணவனு கணகளொடுங்ஙி

அதிவிவசத பூண்டு மயங்ஙீ.’

இது போன்ற பாடல் வரிகள் உதாரணமாகக் கூறப்பட்டிருக்-கின்றன.

இதிலும் சில தவறுகள் காணப்படுகின்றன. அவற்றை நளசரிதத்திலிருந்து உதாரணமாகக் கூறப்பட்ட வரிகளை எடுத்துக் கொள்வோம்.

“பல வடிவும் வந்நு சமஞ்ஞு

தலமுடியும் வந்நுதிகஞ்ஞு

மலயிணயும் மாறுகவிஞ்னு

மலர்சரனும் மெல்லெயணஞ்னு

சிசுதகழிஞ்னு வசதவழிஞ்னு

மறவுமொழிஞ்னு வசதவழிஞ்னு

கிளிமொழி தானொந்நு பகர்ந்நூ

கிளிபுதுமய்காச வளர்ந்நு.

....

மிழிகள் விடர்ந்நூ வழியிலமர்ந்நூ. ''

'மதமந்தரா' விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கணத்தின் படி எழுத்துக்களின் மாத்திரையளவு பதினான்காக இருக்க வேண்டும். ஆனால், இதில் அடிவரை இடப்பட்டிருக்கின்ற வரிகளில் காணப்படும் எழுத்துக்களின் மாத்திரையளவானது எண்ணிக்கையில் பதினெட்டாகக் காணப்படுகிறது. ஓர் அடியில் பதினெட்டு எழுத்துக்களைப் பெற்று வருவது 'தரம்கிணி' விருத்தமாகும். எனவே, இதில் அடியை மட்டும் அடிப்படையாக வைத்து இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இது போன்ற தவறுகள் ஒரு இடத்தில் மட்டுமல்ல, பெரும்பாண்மையான இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்காணும் பாடல்வரிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

1. ''படமல்லநொருத்தநடுத்து
படகோபமவந்நு கடுத்து
பரிசோடுடனம்புதொடுத்து
அதபத்துபாணமொத்துவிட்டு
மறுதல சத்துவீணு யுத்தபூமி
நடுவிலுடன்.'' -*(ப்ரதோஷமாஹாத்மியம்)*

2. “ஹரசாபமெடுத்துகுலச்சு
பரிசோடுபிடிச்சுவலிச்சு
தரணீதலமொந்நு விறச்சு
தரணீசமதங்ஙள் நிலச்சு
சுகமுதிச்சு வசிச்சிது சாதுஜனம்.

-(சீதாசுயம்வரம்)

3. “சுரதருணிகளங்ஙு நடந்நு
சுரகிரிகடகங்கள் கடந்நு
…………………………..
<u>வரவாணிஜநங்ஙடெ தலமுடி</u>
<u>படுதரமழிகயும் மலர்பொழிகயும்</u>
மணமம்பொடு விலசுகயும்.”

-(கிராதம்)

4. “கமலாக்ஷியெயிங்ஙநெ கண்டு
குாமாஸ்ருவுமப்பொழெ கொண்டு
வலசாசனனொந்நு விரண்டு
சலநாசயநாயதுகொண்டு
<u>தலமுடி கண்டும் முலயிண கண்டும்</u>
களிருசிகண்டும் மனமதுமண்டும்.”

-(அஹலியாமோக்ஷம்)

இது போன்று அதிகமான இலக்கணப் பிழைகள் காணப்படு-வதை விருத்த மஞ்சரி ஆசிரியருக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது. அப்படித் தெரிந்திருந்தாலும் அதை அவர் கண்டு கொள்ளாமல் இருந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். இல்லை எனில் இந்தளவிற்கு இலக்கணத்தில் தவறுகள் ஏற்பட்டிருக்காது.

10. ‘பரியஸ்த காஞ்சி’

(சீதங்கன் துள்ளலில் இரண்டு விருத்தங்களை மஞ்சரி சிறப்பித்துக் கூறுகிறது. அவை, ‘கிரசமத்யா’ மற்றும் ‘பரியஸ்த காஞ்சி’ என்பனவாகும். இதில் ‘கிரசமத்யா’ என்பது ஓட்டன் துள்ளலில் கூறிய ‘அர்த்தகேகா’ என்றும் உண்மையிலேயே இது ‘ஊனவக்திர’ விருத்தமென்றும் முதல் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. இனி ‘பரியஸ்தகாஞ்சி’ மட்டுமே ஆராயவிருக்கிறது.)

மஞ்சரியில் களகாஞ்சியினுடைய பாதங்களை (அடி) மாற்றிப் பயன் படுத்தினால் அதற்கு ‘பரியஸ்த காஞ்சி’ எனும் பெயர் வழங்கலாம் என்று இப்படி பெயர் இலக்கணம் கூறப்பட்டு,

“கல்லோலஜாலம் களிக்குந்ந கண்டு

கமலமணிநிறமுடய கமலமது கண்டு”

என்ற வரியை உதாரணமாகவும் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

விருத்த அமைவு

மேற்கூறிய வரிகளை இலக்கணத்தின் படி மாற்றி அமைக்கும் பொழுது, அது ‘களகாஞ்சி’யாக வேண்டுமெனில் அடியின் இறுதியில் ஒவ்வொரு எழுத்துக்களையும் சேர்க்க வேண்டும்.

கேரள கௌமுதியில்:-

இந்த விருத்தத்தைக் குறித்து கேரள கௌமுதியில் இப்படி கூறப்பட்டிருக்கிறது “……முன்பு ‘களகாஞ்சி’ என்று குறிப்பிட்டது துள்ளலிலுள்ள பாடல்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளைக் கொண்டு அமையும்.”

உ.ம்.

“கிளிகளுடெ களவசநமிளியுமொரு வாணியும்

கூத்தாடுமோமனச்சில்லிவில்லாட்டவும்.”

(‘மல்லிக’ என்ற விருத்தம் மட்டுமே பறயன் துள்ளல்களில் சிறப்பாகக் காணப்படுகிறது என மஞ்சரி குறிப்பிடுகிறது. சமஸ்கிருதத்திலும் இந்த ‘மல்லிகா’ விருத்தத்தின் இலக்கணம் சிறப்பாக உள்ளது. மலையாள மொழி யாப்பு இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது இந்த ‘மல்லிகா’ என்பது ‘வக்திர’ எனும் விருத்த வகையில் ஒன்றாக அமைகிறது. இது விருத்த விச்சாரத்தில் தெளிவு படுத்தவும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் துள்ளல் பாட்டு விருத்தங்களைக் குறித்துள்ள கருத்துக்களுக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கலாம்.)

மூன்றாம் பகுதி

கிருஷ்ண காதை, இருபத்து நாலு விருத்தம், வஞ்சிப்பாட்டு

1. கிருஷ்ணகாதை - விருத்தங்கள்

(செறு சேரியின் கிருஷ்ண காதையில் எட்டு வகை விருத்தங்கள் காணப்படுகின்றன. இந்த கிருஷ்ண விருத்தத்திற்கு மட்டுமே 'காத' (காதை) என்ற பெயர் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. (இதன் காரணமாகவே 'கிருஷ்ணகாத' என்ற பெயர் வந்திருக்கலாம்). இந்த எட்டுவகை விருத்தங்களில் கிருஷ்ண கதைக்கு மட்டுமே 'விருத்த மஞ்சரி' நூலில் இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இப்படி, இலக்கணம் கூறாமல் விடுபட்டுப் போன எஞ்சிய ஏழு விருத்தங்களில் சில விருத்தங்கள், கூறப்பட்டிருக்கும் இலக்கண விதிக்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன என்று கருதலாம். ஆகவே, இலக்கணம் கூறாமல் விடுப்பட்டுப்போன விருத்தங்களைப் பிற்பகுதியிலும், இலக்கணம் கூறப்பட்ட விருத்தத்தை முற்பகுதியிலும் விவரிக்கலாம் என நினைக்கிறேன்).

A. மஞ்சரி

''சிலதகாகளி விருத்தத்தில்
ரண்டாம் பாதத்திலந்தியமாம்
ரண்டக்ஷரம் குறச்சீடி -
லது மஞ்சரியாயிடும்''

பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் இரண்டு எழுத்துக்கள் குறைந்தால் அது 'மஞ்சரி' எனும் விருத்தமாகும்.

மேலும், காகளி விருத்தத்தினுடைய சீர்களில் ‘மகணம்’ (சீரில் உள்ள மூன்றெழுத்துக்களும் நெடிலாக இருக்கும்) வரக்கூடாது என்று விதிமுறை கூறப்பட்டிருக்கிறது. ஆனால், ‘மஞ்சரி’ விருத்தத்தில் ‘மகணம்’ வரக்கூடாது என்ற விதிமுறை இல்லை. ஆகையால்தான் மேற்காணும் சூத்திரத்தில் ‘சிலத-காகளி விருத்தம்’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

‘ மேனகமும்பாய மானினிமாருடெ’

என்று தொடங்குகின்ற ஒரு வரியை இதற்கு உதாரணமாகக் கூறியிருக்கிறது. ஆனால், இது ‘சிலதகாகளி’ விருத்த வகை-யைச் சார்ந்ததாகிறது. அப்படி எனில் ‘சிலதகாகளி’யைப் பற்றி விருத்த மஞ்சரி குறிப்பிட்டிருப்பதைச் சற்று ஆராயலாம்.

‘சிலதகாகளி’

‘காகளி’ விருத்தத்திலுள்ள எந்த சீர்களிலும் ‘மகணம்’ அமைப்பு விதிமுறை வருதல் கூடாது. ‘மஞ்சரி’ விருத்தத்தில் இந்த ‘மகணம்’ அமைப்பு விதிமுறை வரலாம். இது போன்று ‘மகணம்’ விதிமுறையில் வருவதுதான் ‘சிலதகாகளி’ என்று ‘சிலகாகளி’ விருத்தத்தைக் குறித்து மஞ்சரியில் குறிப்பிடப்-பட்டிருக்கிறது.

காகளி வகைகளில் ‘மகணம்’ வருவதில்லை என்றும், ‘காகளி’ வகைகளில் ஒன்றான ‘சிலதகாகளி’க்குக் கூறப்பட்ட இலக்கணத்தில் மகணம்’ வரும் என்றும் கூறினால், இதனை நாம் எப்படிப் புரிந்துகொள்வது. இதன் மூலம், இந்த இலக்கண விதி தவறானது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். காகளியினுடைய ‘ஜமாத்திரைத் தத்துவம்’ சொல்

வடிவத்தை அடிப்படையாகக் கொண்டது போன்று ‘சிலத-காகளி’யினுடைய ஆறு மாத்திரைத் தத்துவமும் சொல் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த ‘‘ஆறு மாத்திரை, மூன்றெழுத்து’’ என்ற அடிப்படையில் அமையும் விருத்தத்திற்கு ‘சிலதகாகளி’ என்று பெயர் கொடுக்காமல் வேறு பெயரைக் கொடுத்திருக்கலாம்.

இது போன்ற விருத்தம் மலையாள பாஷையின் பயன்-பாட்டில் இல்லை. இதனைக் குறித்து விருத்த மஞ்சரி குறிப்பிடவும் இல்லை, உதாரணமாகக் கூறவும் இல்லை.

கேரள கௌமுதியில்

இந்த ‘காதை’ விருத்தத்தைக் குறித்து கேரள கௌமுதியில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

‘‘கிருஷ்ணகாதயதில்க்காணும் காகளீபின்னடிக்கத

நிர்ணயம் பத்தெழுத்தெந்நாலேகும் மாகநத மஞ்சரி’’

கிருஷ்ண காதையில் கூறிய காகளியின் அடி இறுதியில் இரண்டு எழுத்துக்கள் குறைந்து வரும் விருத்தத்திற்கு ‘மஞ்சரி’ என்று பெயர். என்பது இதன் இலக்கணமாகும்.

கேரள கௌமுதியைப் பின்பற்றிய விருத்த மஞ்சரி, ‘மஞ்சரி’ எனும் விருத்தத்திற்குக் கூறியிருக்கும் இலக்கண விதியைக் குறித்துக் கீழ்க்காணும் உதாரணப் பாடல்கள் மூலம் அறியலாம்.

‘‘சாரிக பைதலே சாருசீ லேவரி -

காரோம லேகதா சேஷவும் சொல்’’

இதில் இரண்டாம் அடியின் இறுதியில் இரண்டு எழுத்துக்-களைக் குறைத்துப் பார்க்கும் பொழுது ‘மஞ்சரி’ விருத்தத்-திற்குக் கூறப்பட்ட இலக்கணத்திற்குப் பொருத்தமாகக் காணப்படுகிறது. இனி, இரண்டாம் அடியின் இறுதியில் இரண்டு எழுத்து குறைந்து வருவது ‘மஞ்சரி’ என்று ‘மஞ்சரி’ விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கண விதிக்கு மாறாக இரண்டாம் அடியின் இறுதியில் இரண்டு எழுத்துக்களைக் கூட்டிச் சேர்க்கும் விதத்தில் ஒரு உதாரணப் பாடலைப் பார்க்கலாம்.

“மேநக மும்பாய மானினி மாருடெ

மேநியே நிர்மிப்பால் மாத்ருக யாய்ப்பரம்”

இந்த வகையில் எழுத்துக்களைக் கூட்டிச் சேர்த்துப் பார்க்கும் பொழுது இது ‘காகளி’ விருத்தமாகிறது. ‘காகளி’ மற்றும் ‘மஞ்சரி’ விருத்தங்களுக்குக் கூறப்பட்டிருக்கும் உதாரணப் பாடல்களின் மூலம் இதை உறுதிபடுத்திக் கொள்ளலாம்.

தம்புரான் மற்றும் மாரார் கருத்துக்கள்

‘பாஷா விருத்தங்ஙளும் அவயுடெ தசா பரிணாமங்ங-ளும்’ என்ற நூலில் அப்பன் தம்புரான் இப்படியாகக் கூறியிருக்கிறார்.

“இது இரண்டாம் காலத்திலோ மூன்றாம் காலத்திலோ பாடுவதினால் இலக்கணமும், உதாரணப் பாடலும் ஒத்துப்-போகிறது. ஆனால், ஒன்றாம் காலத்தில் பாடும்பொழுது ஒவ்வொரு கணத்திற்கும் ஆறு மாத்திரையளவு தேவைப்ப-டுகிறது. அப்படி, பாடிக்கேட்பதற்கு ஒன்றாம் காலம்தான் பொருத்தமாகவும் அமையும்.” இரண்டாம் காலத்திலோ

மூன்றாம் காலத்திலோ பாடும் பொழுதுதான் விருத்த மஞ்சரியில் கூறியிருக்கும் இலக்கணத்திற்குப் பொருத்தமாக அமையும் என்று அப்பன் தம்புரான் கூறுகிறார். அவர் குறிப்பிட்ட அதே கால அளவில் பாடுவது மட்டும் அல்ல, சொல்வதும் உண்டு.

'மஞ்சரி' விருத்தத்தை எல்லா தாள நிலையிலும் சொல்லலாம் என்றுதான் 'விருத்த சில்பம்' என்ற நூலும் கூறுகிறது. பெரும்பாண்மையான தாள நிலைகளை சீர்களில் மாற்றியும் காண்பிக்கப் பட்டிருக்கிறது.

ஊனசிலதகாகளி

''மஞ்சரி எனும் விருத்தமானது 'ஊனகாகளி' விருத்த-மாகும்'' என்ற கேரள கௌமுதி ஆசிரியரின் கருத்தை அப்பன் தன்புரானும் குட்டிகிருஷ்ணமாராரும் ஏற்றுக் கொள்கிறார்கள் எனினும், காகளியில் 'மகணம்' வருவதில்லை என்ற தவறானக் கருத்தை விருத்த மஞ்சரி கொண்டிருந்தாலும், 'சிலத' என்ற சொல்லையும் சேர்த்து 'ஊனசிலதகாகளி' என்று குறிப்பிட்டுள்ளது.

B. விடுபட்டுப்போன கிருஷ்ண காதை விருத்தங்கள்

மஞ்சரி குறிப்பிடாத கிருஷ்ண காதையிலுள்ள ஏழு விருத்தங்களில் மூன்று விருத்தங்கள் சமஸ்கிருதத்தைச் சார்ந்தவைகளாகும். அவை, 'பிரஜம்கப்ரயாதம்', 'மல்லிக', மற்றும் 'சங்கரசரிதம்' போன்றனவாகும். எஞ்சியுள்ள நான்கு விருத்தங்களில் ஒன்று துள்ளலிலுள்ள 'தரம்கிணி' விருத்த-மும் மற்றொன்று இருபத்திநாலு விருத்தத்திலுள்ள 'சமாசமம்'

என்ற விருத்தமுமாகும். மீதமுள்ள இரண்டு விருத்தங்களைக் குறித்து மட்டும் இங்கு ஆராயப்படுகிறது.

1. “ உருவாயமொழி கொண்டு - -”

ஒரு விருத்தத்திலுள்ள பாடல் வரிகள் இது போன்றுதான் காணப்படுகின்றன.

“உருவாய மொழிகொண்டு குருவாய பரந்தன்னெ

பரிசொடு புகண்ணஜன் தளர்ந்ந நேரம்.”

இதில் முதலாம் அடியானது ‘வக்திர’ விருத்தம் என்றும் இரண்டாமடி ‘ஹம்சப்லம்தம்’ எனும் விருத்தம் என்றும் குட்டிகிருஷ்ணமாரார் கருத்து தெரிவித்திருக்கிறார். ‘ஹம்சப்-லம்தம்’ என்பது ‘வக்திர’ விருத்தத்தின் இரண்டாம் அடியின் இறுதியில் மூன்றெழுத்து குறைவதாகும் என்று அவர் கருத்து தெரிவித்திருக்கின்ற சூழ்நிலையில் இவ்விரண்டு விருத்தங்-களையும் ஒரு வகைக்குள் அடக்கியிருக்க வேண்டாம். மாறாக ‘ஊனவக்திரம்’ என்று கூறியிருந்தால் போதுமானது.

மேலும், இந்த வரிகளிலுள்ள விருத்தம் ‘நதோன்னத’ என்று ஸ்ரீ ஆர். நாராயணப் பணிக்கர் கருத்து தெரிவித்தி-ருக்கிறார். ஆனால், குட்டி கிருஷ்ணமாரார் இக்கருத்தை எதிர்க்கவும் செய்திருக்கிறார்.

இப்பாடலின் ஒன்றாம் அடியில் 1,5,9,13 (உ, மொ, கு) போன்ற எழுத்துக்களும் இரண்டாம் அடியில் 1,5,9, (ப, பு, த) போன்ற எழுத்துக்களும் குறிலெழுத்துக்களாகச் சீரின் முதலில் அமைந்தி-ருக்கின்றன. இது போன்ற குறில் எழுத்துக்களின் அமைப்பு முறை வஞ்சிப்பாட்டுகளில் எதிர்பாராத விதத்திலும் கூட இடம் பெறாது என்றும் கூறுகிறார். ஆனால், இதே

குறிலெழுத்து அமைப்பு முறையானது வஞ்சிப்பாட்டில் பல வரிகளிலும் காணப்படுகின்றன.

உ.ம்.

1. ‘‘மழமுகில் தொழுமழகெழுமொரு புரிகுழ
லழிஞ்ஞிழஞ்ஞுடி பற்றிப்பொடி பெடவெ
விளறின கவிள்த்தடங்ஙளிசில்லில் வியர்ப்புநீர்
வளர்முத்தின் நிரபொடிஞ்ஞுடந்நீடவே.’’

(மித்யாபவாதம் உள்ளூர்)

2. ‘‘புரஹர பகவானும் கிரிவர மகள்தானும்
கரிவரவதனனும் துணச்சிடேணம்.’’

(நரகமோக்ஷம்)

இனி, குறிலெழுத்துக்கள் மட்டும் அல்ல, நெடிலெழுத்-துக்களும் அமைந்திருப்பதை கீழ்க்காணும் பாடல்களில் காணலாம்.

‘‘தல்ப தக்கோம் தலோம் தக்கோம்
தல்ப தக்கோம் தலோம் தக்கோம்
தலோம் தக்கோம் தலோம் தக்கோம்
தலோம் தக்கோம் தலோம் தக்கோம்.’’

இப்படி, வாய்கொண்டு சொல்லும் முறைதான் ‘வக்த்ரம்’ விருத்தத்தில் காணப்படுகிறது. ஆகவே, ‘குறில்-நெடில்’ என்ற அமைப்புமுறை சொல்வடிவில்தான் காணப்படுகிறதே தவிர,

எழுத்து அடிப்படையிலான குறில்-நெடில் அமைப்பு முறை 'வக்திர' விருத்தத்தில் காணப்படுவதில்லை.

இந்த 'குறில்-நெடில்' அமைப்பு முறையை ஒரு வரிகளிலும் கூடக் காண முடியாது.

உ.ம்.

"மரிக்காராய்க்கிடக்குந்ந மரஞ்சாடிக்கிழவனெ
மருத்தின்றெ மகன் வந்நு மறிப்பிச்செந்நு கேட்டால்
சிரிக்கும் ஸஜ்ஜனமெல்லாம் தரிக்குமர்க்கடஞ்ஞானே."

II " உத்தமகாந்தி - -- "

"உத்தமகாந்தி மெத்தியிருந்ந

நித்தியனெ நீதி யோடே

சித்தமழிஞ்ஞு பக்திபொழிஞ்ஞு

ருத்ரர் புகந்நநேரம்"

இது நமக்கு மிகவும் பழக்கப்பட்ட விருத்தங்களில் ஒன்றாகும். இந்தப் பாடல் தமிழிலிருந்து தான் வந்ததாகத் தெரிகிறது. 'இராமசரிதம்', 'சங்கக்களிப் பாட்டு', 'நிரணம் நூல்கள்' போன்றவற்றில் இந்த விருத்தம் காணப்படுகிறது.

உ.ம்

I. " பெரியரவங்ஙளும் நகுலங்ஙளும் களிதேடுமாறும்

வளர்கரிகேசரிக்குலமோடுடன் விளயாடுமாறும்"

(இராமசரிதம்)

II. ‘‘பூக்குல மால மாந்திளநீரு

மாந்தளிர் செம்பருத்தி

பூமலரும் குருத்தெழுமோல

வம்புள்ள செம்பழுக்கா’’

(சங்கக்களி)

III. ‘‘மற்றுமரக்கருண்டி நியும் வ

ருந்நிது போரினெந்நால்

முப்லொழுதே யறிந்துமுனிந்து

நில்ப்பது தக்கதும் ஞான்’’

(கண்ணசராமாயணம்)

கணமும் (சீர்) மாத்திரையும்

ஏழேழு மாத்திரையில் நான்கு சீர்கள் சேர்ந்தது - ஓர் அடி: இப்படி இரண்டடி சேர்வது ஒரு பாடல். இதில் நான்காம் சீரான இறுதிச் சீரில் இரண்டு எழுத்துக்கள் மட்டும் காணப்படும். அதனை நீட்டிச் சொல்லுதல் மூலம் ஏழு மாத்திரையளவைப் பெறச் செய்ய வேண்டும். அடியில் எழுத்துக்கள் குறைந்த இறுதிச்சீர் தவிர மீதமுள்ள சீர்களில் ஐந்து அல்லது ஆறு சீர்கள் காணப்படும். (கம்ல) – என்று ‘நெடில் - குறில்’ அமைப்பிலும் (லலல)-என்று ‘மூன்று குறில்’ அமைப்பிலும் எழுத்துக்கள் அமைந்திருக்கும். பிறகு ‘ஜகணம்’ (குறில்-நெடில்-குறில்) என்ற முறையிலும் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கும். இப்படி ஏழு மாத்திரை அளவுள்ள சீரானது, ஐந்து அல்லது ஆறு எழுத்துக்களைப் பெற்றிருக்கும்.

விருத்த சில்பத்திலுள்ள ‘வாய்த்தாரி’ என்பதை உதாரண-மாகப் பார்க்கலாம்.

தல்ப தடிஜ்ஜ தல்ப தடிஜ்ஜ

தல்ப தடிஜ்ஜ தக்கோம் - -

தலின தடிஜ்ஜ தலித தடிஜ்ஜ

தலிந தடிஜ்ஜ தக்கோம் - - -

இதில் ‘தலின தடிஜ்ஜ’ என்ற சீரில் ஆறு எழுத்துக்கள் காணப்படுவது போன்றுதான் இராமசரிதத்திலிருந்து உதாரண-மாகக் காண்பித்த பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படு-கிறது. அது போல சங்கக்களியிலும், நிரணம் பாடலிலும் ‘தல்ப தடிஜ்ஜ’ என்ற சீரிலுள்ளது போல ஐந்து மாத்திரை எழுத்துக்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இவற்றின் சீர் நிலையை கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

I. பெரியரவங்ங / ளும் நகுலங –
ளும் களிதேடு / மாறும் -

II. பூமலரும் கு / ருத்தெழுமோல
வம்புள்ள செம்ப / ழுக்கா –

III. முற்றுமரக்க / ருண்டினியும் வ –
ருந்நிது போரி / னெந்நால் -

மேலே உதாரணமாகக் காட்டியிருக்கும் வரிகளில் ‘வம்புள்ள செம்பழுக்கா’ என்ற வரியில் மட்டும் தான் மாத்திரை விதிமுறை சற்று மாறுபட்டுக் காணப்படுகிறது.

C. சீலாவதியில்

'மஞ்சரி' எனும் விருத்தத்திற்கு கூறப்பட்ட இலக்கணம் மற்றும் அதன் உதாரணத்திற்கான உரை விளக்கத்தில் ''சீலாவதிப் பாட்டிற்குமான விருத்தமும் இதுதான்'' என்றும் 'விருத்த மஞ்சரி' குறிப்பிட்டிருக்கிறது. அப்படி எனில் 'மஞ்சரி' மற்றும் 'சீலாவதி' ஆகிய இரண்டு விருத்தங்களுக்கும் ஒரே இலக்கணம் தான் என்று பொருள் கொள்ள முடிகிறது. ஆனால், இவை இரண்டிற்கும் ஒரே இலக்கணம் என்ற கூற்று பொருந்தாது. காரணம், 'சீலாவதி'யில் நான்கு வகையான விருத்தங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்றாம் விருத்தம் மஞ்சரியாகிறது ('மஞ்சரி' போன்றது). இரண்டாவதாக அமைந்திருப்பது 'பானப்பாட்டு' என்று கூறப்படும். 'சர்ப்பிணி' என்ற விருத்தமாகும். இந்த விருத்தத்தைக் குறித்து விருத்த மஞ்சரியில் ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் எஞ்சியுள்ள இரண்டு விருத்தங்களையும் மஞ்சரி குறிப்பிடவில்லை. விருத்த மஞ்சரி குறிப்பிடாத அந்த இரண்டு விருத்தங்கள் பற்றிய கருத்துக்களை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

I. குணமேறும் பர்த்தாவே - -

சீலாவதிப்பாட்டில் மூன்னறாவதாக அமைந்துள்ள விருத்த-மானது இந்த வரியில்தான் தொடங்குகிறது.

''குணமேறும் பர்த்தாவே மாமூனீந்ரா
குருநாதா கேட்டாலுமென்றெ வாகியம்.''

இது 'மாவேலி நாடுவாணீடும் காலம்' என்று தொடங்குகின்ற பிரபலமான ஓணப்பாட்டிலுள்ள வரிகளில் காணப்படும்

விருத்தமாகும். இதனை ஒரு வகை ‘ஊனசிலதகாகளி’ எனக் கூறலாம்.

‘சிலதகாகளி’யினுடைய இரண்டாம் அடியில் இரண்டு எழுத்துக்கள் குறைவது தான் ‘மஞ்சரி’ (காதை) விருத்தமாகிறது. இது போன்று ஒன்றாம் அடியில் எழுத்துக்கள் குறையுமேயானால், அதாவது ‘சிலதகாகளி’ விருத்தத்திலுள்ள இரண்டு அடிகளின் இறுதியில் இரண்டு எழுத்துக்கள் குறைந்தால் அதுவே பிரபலமான இந்த ‘மாவேலி’ விருத்தமாகிறது.

உ.ம்.

I. “மாவேலி நாடுவா ணீடும்கா லம்
மானுஷ ரெல்லாரு மொந்துபோ லெ.”

II. “விலியாச / லம்தந்தில் / வாணரு / ளி
வேதசுவ / ரூபமே / பாலய / மாம்.”

III. “இந்திர / தன்னுடெ / புஞ்சிரி / யாம்
சந்திரிக / மெய்யில்ப / ரக்கயா / லெ.”

இதில் இரண்டாம் மற்றும் மூன்றாம் உதாரணப்பாடல்களானது ‘காதை’யினுடைய ஒன்றாம் அடியின் இறுதியில் இரண்டு எழுத்துக்களைக் குறைத்து உருவாக்கப்பட்டதுதான். ‘ஊன மஞ்சரி’ என்றும் அழைக்கத் தகுந்ததான இந்த ‘ஊனசிலதகாகளி’யினுடைய இரண்டு அடிகளிலும் முதலாவதாக அமைந்திருக்கும் மூன்றெழுத்துச் சீரில் நான்கு எழுத்துக்களாக மாற்றி அமைத்தால் ‘குணமேறும்’ எனும் விருத்தமாக மாறிவிடும்.

“கணிகமா / ரோடுள்ள / கேளிமோ / ஹம் - -

குணமல்ல / நிங்ஙள்கெ / நோர்த்திடே / ணம் - -”

இதுவே, இந்த விருத்தித்திற்கான ‘கணம்’ (சீர்) அமைப்பு முறையாகும்.

II. ‘அதிரிமஹாமுனி பாரிய - -’

சீலாவதிப் பாட்டிலுள்ள நான்காவது விருத்தம் இப்படியாகத் தொடங்குகிறது.

“அதிரிமஹாமுனி பாரிய – புன

ரதிரீசன்மாரொடு சொல்லி.”

இந்த பாடலில் காணப்படும் விருத்தமானது, ‘ஓமனத்திங்ஙள் கிடாவோ’ என்று தொடங்குகின்ற தாலாட்டு பாட்டிலுள்ள விருத்தம் என்பது உறுதியாகிறது. ‘பீமன்கதை’யிலும், சுந்தரீ சுயம்வரத்திலும் இந்த விருத்தம் காணப்படுகிறது.

உ.ம்.

“அம்புஜபைரிகுலத்தி – லுள

வாகிய பாண்டவரஞ்சும்

அம்மயுமாயொரு நாளி - லர

கில்லவும் வெந்து நடந்நு.” – *(பீமன்கதை)*

“இந்ராத்மஜன் தந்நோடப்போல் - சிரி

சிந்திரா வல்லபன் சொல்லி.” - *(சுந்தரீசுயம்வரம்)*

இது ஐந்து மாத்திரை அளவிலுள்ள மூன்று எழுத்துச் சீர்களில் அமைந்துள்ள விருத்தமான ‘காகளி விருத்தத்தின் ஒரு ஊனரூபமாகிறது என்று கூறலாம். ‘விருத்தசில்பம்’ நூலாசிரியரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறார். காகளியினு-டைய முதலாம் அடியின் மூன்றாம் சீரிலுள்ள இறுதி எழுத்தும், நான்காம் சீரிலுள்ள முதல் எழுத்தும் குறைக்கப்பட்டு, மாத்திரை அளவை நீட்டிச் சொல்லுதல் மூலம் அதில் ஓசை நிரப்பப்படுகிறது. இரண்டாம் அடியின் மூன்றாம் சீரில் இரண்டு எழுத்துக்களுடன் அந்த அடியானது முடிக்கப்படுகிறது.

உ.ம்.

‘‘சாரிக / பைதலே / சாரு – / வரி

காரோம / லேகதா / சேஷம் - / -

2. இருப்பத்து நாலு விருத்தம்

(கேரள கௌமுதி, குறிப்பிடத் தவறிய ‘இருபத்து நாலு விருத்தங்கள்’ அனைத்திற்கும் விருத்த மஞ்சரி வெவ்வேறு விதமாகப் பெயர் இலக்கணம் கொடுத்து அதனை விளக்கிக் கூறும் முயற்சியை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், மஞ்சரியால் சொந்தமாகப் பெயரிலக்கணம் கூறப்பட்ட இந்த விருத்தங்களில் ஏராளமான தவறுகள் காணப்படுகின்றன. இது ஏற்கனவே முன்னுரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளைக் குறித்து ஒவ்வொன்றாக விவரிக்கலாம்.)

A. ‘இந்துவதன’

விருத்த மஞ்சரி, ‘‘இந்த நூலிலுள்ள 1-ஆம், மற்றும்15-ஆம் விருத்தங்கள் ‘இந்துவதன’ என்ற சமஸ்கிருதத்திலுள்ள விருத்தங்களாகும்’’ எனக் கூறிக்கொண்டு, ‘ஆபதி பஜந்தி- -’

என்று தொடங்குகின்ற ஒரு வரியை இதற்கு உதாரணமாகக் கூறியிருக்கிறது.

இதில், ‘நெடிலெழுத்துக்களைப் பல இடங்களிலும் குறிலெழுத்துக்களாக்கி உச்சரிக்க வேண்டியது வரும்’ என்ற விதிமுறை உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக ‘அல்லலகற்றீடுவதி நாஸ்ரி தஜநாநாம்’ இது போன்று நான்கு வரிகள் கூறப்பட்டிருகின்றன. அந்த வரிகளில் எந்தெந்த இடங்களில் ‘லகுகரணம்’ (குறிலெழுத்து அமைவு) வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதில் இலக்கணப் பிழையும் கணப்படுகிறது. அதாவது, நெடிலெழுத்துக்கள் தேவைப்படும் இடத்தில் குறிலெழுத்துக்களையும், குறிலெழுத்துக்களுக்குப் பதிலாக நெடிலெழுத்துக்களையும் வைத்து, எழுத்துக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்று, இதுபோன்ற தவறுகள் காணப்படுகின்றன.

உ.ம்.

1. ‘பத்துவத **நந**வளோ டோர்த்த பறஞ்ஞான்’
2. ‘வீரியமினி மாமகம **துட**நறியு மப்போள்’
3. ‘பக்ஷப்ருத மமுதுவரி ஷச்சு ஹரிராம’

B. ‘கலேந்துவதன’

இது இருபத்திநாலு விருத்தங்களில் மூன்றாம் விருத்ததிலுள்ள விருத்தமாகும். இதற்கான இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

‘இஹேந்துவதநாவிருத்தே மாத்ரய்க்கொத்து லகுக்களெ
இடவிட்டு குருஸ்தானே செய்திட்டு லகுவொந்நத
ஒடுவில் சேர்த்தாம் விருத்தம் கலேந்துவதநாபிதம்.’

‘இந்துவதன’ விருத்ததினுடைய இடைவிட்டு ஒன்று என்ற நிலையில் நெடிலெழுத்துக்கள் அமையும் இடத்தில், இரண்டு குறில் எழுத்துக்களை அமைத்து, அதன்பின் இறுதியில் ஒரு குறில் எழுத்தை அதிகமாகவும் சேர்ப்பது ‘கலேந்துவதன’ என்ற விருத்தமாகும்.

இலக்கணம் தவறு

‘இந்துவதன’ என்ற விருத்தத்தில் எண்ணிக்கை அடிப்படையிலாக 1-ம், 5-ம், 9-ம், 13-ம், மற்றும் 14-ம் இடங்களில் வரும் எழுத்துக்கள் நெடிலெழுத்துக்களாகும். அந்த நிலையில் 1-ம் 9-ம் 14-ம் ,மற்றும் 5-ம், 13-ம் இடங்களிலுள்ள நெடிலெழுத்துக்களுக்குப் பதிலாக இரண்டு குறில் எழுத்துக்கள் வந்தால்தான் ‘இடவிட்டு குருஸ்தானே’(இடைவிட்டு நெடிலெழுத்து) என்ற இலக்கணம் சரியானதாக அமையும். இதற்கு கீழ்க்காணும் உதாரணப்பாடலைப் பார்க்கலாம்.

“ **நா**லுநிஜ **செற**யசில
பாலகரி **லிய**லிநொரு
லீலகளில் முதிதநர
பாலடணி **நிஜ**யுபதி”

இங்கு, ‘இந்துவதன’ விருத்தத்திலுள்ள 5-ம், 13-ம், 14-ம், இடங்களில் நெடிலுக்குப் பதிலாகத்தான் குறிலெழுத்துக்கள் அமைந்திருக்கின்றன.

C. ‘சர்ப்பிணி’

இருபத்திநாலு விருத்தங்களிலுள்ள இரண்டாவது மற்றும் ஒன்பதாவதாக அமைந்திருருக்கும் விருத்தம் ‘சர்ப்பிணி’-யாகும். இதில், ‘சர்ப்பிணி’ என்ற விருத்தத்திற்குக் கூறப்பட்-

டுள்ள இலக்கணம் ஒருமுறை பரிசோதிக்கப்படுகிறது. மேலும், ‘பான’ விருத்தத்தின் ‘கண மாத்திரை’ பற்றியும் விவரிக்கப்-படுகிறது.

> ‘‘திரிவியக்ஷரம் கணமொந்நாதியம்
> திரியக்ஷரம் மூந்நதில்ப்பரம்
> கணங்ஙள்க்காதிகுருவாம்
> வேறொந்நும் திரிவியக்ஷரங்களில்
> மற்றேதும் சர்வகுருவாய்
> வராம் கேளிது சர்ப்பிணி’’

முதலில் இரண்டு எழுத்துச் ‘சீர்’ ஒன்று, அதன் பிறகு மூன்றெழுத்துச் ‘சீர்’ மூன்று, ஆக மொத்தம் பதினொன்று எழுத்துக்களாகும். இதில் அனைத்துச் சீர்களையும் நெடில் எழுத்துக்களால் தொடங்க வேண்டும். மூவெழுத்துச் சீரில் குறைந்தது இரண்டு நெடிலெழுத்துக்களாவது காணப்பட வேண்டும். இரண்டெழுத்துச் சீர்களில் காணப்படும் எழுத்-துக்களையும் நெடிலாக்கிக் கொள்வது தவறில்லை. இப்படி அமைவது ‘சர்ப்பிணி’ என்னும் விருத்தமாகும்.’’ என்பது இதன் இலக்கணமாகக் கூறப்பட்டிருக்கிறது. ‘ஏழுசாகர - - -) என்ற ஒன்றரை அடி அளவிலுள்ள பாடல்வரி உதாரணப்படுத்தப் பட்டிருக்கிறது.

1. ‘சீர்களில் முதலில் வரும் எழுத்து நெடில்’ என்ற இலக்கண விதிக்கு மாறாக உதாரணப்பாடல் காட்டப்பட்டிருக்கிறது.

மஞ்சரியில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கும் ஆறு வரிப்பாடல்களிலுள்ள இரண்டு வரிகளில் ஒரு சீரானது

நெடிலெழுத்துக்களால் தொடங்கப்படாமல் குறிலெழுத்துக்-களால் தொடங்கப்பட்டிருக்கிறது.

எ.கா.

“ஊழி /தந்நில்நி / **ரயுந்த** / லோகரெ

நாழி / **க**தோறும் / ராஜாவு / கோவிந்த

2. மூன்றெழுத்துச் சீர்களில்

மூன்று எழுத்துக்களால் அமையும் சீர்களில், அச்சீரின் முதலெழுத்து உட்பட இரண்டு நெடிலெழுத்துக்கள் காணப்பட வேண்டும் என்று ‘விருத்த மஞ்சரி’ கூறிய இலக்கணத்திற்கு மாறாக அதன் உதாரணப்பாடல் அமைக்கப்பட்டிருக்கிறது.

‘ஏழு / **ஸாகர** / **மேகல** / யாகுநொ

‘ரூழி - தந்நில்நி – **ரயுந** – லோகரெ’

‘மூன்றெழுத்துச் சீர்களில் காணப்படும் சீர்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு நெடிலெழுத்துக்கள் வேண்டும்’ என்று மஞ்சரி கூறிய இலக்கணத்திற்கு மாறாக சில சீர்களில் ஒரு நெடிலெழுத்தே காணப்படுகிறது. அது மட்டுமல்ல, அதன் இரண்டாவது வரியில் ஒரு சீரில் காணப்படும் அனைத்து எழுத்துக்களும் குறிலெழுத்துக்களாகக் கணப்படுகின்றன. இது போன்று பல தவறுகள் காணப்படுவதை அறியலாம்.

மேலும் அனைத்து எழுத்துக்களும் நெடிலெழுத்துக்களாக அமையும் சீர்களும் காணப்படுகின்றன. அதற்கான உதாரணப்-பாடல் கீழ்க்கண்டவாறு அமைகிறது. .

‘சேஷி / **சொல்லொந்நும்** / பிரபனு / கோவிந்த

நாலு / புத்ரன்மா/ ரெக்கொண்டு / **ராஜாவும்**’

இப்பாடலில் முதல் வரியில் இரண்டாம் சீரிலும், இரண்டாம் வரியின் இறுதிச்சீரிலும் நெடிலெழுத்துக்கள் மட்டுமே காணப்படுகின்றன.

இது போன்று ‘சர்வலகு’ அதாவது, ஒரு சீரிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் குறிலாக வந்திருக்கின்றன.

உ.ம்.

‘கோட / **லவிஷ** / யங்ஙளி / லுண்டாயி’ .

மேற்குறிப்பிட்ட வரியில் இரண்டாம் சீரிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் குறிலெழுத்துக்களாகவே காணப்படுகின்றன.

‘பான- ஊனகாகளி’

‘விருத்த சில்பம்’ என்ற நூலில் நான்கு மாத்திரைகள் கொண்டு ஐந்து சீர்களாக அமையும் அடிகளைப் போன்று ‘வாய்ச்சொல்’ என்ற அமைப்பும் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

எ.கா.

‘தந்திரோம் தலோம் / தந்திரோம் தல்ப / தோம்

தந்திரோம் தல்ப / தக்கோம் / தடிஜ்ஜ / தோம்’

D. ‘சமாசம்’

இருபத்திநாலு விருத்தங்களில் நான்காவதாக அமைந்தி-ருக்கும் இவ்விருத்தத்திற்கான இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

‘‘விஷமத்தில் சமசமம்-

சமத்தில் சமசம் குரு

எந்துள்ளர்த்தசமம் விருத்தம்

சமாசமசமா ஹியயம்.''

இதில் முதல் மற்றும் மூன்றாம் அடிகளில் 'ஸ-ம-ஸ', மகணங்களும், இரண்டு மற்றும் நான்காம் அடிகளில் 'ஸ-ம-ஸ' கணங்களும், ஒரு நெடிலும் அமைந்து வருவது 'சமாசம்' எனும் விருத்தமாகும் என்பது இதன் இலக்கணம்.

உ.ம்.

''சுரபுரியோடு சமமாகும் நிஜ

புரியில் புக்குடன் ரகுநாதன்''

உதாரணப்பாடல் தவறானது

'சமாசமம்' விருத்ததிற்கு உதாரணமாகக் காண்பித்த இப்பாடல் வரிகளில் எதுவும் இலக்கணத்திற்குப் பொருந்தும் விதத்தில் அமைய வில்லை. அவை கீழக்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

ന	ന	സ	ഭ
∪ ∪ ∪	∪ ∪ ∪	— ∪ —	— ∪ ∪
സുരപു	രിയൊടു	സമമാ	കുംനിജ
சுரபு	ரியொடு	ஸமமா	கும்னிஜ

സ	ര	സ	ഗ
∪ ∪ —	— ∪ —	∪ ∪ —	—
പുരിയിൽ	പുക്കുടൻ	രഘുനാ	ഥൻ
புரியில்	புக்குடன்	ரகுநா	தன்

ന	ഭ	ന	ര
∪ ∪ ∪	— ∪ ∪	∪ ∪ ∪	— ∪ —
തരുണി	മാർമണി	മകുടി	സീതയോ
தருணி	மார்மணி	மகுடி	ஸீதயோ

സ ജ സ ഗ

∪∪— ∪—∪ ∪∪— —

ടൊരുമി ച്ചുവാണു ഹരിനം ബോ

டொருமி ச்சுவாணு ஹரிநம் போ

'ந ந ஸ ப', 'ஸ ர ஸ க', 'ந ப ந ர', 'ஸ ஜ ஸ க', - இது போன்றுதான் பாடல் அடியிலுள்ள சீர்கள் அமைந்திருக்கின்றன. 'சமாசமம்' விருத்தத்திற்குக் கூறிய இலக்கண விதிப்படி எந்த சீரிலும் காணப்படவில்லை. 'ஸகணம்' அதிகமாகக் காணப்படுகிறது.

F. 'சம்புடிதம்'

'சம்புடிதம்' என்பது எட்டாம் விருத்தத்திலுள்ள விருத்தமாகும். 'யதி' என்ற அமைப்பு இதில் காணப்படும். 'நஸப', 'நகக' என்ற அமைப்பில் அடியின் சீரில் எழுத்துக்கள் அமையும்.' என்று இப்படி இதற்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. ('ந-ஸ-ப-ந' என்ற நான்கு சீர்களும், இரண்டு நெடில் எழுத்துக்களும் அடியின் நடுவில், ஏழு எழுத்துக்கள் முடிகின்ற இடத்தில் 'யதி' (நிறுத்தம்) அமைப்பு பெற்றிருக்கும்).

உ.ம்.

" சமுசித சபரியம் சம்பரியொடு வாங்ஙி

பரகதி யவல்க்கும் பரிசிநொடு நல்கி

...."

இந்த உதாரணப்பாடலில் காணப்படும் எந்த வரிகளும் இலக்கணத்திற்குப் பொருத்தமாக அமையவில்லை.. ஆகவே, இதற்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கணம் தவறானது என்றுதான் கூற வேண்டும். மலையாளத்திலுள்ள தனித்த மாத்திரை

அளவு அடிப்படையிலான விருத்தங்களை, எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்துள்ள சமஸ்கிருத விருத்தங்களைப் போன்று இலக்கணம் அமைத்திருப்பதை ஆராயும் பொழுது இந்த விருத்தம் தனக்கானத் தனித்தன்மையை இழந்து விடுகிறது.

'காகளி சாயல்'

'' ஸமுசி /தஸப / ரியாம்சப / ரியொடு / வாங்ஙி

இது போன்று மும்மூன்று எழுத்துக்களாகப் பிரிக்க வேண்டும். காரணம் இது 'காகளீ' எனும் விருத்தத்தின் சாயலாக அமைகிறது.

''சமுசிதச / பரியம் / சம்பரியொடு / வாங்ஙி

பரகதிய / வள்க்கும் - / பரிசினோடு / நல்கி''

இப்படியொரு 'சீர்' அமைப்பு காணப்படுகிறது. முதல் மற்றும் மூன்றாம் சீர்களில் காணப்படும் ஐந்து எழுத்துக்களும் (லகுமயம்) குறிலெழுத்துக்களாகவே அமைந்திருக்கின்றன. இரண்டு மற்றும் மூன்றாம் சீர்களில் எழுத்துக்களின் குறைவு காணப்படுகிறது. இந்த அமைப்பைப் பார்க்கும் பொழுது இதுவும் 'காகளி' விருத்த வகையைச் சார்ந்ததாகத் தோன்றலாம்.

G. 'அதிசம்மத'

இது இருபத்துநாலு விருத்தங்களில் அமைந்துள்ள பதினொன்றாம் விருத்தத்திற்கான இலக்கணமாகும்.

''நஸயும் யலகம் சேர்ந்நா

லதிஸம்மதயாயிடும்''

உ.ம்.

''பிரவனமபி பூரயா மாஸ பேரீ ரவை

ரவநத சுராம்கனானந்த காணங்ஙளும்''

இந்த உதாரணப்பாடல் கிளிப்பாட்டில் குறிப்பிடப்பட்ட 'மணி-காஞ்சி' எனும் விருத்தத்திற்குப் பொருத்தமானதாகக் காணப்-படுகிறது. ஆனால், இதற்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கணத்-தைப் பார்க்கும் பொழுது 'மணிகாஞ்சி' விருத்தத்திற்கு உதாரணமாகக் காண்பித்திருக்கின்ற வரிகளுக்குப் பொருத்த-மின்மையாக அமைகிறது.

இலக்கணம் பற்றிய கருத்து

மலையாளத்திலுள்ளது போல மாத்திரையளவு அடிப்ப-டையில் அல்லாமல், சமஸ்கிருதத்திலுள்ளது போன்று எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

''ப்ரதம / கிரிமூ / த்தநிச / ந்ரனுதி / க்கும் விதௌ''

''பலதி / ரயில் மெ / ல்லெ காணு / ந்ந போலெ / ரவி''

''மதனதுயிர் பூண்டின ங்ஙீடின ராவணன்''

இப்படி, பல அடிகளிலும் 'நஸய, யலக' - போன்ற அமைப்பில் சீர்கள் அமைந்திருப்பதால் இப்பாடல்வரிகள் இலக்கணத்திற்குப் பொருத்தமாக அமையவில்லை.

விருத்தம் - 'மிஸ்ரகாகளி'

'காகளி' விருத்தத்தின் சாயலாக இந்த ஐந்து மாத்திரைச் சீரில் அமைந்துள்ள விருத்தங்களின் சீரமைப்பு கீழக்கண்டவாறு அமைகின்றது.

"ப்ரவனமபி / பூரயா / மாஸபே / ரீரவை -

ரவநதசு / ராம்கனா / நந்தகா / நங்ஙளும்"

ஓர் அடியில் ஐந்து மாத்திரைச் சீரானது நான்கு. இதில் முதல் சீர் முழுவதும் குறிலெழுத்துக்களும், இரண்டாம் சீரில் பெரும்பாண்மை நெடிலெழுத்துக்களும் காணப்படுகின்றன. இந்த நிலையில், இது 'மணிகாஞ்சி' என்ற விருத்தத்திற்குப் பொருத்தமாக உள்ளது. ஆனால், இதே விருத்தத்திலுள்ள,

"நாணமக / லெக்கள / ஞ்ஞீடுவா / நாக்ரஹம் "

"தருணிம / ண்டோதரி / யெக்கள / ஞ்ஞீடுவன் "

போன்ற வரிகளில் 'லகு' மயகனத்திற்குப் பதிலாக (ஒரு சீரில் குறிலெழுத்திக்கள் மட்டும் அமைவது 'லகுமயம்') 'லகுப்ராய-கணம்' அமைந்துள்ளது (ஒரு சீரில் நெடிலெழுத்து இருப்பினும், பெரும்பாண்மையாகக் குறிலெழுத்துக்கள் காணப்படுவது 'லகுப்ராயகணம்') இந்த நிலையில், காக-ளியில் " இச்சபோலெ சில இடத்து " (நினைத்தபடி சில இடங்களிலும்) 'லகுமய - லகுப்ராய கணங்கள்' வருமேயா-னால் 'மிஸ்ரகாகளி' என்ற இலக்கணத்தின் படி இந்த விருத்தம் அமைந்திருக்கின்றது. மேலும், இதற்குக்

கிளிப்பாட்டில் கூறிய ‘களகாஞ்சி’ ‘மணிகாஞ்சி’ மற்றும் ‘மிஸ்ரகாகளி’ போன்றவற்றையும் உட்படுத்தலாம்.

H. ‘ஸ்திமித’

இது ‘இருபத்துநாலு’ விருத்தங்களில் பதினெட்டாவதாக அமைந்த விருத்தமாகும். இதற்கான இலக்கணம் கீழ்க்கண்ட-வாறு அமைகிறது.

‘‘தபயம் ஜலலம் மத்யே

முறிஞ்ஞால் ஸ்திமிதாபிதம்’’

இதில், ‘த - ப - ய - ஜ’ என்ற அமைப்பிலுள்ள சீர்களும், இரண்டு குறிலெழுத்துக்களும், அடியின் நடுவில் ஏழு எழுத்துக்கள் முடியும் இடத்தில் ‘யதி’(நிறுத்தம்) அமைப்பும் பெற்று வருவது ‘ஸ்திமித’ எனும் விருத்தமாகும். என்று இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

உ.ம்.

‘‘ஸ்ரீராமசந்த்ர ஜய சீதாகடாக்ஷமது -

பாராமமே பெரிய காருண்ய மெந்நிலருள்

....’’

மேற்கண்ட வரிகளைப் பார்க்கும் பொழுது அனைத்துச் சீர்களும் இலக்கணத்திற்குப் பொருத்த முடையதாகத் தோன்றலாம். ஆனால், அப்படி பொருத்தப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. காரணம், இந்த ‘கோத்திரத்திற்கு’ பொருத்தப்படா-மல்தான் இதன் இலக்கணம் அமைக்கப்பட்டிருக்கிறது.

‘காகளி’ விருத்தத்திற்குக் கூறப்பட்ட இலக்கணத்துடன் இது ஒத்துப் போகிறது.

கோத்திரமும் விருத்தமும்

இது ‘காகளி’ வகையைச் சார்ந்த மலயாள விருத்த-மாகும். இதில் ‘சீர்’ அமைப்பானது கீழ்க்-கண்டவாறு அமைகிறது.

‘‘ஸ்ரீராம / சந்த்ரஜய / சீதாக / டாக்ஷமது –
புராரம / மே பெரிய / காருண்ய / மெந்நிலருள்’’

இவை அனைத்தும் ஐந்து மாத்திரை அளவுள்ள எழுத்துக்களைக் கொண்ட சீர்களாகும். இதில் சில சீர்கள் மூன்றெழுத்துக்களைக் கொண்ட ‘குருப்ராயம்’ (பெரும்பாண்-மையாக நெடிலெழுத்துக்கள் அமைந்திருப்பது. என்ற அமைப்-பிலும், சில சீர்கள் நான்கு எழுத்துக்களைக் கொண்ட ‘லகுப்ராயம்’ (பெரும்பாண்மையாகக் குறிலெழுத்துக்கள் அமைந்திருப்பது) என்ற அமைப்பிலும் காணப்படுகின்றன. இப்படி குறிலெழுத்துக்களும், நெடிலெழுத்துக்களும் கலந்து வருகின்ற விருத்தத்திற்கு ‘மிஸ்ரகாகளி’ என்று மஞ்சரியும் குறிப்பிட்டிருக்கிறது. அது மட்டுமின்றி, அதற்கு இலக்கணமும் கூறியிருக்கிறது.

1. ‘அதிஸ்திமித’

இது ‘இருப்பத்து நாலு’ விருத்தங்களில் பதினேழாவதாக அமைந்துள்ள விருத்தமாகும். இதற்கான இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

‘‘ஸஜனம் ஜபலம் மத்யே
சிந்நா திஸ்திமி தாபிதா’’

அதாவது ‘ஸ-ஜ-ந-ஜ-ப’ என்ற அமைப்பிலுள்ள சீர்களும், ஒரு குறிலும், அடியின் நடுவில் எட்டு எழுத்துக்கள் முடியும் இடத்தில் ‘யதி’(நிறுத்தம்) என்ற அமைப்பும் பெற்று வருவது ‘அதிஸ்திமித’ விருத்தம் என இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக,

“ரகுநாத சஸ்ருமுடனுடலில் தறுச்சு பத”

என்ற பாடல்வரி உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. இதற்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கணமும் உதாரணப்பாடலும் பொருத்த முடையதாகக் காணப்படுகிறது. எனினும், இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், மாத்திரையளவை அடிப்படை-யாகக் கொண்டு இலக்கணம் செய்ய வேண்டிய இந்த மலை-யாள விருத்தத்தை, எழுத்து அடிப்படையிலான சமஸ்கிருத விருத்தத்தைப் போன்று இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. மட்டுமின்றி, இருபத்தினாலு விருத்தத்திலும், பெரும்பாண்மை-யான விருத்தங்களுக்கு இது போன்றுதான் இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

கோத்திரமும் வகையும்

‘ஸமித’ என்ற விருத்தம் ‘காகளி’ எனும் விருத்த வகையைச் சார்ந்தது என்றும், மஞ்சரியில், ‘மிஸ்ரகாகளி’ எனும் விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கணத்திற்கு ஒத்துப் போகிறது என்றும், அறிய முடிந்தது. இது போன்று இந்த ‘அதிஸ்திமித’ என்ற விருத்தமும் ‘காகளி’ விருத்த வகையைச் சார்ந்ததாக அமைகிறது. மேலும், கோத்திர அமைப்பிலுள்ள எழுத்துச்சொல் வடிவங்களுக்கு சரியான சீரமைப்பு முறை கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

எ.கா.

‘‘ரகுநாத / சஸ்ருமுட / னுடலில்த / றச்சுகன

ருசிதிருஷ்டி / நிந்நகில / ரஜநீச / ராதிபதி

இப்படி இதில் காணப்படும் அனைத்துச் சீர்களும் ஐந்து மாத்திரை அளவுள்ள ‘குறில்’, ‘நெடில்’ எழுத்துக்களால் ஆனவைகள்.

J. **‘உபசர்ப்பிணி’**

மஞ்சரியில் கூறப்பட்டுள்ள இருபத்திநாலு விருத்தங்களில், இருபத்து இரண்டாவது விருத்தமாக அமைந்துள்ளது.

இதனுடைய இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

‘‘ஸர்ப்பிணி க்காதிய குருவின்
ஸ்தானே ரண்டு லகுக்களெ
சேர்த்தா லுண்டாயிடும் விருத்தம் -
மதின் பேருபஸர்ப்பிணி.’’

அதாவது, (‘பான’பாட்டு விருத்தமான) ‘சர்ப்பிணி’ எனும் விருத்தத்தில் முதலாவதாக அமைந்திருக்கும் நெடிலெழுத்திற்குப் பதிலாக ,அதே இடத்தில் இரண்டு குறிலெழுத்துக்கள் வருமேயானால் அது ‘உபசர்ப்பிணி’ எனும் விருத்தமாகும் என்பது இதன் இலக்கணம்.

உதாரணம்

‘‘சரணபல்லவம் கும்பிட்டு லக்ஷ்மணன்

மரமரிகெப்போய் மெல்லெ மறஞ்ஞுப் போல்.’’

இலக்கணம் குறித்த கருத்து

இந்த இலக்கணத்தை நுட்பமாக ஆராயும் பொழுது, இதில் காணப்படும் தவறுகள் நமக்குப் புலப்படும். அதாவது, ‘பான பாட்டுகள்’ எல்லாம் நெடிலெழுத்தை முதலாவதாகக் கொண்டு தொடங்குவதில்லை. மஞ்சரியிலுள்ள இலக்கணத்-தின்படி ‘உபசர்ப்பிணி’ விருத்தத்தில் காணப்படும் முதல் இரண்டு எழுத்துக்களும் குறிலாக இருக்க வேண்டும் என்பதாகும். ஆனால், இது சரியான இலக்கணம் தான் என்று கூற இயலாது. இதில் காணப்படும் தவறுகளைக் கீழ்க்காணும் பாடல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

எ.டு.

“- அணந்த / மாருதி / க்கஞ்சிய / ரக்கரும்

- பிடஞ்ஞு / மண்டினர் / பேடிபெ / ருத்தெங்ஙம்.”

(இராமசரிதம்)

இவ்வரிகளில் இரண்டாவதாகக் காணப்படும் எழுத்து நெடிலெழுத்தாகும். ‘ஜகணம்’ என்ற எழுத்து வடிவத்தில் பார்த்தாலும் ‘ஸகணம்’ என்ற அமைப்பு போன்றுதான் தெரிகிறது.

K. ‘பல்லவினி’

இது இருப்பத்துநாலு விருத்ததங்களில் பதிமூன்றா-வதாக அமைந்துள்ள விருத்தமாகும். இதற்கான இலக்கணம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

“கேகய்க்கு ரண்டாம் பாதாந்த

யதியில் த்ரியக்ஷரம் கணம்

பொருத்த வுமுபேகஷிச்சால்

கேல் பல்லவினியாமது''

'கேக' எனும் விருத்தத்தின் இரண்டாம் அடியிலுள்ள இரண்டாம் 'யதி' (நிறுத்தம்) அமைப்பிற்குப் பின்வரும் மூவெழுத்துச் சீரானது குறைந்தால் அது 'பல்லவினி' எனும் விருத்தமாகும். 'கேக'விற்குக் கூறிய 'பாதாதி' எனும் இலக்கணமும் இதில் ஒத்துப் போகவில்லை. இதனைக் கீழ்க்கண்ட வரிகளின் மூலம் உறுதி படுத்தலாம்.

''பிலவககுலபதி வருத்தும் பெரும்பட

ஜனத்தொடொருமிச்சு ரகுநாதன்

படய்க்கு புறப்பெட்டு ஸமுத்ரதடப்ரவி

வஸிச்சிதொருதினம் ஹரினம் போ''

இலக்கணம் தவறு

அதாவது, மலையாள பாஷா விருத்தங்களில் மிகவும் 'தாளம்' குறைவாகக் காணப்படுகின்ற 'கேக' எனும் விருத்-தத்திலிருந்து வேறுபடுத்து வதற்காகத்தான் மஞ்சரி இப்படித் தவறான இலக்கணத்தைக் கூறியிருக்கிறது.

மேலும், இலக்கணத்திற்குப் பொருந்தாத பாடலும் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கிறது.

எ.கா.

1. '' பச்சயாம் விரிப்பிட்ட ஸஹியனில் தலவச்சும்

சுவச்சாம்தி மணல்த்திட்டாம் -தானம் பூண்டும் ''

2. “ மாகந்த மகரந்த பிந்துபானவும் செய்து

கூக்குந்நபிககுல - கேட்டு கொண்டும் ”

3. “விதி நந்தனநாய வசிஷ்டமஹாமுனி

விதிபூர்வகமுப - பாலன்மரெ ”

இதில் முதல் இரண்டு பாடல்களிலும் காணப்படுகின்ற வரிகளில் எதுவும் ‘பல்லவினி’ எனும் விருத்தத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கணத்துடன் ஒத்துப் போகவில்லை.

L. சில சமஸ்கிருத விருத்தங்கள்

(இருபத்து நாலு விருத்தங்களில் பதினெட்டு விருத்தங்கள் தான் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இதில், ‘மலையாள பாஷா விருத்தங்கள்’ 12-ம், ஆறு சமஸ்கிருத விருத்தங்களும் அடங்கும். இந்த ‘பாஷா’ விருத்தங்களிலுள்ள பத்து விருத்தங்கள் பற்றிய கருத்துக்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அதன் பிறகு காணப்படும் ‘தரம்கிணி’ மற்றும் ‘மஞ்சரி’ ஆகிய இரண்டு விருத்தங்களும் ‘துள்ளல்’ மற்றும் ‘காதை’ பகுதியில் ஆராயப் பட்டிருக்கின்றன. ஆறு சமஸ்கிருத விருத்தங்களில் ஒன்றான ‘இந்துவதன’ என்ற விருத்தமும் இதற்கு முன்பு ஆராயப் பட்டிருக்கிறது. அது போன்று ‘மல்லிக’ விருத்தத்தைப் பற்றியும் இரண்டு இடங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இனியும் எஞ்சி இருக்கின்ற நான்கு சமஸ்கிருத விருத்தங்களைக் குறித்து மட்டும் இங்கு ஆராயப்படுகிறது).

1. **‘பஞ்ச சாமரம்**

இருபத்துநாலு விருத்தங்களில் இது ஏழாவதாக அமைந்துள்ள விருத்தமாகும். ‘ஜகத்ரியே ஜனங்ஙளெப் பிடிச்சு தச்சு கொந்நுடன்’ என்று இது போன்ற வரிகள் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

‘முழு’ / த்தகோ / பவான் / கர / நய / ச்சு - -’

‘சுப / ர்ண்ணனு / ளளிலோ / ர்த்தீலே / து - - -’

இப்படி இலக்கணத்திற்கு மாறாக இரண்டு அடிகளிலும் இறுதிச் சீர்களில் எழுத்துக்கள் குறைவாக அமைந்திருப்பது முறை-யற்றதாகும் .

‘பரியஸ்த சாமரம்’

‘லகம் லகம் நிரந்நு’ அதாவது முன் குறிலும் பின் நெடிலும் என்ற முறையில் தான் ‘பஞ்சசாமரம்’ எனும் விருத்தத்தில் எழுத்துக்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், கீழ்க்காணும் உதாரணப்பாடலில் இதற்கு மாறாக ‘கம்ல கம்ல’ அதாவது, முன் நெடிலும் பின் குறிலும் என்ற முறையில் எழுத்துக்கள் அமைக்கபட்டிருக்கின்றன.

எ.கா.

“சண்ட / பானு / வம்ச / ஜாத

புண்ட / ரீக / லோச / ளான் - - ”

இதன் அடிப்படையில் இதற்கு ‘பரியஸ்த சாமரம்’ என்ற பெயர் கொடுத்திருக்கலாம். ஓரடியில் மூன்று மாத்திரையில் நான்கு சீர்கள், இப்படி நான்கு அடிகள் ஒரு பாடல். (அதாவது ஓர்

அடியில் எட்டு சீர் -இப்படி இரண்டு அடிகள் சேர்ந்தது ஒரு பாடல்).

2. ‘மதநார்த்தயும்’, 3. ‘சங்கர சரிதமும்’

இருபத்து நாலு விருத்தத்தில் ‘மதநார்த்த’ இருபத்து மூன்றாவது விருத்தமாகவும் ‘சங்கரசரிதம்’ இருபதாம் விருத்தமாகவும் அமைந்துள்ளன. இதற்கான இலக்கணங்கள் சரியாக அமைந்துள்ளன.

“ஸல்க்கீர்த்திகள் கொண்டிதரி ஜ -
கத்தொக்கெ வெளுப்பி -
சக்ஷீண மயோத்யா புரி
வாந்நீடின காலம் ” - *(‘மத்நார்த்த’)*

“ஜயநிர்மல ஜயமம்கல
ஜயபங்கஜனயனா
ஜயசுந்தர ஜயமந்மத
ஜயசிந்மய ஸததம் ” - *(சங்கர சரிதம்)*

இது போன்று அந்தந்த விருத்தங்களிலுள்ள அனைத்து வரிகளிலும் அதற்கான இலக்கணம் சரியாகப் பொருந்துகிறது.

‘மலயம் பர்வதஸானுவொ’

‘அபிஷேகவுமகரோ தத விதிநாமுனிப் பெருமாள்’

‘போவானயய்க்காய்கில் குலவும் நிந்நெயும்’

இது போன்று இரண்டோ, மூன்றோ இடங்களில் குறிப்பிடத் தகுந்த இலக்கணப் பிழைகளே இவற்றில் காணப்படுகின்றன.

இந்த விருத்தங்கள் இலக்கணத்திற்குப் பொருந்தும் விதத்தில் மட்டுமல்ல, கடுமையான விதிமுறையைப் பின்பற்றி

‘பாஷா கான கிருதி’களிலும் (மலையாள நாடன் பாட்டுகளில்) பின் பற்றப் பட்டிருக்கின்றன.

எ.கா.

1. “ஒந்நாம் திருநெல்லீ திரு -

  வல்லம் திருவய்க்கும்

 பொந்நம்பலம் ராமேசுவரம்

  வந்நேன் கைதொழுதேன்” –

(சந்தியா நாமம் - நாடன்)

3. “ நமுக்கிங்னெ குடிக்காதங

  கிடக்காமெந்நங்ஙிரிக்காம் - பக்ஷே

 பிரமிச்சுண்ணி களுடுப்பேல் வந்நு

  பிடிச்சாலெந்து கொடுக்கும் ”

- *(குச்சேல விருத்தம்)*

4. ‘ஸ்ரகிணி’

இது இருபத்து நாலு விருத்தங்களில் இருபத்தொன்றா-வது ‘எ’ விருத்தத்திலுள்ளதாகும்.

உ.ம்.

“பிராப்தராஜ்யேஹரௌ சாஸ்திரீந்ரதிவிஷாம்

பார்த்தலம் காத்து ரக்ஷிச்சிரிக்கும் விதௌ”

இதில் கூறப்பட்ட இலக்கணத்திற்குப் பொருத்தமாகத்தான் உதாரணப்பாடல் அமைந்துள்ளது.

‘இருபத்துநாலு’ விருத்தத்திலுள்ள விருத்தங்களின் பெயர்கள்

இந்நூலில் இதுவரை மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இருபத்து நாலு விருத்தங்களுடைய பெயர்ப் பட்டியல் கீழ்க்கண்டவாறு தரப்படுகிறது. விருத்த மஞ்சரியும் இப்படியொரு பெயர்ப் பட்டியலைப் பதிவு செய்திருக்கிறது.

1 -ம் விருத்தம் - ‘இந்துவதன’

2 -ம் விருத்தம் ‘பான’ (ஸர்ப்பிணி) – ‘ஊனசிலதகாகளி’

3 -ம் விருத்தம் - அதிகாகளி’

4 -ம் விருத்தம் - ஓமனக்குட்டன்றெ ‘இரட்டி’ ‘சிலதகாகளீ’ கோத்திரத்தில் உட்படலாம்.

5 -ம் ‘ஊனகாகளி’

6 -ம் விருத்தம் - ‘மல்லிக’

7 -ம் விருத்தம் ‘பஞ்சசாமரம்’ (ஒரு பாடலில் ‘பரியஸ்த சாமரம்’ என்று பெயரிடப்பட்ட மூன்று மாத்திரைச் சீர் விருத்தம்.

8 -ம் விருத்தம் - ‘காகளீ கோத்ரம்’. ‘அதிகணம்’ மற்றும் ‘ஊனகணம்’ இடைவிட்டு வருகின்ற காகளி).

9 -ம் விருத்தம் - ‘பான’ – ‘ஊனகாகளி’

10 -ம் விருத்தம் - மஞ்சரி – ‘ஊனசிலதகாகளி’

11 -ம் விருத்தம் - ‘அதிகாகளி’

12 -ம் விருத்தம் - மஞ்சரி - ஊனசிலதகாகளி

13 -ம் விருத்தம் - ஊனவக்திரம் (பலசீர்கள் சேர்ந்து வருவது)

14 -ம் விருத்தம் - தரம்கிணி

15 -ம் விருத்தம் - இந்துவதன

16 -ம் விருத்தம் - ஊனகாகளி

17 -ம் விருத்தம் - அதிகாகளி

18 -ம் விருத்தம் - அதிகாகளி

19 -ம் விருத்தம் - தரம்கிணி

20 -ம் விருத்தம் - சங்கரசரிதம்

21 -ம் விருத்தம் - எ. சுவரகிணி

22 -ம் விருத்தம் உபசர்ப்பிணி (ஊனசிலதகாகளி, 8–ம் விருத்தம்)

23 -ம் விருத்தம் மதனார்த்தா

24 -ம் விருத்தம் அதிகாகளி

வஞ்சிப்பாட்டு

வள்ளத்தைச் (படகு) செலுத்தும் பொழுது சோர்வடை-யாமல் இருப்பதற்காகவும், ‘வஞ்சி’ என்ற விளையாட்டை விளையாடும் பொழுது அதன் ரசனையைக் கூட்டுவதற்காகவும் ‘வஞ்சிப்பாட்டு’ பாடப்படுகிறது என்பது அனைவரும் தெரிந்த ஒன்றுதான். இங்கு, விருத்தமஞ்சரி, “‘மஞ்சரி’ எனும்

விருத்தத்திலும் வஞ்சிப்பாட்டு பயன்படுத்தப் படுகிறது'' என்று கூறிவிட்டு, 'ஆலுண்டிலயுண்டு' இது போன்ற பாடல் வரியையும் உதாரணமாகக் கூறியிருக்கிறது. 'விருத்த மஞ்சரி' குறிப்பிட்ட 'மஞ்சரி' எனும் விருத்தத்திலுள்ள பாடல்களை வஞ்சி இழுப்பவர்கள் பாடுவதுபோல், கீழ்க்கண்டவாறு இப்பாடலை அமைக்கலாம்.

''ஆ - - - லுண்டி / லா - - - யுண்டி
லு - - - -ஞ்ஞியு - - / ண்டே - - - - நல்லொ
ரா - - - - லுவா - - / த்தே - - வரே
த - - - - ம்புரா / நே - - - ''

இது போன்ற அமைப்பில், 'ஈனம்' (இசை) அமைத்து, இழுத்தும் வலித்தும், நீட்டியும் பாடுவதுண்டு. மேலும், 'வச்சுப்பாட்டு' என்றொரு பாடலும் அறியப்படக் கூடியதாகும். இது 'சிலதகாகளி' என்ற விருத்த அமைப்பைக் கொண்டதா-காத் தோன்றுகிறது. ஆனால், இதனைப் பாடும் முறையானது, கீழ்க்காணும் உதாரணப்பாடலின் அமைப்பு போல் காணப்-படும்.

''ஸ்ரீ - - மூல / ஜா - - தநாம்

ந - - ம்முடெ / த - ம்புரான்''

இது போன்ற அமைப்பின் அடிப்படையில் இசையோடு மிகவும் நீட்டிப் பாடப்படுகிறது.

''அம்பனுக்கும் ஏலேலம்

அம்ப நடி ஏலேலம்

அம்பனுக்கும் அம்பநெடி

ஏலேலம் ஏலேலம்''

''கறுத்த பெண்ணே நிந்நெ

காணாஞ்ஞு ஞாநொருநாள்

வருத்தப்பெட்டூ ஞாநொரு

வண்டாய் சமஞ்ஞிதெடி''

இது போன்ற வரிகள் வஞ்சிப்பாட்டு வகையைச் சார்ந்தவை-களாகும். விருத்த மஞ்சரி குறிப்பிட்ட 'நதோன்னதா' என்ற விருத்தம் இது போன்ற பாடல்களின் சாரத்தை அதிகமாகக் கொண்டிருக்கிறது.

'நதோன்னத'

'' கணம் திவியக்ஷரமெட்டெண்ண

மொந்நாம் பாதத்தில் மற்றதில்

கணமாறர, நில்க்கேணம்

ரண்டு மெட்டா மதக்ஷரே,

குருதன்னே யெழுத்தெல்லா -

மிசீலின் பேர் நதோன்னத ''

(முதலாம் அடியில் இரண்டு எழுத்துக்களால் ஆன சீர்கள் எட்டு, இரண்டாம் அடியில் ஆறரை சீர்கள் காணப்படும், இரண்டு அடிகளிலும் எட்டவது எழுத்திற்குப்பின் 'யதி' (நிறுத்தம்) அமைப்பு காணப்படும், அனைத்து எழுத்துக்களும் நெடிலாக இருக்கும். - என்பதுதான் இதன் இலக்கணம்).

பிரபலமான ‘குசேல விருத்தம்’ வஞ்சிப்பாட்டினுடைய முதல்வரியை உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இலக்கணப் பரிசோதனை

மேற் கூறப்பட்டுள்ள இலக்கணம் சரியாக அமைந்திருக்கின்றனவா? என்பதை ஒவ்வொரு பகுதிகளாக ஆராயலாம்.

1. **சீர் இரண்டு எழுத்து :-** ‘கெல்போ - டெல்லா - ஜன - ங்ஙள்க்கும்’ என்ற சீரமைப்பைச் சொல்லும்பொழுது மட்டுமே தெளிவாகக் காணப்படுகிறது.

2. **எட்டவது எழுத்தில் ‘யதி’ யமைப்பு :-** ‘முக்காலே-முண்டாணி’ என்ற வரிகளிலும் இந்த அமைப்பு காணப்படுகிறது.

‘நரகாரிக்கன் பதிறற / ண்டிந்நிப்புறத்து’

‘பண்டொரிக்கல் பாண்டவம / ஹிஷியுடெ’

‘தக்ஷதயுதம் துவரயும் தா / க்ஷிண்யவும்’

இதனை நுட்பமாக ஆராயும்பொழுது மேற்காணும் சில வரிகளைப்போன்று இலக்கணப் பிழைகள் இருப்பதைக் காணலாம்.

3. **ஆறரைச் சீர்:-** இரண்டாம் அடியில் ஆறரை அளவு எண்ணிக்கையுள்ள சீர்களே காணப்படும் என்ற விதிமுறையை ‘தாளம்’ அமைத்துப் பாடுபவர்கள் எற்றுக்கொள்வதில்லை. இரண்டு அடிகளிலும் காணப்படுகின்ற சீர்களின் எண்ணிக்கை சமநிலையில்தான் காணப்படுகிறது என்ற கருத்தைக் கொண்டிருப்பார்கள். இரண்டாம் அடியில் மூன்றெழுத்துக்களின்

குறைவு காணப்படுகிறது எனினும், 'நீட்டிச் சொல்லுதல்' என்ற முறையின் மூலம் குறைந்த அளவுகளை நிறைவு செய்யலாம்.

4. அனைத்தும் நெடிலெழுத்துக்கள்:- எழுத்து எண்ணிகையி-லான வடிவத்தை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் இந்த அமைப்பு முறை மிகவும் தவறானதாகக் காணப்படும். ஒப்பிடப்-படும்படியான நெடிலெழுத்துச் சீர்களான 'கெல்போடெல்லா - ' என்ற இதுபோன்ற வரிகளை ஆராயலாம்.

" கெல்போ / டெல்லா / ஜன / ங்ஙள்க்கும்

கேடு / தீர / த்தக்க / வண்ணம்

எப்போ / ழும / ந்ந நா / னவும்

செய்து / செஞ்செ / மே - - -"

'சந்தானகோபாலம்' எனும் ஓட்டன் துள்ளலிலுள்ள சில வரிகள் உதாரணமாகக் காட்டப்படுகின்றன.

1. " அறிவில்லாதெ ஞான் வல்லதும்

   பறஞ்ஞுபோயெந்நிரிக்கிலும்

   அறிவுள்ளொரு பவானுள்ளில்

   கருதி வய்க்கள்ளே ------

2. ஸஜ்ஜனவந்தி தனாயொ ----

   ரஜ்ஜனா நீ யெந்யே மற்றும்

   இஜ்ஜனத்திந்நாருமொரு

   சரணவுமில்லே?

3. புத்ரன்மாரொம்பதும் க்ஷிப்ரம்
சத்துபோய துக்கம் கொண்டு
இப்ரகாரம் துர்பாஷணம்
செய்து போயேன் ஞான்.''

இதில் மூன்றாவது பாடல் உண்மையிலேயே 'நதோன்னத' எனும் விருத்த வைகையைச் சாரும். இரண்டாம் பாடலில் இறுதியில் அமைந்த ' 'சரணவுமில்லே' என்ற வரியை 'சரண-மில்லே' என்று மாற்றிக் கூறினால் இதுவும் 'நதோன்னத' விருத்தமாகக் கொள்ளப்படுகிறது.

இதுபோன்று இனியும் 'நதோன்னத' கோத்திரத்தில் பல விருத்தங்களை அடையாளம் காணவிருக்கிறது. விருத்த மஞ்சரியில் கூறப்பட்டுள்ள விருத்தங்கள் குறித்த ஆய்வுக் கருத்துக்கள் இந்தளவில் முற்று பெறுகிறது.

இயல் - 1

இயல் - 1

மலையாள யாப்பியல் - ஆய்வுகள்

தமிழ் மொழியோடு ஒன்றிணைந்திருந்த மலையாள மொழியானது கி.பி.10-ம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழிலிருந்து பிரிந்து ‘மலையாளம்’ என்ற தனித்த மொழி அமைப்பிற்கானத் தகுதியைப் பெறத்தொடங்கியது(1). இந்நிலையில் மலையாள மொழியில் யாப்பிலக்கணங்களைப் பற்றியதான குறிப்பிடத்த-குந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவை இவ்வியலில் விளக்கிக் கூறப்படுகின்றன.

இவற்றில் கேரள கௌமுதி, விருத்த மஞ்சரி, விருத்த விச்சாரம், விருத்த சில்பம், மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ‘A History of Malayalam Metre’ போன்றன குறிப்பிடத் தகுந்த ஆய்வு நூல்களாக அமைகின்றன. 1904-ல் சாகித்ய சஹுகரன சங்கத்தால் வெளியிடப்பட்ட ஏ.ஆர்.இராஜராஜ வர்மாவின் ‘விருத்த மஞ்சரி’ என்ற நூல் மலையாள யாப்பிலக்கண நூல்களுக்கெல்லாம் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது(2). இந்நூலில் ஒன்பது இயல்கள் காணப்படுகின்றன. அதில் ‘‘பாஷா விருத்த ப்ரகரணம்’’ என்ற எட்டாவது இயலில் மட்டும் ‘கிளிப்பாட்டு’, ‘துள்ளல் பாட்டு’, ‘கிருஷ்ணகாதை’ மற்றும் ‘இருபத்துநாலு விருத்தம்’ போன்ற மலையாள விருத்தங்க-ளைப் பற்றிய கருத்துக்களும், பிற அனைத்து இயல்களிலும் சமஸ்கிருத விருத்தங்களைப் பற்றிய கருத்துக்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. விருத்த மஞ்சரியில் ‘‘பாஷா விருத்த ப்ரகரணம்’’ என்ற இயலைத் தவிர மீதமுள்ள அனைத்து இயல்களும் ‘விருத்த ரத்னாகரம்’, ‘விருத்த ரத்னாவலி’ என்ற

இரு சமஸ்கிருத யாப்பு நூல்களை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்டவை[3].

ஏறக்குறையத் தெளிவான முறையில் திரு.ஏ.ஆர். அவர்கள் சமஸ்கிருதம் மற்றும் மலையாள யாப்புக்களின் விதிமுறைகளை எடுத்துக்காட்டுகளுடன் கூறியிருப்பினும் இந்நூலில் அதிகமான குறைபாடுகள் காணப்படுகின்றன என்று பிற்கால ஆய்வறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்[4]. அவர்களில் திரு. குட்டிகிருஷ்ணமாரார், கே. கே. வாத்தியார் மற்றும் என்.வி. கிருஷ்ணவாரியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையாளத்தில் விருத்த மஞ்சரிக்குப் பிறகு உருவான ‘காந்த விருத்தம்’, ‘விருத்தசகாயி’, ‘ஸத்விருத்தமாலா’ போன்ற யாப்பிலக்கண நூல்களெல்லாம் மஞ்சரியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுடன் தொடர்புடையனவாகவே அமைந்திருக்-கின்றன என்று என்.வி.கிருஷ்ணவாரியார் குறிப்-பிட்டள்ளார். இது மலையாள யாப்பிலக்கணங்களில் இன்றிய-மையாத நூலாக அமைகிறது. இவ்விருத்த மஞ்சரிக்கு முன்பு புதுப்பள்ளி பி. கெ. பணிக்கரின் ‘விருத்த ரத்னாகரம்’ கொச்சுண்ணி தம்புரானுடைய ‘காந்த விருத்தம்’ போன்ற நூல்கள் இருந்திருக்கின்றன[5]. இவை இரண்டும் சமஸ்கிருத விருத்த சாஸ்திரங்களுடைய தழுவலாகும்.

லீலாதிலகம்:- 14-ம் நூற்றாண்டு மலையாளத்தின் முதல் இலக்கணமான இந்நூலில் 164 படலங்கள் காணப்படுகின்றன. இதில் ‘‘கலித்துறை’’ என்ற இயலில் ஆறுவகையான கலி-விருத்தங்களும், மீதமுள்ள இயல்களில் ஆசிரிய விருத்தங்-களும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்று பேரா. எஸ். சுப்பிரமணியன் கூறுகிறார். எனவே, தமிழின் தாக்கம்

இந்நூலில் முழுமையாகக் காணப்படுவதால் தமிழ் மொழியின் யாப்பமைவுகளே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

முதன் முதலில் மலையாள விருத்தங்கள் குறித்த கருத்துக்களைத் தொகுத்து, உதாரணங்களுடன் எடுத்துக் கூறிய பெருமை 1878–ல் பூர்ணா வெளியீடாக வெளிவந்த வித்துவான் டி.எம்.கோவுண்ணி நெடுங்காடியினுடைய ‘கேரள-கௌமுதி’ என்ற நூலையேச் சாரும்(6). இந்நூல் விருத்த மஞ்சரியைவிட காலத்தால் முந்தியதாக இருப்பினும் மலையாள விருத்தங்களைப் பற்றியதான கருத்துக்கள் போதுமான அளவில் கூறப்படாததால் மலையாள யாப்பி-லக்கண நூல்களுக்கெல்லாம் முதன்மையாகக் கொள்ளப் பெறவில்லை. இருப்பினும் ‘‘விருத்த மஞ்சரியின் ‘பாஷா விருத்த ப்ரகரணம்’ என்ற இயலிலுள்ள அனைத்து யாப்புச் செய்திகளும் கேரள கௌமுதியின் வழி வந்தவைகள்தான்’’ என்று திரு.கே.கே.வாத்தியார் விருத்த விச்சாரம் என்ற தம் நூலின் முகவுரையில் கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்த-குந்தது(7).

இந்நூலிலுள்ள ‘விருத்த லோகம்’ என்ற இயலில் மலையாளம் மற்றும் சமஸ்கிருத விருத்தங்களும், ‘தமிழ் முறகள்’ என்ற தலைப்பில் தமிழ் யாப்புக்கள் குறித்ததானக் கருத்துக்களும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வி-யலில் கூறியிருக்கும் சமஸ்கிருத விருத்தங்கள் ‘விருத்த ரத்னாகரா’ என்ற நூலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று என்.வி.கிருஷ்ணவாரியார் கருத்து தெரிவித்திருக்கிறார். கோவுண்ணி நெடுங்காடி, விருத்தங்களை ‘மாத்ரா விருத்தம்’, ‘வர்ண விருத்தம்’ என இரண்டு வகைகளாகப் பிரித்து

சீர்களில் (கணங்கள்) ‘லகு’(குறில்), ‘குரு’(நெடில்) என்பவை-களைப் பயன்படுத்தி சில விருத்தங்களை மட்டும் எடுத்துக் கூறியிருக்கிறார். மேலும், இந்நூலில் தமிழ் யாப்புக்களின் பாவகைகள், யாப்பியல் உருப்புக்கள், அசை குறித்தக் கருத்துக்கள் மற்றும் ‘அக்ஷரலோகம்’ என்ற தலைப்பில் தமிழ் எழுத்துக்கள் குறித்ததான கருத்துக்களும் ஒருசில சூத்திரங்களின் வழி அறிமுக நோக்கிலேயே கூறப்பட்டிருக்-கின்றன. அவை பின்வருமாறு விளக்கிக் கூறப்படுகின்றன.

பாவகை குறித்த கருத்துக்கள்

289-வது சூத்திரத்தில் தமிழ் யாப்புக்களின் பாவகைகள் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் உரை விளக்கத்தில், ‘‘தமிழ் கவிதை இலக்கணத்தின்படி நான்கு துறை காணப்படு-கிறது. உ-ம் ‘வெம்பா’, ‘கலிப்பா’, ‘ஆசிரியப்பா’, ‘வஞ்சிப்பா’. இவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ஏராளமான விருத்தங்கள் உண்டு. இருபத்தியாறு ‘சந்தஸ்’களுக்கு ஒரு விதத்தில் இவை ஒத்து போகின்றன.’’ என்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அவை எவ்விதத்தில் ஒத்துப்-போகின்றன என்பதற்கான சான்றுகள் தரப்படவில்லை. வேதங்-களில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள இருபத்தாறு ‘சந்தஸ்’-களும் ‘மாத்ராக்ரமம்’, ‘வர்ணக்ரமம்’, ‘மாத்ராவர்ணக்ரமம்’ என மூன்று விதங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், இந்நூல் 274-ம் சூத்திரத்தில் கூறியிருக்கிறது[(8)]. இங்கு ‘‘சந்தஸ்’’ என்பது வடமொழி யாப்புக்களைக் குறிப்பதாகும். மேலும் ‘‘சந்தஸ்’’ என்பதற்கு வடமொழியில் பல அர்த்தங்கள் இருப்பதாக முனைவர். ம.பிரபாகரன் அவர்கள் ‘‘வீரசோழிய

யாப்பு'' என்னும் தம் நூலில் அமைந்த 'வடமொழி யாப்பியல்' பகுதியில் விரிவாகக் கூறியிருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தகுந்தது.

யாப்பியல் உறுப்புக்கள் குறித்த கருத்துக்கள்

தமிழில் எழுத்து முதல் தொடை ஈறாக உள்ள ஆறு யாப்பியல் உறுப்புக்களை 290-வது சூத்திரத்திலும் அவை ஒவ்வொன்றிற்கும் நிகரான, மற்றும் மலையாளத்தில் பயன்-பாட்டிலுள்ள யாப்புக் கலைச்சொற்களை 291-வது சூத்திரத்தி-லும் கூறியிருக்கிறார். அவை பின்வருமாறு,

தமிழ்	-	மலையாளம்
எழுத்து	-	வர்ணம்
அசை	-	மாத்ர (மாத்திரை)
சீர்	-	கணம்
தளை	-	யதி
அடி	-	பாதம்
தொடை	-	---------

இச்சூத்திரத்திற்கான உரை விளக்கத்தில் 'வர்ணம்' முதல் 'பாதம்' வரையிலான சொற்கள் அனைத்தும், மலையாள மொழி யாப்புக்களின் கலைச் சொற்களென்றோ, வடமொழி யாப்புக்களின் கலைச் சொற்களென்றோ வெளிப்படையான குறிப்புகள் எதுவும் தரப்படவில்லை. ஆனால், இவை அனைத்தும் வடமொழிச் சொற்களாகும். எனவே, மலையாள

யாப்பிலக்கணப் பயன்பாட்டிலுள்ள இச்சொற்களை மலையாள மொழி யாப்பிலக்கணக் கலைச்சொற்களாகக் கருதவியலாது.

சமஸ்கிருத விருத்தங்களில் 'யதி' (Metrical Pause) என்பது முக்கியமானது. வர்ண விருத்தத்தின் தனிச்சிறப்பாக ஒரு அடியின் நடுவில் (In the Middle of Line) 'யதி' என்கிற அமைப்பு காணப்படுகிறது[10]. அதாவது ஒரு அடியின் நடுவில் நிறுத்திச் சொல்லுதலால் இதனைத் தமிழில் 'நிறுத்தம்' (Pause) எனப் பொருள் கொள்ளலாம். இது செய்யுளை 'நினைவுபடுத்தி ஒப்பித்தல்' (Recitation) - என்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் வேத சரணங்களில் (Vedic Stanzas), 'த்ரிஸ்துப்' (Tristubh) மற்றும் 'ஜகதி' (Jagati) வரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழில் 'அசை' (Metrical Syllable) என்பது எழுத்துக்கள் சேர்ந்து வருவதும், 'மாத்திரை'(Quantity) என்பது அவ்வெழுத்-துக்களின் அளவைக் குறிப்பதாகவுமாகிறது. இந்நிலையில் அசையும், மாத்திரையும் வெவ்வேறு பொருளில் வழங்கப்-படுகின்றன. ஆனால் 'அசை' என்றால் 'மாத்திரை' என்று-மட்டுமே பொருள் கொள்ளும் விதத்தில் கேரள கௌமுதியில் குறிப்பிட்டிருப்பது மறுக்கப்படுவதும், ஆய்விற்குறியதாகவும் அமைகிறது. இதனையே ஏ.ஆர்.இராஜராஜ வர்மா 'விருத்த மஞ்சரி' (பக்-76) என்னும் தம் நூலில் சமஸ்கிருதத்திலுள்ள 'மாத்திரை' என்ற சொல் தமிழில் 'அசை' என பொருள் கொள்ளப்படினும் இவை இரண்டும் வெவ்வேறு பொருட்தன்-மைகளைக் கொண்டவை என்று கூறியுள்ளார்.

அடி குறித்ததான சூத்திரத்தில் (சூத்-293) அடிவகை-களைக் கூறிவிட்டு, "அவைகளுக்கு இங்கு உதாரணம்

கொடுப்பது பயனற்றது'' என்றும் நூலாசிரியர் தன் உரை விளக்கத்தில் கூறியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

'தொடை' என்ற சொல்லிற்கு நிகரான சொல்லைக் குறிப்பிடாமல் ''ஈரடி முதல் மேலெல்லாம்'' என்று மட்டுமே உரை விளக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'அசை' குறித்தக் கருத்துக்கள்

292-வது சூத்திரத்தில் 'நேர்', 'நிரை' என இருவகை அசைகளைக் குறிப்பிட்டு, நேரசையை 'லகு' என்றும் நிரையசையை 'குரு' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது தவறான கருத்தாகும். காரணம், மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டில் மட்டுமே குறிலெழுத்துக்களைக் குறிக்க 'லகு' என்றும் நெடிலெழுத்துக்களைக் குறிக்க 'குரு' என்றும் பொருள் கொள்ளப்கடுகிறது.

கோவுண்ணி கருத்துக்கள் ஏற்பும், மறுப்பும்

"மலையாளத்திலுள்ள சில விருத்தங்கள் தமிழ் யாப்புக்களோடு ஒத்துப்போகின்றன" என்ற இந்நூலாசிரியரின் கருத்திற்கு மலையாள அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிலர் உடன்படவும் செய்திருக்கின்றனர். அவை பின்வருமாறு,

மலையாளத்தில் துஞ்சனின் 'கிளிப்பாட்டுக்கள்' தமிழில் ஈரடிப்பாடல்களான குறளடியோடும், இருபத்தி நான்கு விருத்தங்களில் சில விருத்தங்கள் கலிப்பாக்களோடும் ஒரு விதத்தில் ஒத்துப்போகின்றன என்று கூறுவதோடு மட்டுமின்றி அதற்கான உதாரணப் பாடல்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

பைங்கிளிக் கண்ணியில் ‘அகமேவு……’, பராபரக்கண்ணியில் ‘சீராறு தைவதிருவருளாம்’, கலிப்பாவில் ‘பொன்னமாதரை’ எனத் தொடங்கும் பாடல்கள் உதாரணமாகச் சுட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாகச் சுட்டிய கலிப்பாடலானது இருபத்தி நான்கு விருத்தங்களில் ஒன்றான ‘சூர்யே வம்சே’ என்ற விருத்தத்திற்குப் பொருத்தமானது எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. கே. கே. வாத்தியார் ‘விருத்த விச்சாரம்’ எனும் தம் நூலில் ‘‘மலையாளம் மற்றும் தமிழ்மொழி யாப்புகளுக்கிடையே குறிப்பிடும்படியான ஒற்றுமைக் கூறுகள் ஒன்றுமில்லை’’ என கோவுண்ணியின் கருத்திற்கு மறுப்பு தெரிவிப்பது மட்டுமின்றி Dr. எஸ். கே. நாயர் ‘‘தெலுங்கினுடனோ, கன்னடத்துடனோ, மற்றும் தமிழினுடனோ மலையாளத்தை ஒப்பீடு செய்வோமேயானால் யாப்பிலக்கணத்தைப் பொருத்தளவில் குறிப்பிடத்தகுந்த ஒற்றுமைகள் ஒன்றுமில்லை’’ என ‘பாஷா விருத்தமஞ்சரி’ (ஜயகேரளம் ஆண்டு-பதிப்பு) என்ற நூலின் முன்னரையில் கூறியிருக்கும் கருத்துக்களையும் குறிப்பிட்டிருக்கிறார்[(11)].

தமிழ், தெலுங்கு, கன்னடம், மற்றும் மலையாளம் போன்ற மொழிகள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவைகளாகும். எனவே, Dr. எஸ். கே. நாயர் அவர்கள் யாப்பிலக்கணத்தைப் பொருத்தளவில் இவைகளுக்கிடையே குறிப்பிடத்தகுந்த ஒற்றுமைகள் ஒன்றுமில்லை என்று குறிப்பிட்டிருப்பது மறுக்கத்தக்கதாகும். மேலும், ஏ.ஆர்.இராஜராஜ வர்மா, குட்டிக்கிருஷ்ணமாரார், ஆர்.நாராயண பனிக்கர், உள்ளூர் பரமேஷ்வர ஐயர், இளங்குலம், மற்றும் என்.வி. கிருஷ்ண-

வாரியார் போன்றோர்கள் தமிழ், மலையாள மொழிகளுக்கிடையே ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்று கூறியிருக்கும் கருத்துக்களைப் பேராசிரியர். எஸ். சுப்பிரமணியன் குறிப்பிட்டிருக்கிறார்[12].

பொதுவாக மலையாள இலக்கணத்தைப் பொருத்தளவில் கி.பி.14-ம் நூற்றாண்டில் வடமொழியில் எழுதப்பட்ட 'லீலாதிலகம்' மலையாளத்தின் முதல் இலக்கண நூலாக அமைகிறது. இந்நூல் வடமொழி, தமிழ் மற்றும் மலையாளம் போன்ற மொழிக்கலப்பில் உருவான மணிப்பிரவாள நடையில் அமைந்த 'பாட்டு' இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுகிறது. இப்பாடல்கள் 'எதுகை', 'மோனை' என்ற யாப்பு அமைப்பைக் கொண்டிருப்பதால் தமிழ் யாப்புக்களோடு நெருங்கிய தொடர்புடையனவாக விளங்குகின்றன. லீலாதிலகம் கி.பி. 14-ம் நூற்றாண்டைச் சார்ந்திருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் துடக்கத்தில்தான் அதாவது கி.பி. 1909, 10-ல் அப்பன் தம்புரான் அவர்களால் 'மங்களோதயம்' என்ற பத்திரிக்கையில் அதன் முதல் பகுதியானது தொடராக முதன் முதலில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் பிறகே இந்நூலை முழுமையான மலையாள மொழிபெயர்ப்புடன் ஆத்தூர் பிஷாரடி என்பவர் 1917–ல் வெளியிட்டிருக்கிறார்.

என்.வி.கிருஷ்ணவாரியார் 1947–ல் மெட்ராஸ் பல்கலைக்கழக மலையாளத்துறையில் 'A Study of Malayalam Metre' (மலையாள விருத்தங்கள் ஓர் ஆய்வு) என்ற தலைப்பில் தனது முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டிருக்கிறார். இந்த ஆய்வின் தொடர்ச்சியாக 1977–ல் ஆங்கிலத்தில் அவர் எழுதிய 'A History of Malayalam Metre' (மலையாள யாப்பு வரலாறு) என்பது மலையாள யாப்புக்களின் வரலாற்றைக்

கூறும் ஒரு சிறந்த ஆய்வு நூலாக அமைகிறது. திருவனந்தபுரம், திராவிட மொழியியல் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட இந்நூல் மலையாள யாப்புக்களின் வரலாற்றை ஆய்வதோடு திராவிட மொழிகளுக்கிடையேயான ஒப்பீட்டாய்வையும், குறிப்பாக சமஸ்கிருதம், மற்றும் தமிழ் மொழிகளிலுள்ள யாப்புகளுக்கும், மலையாள யாப்புகளுக்கு-மிடையே காணப்படும் யாப்புக் கூறுகளை விவரிக்கும் முறையில் ஒப்பாய்வையும் மேற்கொண்டிருக்கிறது. பொதுவாக மலையாள விருத்தங்கள் 'தாள சங்கீதங்களை' அடிப்படை-யாகக் கொண்டவைகள் என்றும் குறிப்பிடுகிறார்.

'விருத்த சில்பம்' திரு.குட்டிகிருஷ்ணமாராரால் எழுதப்-பட்டு 1952–ல் மாரார் சாஹித்ய ப்ரகாசம் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. விருத்த மஞ்சரியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களோடு தொடர்புடைய யாப்பு நூல்களில் இதுவும் ஒன்றாக அமைகிறது. இந்நூலில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாம் பகுதியில் மூன்று அத்தியாயங்களும் (இயல்கள்) இரண்டாம் பகுதியில் நான்கு அத்தியாயங்களும் உள்ளன. முதல் பகுதியில் 'சமஸ்கிருத விருத்தங்கள்' பற்றிய கருத்துக்களும், இரண்டாம் பகுதியில் மலையாள மொழி யாப்பிலக்கணங்கள் பற்றிய கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன. மாரார் தன்னுடைய நூலிற்கு 'விருத்த மஞ்சரி பாஸ்யம் (உரை)' என்று பெயரிட்டுள்ளார். எனவே, இதன் மூலம் விருத்த மஞ்சரியில் கூறப்பட்டிருக்கின்ற யாப்பு குறித்த கருத்துக்களைத் திறனாய்வு நோக்குடனே அணுகியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. இராஜராஜ வர்மா 'பாஷா விருத்தம்' பற்றி குறிப்பிடாத பல விஷயங்களையும் மாரார் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு.கே.கே.வாத்தியார் அவர்கள் 1967–ல் ‘விருத்த விச்சாரம்’ என்ற நூலில் மலையாள விருத்தங்களைக் குறித்து, அதாவது ‘விருத்த மஞ்சரி’, ‘கேரள கௌமுதி’ ஆகிய யாப்பிலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு விமர்சன நோக்கில் தம் ஆய்வுக் கருத்துக்களை விளக்கியிருக்கிறார். இந்நூல் திரு. A. R. இராஜராஜ வர்மா எழதிய ‘விருத்த மஞ்சரி’ என்னும் யாப்பிலக்கண நூலில் அமைந்துள்ள பத்து இயல்களில் ‘பாஷா விருத்தப் ப்ரகரணம்’ என்ற எட்டாவது இயலிற்கு உரை எழுதும் முயற்சியில் உருவானதாகும் எனவேதான், கே. கே. வாத்தியார் தனது நூலின் முதற்பகுதியில், ‘‘விருத்த மஞ்சரியிலெ பாஷா விருத்தத்தினு ஒரு பாஷியம்’’ (A commentary on Bhasha Vritham) என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது இதன் பொருள், ‘விருத்த மஞ்சரியிலுள்ள மலையாளமொழி யாப்பிற்கு ஒரு உரை அல்லது விளக்கம்’ என்பதாகும். மேலும், இந்நூல் பற்றியதான கருத்துக்கள் நூல் அறிமுகத்தில் விவரித்து கூறப்பட்டிருக்கின்றன.

Dr. T. பாஸ்கரன் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட (1973, Kerala Historical Study) ‘Malayalam Poetics’ (மலையாளக் கவிதைகள்) என்ற நூலில் மலையாளக் கவிதைகளையும், குறிப்பாகக் ‘கிருஷ்ண காதை’யை முக்கியப் படுத்தியும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் இந்நூலின் முதல் பகுதியில் மலையாளக் கவிதைகளும் மற்றும் அவற்றின் கொள்கைகளும் கூறப்பட்டிருப்பதோடு மலையாளக் கவிதையியலில் மேற்கொண்டிருக்கும் ஆய்வுகளைக் குறித்தும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் பகுதியில் கிருஷ்ணகாதையைக் குறித்ததான கருத்துக்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அறிஞர் கால்டுவெல் திராவிட மொழி இலக்கணங்களுக்கிடையேயான ஒப்பீட்டாய்விற்கு முதன்முதலில் வித்திட்டவராவார். இந்த வகையில் திராவிடமொழி யாப்பிலக்கணங்களுக்கிடையேயான ஒப்பீட்டாய்வை மேற்கொண்டதில் பேரா. எஸ். சுப்பிரமணியன் மற்றும் பேரா.அப்பன் தம்புரான் போன்றோர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். 1977 – ல் பேரா.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் “The Commonness in the Metre of the Dravidian Languages” என்ற தம் ஆங்கில நூலில் திராவிட மொழிகளுக்கிடையேயான யாப்பியல் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டிருப்பது சிறப்பிற்குரியதும், குறிப்பிடத் தகுந்ததுமாகும். இவ்வகையில், தமிழ் மற்றும் மலையாள மொழிகளுக்கிடையேயான யாப்பியல் ஒப்பீட்டாய்வுகள் மிகக் குறைவாகவே வெளிவந்திருக்கின்றன.

தொகுப்புரை

கி. பி. 19-ம் நூற்றாண்டில்தான் மலையாள யாப்பியல் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மலையாளத்தின் முதல் இலக்கண நூலாகக் கருதப்படும் ‘லீலாதிலகம்’ வடமொழியில்தான் எழுதப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடப்படுவதாகும். ‘கேரள கௌமுதி’ நூலில்தான் மலையாள யாப்புக்கருத்துக்கள் முதன் முதலில் கூறப்பட்டிருக்கின்றன. எனினும் மலையாள யாப்பு நூல்களுக்கெல்லாம் ‘விருத்த மஞ்சரி’ முதன்மையாக அமைகிறது. இதில் அதிகமான குறைபாடுகள் காணப்படுவதாக அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ள செய்தி குறிப்பிடத்தகுந்தது. மலையாள

மொழி யாப்பியலைப் பொருத்தளவில் மஞ்சரியைப் பின்பற்றியே பிற்கால யாப்பியல் நூல்களெல்லாம் வெளிவந்தி-ருக்கின்றன. 'பாட்டு' என்ற அமைப்புகளே மலையாளத்தில் காணப்படுகின்றன. சமஸ்கிருத யாப்புக்களைப் பற்றியும் மலையாளத்தில் கூறப்பட்டிருக்கின்றன. மலையாள விருத்-தங்கள் குறித்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. லீலாதில-கத்தில், தமிழில் காணப்படும் 'கலிவிருத்தம்' மற்றும் 'ஆசிரிய விருத்தங்கள்' பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. விருத்த மஞ்சரியிலுள்ள மலையாள யாப்பியல் செய்திகள், பிற்கால அறிஞர்களால் விமர்சன நோக்கில் ஆராயப்பட்டி-ருக்கிறது. கேரள கௌமுதியில், தமிழ் யாப்பியல் பற்றிய கருத்துக்கள் அறிமுக நோக்கிலேயே குறிப்பிடப்பட்டிருக்-கின்றன. தமிழ்-மலையாள யாப்பியல் பற்றியதான ஒப்பியல் ஆய்வும் நடைபெற்றிருக்கிறது.

அடிக்குறிப்பு

1. Subramaniyan S., The Commonness in the metre of the Dravidian Language, Page 140
2. இராஜராஜ வர்மா எ. ஆர், விருத்த மஞ்சரி, பக். 8
3. மேலது, பக். 9
4. வாத்தியார் கே. கே. விருத்த விச்சாரம், பக் 11
5. இராஜராஜ வர்மா எ. ஆர்., விருத்த மஞ்சரி, பக். 8
6. வாத்தியார் கே. கே., விருத்த விச்சாரம், பக் 15
7. மேலது, பக். 15
8. கோவுண்ணி நெடுங்காடி, கேரள கௌமுதி, பக். 141
9. பிரபாகரன் ம., முனைவர், வீரசோழிய யாப்பு, பக். 64
10. Krishna Warrior N. V., A History of Malayalam Metre, Page 4
11. வாத்தியார் கே. கே., விருத்த விச்சாரம், பக். 22
12. Subramaniyan S., The commonness in the metre of the Dravidian Language, Page 398

இயல் - 2

இயல்-2

தமிழ் யாப்பியல் ஆய்வுகள்

இவ்வியலில் தமிழ் யாப்பியல் நூல்களின் வளர்ச்சி நிலை, இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்துள்ள சில குறிப்பிடத்தகுந்த ஆய்வுகள் பற்றியதான கருத்துக்களைச் சுருக்கமாக விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

மரபு இலக்கணங்களில் ஒன்றான யாப்பிலக்கணமானது. செய்யுள் இயற்றுவதற்கு முதன்மையாக அமைகிறது. ஓசை வடிவமாக நிலவி வந்த வாய்மொழிப் பாடல்களுக்கெல்லாம், மொழி வளர்ச்சி அடைந்தபின் ‘வரையறைகள்’ வகுக்கப்பட்டன. ‘பாட்டு’ மரபானது காலந்தோறும் பல மாற்றங்களைப் பெற்று வந்திருக்கின்றது. கி.மு.3-ம் நூற்றாண்டைச் சார்ந்த ‘தொல்க்-காப்பியம்’ தமிழில் அனைத்து இலக்கண நூல்களுக்கெல்லாம் முதன்மையாக விளங்குகிறது. அதில் யாப்பிலக்கணமும் ஒன்றாகத் திகழ்கிறது.

தொல்காப்பியத்திற்கு முன்பு யாப்பிலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன என்பதை ‘யாப்பென மொழிப யாப்பறி புலவர்’ (தொல். செய். நூற். 77). ‘யாப்பின் வழியது என்மனார் புலவர்’ (தொல். செய். நூல். 78)[1] போன்ற தொல்காப்பியம் செய்யுளியலில் கூறப்பட்டிருக்கின்ற நூற்பாக்களின் மூலம் அறிய முடிகிறது. எனினும் அவை, கிடைக்கப் பெறாமையால், தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டே பிற்கால யாப்பிலக்கண நூல்கள் தோன்றியிருக்கின்றன. தொல்காப்பியம் யாப்பிலக்கணத்தைத் தனி இயலாகக் கூறாமல் செய்யுளி-

யலில் குறிப்பிட்டிருக்கிறது. தொல்காப்பியத்தை அடியொற்றி கி. பி. 6-ம் நூற்றாண்டுகளில், சங்க யாப்பு, காக்கைப்பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம், மயேச்சுரர் யாப்பு, அவிநயம், பல்காயம் போன்ற குறிப்பிடத்தகுந்த யாப்பிலக்கண நூல்கள் தோன்றியிருக்கின்றன.

பழமையான யாப்பு நூல்களுக்குப் பிறகு கி.பி.10-ம் நூற்றாண்டில்தான் தனித்த யாப்பு நூல்கள் வெளிவரத் தொடங்கின. அவற்றுள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்ற இரு நூல்களும் குறிப்பிடத்தகுந்தவை. யாப்பருங்கல விருத்தியுரையில், யாப்பருங்கலத்திற்குப் புறநடையாக அமைந்ததுதான் 'யாப்பருங்கலம்' என்ற கருத்து நிலவுகிறது. இதனைத் தொடர்ந்து கி.பி.12-ம் நூற்றாண்டில் தமிழ் மற்றும் வடமொழி யாப்புக்களைக் கூறும் வகையில் தமிழின் முதல் ஐந்திலக்கண நூலான வீரசோழியம் உருவானது. இங்ஙனம் ஐந்திலக்கணமாக வளர்ச்சியடைந்த தமிழ் இலக்கணத்தில் 'வண்ணம்' என்ற இலக்கண வகையைச் சேர்த்ததின் காரணமாகத் தண்டபானி சுவாமிகளால் அறுவகை இலக்கணம் கி. பி. 19-ம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

தமிழ் முந்து நூல்களில் யாப்பியல் கருத்துக்கள்

தொல்காப்பியம் பிற இலக்கணங்களைப் போன்று யாப்பிலக்கணத்திற்கும் முதன்மையாக அமைவதால் அதில் கூறப்பட்டிருக்கும் யாப்பு பற்றிய ஒரு சில கருத்துக்கள் இங்கு விளக்கப்படுகின்றன. செய்யுள் உறுப்புக்கள் முப்பத்து நான்கு எண்ணிக்கை பெறும் என்று தொல்காப்பியர் அதனை வரையறுக்கிறார். அது கீழ்க்கண்டவாறு அமைகிறது.

"மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ

யாத்த சீரேஅடி, யாப்பு, எனாஅ-

....

வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"(2)

தொல்காப்பியர் எழுத்து முதலாக, அசை, சீர், அடி என ஈட்டப்பெற்ற தான் குறித்த பொருளை முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு என்று கூறுகிறார். இதனை,

"எழுத்து முதலா ஈண்டிய அடியில்,

குறித்த பொருளை முடிய நாட்டல்,

யாப்பென மொழிப யாப்பறி புலவர்(3)

போன்ற நூற்பா வரிகளால் உணர்ந்து கொள்ள முடியும்.

மேலும் யாப்பின் வகைகளாக பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் போன்ற ஏழு கூறுகளைக் குறிப்பிடுகின்றார்.

இத்தொல்காப்பியத்தை அடியொற்றி கி.பி. 6-ம் நூற்றாண்டுகளில், சங்கயாப்பு, காக்கைப்பாடினியம், சிறுகாக்-கைப் பாடினியம், மயேச்சுரர் யாப்பு, அவிநயம் மற்றும் பல்காயம் போன்ற குறிப்பிடத்தகுந்த யாப்பிலக்கண நூல்கள் தோன்றியிருக்கின்றன. எனினும், அவை காலத்தால் அழிந்து-போன நூல்களாகக் கருதப்படுகின்றன. இவற்றைக் குறித்த கருத்துக்களைப் பின் வந்த யாப்பிலக்கண உரைகள் மூலமே அறிய முடிகின்றன.

இதில் காக்கைப்பாடினியம் என்ற யாப்பிலக்கண நூல் பற்றிய குறிப்பு தொல்காப்பிய உரைகளிலும், நன்னூல் மயிலைநாதர் உரையிலும், களவியல் உரையிலும், வீரசோழிய உரையிலும் உள்ளன.[(4)] மேலும் யாப்பருங்கலக் காரிகை உரையிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும், காக்கை பாடினியாரின் நூற்பாக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.[(5)]

‘காக்கைப் பாடினியார் முதலாகிய தொல்லாசிரியர்’, ‘காக்கைப்பாடினியார் முதலிய மாபெரும் புலவர்’, ‘காக்கை பாடினியார் முதலாகிய மாக்கவிப்புலவர்’ எனப் பலவாறாக யாப்பருங்கல விருத்தியும் சிறப்பித்துக் கூறுகிறது.

‘சங்க யாப்பு’ எனும் பெயர் கொண்ட யாப்பு இலக்கண நூல் இருந்தது என்பதை யாப்பருங்கல விருத்தி உரையினால் அறியலாம். யாப்பருங்கலம் (அடியோத்து 28-ஆம் நூற்பா) விருத்தி. உரையாசிரியர் பாவினங்களுக்குச் சில செய்யுள்-களை உதாரணம் காட்டி, பிறவும் சங்கயாப்பில் கண்டுகொள்க என்று எழுதுகிறார். ஆனால், இந்நூலை இயற்றிய நூலாசிரியர் பெயர் மற்றும் இந்நூல் வெளிவந்த காலம் இது போன்றவற்றிற்கான தெளிவுகள் எதுவுமில்லை.[(6)] மேலும் மயிலை சீனிவேங்கடசாமி எழுதிய ‘மறைந்து போனத் தமிழ் நூல்கள்’ என்ற நூலின் மூலம், சங்கயாப்பில் இருபத்து நான்கு நூற்பாக்கள் இருந்ததாக அறிய முடிகிறது.

‘சிறுகாக்கைப்பாடினியம்’ என்ற இலக்கண நூலாசிரியர் சிறுகாக்கைப்பாடினியார் ஆவார். முதல் காக்கைப்பாடினி-யாருக்குப் பிறகாலத்தில் வாழ்ந்தவராதலால் சிறுகாக்கைப்-பாடினியார் என அழைக்கப்பட்டார். அதுமட்டுமன்று, யாப்ப-

ருங்கல விருத்தியுரையில், முதல் காக்கைப்பாடினியார் நூற்பா-விற்குப் பின்னரே சிறுகாக்கைப்பாடினியாரின் நூற்பா மேற்கோ-ளாகக் காட்டப்பட்டிருக்கிறது.[7] இச்சிறுகாக்கைப் பாடினியார் பாவினங்களைத் தாழிசை, துறை, விருத்தம் என்ற வகைப்-பாட்டில் அமைத்திருக்கிறார். இந்த வகை முறையைத் தான் அமிர்தசாகரர் பின்பற்றியிருக்கிறார் என்பதை யாப்பருங்கல விருத்தியுரையின் மூலம் அறியலாம்.[8]

தனித்த யாப்பு நூல்கள்

கி. பி. 10-ம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையும் தனித்த யாப்பு நூல்களாக வெளிவந்தவை. இந்த யாப்பருங்கலம் காக்கைப்பாடினியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாகியிருக்கிறது என்பதை யாப்பருங்கல விருத்தி உரையின் மூலம் அறியலாம் என இரா. இளங்குமரன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[9] யாப்பிலக்க-ணத்திற்கு முதல் பெரிய நூலாக இது அமைகிறது. யாப்பாகிய செய்யுளுக்கு அணிகலன் போன்று அமைவது யாப்பருங்கலம். யாப்பாகிய கடலைக் கடக்க அமைந்த அரிய மரக்கலம் யாப்பருங்கலம் என்று இருநிலைகளில் இதனைப் பொருள் கொள்ளலாம்.

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களை உடையது. உறுப்பியலில், எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை கூறப்படுகின்றன. செய்யுளியலில், ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நால்வகைப் பாக்கள் குறித்தும் அவற்றின் இனங்கள் குறித்தும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒழிபியலில் மூன்று நூற்பாக்கள் மட்டுமே உள்ளன. இதற்கு இரண்டுவகை

உரைகள் காணப்படுகின்றன. அவைகளில் ஒன்று காண்டிகை உரை, மற்றொன்று விருத்தி உரையாகும். காண்டிகையுரை என்பது நூற்பாக்களைச் சுருக்கமாக விளக்கிச் சொல்வது. விருத்தி உரை என்பது நூற்பாக்களை விரிவாக விளக்கிச் சொல்வது எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

யாப்பருங்கலம் 'யாப்பு' என்பதற்கான வரையறையை, தொல்காப்பியம் கூறும் வரையறையிலிருந்து மாற்றிக் கூறியிருக்கிறது. அது பின்வருமாறு -

"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே"[10]

என்று குறிப்பிட்டிருக்கிறது. இதன் மூலம் தொல்காப்பிய யாப்பியல் கோட்பாடும், யாப்பருங்கலத்தில் கூறப்பட்டிருக்கும் யாப்பியல் கோட்பாடும் சற்று மாறுதலடைந்து காணப்படுகிறது என உணர முடிகிறது.

யாப்பருங்கலப் பதிப்புச் செய்தி

யாப்பருங்கலத்திற்கு இதுவரை வெளிவந்த முற்பதிப்புக்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.[11]

மூலம் மட்டும் கொண்ட பதிப்பு முதலிலும், பின்னர் விருத்தியுரையுடன்கூடிய பதிப்புகளும் வெளிவந்துள்ளன. மூலப்பதிப்பை நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரும், விருத்தியுரையுடன் கூடிய பதிப்புக்களைப் பாவனந்தம் பிள்ளை, மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை, இரா. இளங்குமரன் ஆகியோரும் பதிப்பித்துள்ளனர்.

1. யாப்பருங்கல மூலம், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் - பதிப்பு, இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம், சென்னை, 1864.

2. யாப்பருங்கல மூலம் (பழைய விருத்தியுரையுடன்), இராவ் பகதூர் ச. பவானந்தம் பிள்ளை - பதிப்பு, பகுதி-1, சென்னை, 1916, பகுதி-2, சென்னை, 1917.

3. யாப்பருங்கல மூலம் (பழைய விருத்தியுரையுடன்), மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை பதிப்பு, அரசுக் கீழ்த்தி-சைச்சுவடி நூலக வெளியீடு, சென்னை, 1960

4. யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்), புலவர் இரா. இளங்குமரன் பதிப்பு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1976.

5. யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்), மே. வீ. வே. பதிப்பின் மறுபதிப்பு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

கி.பி.10-ம் நூற்றாண்டின் தனித்த யாப்பு நூல்களில் ஒன்றான யாப்பருங்கலக்காரிகை, கட்டளைக் கலித்துறை யாப்பால் ஆனது. இது ‘காக்கைப்பாடினியம்’ எனும் யாப்பிலக்கண நூலைப் பின்பற்றி இயற்றப் பெற்றதாகும். இந்நூல் யாப்பருங்கலத்திற்குப் புறநடையாக அமைந்தது என்று யாப்பருங்கல விருத்தியுரையால் அறியமுடிகிறது.(12) உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களில் யாப்புக் கருத்துக்களைக் குறிப்பிடுகின்றது. இவற்றுள் நேரசை முதலாகிய காரிகை 21, நிரையசை

முதலாகிய காரிகை 23, நேரசை காரிகைக்கு ஓர் அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து பதினாறு, நிரையசை முதலாகிய காரிகைக்கு ஓர் அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து பதினேழு என்ற எண்ணிக்கையில் இதன் காரிகை அமைந்துள்ளது.

யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டிருந்தாலும் அவற்றில் சில வேறு-பாடுகள் காணப்படுகின்றன. அவை முதலில் கலம் அதன்பின் காரிகை என்ற முறையில் பின்வருமாறு வரிசைப் படுத்திக் கூறப்படுகிறது.

1. நூற்பாவால் அமைந்தது

   கட்டளைக் கலித்துறையால் அமைந்தது.

2. அவையடக்கம் இல்லை

   அவையடக்கம் உண்டு

3. அசைக்கு உறுப்பு 15

   அசைக்கு உறுப்பு 13

4. மகடூஉ முன்னிலை இல்லை.

   மகடூஉ முன்னிலை உண்டு.

5. மருட்பாவுக்கு இலக்கணம் கூறப்படவில்லை.

   இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

6. ஒரு செய்யுளில் பல தொடையும், பல அடியும் வரும் வழக்கும் முறை கூறப்பட்டுள்ளது.

   கூறப்படவில்லை.

7. ஒன்றினுக்கொன்று சுருங்கும் உறுப்பினது அப்போ-தரங்கம் என்று கூறுவார்.

நீர்த்திரைபோல் மரபொன்று நேரடி முச்சீர் குறள் நடுவே மடுப்பின் அம்போதரங்கம் என்னும் விளக்கம் தருவார்.

8. காசு, பிறப்பு என்னும் வெண்பா வாய்ப்பாடுகள் சுட்டப்படவில்லை.

சுட்டப்பட்டுள்ளது.

9. சிந்தியல் வெண்பா வகைகள் குறிக்கப்படவில்லை.

குறிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 10-ம் நூற்றாண்டிலிருந்து 19-ம் நூற்றாண்டுவரை பாட்டியல் நூல்களின் காலத்தைக் கூறலாம். இது பாட்டிற்கு இலக்கணம் கூறும் வகையில் அமைந்தமையால் பாட்டியல் நூல்கள் எனப்பட்டன.(13) இந்திரகாளியம், நவனீத பாட்டியல், வெண்பாப் பாட்டியல் போன்றவைகளெல்லாம் பாட்டியல் நூல்-களில் குறிப்பிடத் தகுந்தவைகள். மருதூர் ச. அரங்கநாதன் 1983-ல் ‘இலக்கணவரலாறு பாட்டியல் நூல்கள்’ என்ற நூலில் பாட்டியல் இலக்கணங்களைப் பற்றி விவரித்துக் கூறுகிறார்.

முந்து நூலானத் தொல்காப்பியம் ‘பாட்டு’ என்பதனை ஏழுவகைச் செய்யுள் பாகுபாடுகளில் ஒன்றாகக் கூறுகிறது.(14) ஆனால் யாப்பருங்கலக் காரிகை, தற்பாயிர உரையில், ‘பாட்டு’, ‘செய்யுள்’ இவையெல்லாம் ஒரு பொருள் குறித்தன எனக் கூறப்பட்டிருக்கிறது.

பொதுவாக, பாட்டியல் நூல்களின் காலம் 10-ம் நூற்றாண்டிற்கும் முன்பு தோன்றியதாகக் கருதப்படுகிறது.(15) இப்பன்னிருபாட்டியலில் எழுத்தியல், சொல்லியல், இனவியல்

என மூன்று இயல்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு ‘வெண்பா’ யாப்பும், எஞ்சியவை ‘நூற்பா’ யாப்புமாக அமைந்-துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் யாப்பியல் ஆய்வுகள்

கி.பி.20-ம் நூற்றாண்டில் குறிப்பிடத்தகுந்த அளவிலேயே சில யாப்பிலக்கண ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன.

தமிழ் யாப்பிலக்கண ஆய்வு வரலாற்றைப் பொருத்த-ளவில், எல்லிசு, கால்டுவெல், போப் மற்றும் வீரபத்திர முதலியார் போன்றோர்கள் முன்னோடிகளாக விளங்கு-கிறார்கள்.(16) ஏறத்தாழ கி. பி. 19-ம் நூற்றாண்டு காலகட்டங்-களில் தி. வீரபத்திர முதலியார் புதுமையான நோக்கில் தமிழ் யாப்பு பற்றிய கருத்துக்களை ஆராய்ந்து, ஆங்கில மொழியில் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியிருக்கிறார். இவர் ‘விருத்தப்பா-வியல்’ எனும் நூலில் விருத்தப் பாடல்களின் வளர்ச்சியை விவரித்து அதற்கு இலக்கணமும் கூறியிருக்கிறார். இவர்களைத் தொடர்ந்து யாப்பியல் ஆய்வில் கவனம் செலுத்திய அ. சிதம்பரநாதனாரின் “Advance Studies in Tamil prosody" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வேடானது, தமிழ் யாப்பியல் வரலாற்றில் முதல் முனைவர்பட்ட ஆய்வேடாக அமைகிறது. யாப்பிலக்கணத்தில் மட்டுமல்ல, பொதுவாகவே இதுவரை வெளிவந்திருக்கின்ற தமிழ் ஆய்வேடுகளுக்கெல்லாம் இதுவே முன்னோடியாக விளங்குகிறது. இதில் கி. பி. பத்தாம் நூற்றாண்டுவரை தமிழில் மேற்கொண்டிருக்கின்ற யாப்பியல் பற்றியதான வரலாற்றுக் கருத்துக்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் இது, ஆங்கில மொழியில் நூல் வடிவம் பெற்று 1943-ல்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்படவும் செய்திருக்கிறது. ஆங்கில மொழியில் அமைந்த இந்நூலை முனைவர் இராம. குருநாதன் தமிழில் மொழிபெயர்த்து ‘தமிழ் யாப்பியல் உயராய்வு’ என்ற தலைப்பில் நூல் வடிவமாக்கி-யிருக்கிறார்.

தமிழில் வெளிவந்த இந்நூல் 2009-ம் ஆண்டு முதன்முதலில் பதிப்பிக்கப்பட்டு, விழிகள் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. அ. சிதம்பரச் செட்டியாரின் யாப்புக் கருத்துக்களை ஆய்வு செய்தவர்களால், அவரது சில கருத்துக்கள் ஏற்கவும், மறுக்கவும் செய்யப்பட்டிருக்கிறது.(17)

இது யாப்பிலக்கண ஆய்வில் வெளிவந்த முதல் நூல் என்பதால் இந்நூலின் தனித்தன்மைகளாக நூலாசிரியர் கூறியக் கருத்துக்களில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்த முடையதாக அமையும். அக்கருத்துக்கள் பின்வரு-மாறு அமைகிறது.

1. “பண்டையக்காலத்தில் அகவலின் ஈற்றயலடி முச்சீர் பெற்றிருப்பது அதன் தனித்தன்மையைக் காட்டுவதாகும்.
2. தொல்காப்பியருக்குப் பிறகே இணைக்குறள் ஆசிரியப்பா வழக்கத்திற்கு வந்தது.
3. பண்டைத் தமிழில் நிலைமண்டில ஆசிரியம் இருந்த-தில்லை.
4. ‘ஏ’ என்ற எழுத்து மட்டுமே பண்டை நாளில் ஆசிரி-யத்தின் ஈற்றடியில் இடம்பெற்றிருந்தது. ஆசிரியத்தின் ஈற்றில் சில சமயங்களில் இதற்குப் பதிலாக ஓகாரம்

இடம் பெற்றிருந்தது. சில சமயங்களில் ஈகாரமும் இடம் பெற்றது.

5. அகவலால் மட்டுமே பாடப்பெற்றது புறநானூறு என்ற கருத்திற்கு மாறாக, அதில் யாப்பருங்கல விதியின்படி மூன்று வஞ்சிப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

6. நேரிசை வெண்பாவைக் காட்டிலும் இன்னிசை வெண்பா காலத்தால் முற்பட்டது.

7. ஓசைப் பிரிவுகளில் ஏந்தல், தூங்கல், ஒழுகல் அல்லது பிரிந்திசை ஆகியவை யாப்பருங்கலம் மற்றும் காரிகை உரைகளின் காலத்திலிருந்துதான் தொடங்குகின்றன.

8. யாப்பருங்கலம் கூறும் கொச்சகம், தொல்காப்பியர் கூறியுள்ள கொச்சக ஒருபோகினை மட்டுமே குறிக்கும். யாப்பருங்கல ஆசிரியர் கொச்சகக் கலியைக் கூறாமல் தவிர்த்திருப்பது தவறானது. இதனால் பிற்றைக் காலத்-திய யாப்பியலார் யாவரும் கொச்சகக் கலிப்பாவின் இருப்பு நிலையை ஆராயாது தவிர்த்துள்ளனர்.

9. கலிப்பாவின் நான்கடியான் இயன்ற உறுப்புகளிலிருந்து கலி விருத்தம் தோன்றியிருக்கலாம்.

10. சிலம்பின் வரிப் பாடலடிகளிலிருந்து அறுசீர் விருத்தம் தோன்றியிருக்கலாம்.”

மேலும், குறிப்பிடத்தகுந்த யாப்பியல் ஆய்வுகளாக, முனை. ந. வி. ஜெயராமன் 1977-ல் ‘சிலப்பதிகார யாப்பமைதி’ என்ற தலைப்பில் அமைந்த நூலில், ஏரத்தாழ ஐயாயிரம் அடிகள் கொண்ட தனிமூல காப்பியமான சிலப்பதிகாரத்தில் காணப்படும் யாப்பமைவுகள் பற்றிய ஆய்வை

மேற்கொண்டிருக்கிறார். முனை. சோ. ந. கந்தசாமியின் 'தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூல் இரண்டு தொகுதிகளாக தமிழ் யாப்பு வரலாற்றைக் கூறுகிறது. இந்நூலில் கல்வெட்டுக்களில் காணப்படும் யாப்புவகைகளை மையமாகக் கொண்டு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியம், காக்கைப்பாடினியம் போன்ற முந்து நூல்களில் காணப்படும் யாப்புக்கட்டமைப்புகள் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன. 1992-ல் 'யாப்பருங்கல விருத்தி பதிப்பும் ஆய்வும்' என்ற தலைப்பில் முனை. ந. சண்முகம் மேற்கொண்டிருக்கும் ஆய்வு மிகவும் குறிப்பிடத் தகுந்தது. மேலும் அன்னி தாமசின் 'யாப்பியல்' (1998), முனை. செ. வை. சண்முகத்தின் 'யாப்பும் நோக்கும்' (தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகள்), முனை. ய. மணிகண்டனின் தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, யாப்பருங்கலக் காரிகையை ஆராய்ச்சிப் பதிப்பில் ஈடுபடுத்திய டாக்டர் வே. பால்ராஜின் ஆய்வு போன்றவைகள் தமிழ் யாப்பியல் ஆய்வுகளுக்குச் சிறப்பு வகிக்கின்றன.

காலந்தோறும் யாப்பிலக்கணங்களின் பாடுபொருள்-களுக்கு வகுக்கப்பட்ட உரைகள் பற்றிய வரலாற்றாய்வை முனை. பா. இளமாறன் மேற்கொண்டிருக்கிறார். இந்நூலில், தமிழ் இலக்கண உரைவரலாறு, யாப்பியல் உரைகள், யாப்பருங்கல விருத்தியுரையும், யாப்பருங்கலக் காரிகை உரையும், தொல்காப்பியச் செய்யுளியல் உரைகள், பிற யாப்பியல் உரைகள் போன்ற பன்முக நோக்கில் இவ்வுரைகள் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. காவ்யா வெளியீடாக வந்த முனை. ம. பிரபாகரனின் 'வீரசோழிய யாப்பு' எனும்

ஆய்வு நூலானது, வடமொழி யாப்பு, வீரசோழிய யாப்பிலக்கணக்கோட்பாடு, போன்றவற்றை பொருண்மையாகக் கொண்டு ஆராயப்பட்டிருக்கிறது.

காலந்தோறும் பல மாற்றங்களின் அடிப்படையில் யாப்பிலக்கணங்கள் தோன்றியிருப்பினும், அவற்றின் வழியாக வெளிவந்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

தொகுப்புரை

இவ்வியலில், சில குறிப்பிடத்தகுந்த யாப்பு நூல்களின் மூலம் யாப்பியல் வளர்ச்சிநிலையை அறிய முடிந்தது. தமிழ் யாப்பியல் மரபு தொல்காப்பியத்திற்கு முன்னதாகவே தொடங்குகிறது. தொல்காப்பியமே அதற்குச் சான்றாக அமைகிறது. கி. பி. 6-ம் நூற்றாண்டில் உருவான யாப்பிலக்கண நூல்களெல்லாம் தொல்காப்பியத்தைப் பின்பற்றியவைகள், காலந்தோறும் யாப்பிலக்கணக் கோட்பாடுகள் மாற்றமடைந்திருப்பது புலனாகிறது. “காக்கைப்பாடினியம்” யாப்பிலக்கண நூற்களுள் மிகவும் அறியப்படக்கூடிய ஒன்றாக விளங்கியிருக்கிறது. தனித்த யாப்பிலக்கண நூல்களாக விளங்குகின்ற கலமும், காரிகையும், காக்கைப்பாடினியத்தைப் பின்பற்றியிருக்கின்றன. தமிழில் முதன் முதலில் யாப்பிலக்கணத்தில்தான் ஆய்வேடு வெளிவந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தகுந்தது. தமிழ் யாப்பிலக்கணத்தைப் பொறுத்தளவில் குறிப்பிடத் தகுந்த ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அடிக்குறிப்பு

1. சுப்பிரமணியண், ச. வே., தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா-78, பக். 528
2. மேலது, நூற்பா-77, பக். 528
3. சுப்பிரமணியன், ச. வே., தொல்காப்பியம் தெளிவுரை, நூற்பா-77, பக். 528
4. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு, பக். 207.
5. மேலது, பக். 207
6. முருகேசன், க., தமிழ் இலக்கண நூல்கள் - ஒரு பொதுப் பார்வை, பக். 187.
7. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு, பக். 211.
8. மேலது, பக். 212
9. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு, பக். 209
10. மணிகண்டன், ய., யாப்பருங்கலம், பக். 2
11. மணிகண்டன், ய., யாப்பருங்கலம், பக். 13
12. இளங்குமரன். இரா., இலக்கண வரலாறு, பக். 235
13. சண்முகம், ந., யாப்பருங்கல விருத்தி - பதிப்பும் ஆய்வும் (ஆய்வேடு), பக். 4
14. சுப்பிரமணியன், ச. வே., தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா-75, பக். 529
15. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு, பக். 265
16. குருநாதன், இராம., தமிழ் யாப்பியல் உயராய்வு (தமிழாக்கம்), பக். 5
17. மேலது, பக். 11
18. மேலது, பக். 15

இயல் - 3

இயல் - 3

'விருத்த விச்சாரம்' - தமிழ் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், தீர்வுகள்

இவ்வியலில் மொழிபெயர்ப்பு விளக்கம், மொழிபெயர்ப்பு நோக்கம், மொழிபெயர்ப்புக் கொள்கை, மொழிபெயர்ப்பு பயன், மொழிபெயர்ப்பு வகை, மற்றும் விருத்த விச்சாரத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்தபொழுது ஏற்பட்ட மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், மற்றும் அவற்றிற்கானத் தீர்வுகள் போன்ற கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஒரு மொழியின் கருத்துக்களைப் பிறிதொரு மொழிக்கு மாற்றித்தர மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக விளங்குகிறது. வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் சமூகக் கலாச்சாரங்களையும் வரலாற்றுப் பின்புலங்களையும் அறியும் நோக்கில் பல்வேறு மொழிகளுக்கிடையே இம்மொழிபெயர்ப்பானது காலந்தோறும் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கி.மு.250-ல் 'உரோமருடைய ஒடிசிக்கு' என்ற கிரேக்க மொழியிலுள்ள இலக்கியத்தை ஆன்டோனிக்கஸ் என்பவரால் இலத்தீன் மொழிக்கு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பே உலக இலக்கிய வரலாற்றில் முதன்மையான மொழிபெயர்ப்பாகக் கருதப்படுகிறது(1). சமயப்பரப்புக் கொள்கையாளரான ஆன்டிரிக்ஸ் 1546-ல் போர்ச்சுக்கீசிய மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த 'தம்பிரான் வணக்கம்' என்ற நூல் தமிழில் அமைந்த முதல் ஐரோப்பிய மொழிபெயர்ப்பு நூலாகும். இதுவே பிறமொழிகளிலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட முதல் மொழிபெயர்ப்பாகக் கருதப்படுகிறது.

அதன்பிறகு எபிரேயு கிரேக்கு எனும் மூலபாஷைகளி-லிருந்து ஜீகன் பால்கு ஐயரால் ‘பைபிள்’ தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இம்மொழிபெயர்ப்பினை இவர் 1708-ல் தொடங்கி 1711-ல் நிறைவு செய்ததாகக் கூறப்படு-கிறது. மேலும் இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் பைபிளை மொழிபெயர்த்த பெருமை தமிழ் மொழியையேச் சாரும் என்பதும் குறிப்பிடத் தகுந்தது. ஐரோப்பிய மொழி-களான கிரேக்கம், இலத்தீன் மற்றும் திராவிட மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து பிறமொழிக-ளுக்கும் என்ற வகையில் பல மொழிபெயர்ப்புகள் காலந்தோறும் நடைபெற்று வந்திருக்கின்றன.

தமிழ் - மலையாள மொழிபெயர்ப்பு மற்றும் ஒப்பாய்வுத் துறைகளில் கவனம் செலுத்தி ஆய்வுமேற்கொள்வதில் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னோடியாக விளங்குகிறது. தமிழ் - மலையாளத்தில் இலக்கண இலக்கியங்களில் சில குறிப்பிடத் தகுந்த மொழிபெயர்ப்புகள் நடைபெற்றிருக்கின்றன.

தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பைப் பொருத்தவரை திருக்குறள்தான் முதன்முதலில் 1595-ல் தமிழிலிருந்து மலையாளமொழிக்குச் செய்யப்பட்ட முதல் மொழிபெயர்ப்பாக அமைகிறது(2). சங்கப்பாடல்களான பதிற்றுப்பத்து, புறநானூறு, முத்தொள்ளாயிரம் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட பாடல்களை 1958-ல் வி.ஆர்.நாராயணப் பணிக்கரும் 1961-ல் பதிற்றுப்பத்தை மட்டும் ஜி.வைத்தியநாத ஐயரும், அக-நானூறை பி.விஸ்வநாதன் நாயரும் மொழிபெயர்த்திருக்-கிறார்கள் என்று முனை.சா.சிவகாமி “மொழிபெயர்ப்புத் தமிழ்” எனும் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் என். வி. கிருஷ்ணவாரியாரின் மொழிபெயர்ப்பான ‘அகம் கவிதைகள்’

தொகுப்பும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது[(3)]. எனவே, இதன் மூலம் சங்க இலக்கியங்களும் மொழிபெயர்ப்பில் முக்கியத்துவப்படுத்தப் பட்டிருக்கிறது என அறியலாம்.

தமிழ் இலக்கண மொழிபெயர்ப்பைப் பொருத்தவரை தமிழில் அனைத்து இலக்கணங்களுக்கும் முதன்மையாக அமையும் தொல்காப்பியத்தின் எழுத்து மற்றும் பொருளதி-காரத்தை 1927-ல் பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது, தமிழிலிருந்து பிறமொழிக்குச் செய்யப்பட்ட முதல் இலக்கண மொழிபெயர்ப்பாக அமைகிறது. மேலும் இதனை Journal of Oriental Research என்ற இதழில் வெளியிட்டிருக்கிறார். அதன் தொடர்ச்சியாக தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை மொழிபெயர்த்து அண்ணாமலைப் பல்க-லைக்கழக வெளியீடாக 1945-ல் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் மற்றும் மலையாள மொழிகளுக்கிடையே நிகழ்ந்த மொழிபெயர்ப்பைப் பொருத்தளவில் 1977-ல் பேராசிரியர் மா. இளையபெருமாள், லீலாதிலகம், கேரளப்பாணீனியம் போன்ற இலக்கண நூல்களை மலையாளத்திலிருந்து தமிழிற்கும், வீரசோழியம் (எழுத்து, சொல்), நன்னூல், நேமிநாதம் போன்ற இலக்கண நூல்களை மலையாளத்திற்கும் மொழிபெயர்த்-துள்ளார். மேலும், பேராசிரியர் கி. நாச்சிமுத்து, பேராசிரியர் மா. இளைய பெருமாள், இருவரும் சேர்ந்து மலையாளமொழி இலக்கணம் சொற்றொடர் காண்டத்தை தமிழில் மொழிபெயர்த்-திருக்கிறார்கள்[(4)]. தமிழ் மற்றும் மலையாள இலக்கண மொழி-பெயர்ப்பில் இவர்கள் குறிப்பிடப்படுபவர்கள். மேலும், ஆய்வா-ளர் தே.தேவதாஸின் 1993-ல் கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை வாயிலாக ‘‘மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு’’ என்னும் தலைப்பில் அமைந்த ஆய்வேடு குறிப்பிடப்படுவதாகும்.

மொழிபெயர்ப்பு விளக்கம்

பொதுவாக மொழிபெயர்ப்பு என்பது ஒருமொழியிலுள்ள கருத்துக்களை பிறிதொரு மொழிக்கு மாற்றி அமைத்தல் எனும் பொருண்மையைக் கொண்டதாகும். இது ஆங்கிலத்தில் Translation என்று வழங்கப்படுகிறது. ஒரு மொழியின் கருத்துப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பின் தேவை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது எனலாம். இக்கருத்துப் பரிமாற்றத்தை முதன்மையாகக் கொண்டு பிற்காலங்களில் இலக்கிய இலக்கணங்களை மொழிமாற்றிக் கொள்ளும் வகையில் 'மொழிபெயர்ப்பு' உருவாகியிருக்கிறது.

இக்கருத்துப் பரிமாற்றமானது இருவெவ்வேறு மொழிக-ளுக்கிடையே நடைபெருவதாகும். எனவே, இதில் கருத்துக்க-ளைத் தருகின்ற மொழி 'முதல்மொழி' அல்லது 'மூலமொழி' என்றும் கருத்துக்களைப் பெருகின்ற மொழி 'இரண்டாம்மொழி' அல்லது 'இலக்குமொழி' என்றும் கூறப்படுகிறது. முதல் மொழியான மூலமொழியை ஆங்கிலத்தில் 'Source Language' என்றும் இரண்டாம் மொழியான இலக்குமொழியை 'Target Language' என்றும் கூறலாம்(5). இங்ஙனம் உருவான மொழி-பெயர்ப்பிற்கு அறிஞர்கள் பலர் 'வரையறை' வகுத்துள்ளனர். இவ்வாய்விற்குப் பொருந்தும் விதத்தில் அமைந்த மொழி-பெயர்ப்பு பற்றி சில அறிஞர்களின் கருத்துக்கள் கீழ்க்கண்ட-வாறு விளக்கிக் கூறப்படுகின்றன.

பிறமொழியிலிருந்து தமிழிற்குச் செய்யப்படும் மொழி-பெயர்ப்பு பற்றி காழி. சிவ. கண்ணுசாமி (''மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்'' பக்.18-19) சில மொழிபெயர்ப்புக் கருத்-

துக்களை விளக்கியுள்ளார். அது பின்வருமாறு விளக்கப்-படுகிறது

‘‘மொழிபெயர்ப்பிற்கு உட்படுத்தும் மூலமொழியை இருமுறை படித்துப்பார்த்தல், அதன்பின் அவ்வுரைநடைப் பகுதியை வாக்கியம் வாக்கியமாக அதே கருத்து அமைந்திருக்கத் தக்கதாக மொழிபெயர்த்தல் வேண்டும். முக்கியமாக மொழிபெயர்ப்பில் தமிழ் மரபும், தமிழ்மொழியில் காலத்திற்கேற்ப வழக்கிலுள்ள சொற்களும், சொற்றொடர்களும் பின்பற்றப்பட வேண்டும். மூலமொழியிலுள்ள மரபுச் சொற்றொடர்களுக்கும், பழமொழிகளுக்கும் ஏற்ற வகையில் தமிழ்ச் சொற்றொடர்களும் தமிழ்ப் பழமொழிகளுமே பயன்-படுத்தப்பட வேண்டும்.’’ என பல அறிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

கவிமணி.தேசிக விநாயகம் பிள்ளை கூறுகையில் ‘‘மொழிபெயர்ப்பு தனிமனிதனின் மேம்பாட்டிற்கு மட்டுமின்றிச் சமுாதய மேம்பாடு, கல்வி மேம்பாடு, நாட்டு மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி முதலியனவற்-றுக்கும் இன்றியமையாதது ஆகின்றன.’’ என்பது இவரது கருத்தாகும்.

தென்புலோலியூர். மு.கணபதிப்பிள்ளை (மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும். பக்.11, மு.ப.1967.) பொருளுக்குப் பொருள் மொழிபெயர்த்தலே சிறந்தது என வழியுறித்தியுள்ளார். ஆதா-வது ‘‘மொழிபெயர்ப்பு எனப்படுவது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொல்லுக்குச் சொல்லாகப் பெயர்த்து அடுக்கி வைப்பது அன்று: வாக்கியங்களிலுள்ள சொற்களுக்கு மற்ற மொழியிலிருந்து நேரான சொற்களைப் பெய்து வாக்கியங்களாக்கி அமைத்து விடுவதுமன்று, உண்மையில்

பெயர்த்து எழுதப்பட வேண்டியது பொருளேயாகும். எடுத்துக் கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமும் தோன்ற ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும், சுருக்கியும் விரித்தும் பெயர்த்து அமைப்பதே மொழிபெயர்ப்பாகும்'' என்று வரையறை கூறியிருக்கிறார்.

மொழி பெயர்ப்பின் நோக்கம்

பொதுவாக மொழிபெயர்ப்பு நோக்கம் என்பது வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் சமூகக் கலாச்சாரங்களையும் வரலாற்றுப் பின்புலங்களையும் அறிவதாக அமைகிறது. பேரா. சிவகாமி தனது 'மொழி-பெயர்ப்புத் தமிழ்' என்ற நூலில் கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி போன்றன மொழிபெயர்ப்பின் நோக்கமாக அமையும் என்கிறார்.

சுருக்கமாகக் கூற வேண்டுமெனில், ஒரு மொழியில் பயன்படுத்தப் பட்டிருக்கின்ற மொழியமைப்பு, அம்மொழி பெற்றிருக்கும் இலக்கியம், கலை, மக்கள் பண்பாடு, சமுதா-யம், சமய அரசியல் போன்றவற்றை நன்கு உய்த்துணர்வதும் மொழிபெயர்ப்பின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

மொழிபெயர்ப்புக் கொள்கை:

மொழிபெயர்ப்பு என்பது ஒரு 'கலை.' இது மரபுமிக்க நீண்ட வரலாறுடையது. ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றவாறு இயல்பான மொழிபெயர்ப்பை மேற்கொள்வது மிகவும் சிறந்ததாக விளங்குகிறது. எனினும், மொழிபெயர்ப்பு உத்திகள் வேறுபடுவதைப் போன்று மொழிபெயர்ப்பு குறித்த நோக்கங்களும் மொழிபெயர்ப்பாளர்களிடையே வேறுபடுகின்றன. எனவே, மொழிபெயர்ப்பாளர்கள் சில கொள்கைகளைப்

பின்பற்றி மொழிபெயர்ப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. இக்கொள்கைகளில் எளிமை, தெளிவு, விளக்கங்கள், இலக்கிய நயம், மூலநூல் அறிமுகம், போன்றன முக்கியமாக அமைகின்றன.

எளிமை

மொழிபெயர்ப்பு ‘நடை’ எளிமையாக இருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மொழிபெயர்ப்பு நடையானது எளிதாகவும் அனைவருக்கும் புரியும் விதத்திலும் அமைய வேண்டும் என்பது முக்கியக் கொள்கையாக அமைகிறது. அதே நேரத்தில் அம்மொழிபெயர்ப்பு நூலைப் படிக்கும்பொழுது மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வு தோன்ற வேண்டும். மூலநூலின் சொற்றொடர் நீண்டதாக இருப்பினும் அதனை எளிமை படுத்தும் விதத்தில் சிறு தொடர்களாகப் பிரித்து மொழிபெயர்க்கலாம்.

தெளிவு

மொழிபெயர்க்கும் கருத்துக்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். மூலநூலிலுள்ள கருத்துக்களைத் தெளிவான முறையில் இலக்கு மொழிக்கு எடுத்துக் கூறுவது சிறந்த மொழிபெயர்ப்பின் முக்கியக் கொள்கையாக அமைகிறது. தேவையற்ற சொல் வர்ண்ணணைகளோ, புகழ்ந்துரைப்பதோ அல்லாமல், கிடைக்கின்ற கருத்துச் செறிவை நுட்பமுடன் தெளிவுபடுத்த வேண்டும் என்பது இதன் சிறப்பாகும்.

இலக்கிய நயம்

மூலமொழியின் சிறப்பினை முற்றிலுமாக உணர்ந்து-கொள்ளும் விதத்தில், மூலமொழியின் இனிமை, மொழி-நடையில் அமையும் பொருள் பொதிந்த சிறப்பு நிலைகள்,

உவமை, உருவகம், குறியீடு போன்ற பிற மொழி இலக்கிய நயங்களை முழுமையான நிலையில் மொழிபெயர்ப்பில் இடம்பெறச் செய்வது இன்றியமையாததாகும்.

மூலநூல் அறிமுகம்

மூலநூலை அறிமுகம் செய்தல் என்பது மொழிபெயர்ப்புக் கொள்கையின் தனிச்சிறப்பாகக் கூறலாம். மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் மூலநூல், மொழி, ஆசிரியர் குறிப்பு, நூல் அமைப்பு இதுபோன்ற செய்திகளைக் குறிப்பிட வேண்டும். இக்கொள்கை பின்பற்றப்படும் பொழுது மூலநூல் ஆசிரியரின் பிற நூல்களையும் அவை பற்றிய சிந்தனையும் தருவதாய் கற்போருக்கு மிகவும் பயனுடையதாக அமைகிறது. மேலும், மூலநூலில் அமைந்துள்ள அணிந்துரை, முன்னுரை போன்றவற்றையும் மொழிபெயர்ப்பிற்கு உட்படுத்து-வது வரவேற்கத்தக்கது.

மொழிபெயர்ப்பு பயன்

மொழிபெயர்ப்பின் மூலம் ஒரு மொழியின் சொல் வளம், மொழியமைப்பு, சொற்றொடரமைப்பு, மரபுச்சொற்கள் போன்ற தனித்தன்மைகள் அடையாளம் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் அம்மொழியினரின் பண்பாடு, நாகரீகம், பழக்க வழக்கம் போன்ற சமுதாய வாழ்வியல் கூறுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மூலமொழியின் சிறப்பினையும் மூலநூலாசிரியரின் மொழி-நடை, இலக்கிய இலக்கண அறிவு, சொற்களைக் கையாளும் முறை மற்றும் சொற்றொடர்களை அமைக்கும் முறை போன்ற அவரது தனித்திறனையும் புரிந்து கொள்ளலாம்.

இலக்கிய ஆய்வுகள் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு வழி வகுக்கின்றன. இதன் மூலம் ஒப்பாய்விற்குப் பயன்படுத்தும் இருமொழிகளின் தனித்தன்மைகள், ஒற்றுமை வேற்றுமைகள் போன்ற கூறுகளை இனங்கண்டறியலாம்.

மொழிபெயர்ப்பு வகை

மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்ப்பானது பல்வேறு விதமாக வகை செய்து விளக்கப்பட்டிருக்கிறது.

1. ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு.
2. இரு வெவ்வேறு மொழிகளுக்கிடையே செய்யப்படும் மொழிபெயர்ப்பு.

என பொதுவாக வகைபடுத்தலாம்.

ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியின் தனித்தன்மையான வடிவத்தை அதே மொழியில் கருத்தளவில் எவ்வித வேறுபாடுமின்றி மாற்றியமைப்பதே இவ்வகையில் அமையும் மொழிபெயர்ப்பாகும். இது ஆங்கிலத்தில் 'Intralingual Translation' என்று கூறப்படுகிறது. இதனை 1. மூலவடிவத்தின் இலக்கிய வகையை மாற்றியமைத்தல், 2. மூலவடிவத்தின் நடையை மாற்றியமைத்தல் என இருவேறு நிலைகளிலும் வகைபடுத்தலாம்.

இரு வெவ்வேறு மொழிகளுக்கிடையே செய்யப்படும் மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள கருத்துக்களை பிறிதொரு மொழியில் மாற்றியமைப்பதாகும். இது ஆங்கிலத்தில் 'Interlingual Translation' என்று கூறப்படுகிறது. இவ்வகை மொழிபெயர்ப்பினை சு.சண்முக வேலாயுதம் ஆறு பிரிவுகளாகப் பகுத்து விளக்கியிருக்கிறார். அவை பின்வருமாறு கூறப்படுகிறது.

1. சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பு
2. விரிவான மொழிபெயர்ப்பு
3. சரியான மொழிபெயர்ப்பு
4. சுருக்கமான மொழிபெயர்ப்பு
5. தழுவல் மொழிபெயர்ப்பு
6. மொழியாக்கம்

சொல்லுக்குச்சொல் மொழிபெயர்ப்பு என்பது மூலமொழிக் கருத்துக்களைச் சொல்லுக்குச்சொல் என்ற அடிப்படையில் மொழிபெயர்ப்பதாகும். இவ்வகை மொழிபெயர்ப்பானது மூல-மொழியின் ஒருசில சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ள முடியாத அளவில் சிக்கல் நிறைந்ததாகவும் அமைகிறது.

விரிவான மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியிலுள்ள கருத்துக்களின் மொழிபெயர்ப்புக்களோடு அவை தொடர்பான பிற கருத்துக்களையும் சேர்த்துக் கூறுவதாகும்.

சரியான மொழிபெயர்ப்பு என்பது 'Accurate Translation' என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. மூலமொழி வடிவத்தின் கருத்துக்களில் சிறிதளவும் விடுபட்டுப் போகாமல் இலக்கு-மொழியைக் கற்போருக்கு புரிந்து கொள்ளும் தன்மையில் அமைவதாகும்.

சுருக்கமான மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியிலுள்ள அனைத்துக் கருத்துக்களையும் இலக்குமொழியில் மொழி-பெயர்க்காமல் சிலவற்றை நீக்கிவிட்டு குறிப்பிட்ட கருத்துக்-களை மட்டும் மொழிபெயர்ப்பதாகும்.

தழுவல் என்பது ஆங்கிலத்தில் 'Adaptation' என்று கூறப்படுகிறது. இலக்கு மொழியிலுள்ள கருத்துக்களில் சிலவற்றை மிகைபடுத்தியும் குறைத்தும் ஒன்றிற்குப் பதிலாக

பிரிதொரு கருத்தையும் மொழிபெயர்ப்பில் அமைப்பது தழுவலாகும்.

மூலமொழிக் கருத்துக்களை இலக்குமொழியின் மாற்றி-ணைகளால் அவை மேம்படும்படியாக அமைப்பது 'மொழி-யாக்கம்' எனலாம்.

மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

இம்மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்படும்போது ஆய்வாளர்-களால் பல சிக்கல்களை நேரிடும் சூழ்நிலைகள் ஏற்படு-கின்றன. எனவே, மொழிபெயர்ப்பாளர் தான் மொழிபெயர்க்க-விருக்கும் இருமொழிகளையும் அம்மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் போன்ற மரபுக் கூறுகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது.

பொதுவாக மொழிபெயர்ப்பு ஆய்விற்கு உட்படுத்தும் மூலமொழி மற்றம் இலக்குமொழி பற்றியும் அம்மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் பற்றியும் போதுமான புரிதலைப் பெற்றிருந்தால் மொழிபெயர்ப்புச் சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

இலக்கிய மொழி பெயர்ப்பில்தான் மிகுந்த இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன என்று முனை.ச.சிவகாமி கருத்து தெரிவித்-திருக்கிறார். அதாவது மூலநூலின் இலக்கிய நயத்தை சிறிதும் விடுபடாமலும், முரண்படாமலும் மொழிபெயர்ப்பதில் இவ்வகைச் சிக்கல்களை எதிர்கொள்ளும் சூழல் உருவாகிறது என்கிறார்.

பேராசிரியர் ந.முருகேசபாண்டியன் 'மொழிபெயர்ப்பியல்' என்ற தமது நூலில் ''ஒவ்வொரு மொழியும் அதற்கெனத்

தனித்தன்மையினை ஏதேனும் ஒருவகையில் பெற்றுள்ளது. அது பிற மொழிகளில் காணவியலாத அம்சமாகும்.'' என்று கூறுவதோடு அம்மொழிகளின் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறைகளையும் விளக்கியிருக்கிறார். அதாவது ''ஒரு மொழியின் தனித்தன்மையானது சொல்-லாக்கம், தொடரமைப்பு, சொல்லாடலை வெளிப்படுத்தும் முறை, நாட்டார் வழக்காறுகள் போன்றவற்றில் சிறப்பாக வெளிப்படுகின்றன. எல்லா மொழிகளும் அம்மொழியைப் பேசுகின்ற மக்களின் சமுதாய அமைப்பினுக்கும் பண்பாட்டு நெறிகளுக்கும் ஏற்ற வகையில் போதுமான சொற்களைக் கொண்டுள்ளன.'' என்பதாகும்.

எனவே, மொழிபெயர்ப்பாளர் அம்மொழிகளின் தனித்தன்-மைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பது முக்கி-யத்துவம் வாய்ந்ததாகும். அது மட்டுமின்றி மொழிபெயர்ப்பாளர் போதுமான மொழி அறிவையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் புலனாகிறது.

விருத்த விச்சாரம் - தமிழ் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் தீர்வுகள்

விருத்த விச்சாரம் - தமிழ் மொழிபெயர்ப்பைப் பொருத்தவரை எளிமை, தெளிவு, மூலநூற்குறிப்பு இதுபோன்ற மொழிபெயர்ப்புக் கொள்கைகளும், பொருளுக்குப் பொருள் மொழிபெயர்த்தல் என்ற வகையும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

விருத்த விச்சார நூலை மொழிபெயர்க்கும் பொழுது ஏற்பட்ட சிக்கல்கள் பற்றிய கருத்துக்கள் சில தலைப்புகளின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

1. மரபுச்சொல் அடிப்படை
2. சொற்பொருள் அடிப்படை
3. எழுத்துக்களின் வரிவடிவ மாற்றம்
4. சீர் பிரித்தலில், தமிழ் எழுத்துக்களின் பயன்பாடு பொருந்தமை.

இந்த மொழிபெயர்ப்பைப் பொருத்தளவில் 1. மரபுச்-சொல்லை (பண்பாட்டுச்சொல்) மொழிபெயர்ப்பதிலும், 2. சொற்-பொருள் அடிப்படையிலும் காலந்தோறும் ஒரு மொழியில் எழுத்துக்களின் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையிலும் மற்றும் மலையாள இலக்கணவிதிப்படி சீர் பிரித்தலில், தமிழ் எழுத்துக்களின் பயன்பாடு பொருந்தாத நிலையிலும் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்-கின்றன.

மரபுச்சொல் அல்லது பண்பாட்டுச்சொல் அடிப்படையிலான சிக்கல்

மரபுச் சொற்கள் என்பது சமுதாய மக்களிடையே காலந்தோறும் வழங்கிவரும் பண்பட்ட சொற்களாகும். இச்சொற்களை நேரடியாக மொழிபெயர்க்கும் பொழுது சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனையே முனை.ச.சிவகாமி கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்.

“ஒவ்வொரு மொழிக்கும் அதன் தனித்துவத்தை உணர்த்தும் சிறப்புச் சொற்களும், மரபுத்தொடர்களும், பழமொழிகளும் உண்டு. இவற்றை அவ்வாறே தரின் பொருள் புலப்படுதல் கடினம். மாற்றப்படும் மொழியின் மரபிற்கு ஏற்ப அமைப்பின் மூலத்தின் உண்மை நிலையை, அதன் சிறப்பை மாற்றும், குறைபாடு தோன்றும்.” என்பதாகும்.

ஒரு மொழியின் சிறப்புச்சொல், மரபுத்தொடர், பழமொழி போன்றவைகள் சமூகப்பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் கூறுகளாக அமைகின்றன. எனவே, இது போன்ற பண்பாட்டுக் கூறுகளை மொழிபெயர்ப்பது சிக்கல் நிறைந்தது என்பது புலனாகிறது.

''வல்லா மக்களிலில்லா மக்களு''[6]

ஆய்வுப் பகுதியில் ''வல்லா மக்களிலில்லா மக்களு'' என்றொரு பழஞ்சொல் இடம்பெற்றிருக்கிறது. இதனை மொழி-பெயர்ப்பது சிக்கல் நிறைந்ததாக இருந்தமையால், இது மொழிபெயர்க்காமல் ஒலிபெயர்த்துத் (Transliteration) தரப்பட்டி-ருக்கிறது. மேலும், இப்பழஞ்சொல் கூறப்பட்டதற்கானப் பின்புலக்கருத்து கீழ்க்கண்டவாறு தெளிவு படுத்தப்படுகிறது.

அதாவது, கேரள கௌமுதியில் மணிகாஞ்சி, மிஸ்ர-காகளி, ஊனகாகளி போன்ற கிளிப்பாட்டு விருத்தங்களில் தவறுகள் காணப்படுகின்றன என்று விருத்த மஞ்சரி நூலின் முகவுரையில் கூறப்பட்டிருக்கிறது. இதனை விமர்சிக்கும் விருத்த விச்சார நூலாசிரியரான கே.கே.வாத்தியார் விருத்த மஞ்சரியிலுள்ள அனைத்து விருத்தங்களும் கேரள கௌமுதியின் வழி வந்தவைகள் ஆகவே, கேரள கௌமுதியிலுள்ள விருத்தங்களிடையே காணப்படும் அதே தவறுகளைத்தான் விருத்த மஞ்சரியிலும் காணமுடியும் என்றும் இம்மூன்று கிளிப்பாட்டு விருத்தங்களுடன் 'த்ருதகாகளி'யும் சேர்ந்து நான்காகிறது. இந்த 'த்ருதகாகளி'யின் நிலையை சிந்திக்கும் பொழுது ''வல்லா மக்களிலில்லா மக்களு'' என்ற பழஞ்சொல் நினைவிற்கு வருகிறது என்றும் கூறுகிறார்

“அப்யபிரசித்தம் யசஸே ஹி பூம் ஸாமனன்ய ஸாதாரண மேவகர்மம்”(7)

இது குமாரஸம்பவத்தில் கூறப்பட்டிருக்கும் கவிதை வரிகளில் ஒன்றாகும். இக்கவிதை வரிகளில் இடம்பெற்றி-ருப்பது வடமொழிச் சொற்கள் ஆகவே இதனை மொழிபெயர்ப்பதிலும் சிக்கல் ஏற்பட்டது. அதாவது, விருத்த விச்சார நூலின் தனித்தன்மையை உணரும்பொழுது இக்கவிதைவரி நினைவிற்கு வருகிறது என்று திரு.குட்டிக்-கிருஷ்ணமாரார் கருத்து தெரிவித்திருக்கிறார். இக்கவிதை வரிகள் கூறப்பட்டதற்கானப் பின்புலக்கருத்து கீழ்க்கண்டவாறு தெளிவு படுத்தப்படுகிறது.

மலையாள மொழி விருத்தங்களுக்கான முன்மாதிரிகள் துள்ளல்பாட்டு இலக்கியத்தில்தான் காணப்படுகின்றன என்று கே.கே.வாத்தியார் கூறிய கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது துள்ளல்பாட்டு இலக்கியத்தில் முழுமையான ஆய்வு மேற்கொள்ளாமல் மலையாள ‘விருத்த சாஸ்திரம்’ எழுத முற்படுவது மிகவும் தவறானது என்ற எண்ணம் உருவாகிறது. இது போன்ற தவறுகளை உணரச் செய்யும் விதத்தில்தான் மலையாள விருத்தங்கள் பற்றிய விமர்சனக் கருத்துக்களை கே.கே.வாாத்தியார் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இதுவே இவ்விருத்த விச்சார நூலின் தனித்தன்மையாக அமைகிறது என்று திரு.குட்டிக்கிருஷ்ணமாரார் இந்நூலின் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

“நோக்கேண்டதிஹ ஸர்வத்ர கேள்விக்குள்ளொரு பம்கிதான்”(8)

இது போன்ற வாக்கியங்களை மொழிபெயர்த்தலில் ஈடுபடுத்தி-யபொழுது சில சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தது.

சொற்பொருள் அடிப்படையிலான சிக்கல்

மொழிபெயர்ப்பில் சொற்பொருள்களின் அடிப்படையில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவை மூன்று வகைகளில் அமைகின்றன.

1. ஒரு சொல்லிற்குப் பல அர்த்தங்கள் வழங்கி வரும் நிலை.

எ.டு.

‘லக்ஷணம்’ (வி.வி. பக்.37)

2. மூலமொழி மற்றும் இலக்குமொழி இரண்டிலும் ஒரு சொல் வெவ்வேறு பொருளில் வழங்கிவரும் நிலை.

எ.டு.

‘சீலு’-‘சீர்’ (வி. வி. பக்.37)

3. மூலமொழிச் சொல்லிற்கு நிகரான சொல் இலக்கு-மொழியில் இல்லாமை.

எ.டு.

யதி, காகளி, மிஸ்ரம், த்ருதம்

தமிழில் இலக்கண விதிகளைக் குறிப்பிட சூத்திரம், நூற்பா, வரையறை என இது போன்ற பலசொற்கள் காணப்படுகின்றன. ஆனால் மலையாளத்தில் இவ்விலக்கண விதிகளைக் குறிப்பிட ‘லக்ஷணம்’ என்ற ஒருசொல் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, மலையாளத்தில் பயன்பாட்டி-லுள்ள ‘லக்ஷணம்’ என்ற சொல்லின் பொருளிற்கு இணையான பொருள் தரும் சொல்லை மொழிபெயர்ப்பதில் சொற்பொருள் அடிப்படையிலான சிக்கல் ஏற்பட்டது. இதனை

ஒரு சொல்லிற்குப் பல அர்த்தங்கள் வழங்கி வரும் வகையில் அடக்கலாம்.

தமிழில் ‘சீர்’ என்ற சொல் செய்யுளின் அடிகளில் அசைவாய்பாடு அடிப்படையில் வரும் யாப்பிலக்கண உறுப்புக்களுல் ஒன்று என்ற பொருளைத் தருகிறது. ஆனால், இச்சொல் மலையாளத்தில் ‘சீலு’ என்ற உச்சரிப்பைப் பெற்று, பாடலின் வரிகளைக் குறிக்கும் பொருளில் பயன்படுத்தப்-படுகிறது.

மேலும், திரு.கே.கே.வாத்தியார் (வி.வி.பக்-21) “கௌமு-தியில் ‘சீல்’ என்ற சொல்லிற்கு ஒரு உறுதியான அர்த்தத்தைக் குறிப்பிட வில்லை. ‘சீல்’ என்ற சொல்லைக் கேரள கெமுதியில் பயன்படுத்தப் பட்டிருக்கும் சூழலைப் பார்க்கும் பொழுது ஒரு பகுதியில் ‘கான ரீதி’ (பாட்டு முறை) என்றும் வேறொரு பகுதியில் ‘செய்யுள்’ என்றும் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. யாப்பிலக்கணப் பயன்பாட்டில் சில இடங்களில் ‘விருத்தம்’ என்றும் பொருள் கொள்ளப்-படுகிறது. விருத்த மஞ்சரியிலும் இதுபோன்று காணப்படுகிறது. மலையாள விருத்தத்தைப் பொருத்தளவில் சமஸ்கிருதத்தில் ‘பத்யம்’(செய்யுள்) என்று சொல்லப்படும் அதே அர்த்தத்தில்-தான் ‘சீல்’ என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது.” என்று கூறுகிறார். எனவே இதனை மூலமொழி மற்றும் இலக்குமொழி இரண்டிலும் ஒரு சொல் வெவ்வேறு பொருளில் வழங்கிவரும் வகையில் அடக்கலாம்.

மலையாள யாப்பியல் உறுப்புக்களில் ஒன்றான ‘யதி’, கிளிப்பாட்டு வகைகளில் ‘காகளி’, ‘மிஸ்ரம்’, ‘த்ருதம்’, மற்றும் துள்ளல்பாட்டு வகைகளில் ‘வக்தரம்’, ‘சீதாக்ரா’,

‘ஹம்ஸப்லம்தம்’, ‘அஜகரகமனம்’, போன்ற சொற்களுக்கு நிகரானச் சொற்கள் தமிழில் இல்லாததால் இவை மொழிபெயர்க்கப்படாமல் ஒலிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இச்சொற்களுக்குப் பொருள் விளக்கம் மட்டும் தரப்பட்டிருக்கிறது. இதனை மூலமொழிச் சொல்லிற்கு நிகரான சொல் இலக்குமொழியில் இல்லாமை என்ற வகையில் அடக்கலாம்.

எழுத்துக்களின் வரிவடிவ மாற்றத்தால் ஏற்படும் சிக்கல்

மொழி வளர்ச்சியடைவதின் விளைவாக ஒவ்வொரு மொழிகளிலும் எழுத்துக்களின் வரிவடிவம் மாற்றம் பெற்று வந்திருக்கின்றது. இதன் அடிப்படையில் சொற்களைப் புரிந்துகொள்ளும் முறையில் சில சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய சூழல்கள் உருவாகின்றன. அவைகள் சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன.

எ.கா.

	பழைய வடிவம்	*புதிய வடிம்*
தமிழ் -		ணை
மலையாளம் -	 (து)	തു (து)
	 (னு)	നു (னு)
	 (ரு)	രു (ரு)

தமிழில் ‘ணை’ என்ற எழுத்தின் வரிவடிவம் இதற்கு முன்பு ‘’ என்ற வடிவில் அமைந்திருந்தது. இது போன்று மலையாளத்திலும் எழுத்துக்களின் வரிவடிவம் மாற்றமடைந்திருக்கின்றன. அவை கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

மலையாள மொழியில் ‘രു’(ரு) என்ற பழைய எழுத்து வடிவம், தற்காலத்தில் ‘രു’(ரு) என்ற வடிவில் மாற்றம் பெற்றிருக்கிறது. மேலும், ‘തു’(து) என்பது ‘തു’ (து) என்றும், ‘നു’(னு) என்பது ‘നു’(னு) என்றும் மாற்றம் அடைந்திருக்கின்றன. இது மட்டுமின்றி மலையாளத்தில் வேறு சில எழுத்துக்களும் காணப்படுகின்றன.

சீர் பிரித்தலில், தமிழ் எழுத்துக்களின் பயன்பாடு பொருந்தாமை

மலையாள இலக்கண விதியின்படி, தமிழ் எழுத்துக்க-ளைப் பயன்படுத்தி சீர் பிரிக்கும்பொழுது சில சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது. அதாவது, மலையாளத்தில், ஒரு வடிவில் அமைந்துள்ள சில எழுத்துக்களைத் தமிழில் உச்சரிக்கும்பொழுது அவை இரண்டு எழுத்து வரிவடிவங்க-ளைப் பெறுகின்றன. யாப்பிலக்கணப் பயன்பாட்டில் சீர்பிரித்த-லின்போது, இரு மொழிகளிலும் எழுத்துக்கள் வேறுபடுகின்றன. மலையாள யாப்பிலக்கண விதிமுறையின்படி மலையாளச் சொற்களால் மட்டுமே சீர் பிரிப்பது பொருத்தமாக அமையும் என்பதால் ஆய்வுப் பகுதியில் இடம் பெறும் சில உதாரணப்-பாடல்கள் மலையாள மொழியிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன (ஆய்வுப் பகுதியில், நான்காம் இயலில், ‘‘மிஸ்ரகாகளிக்குக் கூறப்பட்டிருக்கும் உதாரணப் பாடலில் முதலாம் அடியின் முதல் சீரைக் கண்டுகொள்க).

எ.கா.

ജ നി മൃ തി നി /……/……./….’’
ஜ னி ம்ரு தி னி

இவ்வரியில் ‘മൃ’ (ம்ரு) என்ற ஒரு வடிவிலுள்ள மலையாள எழுத்தை தமிழில் உச்சரிக்கும் பொழுது, அம்மலையாள எழுத்து ‘ம்ரு’ என்று இரண்டு எழுத்து வடிவத்தைப் பெறுகிறது. தமிழிலுள்ளது போல் ‘‘ஜ / னிம் / ருதி / னி” என்று எழுத்துக்களைச் சீர்பிரித்தால் ‘னிம்’ என்பது குறிலாக இருப்பினும், மலையாள யாப்பிலக்கண விதிப்படி ஒரு குறிலெழுத்திற்குப் பின் ஒற்றெழுத்து வருமேயானால் அக்குறில் நெடிலாகவே கொள்ளப்படுகிறது. எனவே, மலையாள இலக்கண விதிக்குத் தமிழ் எழுத்துக்களால் சீர்பிரிப்பது என்பது பொருந்தாது.

சிக்கல்களுக்கானத் தீர்வுகள்

மரபுச் சொற்களை மொழிபெயர்க்கின்ற பொழுது அம்மரபுச் சொற்கள் வழங்கி வரும் சமூகப்பண்பாட்டுப் பின்புலன்களை அறிதலினாலும் மற்றும் மூலமொழியிலுள்ள இம்மரபுச் சொற்களுக்கு இணையான மரபுச்சொல் இலக்குமொழியில் உள்ளதா என்பதையும் குறிப்பாக அகராதிகளில் இப்பழமொழிகள் உதாரணக் குறிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் உறுதிபடுத்திக் கொள்-ளும் தன்மையில் இவ்வகைச் சிக்கல்களை மேற்கொள்ளலாம்.

சொற்பொருளைப் பொருத்தளவில் அவற்றிற்கு வழங்கி வரும் பல்வேறு அர்த்தங்களைத் தெரிந்துகொண்டு அவை எந்தெந்த சூழல்களில் பயன்படுகின்றன, அவற்றில் மூலமொழிச் சொற்களுக்கு இணையான சொல்லைத் தேர்வு செய்து அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் விதத்திலும் இவ்வகையானச் சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலும். மேலும் சொற்பொருள் அறிதலில் அகராதிகளின் பயன்பாட்டு முக்கியத்துவத்தை உணர்தல் இன்றியமையாததாகும்.

மூலமொழியில் காலந்தோறும் மாற்றம் பெற்றுள்ள எழுத்துக்களின் வரிவடிங்களை அடையாளம் காணும் முயற்சியில், மொழிபெயர்பாளரால் இவ்வகைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலும்.

சீர் பிரித்தலில் மலையாள இலக்கண விதிகளின்படி மலையாளச் சொற்களை மட்டும் பயன்படுத்துவதால் இதுபோன்ற சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

தொகுப்புரை

'மொழிபெயர்ப்பு' ஆய்வு, பிற மொழிச் சமூகப்பண்பாடு, கலாச்சாரங்களை இனங்கண்டறிய துணைபுரிகிறது. உலக வரலாற்றில், கி. மு. 250 லிருந்துதான் இலக்கிய மொழி பெயர்ப்பானது தொடங்கியிருக்கிறது என்பது புலனாகிறது. ஐரோப்பிய மொழிகளைத்தான் முதன்முதலில் தமிழிற்கு மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. திராவிட மொழிகளுக்கிடையே காலந்தோறும் மொழிபெயர்ப்புகள் நடைபெற்று வந்திருக்கின்றன. மலையாள மொழிபெயர்ப்பில் சங்கப்பாடல்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. 1927-ல் தொல்காப்பியம் தமிழிலிருந்து பிறமொழிக்குச் செய்யப்பட்ட முதல் மொழி பெயர்ப்பாக அமைகிறது என்ற செய்தி இன்றியமையாததாக அமைகிறது. தமிழிலிருந்து மலையாளத்திற்கும், மலையாளத்திலிருந்து தமிழிற்கும் என்ற அடிப்படையில், தமிழ்-மலையாள இலக்கண மொழிபெயர்ப்பில் கேரளப் பல்கலைக் கழகம் தலைசிறந்த பணியாற்றியிருக்கிறது. ஆய்வுப் பகுதியில், மலையாள மொழிப் பழஞ்சொற்களையும் வடமொழிச் சொற்களையும் மொழிபெயர்ப்பதில் சில

சிக்கல்களை எதிர்கொள்ளும் சூழல்கள் உருவாயின. எனவே, அவற்றை ஒலிபெயர்க்க மட்டும் செய்யப்பட்டுள்ளது.

ஓர் அடியின் சீரில் எழுத்துக்களின் பயன்பாட்டு முறை இரு மொழிகளிலும் வேறுபடுவதினால், மலையாள எழுத்துக்-களினால் மட்டுமே உதாரணம் காட்டமுடியும் என்பது தெரிய வருகிறது. ஆகவே, சில உதாரணப்பாடல்களை மலையாள மொழியில் கொடுக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டது.

பிற மொழிகளைப் போன்று, மலையாள மொழி, எழுத்துக்-களின் வரிவடிவம் காலந்தோறும் மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

அடிக்குறிப்பு

1. தேவதாஸ் தே., "மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு" (ஆய்வேடு, பக். 12)
2. சிவகாமி ச., மொழிபெயர்ப்புத் தமிழ், பக். 110
3. சிவகாமி ச., மொழிபெயர்ப்புத் தமிழ், பக். 109
4. இளைய பெருமாள் மா., நாச்சிமுத்து கி., மலையாள மொழியிலக்கணம்.
5. தேவதாஸ் தே., "மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு பற்றிய சிறப்பாய்வு, பக். 13
6. வாத்தியார் கே. கே., விருத்த விச்சாரம், பக். 16
7. மேலது, பக். 8
8. மேலது, பக். 8

இயல் - 4

இயல் - 4

'விருத்த விச்சாரம்'-யாப்பருங்கலக்காரிகை ஒப்பீடு

இவ்வியலில் ஒப்பீட்டாய்வு விளக்கம், ஒப்பீட்டுக் கொள்கை, தமிழ் - மலையாள மொழிகளில் யாப்பிலக்கணத்-திற்குக் கூறப்பட்டிருக்கும் யாப்பு வரையறை, யாப்புக்கட்ட-மைப்பிற்குப் பயன்படுத்தும் யாப்பியல் உறுப்புக்கள், எழுத்துக்கள், எழுத்துக்களின் மாத்திரை அளவு, சீர்களில் அவ்வெழுத்துக்களின் அமைப்பு முறை, அடிகளில் சீர் அமைப்பு முறை போன்றவற்றை ஒப்பீட்டுக் களன்களாகக்-கொண்டு விருத்த விச்சாரத்தில் கூறப்பட்டுள்ள கிளிப்பாட்டு மற்றும் துள்ளல்பாட்டுகளில் காணப்படும் யாப்புக்கட்டமைப்பு முறைகளை யாப்பருங்கலக்காரிகையுடன் ஒப்பிட்டு விளக்கப்-படுகிறது.

ஓப்பீட்டாய்வு - விளக்கம்

பொதுவாக ஒப்பீடு என்பதை ஒரு மொழிக்குள் ஒப்பீடு மற்றும் இரு வெவ்வேறு மொழிகளுக்கிடையேயான ஒப்பீடு என இரண்டாக வகைப்படுத்தலாம். இதன் அடிப்படையில் ஒரே மொழி மற்றும் இரு வெவ்வேறு மொழிகளினுடைய மொழி-யமைப்பு, மொழிப்பண்பாடு, இலக்கண இலக்கியங்களின் பாடுபொருள், கொள்கைகள், வகைபாடுகள் என இதுபோன்ற தனித்தன்மைகளை அடையாளம் காணமுடியும்.

அறிஞர். கால்டுவெல் 1856–ல் திராவிட மொழி இலக்க-ணங்களுக்கிடையேயான ஒப்பீட்டாய்விற்கு முதன்முதலில் வித்திட்டவராவார். இந்த வகையில் திராவிடமொழிகளின் யாப்பிலக்கணங்களுக்கிடையேயான ஒப்பீட்டாய்வை, குறிப்பாக தமிழ் மலையாள யாப்புக்களில் ஆய்வை மேற்கொண்டதில்

பேரா.எஸ்.சுப்பிரமணியனின் “The Commonness in the Metre of the Dravidian Languages” என்ற ஆங்கில நூலும் மற்றும் பேரா. அப்பன் தம்புரானின் ‘‘திராவிட விருத்தங்ஙளும் அவயுடெ தசாபரிணாமங்ஙளும்’’ என்ற நூலும் குறிப்பிடத்தகுந்தனவாகும். இவர்கள் இருவரும் திராவிட மொழிகளுக்கிடையேயான யாப்பியல் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டிருக்கி-றார்கள். மேலும், கேரளப் பல்கலைக்கழகத்தில் உருவான ஆய்வாளர் ஜெ.கெ. வாஸந்தியினுடைய ‘‘லீலாதிலகம் - தமிழ் இலக்கண நூல்கள் ஓர் மதிப்பீடு’’ என்பது குறிப்பிடப்படும் ஆய்வேடாகும். இவ்வகையில், தமிழ் மற்றும் மலையாள மொழிகளுக்கிடையேயான யாப்பியல் ஒப்பீட்டாய்வுகள் மிகக் குறைவாகவே வெளிவந்திருக்கின்றன.

யாப்பு வரையறை

‘யாப்பு’ என்றால் ‘யாத்தல்’, ‘கட்டுதல்’ என்று பொருள்படும் எனவே செய்யுளைக் கட்டமைப்பது ‘யாப்பு’ எனக்கூறப்படுகிறது. தொல்காப்பியம், செய்யுள்களின் வடிவக்-கூறுகளுக்கும் அவற்றின் பொருண்மைக்கும் இலக்கணம் கூறுவது ‘யாப்பு’ என்று யாப்பிலக்கணத்திற்கு இலக்கணம் கூறுகிறது (தொல்.செய்.நூ.74). ஆனால், தனித்த யாப்பி-லக்கண நூல்களான யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரி-கையும், செய்யுள்களின் பொருண்மையைத் தவிர்த்து அவற்றின் வடிவக்கூறுகளுக்கு மட்டும் இலக்கணம் கூறுவது யாப்பிலக்கணம் என்று வரையறை கூறுகின்றன.

தமிழ் மொழியைப் போன்று மலையாள மொழியிலும் யாப்பிலக்கணத்திற்கான வரையறை வகுக்கப்பட்டிருக்கின்றது.

‘யாப்பு’ என்பதற்குப் பதிலாக ‘விருத்தம்’ என்ற சொல்லாட்சி மலையாளத்தில் பயன்படுத்தப்படுகிறது.

“பத்யம் வார்க்குந்ந தோதல்லோ விருத்தமெந்நிஹ சொல்வது சந்தஸ்ஸெந்நாலக்ஷரங்ஙளித்ரயெந்நுள்ள க்னுப்தியாம்.”(1)

‘பத்யம்’ (செய்யுள்) உருவாக்கமே ‘விருத்தம்’ என்பது இதன் பொருளாகும். ‘விருத்தம்’ என்பது தமிழில் பாவினங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மேலும், ஒரு பத்தியத்தில் (செய்யுளில்) இத்தனை எழுத்துக்கள் வேண்டும் என்கிற நிபந்தனை ‘சந்தஸ்’ எனப்படும். அதாவது எழுத்துக்களின் எண்ணிக்கையைக் (அக்ஷரஸம்க்யா, அக்ஷரம் - எழுத்து, ஸம்க்யா – எண்ணிக்கை) குறிப்பதாகும். இதில் ‘குரு’ (நெடில்), ‘லகு’ (குறில்) மாத்திரையளவு போன்றவைகள் வருவதில்லை. ‘சந்தஸ்’ என்ற சொல்லிற்கு ‘வேதமந்திரம்’ என்றும் ‘ப்ராவகம்’ என்றும் அர்த்தம் உண்டு.

மேலும், மலையாளத்தில் ‘வர்ண்ண விருத்தம்’ மற்றும் ‘மாத்திரை விருத்தம்’ என இருவகை விருத்தங்கள் காணப்படுகின்றன. அவை,

“வர்ண்ணப்ரதானமாம் விருத்தம் வர்ண்ணவிருத்தமதாயிடும்
மாத்ரப்ரதானமாம் விருத்தம் மாத்ரவிருத்தமதாயிடும்.”

(வி.மஞ்.நூ.17)

ஒரு பாதத்தில் (அடியில்) இத்தனை வர்ண்ணம் (எழுத்துக்கள்) சேர்ந்தது ‘வர்ண்ண விருத்தம்’ என்றும் இத்தனை மாத்திரை-யளவு சேர்ந்தது ‘மாத்திரை விருத்தம்’ என்றும் இலக்கணம்

கூறப்பட்டுள்ளது. அதாவது எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது 'வர்ண்ண விருத்தம்'. மாத்திரையளவை அடிப்ப-டையாகக் கொண்டது 'மாத்திரை விருத்தம்'.

தமிழில் 'உலக வழக்கு', 'செய்யுள் வழக்கு' என்ற வகைபாடு இருப்பது போன்று மலையாளத்திலும் 'கத்யம்', 'பத்யம்' என்ற இருபிரிவுகள் காணப்படுகின்றன.

"பத்யமெந்நும் கத்யமெந்நும் ஹ்ருத்யமாமம்மட்டு ரண்டிலே
வாக்தேவதயுதிச்சீடு வித்வதானனபங்கஜே." (வி.மஞ்.நூற்.1)

'கத்யம்' என்றால் 'உரைநடை' (Prose) இது அடிவரையறை இல்லாதது என்றும் 'பத்யம்' என்றால் 'செய்யுள்' (Poem) இது அடிவரையறை உடையது என்றும் பொருள்படுகிறது.

யாப்புக்கட்டமைப்பு உறுப்புக்கள்

யாப்பருங்கலக்காரிகையில் செய்யுளைக் கட்டமைக்கும் உறுப்புக்கள் 'எழுத்து' முதலாகத் 'தொடை' ஈறாக ஆறு என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், மலையாளத்தில் 'எழுத்து', 'சீர்', 'அடி' இவை மூன்றுடன் 'யதி' என்ற நான்கு உறுப்புக்கள் மட்டுமே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன.

<u>யா. காரிகை</u>		<u>மலையாளம்</u>
எழுத்து	-	அக்ஷரம், வர்ணம்
அசை	-	---------
சீர்	-	கணம்
தளை	-	---------
அடி	-	பாதம், அடி
தொடை	-	---------
	-	யதி (நிறுத்தம், Metrical Pause)

மலையாளத்தில் ‘யதி’ என்கிற அமைப்பு காணப்படுகிறது. அதாவது ஒரு அடியின் நடுவில் நிறுத்திச் சொல்லுதலால் இதனைத் தமிழில் ‘நிறுத்தம்’ (Pause) என பொருள் கொள்ளலாம்.

மலையாளத்தில் ‘தளை’, ‘தொடை’ போன்ற யாப்பு உறுப்புக்கள் இல்லை. எனவே, யாப்புக்கட்டமைப்பு உறுப்புக்களின் எண்ணிக்கையிலும் அவற்றின் பயன்பாட்டு முறையிலும் இரு மொழிகளிலும் வேறுபாடு காணப்படுகின்றன.

எழுத்துக்களின் பயன்பாடு

யாப்பருங்கலக்காரிகையில் அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களாக 1. குறில், 2. நெடில், 3. ஆவி (உயிர்), 4. குற்றியலிகரம், 5. குற்றியலுகரம், 6. ஐகாரக்குறுக்கம், 7. ஆய்தக்குறுக்கம், 8. மெய், 9. வல்லினம், 10. மெல்லினம், 11. இடையினம், 12. உயிர்மெய், 13. அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை) என பதிமூன்று எழுத்து வகைகள் மட்டுமே செய்யுளில் பயன்படுத்தப்படுகின்றன(2). அவ்வெழுத்துக்கள் ‘நேரசை’, ‘நிரையசை’ என்ற ‘அசை’ வாய்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன.

மலையாளத்தில் யாப்பிலக்கணப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தும் எழுத்துக்கள் பற்றிய கருத்துக்களைக் கீழ்க்காணும் சூத்திரத்தின் மூலம் அறியலாம்.

‘ஸ்வரங்ஙள்தான் அக்ஷரங்ஙள் வெஞ்ஞநம் வகயில்லிஹ

வெஞ்ஞநங்ஙள் அடுத்துள்ள ஸ்வரங்ஙள்க்கம்கம்மெந்நுதான்’(3)

மலையாள யாப்பிலக்கணத்தில் உயிரெழுத்துக்களை (ஸ்வரங்-ஙள்) மட்டுமே எண்ணிக்கையாகக் கொள்ளப்படுகின்றன. மெய்யெழுத்துக்கள் (வெஞ்ஞனங்ஙள்) தனித்து எண்ணப்ப-டாமல் அவ்வுயிரெழுத்துக்களின் அங்கமாகவே கருதப்படு-கின்றன. பொதுவாக மலையாள எழுத்துக்களில் 'ஹ்ரஸூவம்' என்றால் 'குறில்' என்றும் 'தீர்க்கம்' என்றால் 'நெடில்' என்றும் கூறப்படுகிறது. ஆனால் யாப்பிலக்கணப் பயன்பாட்டில் குறில் எழுத்துக்கள் 'லகு' என்றும் நெடில் எழுத்துக்கள் 'குரு' என்றும் கொள்ளப்படுகின்றன என்பதைக் கீழ்க்காணும் சூத்திரத்தின் மூலம் அறியலாம்.

'ஹ்ரஸூவாக்ஷரம் லகுவதாம் குருவாம் தீர்க்கமாயது'

(வி.மஞ்.நூ.8)

'ககாரம் குருவின் பேராம் லகாரம் லகுஸம்ஜ்ஞயாம்

குருசிஹ்னம் நேர்வர கேள் லகுசிஹ்னம் வளஞ்ஞதும்'

(வி.மஞ்.நூ11)

மேலும் 'லகு' என்பதற்கு 'U' என்ற வளைவு வரையும் 'குரு' என்பதற்கு '—' என்ற நேர் வரையும் குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் குறியீடுகளை இப்படிச் ഉ (ல) ഗ (க) சுருக்கியும் பயன்படுத்துவதுண்டு. 'ஸந்த்யக்ஷரங்ஙள்' என்று சொல்லக்கூடிய 'ஐ', 'ஔ' என்ற இரு எழுத்துக்களும் நெடில் எழுத்துக்களாகவே கொள்ளப்படுகின்றன.

தமிழில் இதுபோன்ற 'லகு', 'குரு' நியமமோ அவற்றை அடையாளப்படுத்தும் குறியீடுகளோ இல்லை. மலையாளத்தில் 'குற்றியலிகரம்', 'குற்றியலுகரம்' போன்ற எழுத்துக்கள்

யாப்புப் பயன்பாட்டில் இல்லை. எனவே, யாப்பிலக்கணத்தில் எழுத்துக்களின் பயன்பாட்டு முறையானது இருமொழிகளிலும் வேறுபடுகின்றன.

எழுத்துக்களின் மாத்திரை அளவு

தமிழிலும் மலையாளத்திலும் யாப்பிலக்கணத்திற்குப் பயன்படுத்தும் எழுத்துக்களின் மாத்திரை அளவில் வேறுபாடு காணப்படுகிறது. தமிழில் ‘குறில்’ எழுத்திற்கு ஒரு மாத்திரை, ‘நெடில்’ எழுத்திற்கு இரண்டு மாத்திரை மற்றும் ‘அளபெடை’க்கு மூன்று மாத்திரை என்று வகுக்கப்பட்டி-ருக்கிறது. இது போன்று மலையாளத்திலும் எழுத்துக்களின் மாத்திரையளவைக் குறிப்பிட விதிமுறை கூறப்பட்டுள்ளது.

“மாத்ரயெந்நால் சுவாஸதாரயளக்குமளவாணிஹ

மாத்ரயொந்நு லகுக்கள்க்கு, ரண்டு மாத்ர குருக்களில்”

(வி.மஞ்.நூ.18)

‘லகு’ என்றால் ‘குறில்’ எழுத்து இதற்கு ஒரு மாத்திரை அளவும் ‘குரு’ என்றால் ‘நெடில்’ எழுத்து இதற்கு இரண்டு மாத்திரை அளவும் கூறப்பட்டுள்ளது.

ஒரு மாத்திரை அளவைக் கொண்டிருக்கும் ‘குறில்’ எழுத்துக்கள் பாடலின் ஓசை நிறைவிற்காக இரண்டு முதல் நான்கு மாத்திரையளவு வரை நீட்டி உச்சரிக்கப்படுகின்றன. நெடில் எழுத்துக்களும் மூன்று முதல் நான்கு மாத்திரையளவு வரை நீட்டி உச்சரிக்கப்படுகின்றன. மேலும், ‘ப்ளுதம்’, ‘காகபதம்’ என்ற இரு மாத்திரையளவு கூறப்படுகிறது. ‘ப்ளுதம்’ மூன்று மாத்திரை அளவையும் ‘காகபதம்’ நான்கு

மாத்திரை அளவையும் கொண்டிருக்கும். ‘ப்ளுதம்’ மற்றும் ‘காகபதம்’ இவை இரண்டிற்கும் தனித்த எழுத்து வடிவம் இல்லை. ஆனால், இவைகளை அடையாளப்படுத்தும் விதத்தில் ‘குறியீடுகள்’ பயன்படுத்தப்படுகின்றன[4]. அந்தக் குறியீடுகள் இவ்வாறாகக் காணப்படுகின்றன. ‘ப்ளுதம்’ $\underline{\cup}$ $(\frac{1}{2})$ என்ற வடிவில் ஒரு நேர் வரையின் மேல் வளைவு வரையும், ‘காகபதம்’ = $(\frac{2}{2})$ என்ற வடிவில் மேலும் கீழும் நேர் வரையுமாக அமைந்திருக்கின்றன. நெடில் எழுத்துக்கள் மூன்று மாத்திரை அளவில் உச்சரிப்பதைப் ‘ப்ளுதம்’ என்றும் நான்கு மாத்திரை அளவில் உச்சரிப்பதைக் ‘காகபதம்’ என்றும் கூறப்படுகிறது.

குறில் நெடிலாகும் இடம்:-

மலையாள யாப்பிலக்கணத்தில் குறில் எழுத்துக்கள் சில இடங்களில் நெடிலெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.

“அனுஸ்வாரம் விஸர்கம் தான் தீவ்ரயந்தமுரச்சீடும்
சில்லு கூட்டக்ஷரம்தானோ பின் வந்நால் ஹ்ரஸ்வவும் குரு.”

(வி.மஞ்.நூ.8)

குறில் எழுத்திற்குப்பின் ‘அனுஸ்வாரம்’ (‘அம்’ என்று உச்ச-ரிக்கப்படுவது), ‘விஸர்க்கம்’ (‘அக்’ என்று உச்சரிக்கப்படு-வது), அழுத்தி உச்சரிக்கும் ‘சில்லு’ (ஒற்றெழுத்து), ‘கூட்டக்ஷரங்ஙள்’ (கூட்டெழுத்துக்கள்) இவை வருமேயானால் அக்குறில் எழுத்து நெடிலெழுத்தாகக் கொள்ளப்படும். மேலும், அக்குறிலுக்குப்பின் வரும் ஒற்றெழுத்து அழுத்தமான உச்சரிப்பையும் பெற வேண்டும்.

எ.டு.

1. அனுஸ்வாரம் - **‘ം’**(‘அம்’ என்று உச்சரிக்கப்படுவது)

സു/ഖം (su/gam) - ஸு /கம்

‘ഖം’(கம்) என்பதில் ‘ഖ’(க) என்ற எழுத்திற்குப்பின் ‘அம்’ என்ற உச்சரிப்பைப் பெற்ற ‘ം’ ‘அனுஸ்வாரம்’ என்ற எழுத்து வந்திருப்பதால் ‘ഖ’(க) என்ற குறிலெழுத்து நெடிலெழுத்தாகக் கொள்ளப்படுகிறது.

2. விஸர்க்கம் - ഃ (‘அக்’ என்று உச்சரிக்கப்படுவது)

ദുഃ / ഖം (Thuk/kam) - துக் / கம்

‘**ദുഃ**’ (துக்) என்பதில் ‘**ദു**’ (து) என்ற எழுத்திற்குப்பின் ‘அக்’ என்ற உச்சரிப்பைப் பெற்ற ‘ഃ’ ‘விஸர்க்கம்’ என்ற எழுத்து வந்திருப்பதால் ‘**ദു**’(து) என்ற குறிலெழுத்து நெடிலெழுத்தாகக் கொள்ளப்படுகிறது. இதில் இடம் பெற்றிருக்கும் ‘**ഖം**’ **(கம்)** என்பது மேலே அனுஸ்வாரத்தில் கூறியபடி அமையும்.

3. சில்லு (ஒற்றெழுத்து) -

ൻ (ன்), ൽ (ல்), ർ (ர்), ൺ (ண்), ൾ (ள்)

4. கூட்டக்ஷரம் (கூட்டெழுத்து) -

ക്ക (க்க), ങ്ങ (ங்ங), ച്ച (ச்ச), ട്ട (ட்ட), ത്ത (த்த), ന്ന (ந்ந), പ്പ (ப்ப), മ്മ (ம்ம), യ്യ (ய்ய), റ്റ (ற்ற), ല്ല (ல்ல), വ്വ (வ்வ).

இதில் குறிலெழுத்திற்குப்பின் ‘சில்லு’(ஒற்றெழுத்து), மற்றும் கூட்டெழுத்துக்கள் வந்தாலும் அவ்வெழுத்துக்கள் அழுத்தி உச்சரிக்கப்படும் இடங்களில் மட்டுமே அக்குறில் நெடிலாகக் கொள்ளப்படுகிறது.

எ.டு.

‘മലർപ്പൊടി’ (Malarppodi) - மலர்ப்பொடி

‘ലർ’ (லர்) என்பதில் ‘ല’ (ல) என்ற குறிலுக்குப்பின் ‘ർ’ (ர்) என்ற சில்லு (ஒற்றெழுத்து) வந்து அழுத்தி உச்சரிக்கப்படு-வதால் ‘ല’ (ல) என்ற குறில் இதில் நெடிலாகக் கொள்ளப்படு-கிறது.

‘മലർമാല’ (Malarmala) - மலர்மாலை

‘**ലർ**’ (லர்) என்பதில் ‘**ർ**’ (ர்) என்ற சில்லு (ஒற்றெழுத்து) அழுத்தமான உச்சரிப்பைப் பெறாததால் ‘ല’(ல) என்ற குறிலுக்குப்பின் ‘**ർ**’ (ர்) என்ற சில்லு(ஒற்றெழுத்து) வந்திருப்-பினும் இதில் ‘ല’ (ல) குறிலாகவேக் கொள்ளப்படுகிறது.

‘കല്പനപ്രകാരം’ (Kalpanapprakaaram) - கல்ப்பனப்ரகாரம்

‘**നപ്ര**’(நப்ரா) என்பதில் ‘**പ്ര**’(ப்ரா) என்ற கூட்டெழுத்து அழுத்தமான உச்சரிப்பைப் பெறுகிறது எனவே, இதில் ‘**ന**’(ந) என்ற குறில் நெடிலாகக் கொள்ளப்படுகிறது.

കല്പിച്ചപ്രകാരം (Kalpichaprakaaram) - கல்ப்பிச்சப்ரகாரம்

‘**ச்ப்ர**’ (ச்சப்ர) என்பதில் ‘**ப்ர**’ (ப்ரா) என்ற கூட்டெழுத்து அழுத்தி உச்சரிக்கப்படாததால் ‘**ச**’ (ச்ச) என்ற குறில் குறிலா-கவே கொள்ளப்படுகிறது.

இந்த அமைப்பு முறை தமிழில் இல்லை. தமிழ் யாப்பிலக்கணத்தைப் பொருத்தவரை குறிலெழுத்திற்குப்பின் ஒற்றெழுத்து வருமேயானால் அக்குறில் தன் இயல்பான ஒரு மாத்திரை அளவையேக் கொண்டிருக்கும்.

சீர் அமைப்பு முறை

தமிழிலும் மலையாளத்திலும் ஓர் அடியின் சீர் அமைப்பு முறையில் வேறுபாடு காணப்படுகிறது. தமிழில் அசை வாய்பாடு அடிப்படையில் சீர் அமைத்தல் என்பது தனிச்சிறப்பாக அமைகிறது.

அசையியைந்து சீர்கொள நிற்றலின் சீரே. (யாப்.காரிகை)

‘நேரசை’, ‘நிரையசை’ என இருவகை அசைகளால் ஆனது ‘சீர்’ என்று இலக்கணம் கூறப்படுகிறது. இவ்வாறு வரும் சீர்களை அசைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நான்கசைச்சீர் என வகைபடுத்தப்படுகின்றன.

மலையாளத்தில் எழுத்துக்களின் அடிப்படையிலும் மாத்திரையளவு அடிப்படையிலும் ஒரு அடியில் சீர்கள் அமைக்கப்படுகின்றன.

“மூந்நக்ஷரம் சேர்ந்நதினு கணமெந்நிஹ ஸம்ஜ்ஞயாம்.”

(வி.மஞ்.19)

‘சீர்’ என்பது மலையாளத்தில் ‘கணம்’ என்று கூறப்படு-கிறது. எழுத்து அடிப்படையில், மூன்றெழுத்துக்கள் சேர்ந்தது ஒரு சீர் என்றும் அம்மூன்றெழுத்துக்களும் சேர்ந்து ஐந்து மாத்திரை அளவுடையதாக இருக்க வேண்டும் என்றும் வரையறை கூறப்பட்டிருக்கிறது.

“கணம் குரு லகுஸ்தானபேதத்தாலெட்டுமாதிரி.”(வி.மஞ்.நூ.20)

‘குரு’(நெடில்), ‘லகு’(குறில்) எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமையும் ‘சீர்கள்’ எட்டு என்றும் மாத்திரையளவை அடிப்படையாகக் கொண்டு அமையும் ‘சீர்கள்’ ஐந்து என்றும் வகைபடுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழில், நேர் இறுதியாக வரும் ஈரசைச்சீர் இரண்டும் ‘மாச்சீர்’, மூவசைச்சீர் நான்கும் ‘காய்ச்சீர்’, நான்கசைச்சீர் எட்டும் ‘பூச்சீர்’ என்றும் ‘நிரை’ இறுதியாக வரும் ஈரசைச்சீர் இரண்டும் ‘விளச்சீர்’, மூவசைச்சீர் நான்கும் ‘கனிச்சீர்’, நான்கசைச்சீர் எட்டும் ‘நிழல்சீர்’ என்றும் வகைபடுத்தப்பட்டுள்ளன. ஆனால், மலையாளத்தில் இச்சீர் பற்றியதான வகைபாடு மாறுபட்டுக் காணப்படுகிறது. எழுத்துக்-களின் அடிப்படையில் அமைந்த எட்டுவகைச் சீர்களை வேறுபடுத்துவதற்காக ‘ம’, ‘ய’, ‘ர’, ‘ஸ’, ‘த’, ‘ஜ‘, ‘ப’, ‘ந’ போன்ற எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்பட்டிருக்-கின்றன[5]. அவை பின்வருமாறு,

எழுத்துக்களின் அடிப்படை

1. ஸர்வகுரு	:	—	—	—	மகணம்
2. ஆதிலகு	:	U	—	—	யகணம்
3. மத்யலகு	:	—	U	—	ரகணம்
4. அந்தியகுரு	:	U	U	—	ஸகணம்

5.	அந்தியலகு	:	—	—	U	**த**கணம்
6.	மத்யகுரு	:	U	—	U	**ஜ**கணம்
7.	ஆதிகுரு	:	—	U	U	**ப**கணம்
8.	ஸர்வலகு	:	U	U	U	**ந**கணம்

‘ஸர்வகுரு’ என்பது சீரிலுள்ள மூன்று எழுத்துக்களும் நெடிலாக இருக்கும்.

எ.டு.

— — —
മാ ലെ ണ്യേ
மா லெ ந்யே /

‘ஆதிலகு’ என்பது சீரிலுள்ள மூன்றெழுத்துக்களில் முதலெழுத்து மட்டும் குறிலாக இருக்கும்.

எ.டு.

U — —
യ ശ സ്വീ
ய ச ஸ்வீ/

‘மத்யலகு’ என்பது சீரின் நடுவிலுள்ள எழுத்து மட்டும் குறிலாக இருக்கும்.

எ.டு.

— U —
രാ ഗ വാൻ
ரா க வான் /

‘அந்தியகுரு’ என்பது சீரின் மூன்றெழுத்துக்களில் இறுதி எழுத்து மட்டும் நெடிலாக இருக்கும்.

எ.டு.

∪ ∪ —
സ ത തം
ஸ த தம் /

'அந்தியலகு' என்பது சீரின் மூன்றெழுத்துக்களில் இறுதி எழுத்து மட்டும் குறிலாக இருக்கும்.

எ.டு.

— — ∪
താ രു ണ്യ
தா ரு ண்ய/

'மத்யகுரு' என்பது சீரின் மூன்றெழுத்துக்களில் நடுவிலுள்ள எழுத்து மட்டும் நெடிலாக இருக்கும்.

எ.டு.

∪ — ∪
ജ യി ക്ക
ஜ யி க்க/

'ஆதிகுரு' என்பது சீரிலுள்ள மூன்றெழுத்துக்களில் முதலெழுத்து மட்டும் நெடிலாக இருக்கும்.

எ.டு.

— ∪ ∪
ഭാ സു ര
பா சு ர/

'ஸர்வலகு' என்பது சீரிலுள்ள மூன்று எழுத்துக்களும் குறிலாக இருக்கும்.

எ.டு.

U U U
ന്യ പ തി
ந்ரு ப தி/

மாத்திரையளவு அடிப்படை

“நாலு மாத்ரய்க்கொரு கணம் மாத்ராவ்ருத்தங்ஙளில் புனக் ஸர்வ்வாதிமத்யாந்தகுரு சதுர்லகுவுமஞ்சிது.” (வி.மஞ்.நூ.23)

நான்கு மாத்திரை சேர்ந்தது ஒரு ‘சீர்’ என்பது இதன் இலக்கணம். இப்படி மாத்திரையளவு அடிப்படையில் அமையும் சீர்கள் ஐந்து வகையாகும். எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த எட்டுவகைச் சீர்களை வேறுபடுத்துவதற்காக ம, ய, ர, ஸ, த, ஜ, ப, ந போன்ற எழுத்துக்களால் அடையாளப்படுத்துவது போன்று இதில் அடையாளப்படுத்துவதில்லை.

1. ஸர்வகுரு : — —
1. ஆதிகுரு : — U U
2. மத்யகுரு : U — U
3. அந்தியகுரு : U U —
4. ஸர்வலகு : U U U U

இதில் எழுத்திற்கு அல்லாமல் மாத்திரையளவிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எனவே குறில் எழுத்திற்கு ஒரு மாத்திரையளவும் நெடிலெழுத்திற்கு இரண்டு மாத்திரை-யளவும் கூறப்பட்டுள்ளது.

‘ஸர்வகுரு’ (2 + 2 = 4) என்பது ஒரு சீரில் நான்கு மாத்திரை அளவுள்ள இரண்டு நெடிலெழுத்துக்களை மட்டும் கொண்டிருப்பதாகும்.

எ.டு.

— —
കാ ലം
கா லம் /

'ஆதிகுரு' (2 + 1 + 1 = 4) என்பது சீரில் முதலாவதாக இரண்டு மாத்திரை அளவுள்ள நெடிலெழுத்தும் அதன்பின் ஒரு மாத்திரை அளவுள்ள இரண்டு குறிலெழுத்துக்களும் சேர்ந்து நான்கு மாத்திரையளவில் அமைவதாகும்.

எ.டு.

— U U
കാ ല ടി
கா ல டி/

'மத்யகுரு' (1 + 2 + 1 = 4) என்பது சீரின் நடுவில் நெடிலெழுத்தும் மற்றும் முதலிலும் இறுதியிலும் குறிலெழுத்தும் அமைந்து நான்கு மாத்திரையளவைக் கொண்டிருப்பதாகும்.

எ.டு.

U — U
മ ഹർ ഷി
ம ஹர் ஷி/

'அந்தியகுரு' (1 + 1 + 2 = 4) என்பது சீரின் இறுதியில் நெடிலெழுத்தும் முதல் இரண்டெழுத்துக்கள் குறிலாகவும் அமைந்து நான்கு மாத்திரையளவைக் கொண்டிருப்பதாகும்.

எ.டு.

U U —
க മ ലം
க ம லம் /

'ஸர்வலகு' (1 + 1 + 1 + 1 = 4) என்பது ஒரு சீரில் நான்கு மாத்திரை அளவுள்ள நான்கு குறிலெழுத்துக்களை மட்டும் கொண்டிருப்பதாகும்.

எ.டு.

U U U U
க മ ലി നി
க ம லி னி/

மலையாளத்தில் எழுத்துக்கள் மற்றும் மாத்திரையளவு அடிப்படையிலும் தமிழில் அசைவாய்பாடு அடிப்படையிலும் ஓர் அடியில் 'சீர்' அமைக்கப்படுகிறது. எனினும் இதன் பயன்பாட்டுமுறை வேறுபட்டது. ஆகவே, மலையாள மொழியில் யாப்பிலக்கணப் பயன்பாட்டில் சீரமைப்பு முறையானது தமிழிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக்காணப்படுகிறது.

அடி வரையறை.

காரிகை, 'அடி' என்பதற்கான வரையறையை இவ்வாறு கூறுகிறது.

"அத்தளை அடுத்து நடத்தலின் அடியே."

அதாவது செய்யுளில் தளை அமைந்த இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட 'சீர்கள்' பல அமைந்து உண்டான தொடருக்கு 'அடி' என்பது இதன் இலக்கணம். இவ்வடியானது சீர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு

‘குறளடி’, ‘சிந்தடி’, ‘அளவடி’ அல்லது ‘நேரடி’, ‘நெடிலடி’, ‘கழிநெடிலடி’ என வகைபடுத்தப்பட்டுள்ளது.

மலையாள மொழியில் செய்யுளின் அடியானது எவ்வாறு வரையறுக்கப்படுகிறது எனில் இத்தனை எழுத்துக்கள் அல்லது மாத்திரைகள் சேர்ந்தது ஒரு ‘அடி’(பாதம்) என்பதாகும். இதில் ‘குரு’(நெடில்), ‘லகு’(குறில்), ‘யதி’(நிறுத்தம், Pause) போன்ற யாப்பு உருப்புக்களைப் கொண்டு முறையாக வரையறுக்கப்படு-வதே ‘அடி’ அல்லது ‘பாதம்’ எனப்படுகிறது. மலையாளத்தில் ‘அடி’ என்பதற்கு ‘பாதம்’ என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்-படுகிறது.

மலையாளத்தில் ‘யதி’ (Pause) என்கிற அமைப்பிற்கு வரையறை கூறப்பட்டிருக்கிறது.

“பாதத்தில் முறியுந்நேடம் யதி, முட்டுகளெந்நபோல்”

(வி.மஞ்.நூ.14)

‘கை’, ‘கால்’ முட்டுகளில் ஒடிவு உள்ளது போன்று செய்யுளில் ஒரு அடியிலும் ‘ஒடிவு’ அதாவது ‘நிறுத்தம்’ வேண்டும் என்பது இதன் இலக்கணம்.

எ.டு.

ப்ர த்யா திஷ் டம் / கா ம ம க்க ணிய புத் ரீம்

- (சாகுந்தளம்)

பதினொன்று எழுத்துக்களைக் கொண்ட இவ்வடியில் ‘யதி’ அமைப்பானது அடியின் நடுவில் (வளைந்த நேர்வரை காணப்படும் இடத்தில்) அமைந்து, முதல் நான்கு எண்ணிக்கையுள்ள எழுத்துக்களை ஒரு பகுதியாகவும்

எஞ்சிய ஏழு எண்ணிக்கையுள்ள எழுத்துக்களை இரண்டாம் பகுதியாகவும் பிரிக்கிறது.

சமஸ்கிருத விருத்தங்களில் ‘யதி’ (Metrical Pause) என்பது முக்கியமானது. வர்ண விருத்தத்தின் தனிச்சிறப்பாக ஒரு அடியின் நடுவில் (In the Middle of Line) ‘யதி’ என்கிற அமைப்பு காணப்படுகிறது. அதாவது ஒரு அடியின் நடுவில் நிறுத்திச் சொல்லுதலால் இதனைத் தமிழில் ‘நிறுத்தம்’ (Pause) என பொருள் கொள்ளலாம். இது செய்யுளை ‘நினைவுபடுத்தி ஒப்பித்தல்’ (Recitation) என்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் வேத சரணங்களில் (Vedic Stanzas), ‘த்ரிஸ்துப்’ (Tristubh) மற்றும் ‘ஜகதி’ (Jagati) வரிகளிலும் பயன்படுத்தப்-படுகிறது[(6).]

தமிழில் ‘சீர்’ எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ‘குறளடி’, ‘சிந்தடி’, ‘அளவடி’, ‘நெடிலடி’, ‘கழிநெடிலடி’ என செய்யுளின் அடிகளுக்கு பெயர் வழங்கப்பட்டு, வகைபடுத்தப் பட்டிருக்கின்றன. மலையாளத்தில் இவ்வடியானது ‘ஸமபாதங்ஙள்’ அல்லது ‘யுக்மபாதங்ஙள்’, என்றும் ‘விஷமபாதங்ஙள்’, ‘பூர்வார்த்தம்’ மற்றும் ‘உத்தரார்த்தம்’ என்றும் இது போன்ற பெயர்களால் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றன.

செய்யுளின் இரண்டு மற்றும் நான்காம் அடிகளை ‘ஸமபாதங்ஙள்(யுக்மபாதம்)’ என்றும் ஒன்று மற்றும் மூன்றாம் அடிகளை ‘விஷமபாதங்ஙள்’ என்றும் ஒன்றாம் இரண்டாம் அடிகள் சேர்ந்தது ‘பூர்வார்த்தம்’ என்றும் மூன்றாம் மற்றும்

நான்காம் அடிகள் சேர்ந்தது ‘உத்தரார்த்தம்’ என்றும் கூறப்படுகிறது.

மேலும், மலையாளத்தில் தமிழில் போன்று ‘சீர்’ எண்ணிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் செய்யுளின் அடிகளில் காணப்படும் எழுத்துக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ‘ஸமவிருத்தம்’, ‘அர்த்தஸமவிருத்தம்’, ‘விஷமவிருத்தம்’ என்று வகைபடுத்தப் பட்டிருக்கிறது.

“பாதம் நாலும் துல்யமெங்கிலப்பத்யம் ஸமவிருத்தம்

அர்த்தம் ரண்டும் துல்யமெங்கிலதர்த்தஸமவிருத்தம்

நாலும் நாலுவிதம் வந்நாலதோ விஷமவிருத்தமாம்.”

(வி.மஞ்.நூ.15)

ஒரு செய்யுளின் நான்கு அடியிலும் எழுத்துக்களின் எண்ணிக்கை சமநிலையிலிருந்தால் அது ‘ஸமவிருத்தம்’ எனப்படுகிறது.

ஒரு செய்யுளின் முதலாவது மற்றும் மூன்றாவது அடிகளானது ஒரு எண்ணிக்கையிலும், இரண்டாவது மற்றும் நான்காவது அடிகளானது ஒரு எண்ணிக்கையிலுமாக, எழுத்துக்கள் சமநிலையிலிருந்தால் அது ‘அர்த்தஸம விருத்தம்’ எனப்படுகிறது.

செய்யளின் நான்கு அடிகளிலும் எழுத்துக்களின் எண்ணிக்கை வேறுபட்டு வருவது ‘விஷமவிருத்தம்’ எனப்படுகிறது.

கிளிப்பாட்டில் யாப்புக்கட்டமைப்பு

கிளியிடம் தூது சொல்வது போல் அமைத்துப்பாடுவது கிளிப்பாட்டு இது ஏழுவகையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அவை, 1. காகளி, 2. களகாஞ்சி, 3. மணிகாஞ்சி, 4. மிஸ்ரகாகளி, 5. ஊனகாகளி, 6. த்ருதகாகளி, 7. அன்னநட போன்றனவாகும்.

மலையாளத்தில் காணப்படும் இக்கிளிப்பாட்டு மரபானது தமிழில் தாயுமானவசுவாமிகள் எழுதிய ‘பைங்கிளிக்கன்னி’, ‘பராபரக்கன்னி’ போன்ற பாடல்களின் அமைப்பிலிருந்து உருவாகியிருக்கலாம் என எழுத்தச்சன் போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

‘காகளி’ என்பது ஐந்து மாத்திரை அளவுள்ள மூன்று எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு ‘கணம்’(சீர்) இப்படி ஓரடிக்கு நான்குவீதம் ஈரடிக்கு எட்டு சீர்களில் அமைந்திருக்கும் ஈரடிப்பாடலாகும்.

எ.டு.

— — U — U — — U — — U —

சா ரீ க / பை த லே / சா ரு சீ / லே வ ரீ

— — U — U — — U — — U —

கா ரோ ம / லே க தா / சே ஷ வும் / சொ ல்லு நீ(7)

‘களகாஞ்சி’ என்பது ஒரு அடியில் இரண்டு அல்லது மூன்று சீர்களில் ஐந்துமாத்திரை அளவில் ‘லகுமயம்’ அதாவது குறில் எழுத்துக்கள் மட்டும் வருவதாகும்.

எ.டு.

விபுதபதி / **யொடுசிச** / ராலயம் / வெந்தொரு

வ்ரு த்தா ந்த / மெல் லாம் / றியி ச்சு / கொ ள்ளு வான்

இதில் முதலாம் அடியின் முதல் இரண்டு சீர்களிலும் மட்டும் ஐந்து மாத்திரையளவில் குறிலெழுத்துக்கள் வந்துள்ளன்.

'மணிகாஞ்சி' என்பது இரண்டடியிலும் முதலாம் சீரில் ஐந்து மாத்தரை அளவில் குறில் எழுத்துக்கள் மட்டும் வருவதாகும்.

எ.டு.

பரமபுரு /ஷன்மஹா / மாயதன் / வைபவம்

பறகயும / நாரதம் / கேள்க்கயும் / செய்கிலோ[9]

இப்பாடலின் இரண்டடியிலும் முதலாம் சீரில் குறிலெழுத்-துக்கள் மட்டும் வந்துள்ளன.

'மிஸ்ரகாகளி' என்பது அடியில் ஒரு குறிப்பிட்ட சீரில் அல்லாமல் எந்த சீரிலும் ஐந்து மாத்திரை அளவுள்ள குறில் எழுத்துக்கள் மட்டும் வருவதாகும்.

எ.டு.

ஜனி ம்ரு திநி
ஜனி ம்ரு தினி /வாரணம் / **ஜகதுதய** /காரணம்

சரணநத /சாரணம் / **சரிதமது** / பூரணம்

'ஊனகாகளி' என்பது இரண்டாம் அடியின் இறுதி சீரில் ஒரு எழுத்து குறைந்தால் ஊனகாகளியாகும். இந்த இறுதி

சீரில் குறைவது குறில் அல்லது நெடில் எழுத்து என்று குறிப்பிட்டுச் சுட்டப்படவில்லை.

'த்ருதகாகளி' இரண்டடியிலும் இறுதி சீரில் ஒரு எழுத்து குறைந்தால் 'த்ருதகாகளி'யாகும். இதிலும் இறுதி சீரில் குறைவது குறில் அல்லது நெடில் எழுத்து என்று குறிப்பிட்டுச் சுட்டப்படவில்லை.

எ.டு.

— U — U — — — U — U —

கா ளி ம/ கொ ண்டு கா/ ளும் க ளே/ ப ரம்

U — — — — U — U — U —

ப நே ந்நார் / கா வி லீ /சுவ ரி பா /ஹி மாம்

\- (கா.தோத்திரம்)

'அன்னநட' என்பது முதலாம் அடியின் ஒரு சீரில் முதலெழுத்து குறிலும் இரண்டாம் எழுத்து நெடிலுமாக இரண்டெழுத்துக்கள் வீதம் ஆறு சீர்கள் அமைந்து வருவதும் அடியின் நடுவில் 'யதி'(நிறுத்தம்) அமைப்பு பெற்று இரண்டு அர்த்தங்களாக முறிவதும் அங்கனம் முறியும் இரண்டு முறிவிலும் முதல் சீரில் முதலெழுத்து குறிலாகவும் இரண்டாம் எழுத்து நெடிலாகவும் இருப்பது அன்னநடையாகும்.

எ.டு.

U — U — U — U — U — U —

ஹ ரா / ஹ ரா / ஹ ரா / சி வா / சி வா / சி வா

‘யதி’ அமைப்பு

இங்ஙனம் அடியின் நடுவில் மூன்றாம் சீருக்கும் நான்காம் சீருக்கும் இடையில் ‘யதி’ அமைப்பு அடிப்படையில் இவ்வடியானது இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

U — U — U —

ஹ ரா / ஹ ரா / ஹ ரா

U — U — U —

சி வா / சி வா / சி வா

கிளிப்பாட்டுக்கள் அனைத்திலும் ‘வர்ண்ண விருத்-தங்கள்’, அதாவது எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விருத்தங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. உதாரணத்-திற்காக ‘காகளி’ என்ற கிளிப்பாட்டு வகையின் மூலம் விருத்தக்கட்டமைப்பை அறியலாம்.

காகளி

‘‘மாத்ரயஞ்சக்ஷரம் மூந்நில் வருந்நோரு கணங்ஙளெ
எட்டுசேர்த்துள்ளீரடிக்குச் சொல்லாம் காகளியெந்நு பேர்’’

பொருள்

ஐந்து மாத்திரை அளவுள்ள மூன்று எழுத்துக்கள் சேர்ந்தது ஒரு கணம்(சீர்) இப்படி ஓரடிக்கு நான்குவீதம் ஈரடிக்கு எட்டு சீர்களில் அமைந்திருக்கும் ஈரடிப்பாடல் காகளியாகும்.

எ.டு.

— — U — U — — U — — U —

சா ரீ க / பை த லே / சா ரு சீ / லே வ ரீ

— — U — U — — U — — U —

கா ரோ ம / லே க தா / சே ஷ வும் / சொ ல்லு நீ

மூன்றெழுத்துக்கள் சேர்ந்தது ஒரு சீர் என்றும் அம்மூன்றெழுத்துக்களும் சேர்ந்து ஐந்து மாத்திரை அளவுடையதாக இருக்க வேண்டும் என்றும் சீர் அமைப்பிற்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கண விதிக்குப் பொருந்தும் வகையில் இதில் யாப்புக்கட்டமைப்பு அமைந்திருக்கிறது. அதாவது தமிழில் போன்று அசை வாய்பாடு அடிப்படையில் இல்லாமல் மலையாளத்தில் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சீர் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே சீரமைப்பு முறை, அச்சீரில் எழுத்துக்களின் பயன்பாடு போன்றன தமிழிலிருந்து வேறுபட்டு காணப்படுகிறது என்பது தெளிவாகிறது. கிளிப்பாட்டின் அனைத்து வகைகளிலும் இங்ஙனமே யாப்புக்கட்டமைப்பு முறை அமைந்திருக்கிறது.

துள்ளல்பாட்டில் யாப்புக்கட்டமைப்பு

இத்துள்ளல்பாட்டு குஞ்சன்நம்பியாரால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. துள்ளல்பாட்டில் ‘ஓட்டன்’, ‘சீதங்கன்’, ‘பறயன்’ என்று மூன்று வகைகள் காணப்படுகின்றன. இதில் ‘ஓட்டன்’ வேகத்திலும், ‘பறயன்’ மெதுவாகவும், ‘சீதங்கன்’ நடுநிலை-யிலும் கூறப்படுகிறது. இம்மூன்று வகைகளிலும் காணப்படும்

விருத்தங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறானவைகள் என 'விருத்த மஞ்சரி' குறிப்பிடுகிறது.

பொதுவாக துள்ளல்பாட்டுகளில் மாத்திரையளவு அடிப்படையில் யாப்புக்கட்டமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 'யதி' என்கிற அமைப்பு இதில் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

தரம்கிணி

'த்விமாத்ரம் கணமெட்டெண்ணம் யதிமத்யம் தரம்கிணி'

பொருள்

ஓரடியில் இரண்டு மாத்திரை அளவில் எட்டு கணங்களும், மற்றும் அடியின் நடுவே 'யதி' அமைப்பு பெற்றும் வருவது 'தரங்கிணி' என்பது இதன் இலக்கணம்.

எ.டு.

அணி / மதி / கல / யும் / சுர / வா / ஹினி / யும்
பணி / பதி / கண / பன / மணி / களு / மணி / யும்

இதில் எத்தனை எழுத்துக்கள் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால் மாத்திரையளவு பதினாறாக இருக்க வேண்டும்.

இதன் மூலம் கிளிப்பாட்டில் எழுத்துக்களின் அடிப்படையிலும் துள்ளல் பாட்டில் மாத்திரையளவு அடிப்படையிலும் யாப்பமைப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இந்த முறையானது தமிழ் யாப்பமைப்பு முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

மேலும், ஏ. ஆர். இராஜராஜ வர்மா மலையாள மொழி விருத்த அமைப்பிற்கு, சமஸ்கிருதத்திலுள்ள குரு - லகு அமைப்பு, மாத்திரை அளவு, மற்றும் ‘சீர்’ அமைப்பு போன்றவற்றைத்தான் பயன்படுத்தியிருக்கிறார் என்று கே. பி. நாராயண பிஷாரோடி குறிப்பிட்டிருக்கும் கருத்து இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.(11)

தொகுப்புரை

ஒப்பீடு அடிப்படையில், தமிழ்-மலையாள யாப்பிலக்கணங்களுக்கிடயே குறிப்பிடப்படும்படியான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற என்பது புலனாகிறது. இரு மொழிகளிலும் யாப்பிலக்கணத்திற்கான ‘வரையறை’ கூறப்பட்டிருக்கிறது. ‘யாப்பு’ என்பது தமிழில் ‘கட்டுதல்’ என்றும், மலையாளத்தில் ‘வார்த்தல்’ (உருவாக்குதல்) என்றும் வெவ்வேறு சொற்களில் பயன்படுத்தியிருப்பினும், இவை இரண்டும் ஒத்த பொருண்மையில் அமைகின்றன. மலையாளத்தில் யாப்புக்கட்டமைப்பு உறுப்புக்கள் யாப்பருங்கலக்காரிகையை விட எண்ணிக்கை அளவில் குறைந்ததாகவே காணப்படுகின்றன. மலையாள விருத்தங்களில் ‘யதி’ (நிறுத்தம்) என்கிற அமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது. எழுத்துக்களைப் பொருத்தளவில், மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டில் குறிலெழுத்திற்கு ‘வரையறை’ கூறப்பட்டிருக்கிறது. இரு மொழிகளிலும் மெய்யெழுத்துக்களுக்குக் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகள் ஒத்துப் போகின்றன (அதாவது, மெய்யெழுத்துக்கள் தனித்து எண்ணப்படாமல் அதன் முன் வரும் உயிரெழுத்துக்களின் அங்கமாகவே கருதப்படும் முறை). மலையாள யாப்பிலக்கணத்தில் குறில் நெடில் எழுத்துக்களை அடையாளப்படுத்தும்

விதத்தில் ‘குறியீடுகள்’ பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், காரிகையை பொருத்தளவில், எழுத்துக்களுக்குக் குறியீடுகள் பயன்படுத்துவது இல்லை. இரு மொழிகளிலும் செய்யுளின் ‘அடி’ அமைப்பு முறைகளில் வேறுபாடு காணப்படுகின்றன. ஓர் அடியில், ‘சீர்’ பிரித்தலின்போது, தமிழிலும் மலையாளத்திலும் எழுத்துக்கள் வேறுபடுகின்றன. ஆகவே, இதில் அனைத்து உதாரணப்பாடல்களிலும், மலையாள எழுத்துக்களின் அடிப்படையில் சீர்பிரித்தும், அப்பாடல் வரிகளைப் புரிந்து கொள்ளும் விதத்தில் தமிழில் ஒலிபெயர்த்தும் கொடுக்கப்-பட்டிருக்கின்றன.

அடிக்குறிப்பு

1. இராஜராஜ வர்மா எ. ஆர்., விருத்த மஞ்சரி, நூற்பா-3, பக் 18
2. வேலு வே., யாப்பருங்கலக்காரிகை (எளிய உரை), உறுப்பியல், பக். 2
3. இராஜராஜ வர்மா எ. ஆர்., விருத்த மஞ்சரி, நூற்பா-7, பக். 19
4. குஞ்ஞிக்கிருஷ்ண மேனோன் பி., 'பாஷா விருத்த தீபிக', பக். 76
5. இராஜராஜ வர்மா எ. ஆர்., விருத்த மஞ்சரி, பக். 23
6. சுப்பிரமணியன் எஸ்., "The commonness in the metre of the Dravidian Languages", p. 49
7. இராஜராஜ வர்மா எ. ஆர்., விருத்த மஞ்சரி, நூற்பா-1, பக். 78
8. மேலது, பக் 78
9. மேலது, பக் 79
10. இராஜராஜ வர்மா, ஏ. ஆர்., விருத்த மஞ்சரி, பக். 84
11. குஞ்ஞிக்கிருஷ்ண மேனோன் பி., "பாஷா விருத்த தீபிக", பக். 8

முடிவுரை

முடிவுரை

முடிவுரையில், ஆய்வில் கண்டறிந்த கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. தமிழில், ‘செய்யுள் கட்டமைப்பே யாப்பு’ என்பது போன்று மலையாளத்திலும் ‘பத்யம் வார்த்தல் (உருவாக்குதல்) யாப்பு’ என்று ஒத்த பொருண்மையில் ‘யாப்பு வரையறை’ வகுக்கப்பட்டிருக்கிறது.

2. தமிழில் காணப்படும் ‘யாப்பு’ என்ற சொல்லாட்சிக்குப் பதிலாக மலையாளத்தில் “விருத்தம்” என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது.

3. ‘உலக வழக்கு’, ‘செய்யுள் வழக்கு’ என்ற இலக்கியவகைபாடு தமிழில் உள்ளது போன்று, மலையாளத்திலும் ‘கத்யம்’ (உரைநடை), ‘பத்யம்’ (செய்யுள்) என்ற பொருண்மையில் அமைந்திருக்கிறது.

4. மலையாளத்தில் ‘வர்ண விருத்தம்’ மற்றும் ‘மாத்திரை விருத்தம்’ என்ற இரு வகைகள் காணப்படுகின்றன. எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது ‘வர்ண விருத்தம்’ என்றும், அவ்வெழுத்துக்களின் மாத்திரையளவை அடிப்படையாகக் கொண்டது ‘மாத்திரை விருத்தம்’ என்றும் கூறப்படுகின்றன.

5. யாப்பருங்கலக்காரிகையிலும், மலயாளமொழியிலும் யாப்புக்கட்டமைப்பு உறுப்புக்களின் எண்ணிக்கை அளவு வேறுபடுகின்றது.

6. ‘யதி’ (நிறுத்தம், Metrical Pause) - என்ற அமைப்பு மாத்திரையளவு, அடிப்படையிலான விருத்தங்களில் பெரும்பாண்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

7. ‘கணம்’, ‘பாதம்’, ‘யதி’ இது போன்ற மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டுச் சொற்களெல்லாம் சமஸ்கிருத மொழிச் சொற்கள் எனத் தெரிய வருகின்றது.

8. தமிழ்-மலையாள மொழிகளில் யாப்பிலக்கணத்தைப் பொருத்தளவில் எழுத்துக்களின் பயன்பாடு வேறுபடு-கின்றது.

9. குறில், நெடில் எழுத்துக்களை அடையாளப்-படுத்தும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

10. மலையாள மொழியில் ‘குறில்’ எழுத்தானது சில இடங்களில் நெடிலெழுத்தாகக் கொள்ளப்படும் என்ற விதத்தில், குறிலெழுத்துக்களின் தனித்தன்மைக்கு வரையறை கூறப்பட்டிருக்கிறது. தமிழில் இந்த விதிமுறை பயன்படுத்துவதில்லை.

11. மலையாள மொழியில் ‘லகு’, ‘குரு’ என்ற சொல்-லாட்சி யாப்பிலக்கணத்தில் மட்டும் பயன்படுத்தப்-படுகிறது.

12. எழுத்துக்களின் மாத்திரையளவு இரு மொழிகளிலும் வேறுபடுகின்றது.

13. எழுத்துக்களின் அடிப்படையில், தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் ஓர் அடியில் ‘சீர்’

அமைக்கப்படினும், அந்த சீர் அமைப்பு முறையானது இரு மொழிகளிலும் வேறுபடுகின்றது.

14. ‘சீர்’ வகைபாடு இரு மொழிகளிலும் வேறுபடுகிறது. எழுத்துக்களின் அடிப்படையிலும், மாத்திரையளவு அடிப்படையிலும் ஓர் அடியின் சீரானது வகை படுத்தப்படுகிறது என்பது தெரிய வருகிறது. மேலும், ஒரு சீரில் குறில் மற்றும் நெடில் எழுத்துக்களின் அமைவு முறையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கணமும் (சீர்) ம, ய, ர, ஸ, த, க, ப. ந - போன்ற எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த அமைப்பு மாத்திரையளவு அடிப்படையில் அமையும் சீர்களுக்கு இல்லை.

15. ‘அடி’ என்பதற்கான வரையறை மலையாளத்தில் காணப்படுகிறது.

16. ‘தொடை’, ‘தளை’ போன்ற யாப்பு உறுப்புக்கள் மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டில் இல்லை.

17. விருத்த மஞ்சரியில் காணப்படும் ‘கிளிப்பாட்டு விருத்தங்கள்’ அனைத்தும் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ‘துள்ளல் பாட்டு விருத்தங்கள்’ அனைத்தும் மாத்திரையளவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

18. மலையாள விருத்தப் பாட்டுகள் தாளத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

மேலும் ஏ. ஆர். இராஜராஜ வர்மாவின் ‘பாஷாஸ்வரூபம்’ என்ற மலையாள ஆய்வுக்கட்டுரையை, ‘மலையாள மொழி’

என்ற தலைப்பில் மயிலை சீனி, வேங்கடசாமி மொழிபெயர்த்-திருக்கிறார் (மயிலை சீனி, வேங்கடசாமி ஆய்வுக்கட்டுரை, செந்தமிழ் செல்வி, சிலம்பு 16, 1937-38)

இக்கட்டுரையில் இராஜராஜ வர்மாவின் மலையாள விருத்தம் குறித்ததான கருத்து குறிப்பிடத்தகுந்தது. அது பின்வருமாறு அமைகிறது.

“வேண்டாதவைகளும், வேண்டியவைகளுமான அனேக சொற்களைச் சமஸ்கிருதத்திலிருந்து எடுத்துக் கொண்ட போதிலும், ‘விருத்தம்’ மற்றும் ‘அலங்காரம்’ முதலான ஆடம்பரங்களையெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து வாங்கிக் கொண்டபோதிலும் மலையாள மொழியின் இலக்கணத்தை இன்றுவரையில் சமஸ்கிருத முறைப்படி அமைத்துக் கொள்ள முடியவில்லை” என்பதாகும். சமஸ்கிருதத்தின் தாக்கம் மலையாள மொழியில் காணப்படுவதால் மலையாள பாஷா விருத்த அமைப்பிற்கு, சமஸ்கிருதத்திலுள்ள ‘லகு-குரு’ அமைப்பு, மாத்திரை அளவு, ‘கணம்’ (சீர்) அமைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம். எனினும், இதனை சமஸ்கிருத யாப்புக்களுடன் ஒப்பீடு செய்யும் பொழுதுதான், சான்றுகளின் அடிப்படையில் நிறுவ முடியும். எனவே, இது ‘தமிழ்-மலையாளம்-சமஸ்கிருதம்’ என்ற மும்மொழி யாப்பி-லக்கண ஒப்பீட்டாய்விற்கானக் களனை உருவாக்குகிறது.

மலையாள மொழியின் யாப்புக்கட்டமைப்பு முறைகள் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்பதை மேற்கண்ட ஒப்பாய்வின் மூலம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலாய்வுக்களன்கள்

1. தமிழ் - மலையாளம் - சமஸ்கிருத மொழிகளில் யாப்பியல் ஆய்வுகள்.
2. தமிழ் - மலையாள யாப்பு வரலாறு.
3. திராவிட மொழிகளில் யாப்புக்கட்டமைப்பு முறைகள்.
4. தமிழ் - மலையாள யாப்பிலக்கணக் கலைச்சொற்கள் ஓர் ஆய்வு.
5. திராவிட மொழிகளின் யாப்பியல் கோட்பாடுகள்.

பின்னிணைப்பு

துணைநூற் பட்டியல்

முதன்மைச்சான்றுகள்

1. யாப்பருங்கலக்காரிகை, அமிதசாகரர்.
2. விருத்த விச்சாரம், கே. கே. வாத்தியார்.

துணைமைச்சான்றுகள்

1. அடிப்படைத் தமிழ் இலக்கணம், எம். ஏ. நூ.ஃமான், அடையாளம் பதிப்பகம், 1205-1, கருப்பூர்ச்சாலை, புத்தாநத்தம், திருச்சி, 2007.
2. இலக்கண உருவாக்கம்-1, செ. வை. சண்முகம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994
3. இலக்கணக் கொள்கை, ஆதித்தன் ஏ., சங்குமுத்து வெளியீடு, மதுரை, 1999
4. இலக்கண வரலாறு, சோம. இளவரசு, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963
5. இலக்கணவியல் (மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்), சு. இராசாராம், காலச்சுவடு பதிப்பகம், 669, கே. பி. சாலை, நாகர்கோவில், 2010
6. காப்பியர் கூறும் யாப்பு, சாம்பசிவன். க., ஆய்வுக்-கோவை-19, தொகுதி-2, இந்தியப் பல்கலைக்-கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1987.

7. கேரளப்பாணினீயம் (தமிழாக்கம்), மா. இளைய பெருமாள், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்-கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம், 1977.

8. சிலப்பதிகார யாப்பமைதி, டாக்டர் ந. வீ. செயராமன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு, 1977.

9. சொல்லிலக்கணக்கோட்பாடு-1, டாக்டர் செ. வை. சண்முகம், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர், 1984.

10. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (தொகுதி-2), முனை. சோ. ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004.

11. தமிழ் யாப்பிலக்கண உரை வரலாறு, முனைவர் பா. இளமாறன், மாற்று வெளியீட்டகம், சென்னை, 2011.

12. தமிழ் வடமொழி இலக்கண உறவு, த. அஜி, திருக்குறள் பதிப்பகம், 66 பெரியார் தெரு, எம். ஜி. ஆர். நகர், சென்னை, 2008.

13. தமிழ் வரலாற்றிலக்கணம், வேலுப்பிள்ளை. ஆ., பாரிபுத்தக நிலையம், சென்னை, 1966.

14. திராவிட மொழிகளின் ஒப்பீட்டாய்வு, டாக்டர் தங்கமணியன், ஐந்திணைப் பதிப்பகம், 279 பாரதிசாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5, 2004.

15. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம், ஜான் சாமுவேல் ஜி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

16. தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளக்-கோவை (செய்யுளியல்), ச. வே. சுப்பிரமணியன்.,

17. தொல்காப்பியக் கட்டுரைகள், பேரா. கி. நாச்சிமுத்து, மொழிப்பண்பாட்டு ஆய்வு நிறுவனம், கோவை-20, 2007

18. தொல்காப்பியம் தெளிவுரை, முனை. ச. வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998

19. புதிய நோக்கில் தமிழ் யாப்பு, பொற்கோ, புலமை வெளியீடு சென்னை-18, 1995.

20. மலையாள மொழி இலக்கணம், சொற்றொடர் காண்டம் (தமிழாக்கம்), பேரா. கி. நாச்சிமுத்து கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை, 1983

21. மலையாள இலக்கண வரலாறு, முனை. வே. சா. அருள்ராஜ், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2000

22. மலையாள இலக்கண வரலாறு, முனை. வே. கா. அருள்ராஜ், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2000

23. மலையாள மொழியின் முதல் இலக்கணம், செ. வை. சண்முகம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992

24. மலையாள இலக்கிய வரலாறு (தமிழாக்கம்), இராம. கோபிநாதன், சாகித்திய அகாதெமி, 1968

25. மலையாள மொழிவளர்ச்சியில் தமிழின் பங்கு, பேராசிரியர் சுப்பிரமணியன் வி. ஐ., சிமி பப்ளிகேஷன், நாகர்கோவில்.

26. மொழித்திறன்களும் சில சிக்கல்களும், கோவிந்த-ராசன். மு., தேன்மொழிப் பதிப்பகம், சென்னை, 1980

27. மொழிபெயர்ப்பு - ஓர் அறிமுகம், தேவதாஸ் டி., கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை, திருவனந்தபுரம்,
1989-90

28. மொழி பெயர்ப்புத்தமிழ், முனை. ச. சிவகாமி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2004

29. மொழிபெயர்ப்புக் கட்டுரை எழுதுவது எப்படி? சங்கரன் எஸ்., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1979

30. மொழி பெயர்ப்பு மரபுகள், சந்திரன் வீ., பயோனியர் புக் சர்வீஸ், சென்னை, 1990

31. யாப்பருங்கலக்காரிகை (ஆராய்ச்சிப் பதிப்பு), டாக்டர் வே. பால்ராஜ், ‘காவ்யா’ வெளியீடு, கோடம்பாக்கம், சென்னை, 2007.

32. யாப்பருங்கலக் காரிகை (எளிய உரை), முனைவர் வே. வேலு, இனியன் பதிப்பகம், 2004.

33. யாப்பும் நோக்கும் (தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகள்), முனை. செ. வை. சண்முகம், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், 2006

34. யாப்பருங்கலம், ய. மணிகண்டன், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 2005

35. யாப்பியல், அன்னி தமசு, அமுத நிலையம், 7- ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு, இராயப்பேட்டை, சென்னை, 1998.

36. யாப்பியல் அலகு, மெய்கண்டான் சி., ஆய்வுக்கோவை-14, தொகுதி-2, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி மன்றம், அண்ணாமலை நலகர், 1982.

37. யாப்பும் கவிதையும், மஞ்சுளா சு., சந்தியா பதிப்பகம், சென்னை-83, 2004.

38. லீலாதிலகம் (தமிழாக்கம்), மா. இளைய பெருமாள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1971.

39. வீரசோழியம், புத்தமித்திரர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1942.

40. வீரசோழிய யாப்பு, முனைவர் ம. பிரபாகரன், ‘காவ்யா’ வெளியீடு, சென்னை, 2014.

41. வெண்பா பாட்டியல், சாமி ஐயா சு., தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1988.

மலையாளம்

1. கேரள கௌமுதி, கோவுண்ணி நெடுங்நாடி, பூர்ணா பப்ளிகேஷன், கோழிக்கோடு, 1878

2. 'பதிநாலு விருத்தம்' படனவும் வியாக்கியானவும், பேரா. கெ. குமரன் நாயர், கேரள பாஷா இன்ஸ்டிட்யூட், திருவனந்தபுரம், 2003

3. 'பாஷா விருத்த தீபிக', பேரா. பி. குஞ்ஞிக்கிருஷ்ண மேனோன், ஜெயாபி பிரஸ், கோழிக்கோடு-2, 1972

4. பாஷா சாஸ்திரம் சாங்கேதிக சப்தாவலி, கெ. பிரகாஷ், வி. எஸ். விஜயேந்திரதாஸ், லிபி பப்ளிகேஷன், திருவனந்தபுரம், 1985.

5. மலையாள விருத்த படனம், பி. நாராயணகுறுப், கேரள பாஷா இன்ஸ்டிட்யூட், திருவனந்தபுரம், 1992

6. மலையாள பாஷா வியாகரணம், சாந்தீபனி (பி.ஜி.நாயர்), பூர்ணா பப்ளிகேஷன், கோழிக்கோடு, 2014

7. விருத்த மஞ்சரி, ஏ. ஆர். இராஜராஜ வர்மா, சாகித்திய பிரவர்த்தக சஹகரண சங்கம், கோட்டயம், 1904

8. விருத்தாலங்கார சம்கிரஹும், பேரா. கோபிகுட்டன், கைரளி பிரஸ் ஏன்ட் புக்ஸ், எம். ஜி. ரோடு, திரிச்சூர், 1997.

ஆங்கிலம்

1. A History of Malayalam Metre, N. V. Krishnawarriar, Dravidian Linguistics Association, Trivandrum, 1977
2. Debates on the grammatical theories in Dravidian, Ed. V. T. Subramanian Department of Linguistics, University of Kerala, Kariavattom, Trivandrum, 1973
3. Literary Theories in Tamil (with special reference of Tolkappiyam), Indira Manuel, Pondicherry Institute of Linguistics and Culture, Pondicherry, 1997.
4. Malayalam Poetics (A study with special reference to Krishnagatha), Dr. T. Bhaskaran, Kerala Historical Society, Kariavattom, Trivandrum, 1978.
5. The commonness in the metre of the Dravidian Language, S. Subramaniyan, Dravidian Linguistics Association, Trivandrum, 1977
6. The History of the Grammatical Theories in Malayalam (Part-I), K. N. Ezhuthachan, Dravidian Linguistics Association, Trivandrum, 1998.

அகராதிகள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, டாக்டர் பா. ர. சுப்பிரமணியன், திருவான்மியூர், சென்னை, 1992
2. ‘சப்த தாராவலி’, டாக்டர் வட்டப்பறம்பில் கோபிநாத பிள்ளை, டாக்டர் பி. சேதுநாதன், டி. சி. புக்ஸ், கோட்டயம், 1923

3. மலையாள வியாகரண நிகண்டு, இரிஞ்சயம் ரவி, மெலின்ட புக்ஸ், திருவனந்தபுரம், 2013

4. தமிழ்ப் பேரகராதி, வையாபுரிப்பிள்ளை, சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1982

ஆய்வேடுகள்

1. தமிழ் இலக்கண நூல்கள் - ஒரு பொதுப்பார்வை, க. முருகேசன், தமிழ்த்துறை, அ. வீரையா வாண்டையார் நினைவு, திருபுட்டம் கல்லூரி, தஞ்சாவூர், 2011

2. மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு, தே. தேவதாஸ், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்-கழகம், காரியவட்டம், 1993.

3. யாப்பருங்கல விருத்தி - பதிப்பும் ஆய்வும், சண்முகம் நா., தமிழ்த்துறை, கேரளப்பல்-கலைக்கழகம், காரிய-வட்டம், 1992

4. லீலாதிலகம் - தமிழ் இலக்கண நூற்கள் ஓர் ஒப்பீடு, வாஸந்தி, தமிழ்த்துறை, கேரளப்பல்-கலைக்கழகம், காரியவட்டம், 1984.

5. வீரசோழியம் ஒரு திறனாய்வு, ஜெயலெட்சுமி. சு., தமிழ்த்துறை, கேரளப்பல்கலைக்கழகம், காரிய-வட்டம், 1977

6. Tamil prosody through the age, Annie Thomas, Department of Tamil, University of Kerala, Trivandrum, 1974.

மலையாள யாப்புக் கலைச் சொற்கள்

1.	அக்ஷரம் അക്ഷരം	-	எழுத்து
2.	அக்ஷரகணம் അക്ഷരഗണം	-	எழுத்துக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமையும் சீர் (அக்ஷரம் - எழுத்து, கணம் - சீர்)
3.	அடி അടി	-	அடி, பாதம்
4.	அனுஸுவாரம் അനുസ്വാരം	-	'அம்' என்று உச்சரிக்கும் எழுத்து வடிவம்
5.	இரட்டி ഇരട്ടി	-	இருமடங்கு, அதிரூபம்
6.	ஊணம் ഊണം	-	இசை
7.	உத்தரார்த்தம் ഉത്തരാർദ്ധം	-	ஒரு செய்யுளில் மூன்றாம், மற்றும் நான்காம் அடிகள் சேர்ந்த பகுதி.
8.	உதாகரணம் ഉദാഹരണം	-	உதாரணம்
9.	ஊனகணம் ഊനകണം	-	ஓர் அடியின் சீரில் எழுத்துக்கள் குறைந்து வருவது (ஊனம் - குறைவு, கணம் - சீர்)
10.	ஐமாத்திரை ഐമാത്ര	-	ஐந்து மாத்திரை (ஐந்து மாத்திரை எழுத்துக்களைக் கொண்டிருக்கும் சீர்)

11.	ஓரடி ഒരടി	-	ஓர் அடி
12.	கணம் ഗണം	-	சீர்

1. மகணம் - நெடில் - நெடில் - நெடில்
2. யகணம் - குறில் - நெடில் - நெடில்
3. ரகணம் - நெடில் - குறில் - நெடில்
4. ஸகணம் - குறில் - குறில் - நெடில்
5. தகணம் - நெடில் - நெடில் - குறில்
6. ஜகணம் - குறில் - நெடில் - குறில்
7. பகணம் - நெடில் - குறில் - குறில்
8. நகணம் - குறில் - குறில் - குறில்

13.	கணமாத்ர ഗണമാത്ര	-	மாத்திரை அளவை அடிப்படையாக்கொண்டு அமையும் சீர்
14.	கத்யம் ഗദ്യം	-	உரைநடை (Prose)
15.	காகபதம் കാകപദം	-	நான்கு மாத்திரை அளவுப் பெயர்
16.	காரிகை കാരിക	-	காரிகை
17.	குரு ഗുരു	-	நெடில்
18.	குருப்ராயம் ഗുരുപ്രായം	-	ஒரு சீரில் பிற எழுத்துக்களைவிட நெடிலெழுத்துக்கள் பெரும்பாண்மையாக வருவது

19.	குருமயம் ഗുരുമയം	-	ஒரு சீரில் அனைத்து எழுத்துக்களும் நெடிலெழுத்துக்களாக அமைவது.
20.	‘குரு-லகு’கிரமம் ഗുരു–ലഘു ക്രമം	-	‘நெடில்-குறில்’ அமைப்பு
21.	சமபாதம் (யுக்மபாதம்) സമപാദം (യുഗ്മപാദം)	-	ஒரு செய்யுளில் இரண்டாம் மற்றும் நான்காம் அடிகள் சேர்ந்த பகுதி
22.	சமவிருத்தம் സമവൃത്തം	-	செய்யுளின் நான்கு அடிகளுக்கும் சமநிலையான இலக்கணத்தில் அமைந்திருப்பது
23.	சில்லுகள் ചില്ലുകൾ	-	ஒற்றெழுத்துக்கள், புள்ளி எழுத்துக்கள்
24.	சீல் ശീല്	-	பாடல் வரி, சீர்
25.	‘த்ரியக்ஷரகணம்’ ത്ര്യക്ഷരഗണം	-	மூன்றெழுத்துச் சீர் (த்ரி-மூன்று, அக்ஷரம் - எழுத்து, கணம் - சீர்)
26.	‘த்ரியக்ஷரம்’ ത്ര്യക്ഷരം	-	மூன்றெழுத்து (த்ரி - மூன்று, அக்ஷரம் - எழுத்து).
27.	தலக்கெட்டு തലക്കെട്ടു	-	தலைப்பு
28.	தாளஸ்பந்தம் താളസ്പന്ദം	-	‘தாள’ அமைப்பு

29.	திவிமாத்ர கணம் ദ്വിമാത്ര ഗണം	-	இரண்டு மாத்திரைச் சீர் (திவி - இரண்டு, மாத்திரை-அளவு, கணம்-சீர்)
30.	திவியக்ஷரம் ദ്വക്ഷരം	-	இரண்டெழுத்து (திவி - இரண்டு, அக்ஷரம் - எழுத்து)
31.	தீர்க்கம் ദീർഘം	-	நெடில்
32.	ப்ளுதம் ប്ലുതം	-	மூன்று மாத்திரை அளவுப் பெயர்
33.	பத்யம் പദ്യം	-	செய்யுள் (Poem)
34.	பாதம் പാദം	-	அடி
35.	பாதாதி പാദാദി	-	'அடிமுதல்' (பாதம்-அடி, ஆதி-முதல்)
36.	பூர்வார்த்தம் പൂർവ്വാർദ്ധം	-	ஒரு செய்யுளின் ஒன்றாம் மற்றும் இரண்டாம் அடிகள் சேர்ந்த பகுதி
37.	மாத்ர മാത്ര	-	மாத்திரை, அளவு (எழுத்துக்களின் அளவு)
38.	மாத்ர கணம் മാത്ര ഗണം	-	மாத்திரை அளவை அடிப்படையாகக் கொண்டு அமையும் சீர்.
39.	மாத்ர ஸமகவர்க்கம் മാത്ര സമകവർഗ്ഗം	-	மாத்திரை அளவை அடிப்படையாகக் கொண்ட சீர்வகை (ஐந்து வகை)

40.	'யதி' യതി	-	நிறுத்தம் (Pause), ஓர் அடியின் நடுவில் வரும் அமைப்பு.
41.	ரண்டடி ര ടി	-	ஈரடி, இரண்டடி
42.	லக்ஷணம் ലക്ഷണം	-	நூற்பா, சூத்திரம், காரிகை, இலக்கணம்
43.	லகு ലഘു	-	குறில்
44.	'லகு' கரணம் ലഘുകരണം	-	ஓர் அடியின் சீரில் குறிலெழுத்துக்கள் மட்டும் அமைவது.
45.	லகுப்ராயம் ലഘുപ്രായം	-	ஒரு சீரில் பிற எழுத்துக்களை விட, குறிலெழுத்துக்கள் பெரும்பாண்மையாக அமைவது.
46.	லகுமயம் ലഘുമയം	-	ஒரு சீரில் குறிலெழுத்துக்கள் மட்டும் அமைவது.
47.	விருத்தம் വൃത്തം	-	விருத்தம், யாப்பு
48.	வர்ண்ணம் വർണ്ണം	-	எழுத்து
49.	வர்ண்ண கணம் വർണ്ണഗണം	-	எழுத்துக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட சீர்

50.	வரமொழி വരമൊഴി	-	எழுத்து மொழி
51.	வாமொழி വാമൊഴി	-	வாய்மொழி, பேச்சு மொழி
52.	வியாகரணம் വ്യാകരണം	-	இலக்கணம்
53.	விஷமபாதங்கள் വിഷമപാദങ്ങൾ	-	ஒரு செய்யுளின் ஒன்றாம் மற்றும் மூன்றாம் அடிகள் சேர்ந்த பகுதி
54.	விஷம விருத்தம் വിഷമവൃത്തം	-	நான்கு அடிகளுக்கும் வெவ்வேறாக இலக்கணம் கூறுவது
55.	விஸர்க்கம் വിസർഗ്ഗം	-	'அக்' என்று உச்சரிக்கும் எழுத்து வடிவம்
56.	வெஞ்ஜனங்கள் വ്യഞ്ജനങ്ങൾ	-	மெய்யெழுத்துக்கள்
57.	ஸுவரங்கள் സ്വരങ്ങൾ	-	எழுத்துக்கள்
58.	ஹ்ரசுவம் ഹ്രസ്വം	-	குறில் எழுத்து

TAMIL TRANSLATION OF 'VRUTHAVICHARAM' AND COMPARATIVE STUDY WITH 'YAPPILAKKANAM'

Thesis Submitted to the University of Kerala for the award of the

Degree of Doctor of Philosophy in Tamil

SIVAVENKATESH. L

DEPARTMENT OF TAMIL
UNIVERSITY OF KERALA, KARIAVATTOM CAMPUS
THIRUVANANTHAPURAM, KERALA - 695581
October - 2016

‘விருத்த விச்சாரம்’ தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் யாப்பிலக்கணத்துடன் ஒப்பீடு

முனைவர் பட்டத்திற்காக கேரளப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

சிவாவெங்கடேஷ். ல

தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம், திருவனந்தபுரம்
கேரளம் - 695581
அக்டோபர் - 2016

முடிவுரை

முடிவுரையில், ஆய்வில் கண்டறிந்த கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. தமிழில், 'செய்யுள் கட்டமைப்பே யாப்பு' என்பது போன்று மலையாளத்திலும் 'பத்யம் வார்த்தல் (உருவாக்குதல்) யாப்பு' என்று ஒத்த பொருண்மையில் 'யாப்பு வரையறை' வகுக்கப்பட்டிருக்கிறது.

2. தமிழில் காணப்படும் 'யாப்பு' என்ற சொல்லாட்சிக்குப் பதிலாக மலையாளத்தில் "விருத்தம்" என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது.

3. 'உலக வழக்கு', 'செய்யுள் வழக்கு' என்ற இலக்கியவகைபாடு தமிழில் உள்ளது போன்று, மலையாளத்திலும் 'கத்யம்' (உரைநடை), 'பத்யம்' (செய்யுள்) என்ற பொருண்மையில் அமைந்திருக்கிறது.

4. மலையாளத்தில் 'வர்ண விருத்தம்' மற்றும் 'மாத்திரை விருத்தம்' என்ற இரு வகைகள் காணப்படுகின்றன. எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது 'வர்ண விருத்தம்' என்றும், அவ்வெழுத்துக்களின் மாத்திரையளவை அடிப்படையாகக் கொண்டது 'மாத்திரை விருத்தம்' என்றும் கூறப்படுகின்றன.

5. யாப்பருங்கலக்காரிகையிலும், மலயாளமொழியிலும் யாப்புக்கட்டமைப்பு உறுப்புக்களின் எண்ணிக்கை அளவு வேறுபடுகின்றது.

6. ‘யதி’ (நிறுத்தம், Metrical Pause) - என்ற அமைப்பு மாத்திரையளவு, அடிப்படையிலான விருத்தங்களில் பெரும்பாண்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

7. ‘கணம்’, ‘பாதம்’, ‘யதி’ இது போன்ற மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டுச் சொற்களெல்லாம் சமஸ்கிருத மொழிச் சொற்கள் எனத் தெரிய வருகின்றது.

8. தமிழ்-மலையாள மொழிகளில் யாப்பிலக்கணத்தைப் பொருத்தளவில் எழுத்துக்களின் பயன்பாடு வேறுபடு-கின்றது.

9. குறில், நெடில் எழுத்துக்களை அடையாளப்-படுத்தும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

10. மலையாள மொழியில் ‘குறில்’ எழுத்தானது சில இடங்களில் நெடிலெழுத்தாகக் கொள்ளப்படும் என்ற விதத்தில், குறிலெழுத்துக்களின் தனித்தன்மைக்கு வரையறை கூறப்பட்டிருக்கிறது. தமிழில் இந்த விதிமுறை பயன்படுத்துவதில்லை.

11. மலையாள மொழியில் ‘லகு’, ‘குரு’ என்ற சொல்-லாட்சி யாப்பிலக்கணத்தில் மட்டும் பயன்படுத்தப்-படுகிறது.

12. எழுத்துக்களின் மாத்திரையளவு இரு மொழிகளிலும் வேறுபடுகின்றது.

13. எழுத்துக்களின் அடிப்படையில், தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் ஓர் அடியில் ‘சீர்’

அமைக்கப்படினும், அந்த சீர் அமைப்பு முறையானது இரு மொழிகளிலும் வேறுபடுகின்றது.

14. ‘சீர்’ வகைபாடு இரு மொழிகளிலும் வேறுபடுகிறது. எழுத்துக்களின் அடிப்படையிலும், மாத்திரையளவு அடிப்படையிலும் ஓர் அடியின் சீரானது வகை படுத்தப்படுகிறது என்பது தெரிய வருகிறது. மேலும், ஒரு சீரில் குறில் மற்றும் நெடில் எழுத்துக்களின் அமைவு முறையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கணமும் (சீர்) ம, ய, ர, ஸ, த, க, ப. ந - போன்ற எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த அமைப்பு மாத்திரையளவு அடிப்படையில் அமையும் சீர்களுக்கு இல்லை.

15. ‘அடி’ என்பதற்கான வரையறை மலையாளத்தில் காணப்படுகிறது.

16. ‘தொடை’, ‘தளை’ போன்ற யாப்பு உறுப்புக்கள் மலையாள யாப்பிலக்கணப் பயன்பாட்டில் இல்லை.

17. விருத்த மஞ்சரியில் காணப்படும் ‘கிளிப்பாட்டு விருத்தங்கள்’ அனைத்தும் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ‘துள்ளல் பாட்டு விருத்தங்கள்’ அனைத்தும் மாத்திரையளவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

18. மலையாள விருத்தப் பாட்டுகள் தாளத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

மேலும் ஏ. ஆர். இராஜராஜ வர்மாவின் ‘பாஷாஸ்வரூபம்’ என்ற மலையாள ஆய்வுக்கட்டுரையை, ‘மலையாள மொழி’

என்ற தலைப்பில் மயிலை சீனி, வேங்கடசாமி மொழிபெயர்த்-திருக்கிறார் (மயிலை சீனி, வேங்கடசாமி ஆய்வுக்கட்டுரை, செந்தமிழ் செல்வி, சிலம்பு 16, 1937-38)

இக்கட்டுரையில் இராஜராஜ வர்மாவின் மலையாள விருத்தம் குறித்ததான கருத்து குறிப்பிடத்தகுந்தது. அது பின்வருமாறு அமைகிறது.

“வேண்டாதவைகளும், வேண்டியவைகளுமான அனேக சொற்களைச் சமஸ்கிருதத்திலிருந்து எடுத்துக் கொண்ட போதிலும், ‘விருத்தம்’ மற்றும் ‘அலங்காரம்’ முதலான ஆடம்பரங்களையெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து வாங்கிக் கொண்டபோதிலும் மலையாள மொழியின் இலக்கணத்தை இன்றுவரையில் சமஸ்கிருத முறைப்படி அமைத்துக் கொள்ள முடியவில்லை” என்பதாகும். சமஸ்கிருதத்தின் தாக்கம் மலையாள மொழியில் காணப்படுவதால் மலையாள பாஷா விருத்த அமைப்பிற்கு, சமஸ்கிருதத்திலுள்ள ‘லகு-குரு’ அமைப்பு, மாத்திரை அளவு, ‘கணம்’ (சீர்) அமைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம். எனினும், இதனை சமஸ்கிருத யாப்புக்களுடன் ஒப்பீடு செய்யும் பொழுதுதான், சான்றுகளின் அடிப்படையில் நிறுவ முடியும். எனவே, இது ‘தமிழ்-மலையாளம்-சமஸ்கிருதம்’ என்ற மும்மொழி யாப்பி-லக்கண ஒப்பீட்டாய்விற்கானக் களனை உருவாக்குகிறது.

மலையாள மொழியின் யாப்புக்கட்டமைப்பு முறைகள் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்பதை மேற்கண்ட ஒப்பாய்வின் மூலம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலாய்வுக்களன்கள்

1. தமிழ் - மலையாளம் - சமஸ்கிருத மொழிகளில் யாப்பியல் ஆய்வுகள்.
2. தமிழ் - மலையாள யாப்பு வரலாறு.
3. திராவிட மொழிகளில் யாப்புக்கட்டமைப்பு முறைகள்.
4. தமிழ் - மலையாள யாப்பிலக்கணக் கலைச்சொற்கள் ஓர் ஆய்வு.
5. திராவிட மொழிகளின் யாப்பியல் கோட்பாடுகள்.